Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 111 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 டிசம்பர் 2025

19 ஆம் ஆண்டு
## வீரவணக்கம்



04.03.1938 தேசத்தின் குரல் 14.12.2006

# அன்ரன் பாலசிங்கம்

[அன்டன் ஸ்டானிஸ்லாஸ் பாலசிங்கம் – மண்சூர், மட்டு ...கரவெட்டி, யாழ்]

*விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் மூத்த தலைமகனாக, பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன்.*

*-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -*

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
Purchasing a Residential Property
Selling a Residential Property
Residential Mortgage Refinancing
Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
AUDIT · REVIEW ENGAGEMENT · NOTICE TO READER · BUSINESS ADVISORY · CONTROLLERSHIP SERVICES
CORPORATE TAXES · PERSONAL TAXES · FINANCIAL PLANNING · CRA AUDITS · PAYROLL · BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 · 647-989-6298 · 647-748-6444 · www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech
Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
Please call & book an appointment before visiting... I will provide the adress after booking.....
437 423 5460
Silverprinthouse@gmail.com

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

RIGHT AT HOME REALTY INC.
JEY RASATHURAI
MBA, BBA (Hons)
REALTOR & MORTGAGE BROKER
Mortgage, Line of Credit, Refinance, Renewal
Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
Solutions for Power of Sale Issues
Buying & Selling & Lease Commercial & Residential Properties
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
" NO PROMISES BUT SOLUTIONS"

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing? Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you... Self Employed?
Temporary Resident? New Immigrant?
Not to Worry!
Please Call - THEVEN KANKESU
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
thevenk1.tk@gmail.com / theven.kankesu@mtgarc.ca

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers @
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca


விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


2026 உலக வணிகம்
ULAGA VANIKAM உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**விடுதலைக்காக – எமது தேசம் மதிப்பிடமுடியாத பெரு விலையைக் கொடுத்திருக்கிறது; விடுதலைக்காக – இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடியிருக்கிறது; விடுதலைக்காக இந்தப் பூமிரணகளமாக மாறியிருக்கிறது; விடுதலைக்காக எமது வீரர்கள் இன்றும் செத்துக்கொண்டே இருக்கிறார்கள்.**







## சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca



அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




## சோதியா படையணியின் தாக்குதல் தளபதி

# லெப். கேணல் நிலானி / தர்மா




மன்னார் பாலம்பிட்டிக் களமுனை மிகக் கடுமையாகவும் ஆக்ரோசமகவும் இருந்தது. சிங்கள படைகளின் எறிகணைகள் மழைபோல் பொழிந்த வண்ணம் இருந்தன கொத்துக்குண்டுகளுக்கும் குறைவில்லை.

எங்கும் புற்றீசல்கள் போல படையினர் சளைத்திடாத தமிழீழத்தின் மகளிர் படையணியான. மேஜர் சோதிய படையணி பொருத்திக்கொண்டு இருந்தது. பெண்களை இளக்கமாக நினைத்த சிங்கள படைகளுக்கு அண்ணனின் புலித்தங்கைகள் சரியான படம் புகட்டிக்கொண்டு இருந்தார்கள்.

குறைந்த அளவு பெண்போராளிகள் பலநூறு இராணுவத்துடன் போர் புரிந்துகொண்டு இருந்தார்கள். நேரம் சென்றுகொண்டு இருந்தது படைகளுக்கு சாதகமாக மாறிக்கொண்டு இருந்தது. அக்கா!... அல்பா பகுதியை உடைச்சுக்கொண்டு ஆமி வந்துட்டான். இது ஒரு பெண் போராளியின் நண்பகல் பதினோரு மணி யாக இருந்தது. எத்தனை நிலை (பொசிசன்) உடைச்சிட்டான்?... எவ்வளவு ஆமி இருக்கும்?... இது அந்த மகளிர் கட்டளை தளபதியின் குரல்... ஒரு... 60 - 70 பேர் இருக்கும் அக்கா. நீங்கள் எத்தனை பேர் ?... என்னுடன் 3 பேர் அக்கா ஒரு பிரச்சனையும் இல்லை வலப்பக்கமும் இடப்பக்கமும் உடைக்க விடாமல் மற்ற பிள்ளைகள் சண்டை பிடிக்கினம். நீங்கள் 3 பேரும் உள்ளுக்குள் வர விடாமல் சண்டை பிடியுங்கோ. இப்ப ஒரு அணியை உங்களுக்கு உதவிக்கு அனுப்புகிறேன். அப்படியே சண்டை பிடியுங்கோ நாங்கள் உள்ளுக்கு வந்தவனை பொக்ஸ் அடிச்சு (பெட்டி வடிவ வியூகம்) ஒருத்தனையும் தப்பவிடாமல் கொல்லுவம் என்றாள்.

அந்த பெண் தளபதி சிறிதும் பதட்டம் இன்றி. உதவிக்கு அனுப்பப்பட்ட அணி சென்று சேரும் போது 2 பெண் போராளிகள் வீரச்சாவு அடைந்தார்கள் ஒரு போராளி மட்டுமே போரிட்டுக் கொண்டு இருந்தாள். களமுனை மிகக்கடுமையாக இருந்தது. இப்போது இராணுவமும் அதிக தூரம் போராளிகளின் நிலைகளுக்குள் வந்து விட்டான். நிலைமை கை மீறிக்கொண்டிருந்தது. அந்த நேரம் உதவி அணியும் வரவில்லை. உடனடியாக வெவ்வேறு நிலைகளில் இருந்து ஒருங்கிணைக்கப்பட்ட சிறிய அணியுடன் முறியடிப்பு சமரில் இறங்கினாள்.

சோதியா படையணியின் தாக்குதல் தளபதி லெப் கேணல் சரிதா / தர்மா சிங்கள படைகளின் அத்தனை ஆயுதங்களும் பெண் போராளிகளின் மன உறுதியின் முன் மௌனிக்க ஆரம்பித்தன சீற்றத்துடன் புறப்பட்ட சிங்கங்கள் தமிழ் பெண் புலிகளின் முன் மண்டியிடத் தொடங்கின. இன்னும் ஒரு காவலரண் தான் மீளக்கைப்பற்ற வேண்டி இருந்தது. சண்டை தொடர்ந்தது அந் நேரம். அந்த நிகழ்வு நடந்தது தர்மாவை எதிரியின் குண்டுச் சிதறல்கள் மிகப்பலமாக தாக்கியதில் தர்மா தூக்கி வீசப்பட்டாள். சில நிமிடங்களில் களமுனையில் சிங்களவனின் கை ஓங்கியது. ஆனால் அது அதிக நேரம் நீடிக்கவில்லை தர்மாவின் கட்டளை புலியின் உறுமலாய் ஒலித்தது அந்த உறுமல் ஒலித்த வேகத்தில் பெண்புலிகள் பாய்ந்து சென்றனர்.

ஓலமிட்டபடி சிங்கங்கள் கால் தெறிக்க இறந்த தமது சகாக்களையும் விட்டு விட்டு ஓடித்தப்பினர். களமுனை அமைதியானது. அன்றைய வெற்றியின் நாயகிகளாக பல பெண்புலிகள் வீரச்சாவு அடைந்து இருந்தனர். எராளமான சிங்கள படையினர் இறந்து இருந்தனர். அவர்களின் உடலங்கள் ஆங்கங்கே சிதறிக்கிடந்தன. அந்த வெற்றியை கண்ணுற்றவாறு. அந்த சமர்க்களத்தின் தளபதி லெப் கேணல் சரிதா மயக்கமுற்றாள்.

தமிழீழத்தின் யாழ்ப்பாண மாவட்டடத்தில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை அதன் தெற்கே உள்ள அராலி மத்தியில் அமைந்துள்ள ஊரத்திக்கிராமம், மேற்கே காரைநகர் தொடக்கம் ஊர்காவல்த்துறை வரை ஆழம் குறைந்த கடல்ப்பகுதியையும், தெற்கே பரந்த வயல் வெளியையும் கொண்டது மழைக் காலத்தில் பச்சை ஆடையில் அழகிற்கு அழகு சேர்ப்பாள் ஊரத்தி என பெயர் சூட்டப்பட்டது.

1991 அக்கிராமத்தின் மத்தியில் அம்மன் கோவில் ஒன்று உள்ளது. மிகவும் பழமை வாய்ந்த கோவில் அது அக்கோவில் தான் ஊரில் உள்ள அத்தனை பேரும், ஒன்று கூடும் இடம். கோவில் அருகே சிறுவர் பாடசாலையுடன் இணைந்த வாசிக சாலை (இப்போது இடம் மாற்றப்பட்டுள்ளது) உள்ளது. அங்கே 1982ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்பப்போ போராளிகள் வந்து சென்றார்கள்.

அப்போதுதான் தர்மாவுக்கு போராளிகளுடன் தொடர்பு ஏற்ப்பபட்டது. ஈ பி ஆர் எல் எப் , புளொட் மற்றும் ரெலோவுடன் , அப்போது அவரின் வயது 12 வயது குறைவாக இருந்தாலும் நாட்டுபற்று அளப்பெரிதாக இருந்தது.

இப்படி இருக்கும் போதுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் தளபதி லெப் சீலன் அண்ணா வீரச்சாவு அடைந்தார். அவர் நினைவாக தனது தம்பிக்கு சீலன் அண்ணாவின் பெயர் சூட்டினாள். இக்காலப்பகுதியில் ரஞ்சன் என்ற போராளியின் தொடர்பு ஏற்பட்டது. அதன் பின்புதான் தர்மாவின் வாழ்வில் முதலான மாற்றம் ஏற்பட்டது. தர்மா ரஞ்சன் என்ற போராளியிடம் தான் விடுதலைப் புலிகளில் (அக் காலப்பகுதியில் ரைகர். பெரிஸ் என்பார்கள்) இணையப்போவதாக கூறினாள். அதற்கு அவர் உங்களுக்கு வயது குறைவு அதோட எங்களின் அமைப்பில் பெண்கள் பிரிவு இல்லை நீங்கள் தொடர்ந்து படியுங்கோ காலம் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்றார்.

தர்மாவுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனாலும் அவளது இயக்க கனவு தொடர்ந்தது 1987ஆம் ஆண்டு இந்தியா ஆக்கிரமிப்பு படையினர் தமிழீழத்தினை முற்றுகையிட்டனர். மானிப்பாயின் சுதுமலையில் தமிழீழத் தேசியத்தலைவர் செய்த வரலாற்று சிறப்பு மிக்க சுதுமலைப் பிரகடனத்தில் தர்மாவின் குடும்பமே கலந்து கொண்டது. தர்மாவின் கரத்தை பற்றியவாறு நானும் நின்றேன். அன்று தான் என் வாழ்வில் கிடைத்தலுக்குரிய பேறு பெற்றேன் எங்கள் தமிழீழக் கடவுள் தலைவனை கண்டேன்.

பிரகடனம் முடிந்து ஊர் திரும்ப வீதியில் ஏறினோம். இந்திய ஆமியின் வாகனங்கள் தொடராக சென்றன மக்கள் ஆரவாரமாகக் கை அசைத்தனர். நானும் எனது கைகளை தூக்கினேன். என்னை கை காட்ட விடாது தர்மா தடுத்துவிட்டார். நான் தர்மாவின் முகத்தை பார்த்தேன். அந்நேரம் அருகில் நின்ற போராளி ஒருவர் இப்ப கை காட்டுங்கோ பின்னர் வருவதை நீங்களே அனுபவியுங்கோ என்றார். தர்மாவின் தடுத்தலும் போராளியின் சொல்லும். இந்த இரண்டுக்குரிய அர்த்தமும் அப்போது எனக்கு விளங்கவில்லை பின்னர் புரிந்தது. (இந்திய இராணுவம் எமது மக்களை கொத்துக்கொத்தாக கொன்று குவித்த போது)

தியாக தீபம் திலீபன் அண்ணாவின் உண்ணாவிரத அறப் போராட்டம் தொடங்கியது. பன்னிரண்டு நாட்களும் தர்மா திலீபன் அண்ணாவின் மேடையில் முன்றலில் தான் இருந்தாள். அவரின் வீரச்சாவின் பின் தர்மா விட்ட கண்ணீர் இப்போதும் என் மனக்கண்ணில். திலீபன் அண்ணாவின் வீரசாவை தொடர்ந்து தமிழீழத்தில் பதட்டம் அதிகரித்தது அந்நேரம் போராளிகளின் தொடர்பும் விட்டுப்போனது. ஆனாலும் தர்மாவின் போராட்ட செயல்பாடுகள் நிற்கவில்லை. அது தீவிரம் பெற்றது.

1987.10.01 எனக்கு இன்றைக்கும் பசுமையாக அன் நிகழ்வு இருக்கின்றது. தர்மவைச்சுற்றி என் நேரமும் இருக்கும் சிறுவர் பட்டாளத்தை அவசரமாகக் கூட்டினாள். அவளின் முதலாவது சொல் இடியாகத் தாக்கியது சாவுக்கு பயந்தவர்கள் இக்குழுவில் இருந்து இந்த நொடியே வெளியேறுங்கள், துணிந்தவர்கள் இருங்கள் என்றாள். எங்கள் சிறுவர் குழுவின் தலைவி தர்மா தான். நான் அதன் செயலாளராக இருந்தேன். அமைதி நிலவியது .

அங்கிருந்து சுமார் ஏழுபேர் வெளியேறினார். நான் அமைதியாக அவள் முகத்தை பார்த்தேன். என்னுடன் தர்மா உட்பட பதினைந்து பேர் இதில் ஒன்பது பெண்கள் தர்மா பேசத் தொடங்கினாள்: இதில் இருக்கிற பலர் ஏற்கனவே பல இயக்கத்துடன் தொடர்பாக இருந்தீர்கள் ஆனால் இப்ப எங்களுக்கு தெரியும். டைகர்ஸ் தான் உண்மையான இயக்கம் என்று. எனவே நாங்



களா இப்படியே குழுவாக இருந்து டைகர்ஸ் போராளிகளின் தொடர்பு கிடைத்தவுடன் இப்படியே இணையவேண்டும். இதில் உங்களுக்கு சம்மதமா? என்றாள். ஒருமித்த குரல் எல்லோரும் 'ஓம்' என்கிறார்கள். அங்கே கூடி இருந்தவர்கள் எல்லோரும் ஒரு மனதாக அக் குழுவிற்கு தமிழீழ மக்கள் படை என்று பெயர் இட்டனர்.

சுருக்கமாக ரிபி என அழைத்தனர் ரிபியுடன் தொடர்பு கொண்டவர்களுக்கு தேவையான உதவிகளை ரிபியினர் செய்து கொடுத்தனர். ரிபி குழுவில் இருந்தவர்களின் வயதை நினைத்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! ஆக குறைந்த வயது எட்டு கூடிய வயது பதினெட்டு. தர்மாவின் வயது பதினேழு. தர்மாவைபற்றி எழுதும் எனது வயது பதினொன்று. தர்மாவின் சிறப்பான வழிநடத்தலில். நாங்கள் இயங்கிக்கொண்டு இருந்தோம். எங்களுக்கு ஆச்சரியம் ஊட்டும் விதமாக எமது இயக்கத்தின் தொடர்பு கிடைத்தது.

உணவு வழங்குதல் இந்தியபடைகளுக்கு தெரியாமல் போராளிகளை கூட்டிச் செல்லுதல் இரண்டுமே தான் எங்களுக்கு போராளிகள் தந்தார்கள். அதன் பின்னர் இரவு காவல் கடமையிலும் எமது அமைப்பை இணைத்தனர். இந்திய படைகள் எமது மண் மீது அநியாயமான போரை தொடுத்தபோது தர்மா இயக்கத்தில் இணையும் தனது முடிவைத் தெரிவித்தபோது போராளிகள் மறுத்துவிட்டனர். இல்லை தங்கச்சி நீங்கள் இப்ப செய்யற பணியைச் செயுங்கோ நாங்கள் தேவையான போது உங்களை கூப்பிடுகிறோம் என்கிறார்கள்.

1989 ஆண்டு தர்மாவுக்கு மருத்துவப் படிப்புக்கான வாய்ப்பு வந்தது. படிப்பைத் தொடர்ந்த படித்து கொண்டு தனது போராட்டக் கடமைகளை தர்மா செய்தாள். தர்மாவின் குடும்பம் மிகவும் வறுமைப்பட்டது ஆனால் எந்நேரமும் போராளிகளை ஆதரித்து அவர்களுக்குத் தம்மாலான உதவிகளை செய்து கொண்டு இருப்பார்கள். தர்மாவின் குடும்பம் பெரிது செல்லையா சிவபாக்கியம் தம்பதிகளின் நான்காவது பிள்ளைதான் தர்மா. இவள் பின்னே மூவர் அவளது இயற்பெயர் இலங்கேஸ்வரி. வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் கபோத சாதராணம் ( வரை கல்வி கற்றாள். மதம் என்ற முட்டாள் தனமான கருத்தை எதிர்ப்பாள்.

தர்மாவின் குறிப்பேட்டில் இருந்து
04/09/1989
அராலி யாழ்ப்பாணம்

மதம் தமிழனின் எழுச்சியை அடக்க

அந்நியர்கள் விதைத்த

அழகான விச விதைகள்

மதம்

தமிழை மெல்ல

கொல்லும் விஷம்

அந்நிய மோகத்தை விடு

எங்கள் அன்னைத் தமிழே

உயிரென தொழு…

தர்மாவின் குறிப்பேட்டில் இருந்து பெறப்பட வரிகள் அவை. தர்மா 1995 ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளில் இணைந்தாள். தனது ஆரம்ப பயிற்சியை வன்னிக்காட்டில் பெற்றாள். முல்லைத்தீவுப் படைத்தளத்தை வீழ்த்திய ஓயாத அலை ஒன்று தொடக்கம்… அவள் கண்ட களங்கள் ஏராளம்… சத்ஜெய, கிளிநொச்சி ஊடறுப்புத் தாக்குதல், ஜெசிக்குறு தொடக்கம் ஓயாத அலை இரண்டு, ஓயாத அலை மூன்று இதில் ஆனையிரவுப் படைத்தளம் மீட்கப்பட்டது. உட்பட தீச்சுவாலை எதிர்ச்சமர்… இப்படியே அவள் களம் நீண்டது… தர்மா ஓய்வின்றி களத்தில் சுழன்றாள்.

ஒருமுறை இவளுடன் இரண்டு போராளிகள் ஜெசிக்குறு களமுனையில் பிறிதொரு காவலரண் நோக்கிச் செல்லும் போது, கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது. அப்போது மின்னல் தாக்கி மூவரும் மயக்கம் அடைந்தனர். இரண்டு நாட்கள் மயக்க நிலை, பல கருத்துக்கள் அங்கே நிலவிய போதும்… மேஜர் சோதியா படையணி சிறப்புத்தளபதி பிரிகேடியர் துர்க்க அக்கா தெளிவாகவும் உறுதியாகவும் சொன்னார். தர்மாவுக்கு ஆபத்து ஏதோ நடந்திருக்கு தேடிப்பருங்கோ என்று. எதேர்ச்சையாக அவ்வழியே வந்த ஆண் போராளிகளினால் இவர்கள் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டனர் .

தர்மாவின் குறிப்பேட்டில் இருந்து

10.03 1998 ஜெசிக்குறு களமுனை அப்ப ஆயிரம் அறிவுரைகளை ஊட்டினாலும் ஒன்றை ஆணித்தரமாய்க் கூறினாய் மனிதரை நேசி தமிழைச் சுவாசி. தர்மாவுக்கு தலைவரின் பணிப்பின் பேரில் துர்க்கா அக்காவினால் கள ஓய்வு வழங்கபட்டது. 2001 ஆண்டு ஓர் நாள் முகமாலையில் சண்டை ஆரம்பித்தது. புதுக்குடியிருப்பில் நின்ற தர்மா உடனே முகமாலை களமுனைக்குச் சென்றாள்.

அந்நேரம் அங்கே வந்த துர்க்கா அக்காவினால் அனுமதி இன்றி கள முனைக்கு வந்ததால். தண்டனையாக நடந்து புதக்குடியிருப்புக்கு செல்லுமாறு பணித்தார். நடந்து வந்த தர்மாவை பளைப்பகுதியிலிருந்து வாகனத்தில் ஏற்றி வந்தார் துர்க்கா அக்கா. நான் கேட்டேன் "தர்மா அக்காவை ஏன் உங்களுக்கு தண்டனை வழங்கபட்டது?"… என்று. அதற்கு தர்மா அக்கா சொன்ன. "எங்கட குடும்ப நிலையை கருத்தில் கொண்டு தலைவர் என்னை சண்டைக்கு விட வேண்டாம் என்று சொன்னார். அதுதான் அனுமதி இல்லாமல் சண்டைக்கு போனதுக்கு அக்கா தண்டனை தந்தா" என்றார் தர்மா. "இதுக்கு வருதப்படுகிறிங்களா?" என்று நான் கேட்ட போது. "அனுமதி இன்றி கள முனை செல்வது பிழை என்றால் இந்த பிழையை நான் தொடர்ந்து செய்வேன்." என்றா தர்மா. தர்மா எப்போதும் கள முனையில் வாழ்ந்தவள்.

ஓய்வின்றி உழைத்த போராளி, யுத்தத்தின் மூலமாக தமிழீழத்தை மீட்கலாம் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவள். தலைவரையும் நாட்டையும் தமிழர்களையும் உயிருக்கும் மேலாக நேசித்த போராளி. 08.05.2008 அன்று மன்னார் பாலம்பிட்டி களமுனையில் விழுப்புண் அடைந்து. 08.06.2008 அன்று கிளிநொச்சி பொன்னம்பலம் மருத்துவமனையில் தனது தாயான சிவபாக்கியத்தின் மடியில் தலை சாய்த்திருந்து கதைத்துக் கொண்டிருக்கும் போது வீரச்சாவடைந்தாள்.

இறுதிவரை களமுனையே வாழ்வாக கொண்டு வாழ்ந்த தர்மா தனது அன்பு நண்பியும் சோதியா படையணி துணைத் தளபதியுமான லெப். கேணல் செல்வி வீரச்சாவடைந்து, சரியாக பதின்நான்காம் நாள் வீரச்சாவு அடைந்தாள்.

கிளிநொச்சி துயிலும் இல்லத்தில் லெப் .கேணல் செல்வி அக்காவின் விதைகுழி வரிசையில் சரியாக பதின்நான்காவது ஆளாக விதைக்கப்பட்டாள் லெப். கேணல் தர்மாவாக. புனிதத்தின் சுவடாக ஒளிர்வாய் எம்மினத்தின் விடியலுக்காய் !…

என்றும் சோதியா படையணியின் தாக்குதல் தளபதி லெப் கேணல் தர்மாவிற்கு வீரவணக்கம் செய்து அவர் சுவட்டின் வழியில் நாமும் பயணிப்போம்.

**உலகெங்கும் தமிழினம் பரந்து வாழந்தாலும் தமிழீழத்திலேதான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கிறது; தமிழீழத்திலேதான் தேசிய ஆளுமை பிறந்திருக்கிறது; தமிழீழத்திலேதான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கின்றது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–




# முதல் மாவீரர் லெப். சங்கருக்கு கம்பர்மலையில் உள்ள அவரது இல்லத்தில் வீரவணக்கம்

27.11.2025

மாவீரர் நாள் தாயகமெங்கும் நினைவுகூரப்படும் நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் மாவீரருக்கு சுடர் ஏற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தினார்.



முன்னதாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் மாவீரர் லெப். சங்கருக்கு கம்பர்மலையால் உள்ள அவரது இல்லத்தில் வணக்கம் செலுத்தினார்.

தொடர்ந்து குட்டியானி மற்றும் தங்கத்துரை ஆகியோருக்கும் வணக்கம் செலுத்தினார்.

பின்னர் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியிலும், மாவீரரின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு அமைந்துள்ள நினைவாலயத்திலும் சுடர் ஏற்றி மலர் தூபி வணக்கம் செலுத்தினார்.

தொடர்ந்து கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தில் சிறீலங்கா இராணுவத்தின் படைமுகாம் அமைக்கப்பட்டுள ளதால் இராணுவ முகாம் முன்பாக மாவீரருக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.

அதனை அடுத்து, தமிழின விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த ஈகையர் பொன் சிவகுமாரனின் உரும்பிராயில் உள்ள நினைவு தூபிக்கும் சென்று வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவிடத்திலும் வணக்கம் செலுத்தப்பட்டது.

பின்னர் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிறீலங்கா இராணுவத்தின் படைமுகாம் அமைக்கப்பட்டுள்ளதால் இராணுவ முகாம் முன்பாக மாவீரருக்கு வணக்கம் செலுத்தப்



பட்டது.

அதனை தொடர்ந்து மாவீரர் மில்லரின் நினைவாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் முன்பாக ஈகை சுடர் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது.

எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிறீலங்கா படைமுகாம் அமைக்கப்பட்டுள்ளதால் இராணுவ முகாம் முன்பாக மாவீரருக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை கடற்கரையில் கடலில் காவியமான கடற்புலிகளுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.

# வல்வெட்டித்துறையில் இரத்த தான முகாமை நடத்தியமை தொடர்பில் சிறீலங்கா புலனாய்வாளர் தீவிர விசாரணை

27.11.2025

வல்வெட்டித்துறையில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, குரதிக் கொடை முகாமை நடாத்தியமை தொடர்பில் சிறீலங்கா புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கதலைவர் பா.வீரசுரேந்திரன் தெரிவித்ததாவது,

வல்வெட்டித்துறை மண்ணின் மைந்தர்களது ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை ஊடாக முன்னெடுக்கப்பட்ட 83ஆவது இரத்ததான முகாம் நேற்றைய தினம் புதன்கிழமை வல்வெட்டித்துறையில் இடம்பெற்றுள்ளது.

மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் அந்த இரத்த தான முகாமை ஒருங்கிணைத்து முன்னெடுத்தோம்.

யாழ்ப்பாணத்தில் தற்போது பெரும் குருதித்தட்டுப்பாடு நிலவி வருகிறது. அதனை ஈடுசெய்வதற்கு பெரும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்தோம். ஆனால் இந்தப் பணிகளுக்கு புலனாய்வுத் துறையால் பெரும் நெருக்குவாரங்கள் கொடுக்கப்பட்டது.

குறித்த இரத்ததான முகாம் ஆரம்பமானது முதல் வல்வெட்டித்துறை பொலிஸ் தரப்பு தொடங்கி புலனாய்வுப் பிரிவினர் வரை மாறிமாறி விசாரணைகளை மேற்கொண்டனர்.

எமக்கு மன உளைச்சலைத் தரும் வகையில் இந்தச்செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன. கெடுபிடிகள் தொடர்ந்து



வழக்கு தொடுக்கப்படுமாக இருந்தால் அந்த நாளுடன் இரத்த தான சேவையில் இருந்து முற்றாக விலகிவிடுவேன் என்றார்.

# முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் வெள்ளத்தினால் சிதைவு

01.12.2025

முல்லைத்தீவில் உள்ள வட்டுவாகல் பாலம் வெள்ளம் காரணமாக இரண்டு இடங்களில் சிதைவடைந்து இடிந்து விழுந்துள்ளதாக சாலை மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

நந்திக்கடல் வாவியின் குறுக்கே செல்லும் இந்தப் பாலம், முல்லைத்தீவு நகரத்திற்கான முக்கிய அணுகல் பாதைகளில் ஒன்றாகும்.

முல்லைத்தீவிலிருந்து பரந்தன் செல்லும் சாலையில் நந்திக் கடல் வாவியின் மீது பாலத்தின் இரண்டு பகுதிகள் இடிந்து விழுந்ததால், பாலத்தின் வழியாக அனைத்து போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.







**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...புகைப்படப் பதிவுகள்!

## முல்லைத்தீவு இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லம்





## கிளிநொச்சி கனகபுரத்தில் மாவீரர் துயிலுமில்லம்









## யாழ். எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம்





**மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்துகொள்வார்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...புகைப்படப் பதிவுகள்!

## யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வு!









## முல்லைத்தீவு தேராவில் மாவீரர் துயிலுமில்லம்







## முல்லை. முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம்





**விடுதலைப் புலிகள் மக்களிலிருந்து வேறுவட்டவர்கள் அல்ல. விடுதலைப் புலிகள் ஒரு மக்கள் இயக்கம். புலிகள் தான் மக்கள் மக்கள்தான் புலிகள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...புகைப்படப் பதிவுகள்!

## வடமராட்சி உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம்





## மன்னார் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம்





## அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம்





## மட்டு. தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம்





## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வு!





# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...புகைப்படப பதிவுகள்!

## மன்னார் ஆள்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம்





## வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லம்





## திருமலை ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம்





## ஆனந்தபுரம் பச்சைபுல்மோட்டை மாவீரர் துயிலுமில்லம்





**தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...புகைப்படப் பதிவுகள்!

## யாழ். கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம்





## யாழ். தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்லம்





## வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம்





## கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம்





## முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலுமில்லம்






# தமிழீழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மாவட்ட ரீதியாக...புகைப்படப் பதிவுகள்!

## முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம்





## மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லம்





## வல்வெட்டித்துறை தீருவில் திடல்





**சுதந்திரம் வேண்டிக் கிளர்ந்தெழும் ஓர் இனம், பொருளாதார வாழ்வில் தன் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் அத்தகைய இனத்தால்தான் சுதந்திரத்தை அனுபவிக்க இயலுமென்பது நியதியாகும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**



நல்லூர்




புதுக்குடியிருப்பு



புன்னாலைக்கட்டுவன்




மாதகல்



கோண்டாவில்



தம்பலகாமம்




தொண்டமனாறு



வவுனியா




கிளிநொச்சி

# “மாவீரர் தியாகத்தால் தான் தமிழ் இனத்தின் நிலைநிறுத்தம் சாத்தியமானது”

## யாழ். வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஸ்

27.11.2025

மாவீரரின் தியாகத்தினாலேயே தமிழ் மக்களின் இருப்பு தக்கவைக்கப்பட்டது என்று வலிகாமம் கிழக்கு பிரேதச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு பிரேதச சபையில் நடத்தப்பட்ட அஞ்சலி நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

தமிழ் மக்கள் இந்நாட்டின் தேசிய இனமாக மரபுவழித் தாயகத்தில் வாழ்வதற்கான உரிமையினை இலங்கை அரசு மறுத்தது.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது பௌத்த சிங்கள பேரினவாதத்தினை கட்டவிழ்த்து விட்டபோது தமிழ்த் தலைவர்கள் ஜனநாயக ரீதியில் அவர்கள் அடக்குமுறைக்கு எதிராகப் போராடினார்கள்.

தமிழ்த் தலைவர்கள் ஜனநாயக அடிப்படையில் போராடியபோது அப்போராட்டம் அரச படைகளால் ஆயுத வன்முறை ஊடாக அடக்கப்பட்டது.



இந்நிலையிலேயே ஆயுத வழியிலான விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்று தமிழ் மக்களுக்கு என ஒரு தேசத்தினையும் தனியரசையும் இந்த உலகில் உருவாக்கவேண்டும் எனப் போராடி மகோன்னத தியாகத்தினை ஈடேற்றியவர்களாக மாவீரர் மீளாத்துயில் கொள்கின்றனர் என்று அவர் கூறியுள்ளார்.

அவர்கள் இந்தத் தேசத்தில் தமிழ் மக்கள் விடுதலை அடைய வேண்டும் என்பதற்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த தியாகசீலர்களாக உள்ளனர்.

மாவீரரின் தியாகம் அவர்களை தெய்வங்கள் என்ற ஸ்தானத்திற்கு முன்னகர்த்தியுள்ளது.

விடுதலைப் போராட்டம் அதன் தியாகங்கள் வாயிலாக தமிழ் மக்களின் இருப்பினை இந்தத் தேசத்தில் பாதுகாத்துள்ளது. சர்வதேசமயப்படுத்தியுள்ளது என்று வலிகாமம் கிழக்கு பிரேதச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

‘தியாகங்களே எம்மை இலட்சியத்தினால் ஒன்றுபடுத்துகின்றது. நாம் இன்றும் எமது உரிமைகளை ஜனநாயக ரீதியில் வென்றெடுப்பதற்கு மாவீரர் மீது உறுதியுரைத்து இலட்சியத்தினால் ஒன்றுபட்டவர்களாக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்’ என்றும் வலிகாமம் கிழக்கு பிரேதச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

# யாழில். எலிக்காய்ச்சலில் இருவர் உயிரிழப்பு; எச்சரிக்கை!

30.11.2025

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் எலிக்காய்ச்சலினால் இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும் வெள்ளநீருடன் தொடுகையுறபவர்கள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும் என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் கடந்த வாரம் எலிக்காய்ச்சல் நோயினால் இரண்டு இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இந்த மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த வருடமும் யாழ் மாவட்டத்தில் நவம்பர், டிசம்பர் காலப் பகுதியில் தீவிரமாகப் பரவிய எலிக்காய்ச்சல் நோயினால் 8 இறப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

யாழ் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமைக்குப் பின்னரே இந்த நோய்ப் பரம்பல் ஏற்பட்டுள்ளது.

எலிக்காய்ச்சல் நோயானது ஒரு வகை பக்ரீரியாவினால் ஏற்படுகின்றது.

எலிகள் போன்ற விலங்குகளின் சிறுநீர் மூலம் வெள்ளநீர், வயல்நீர், சேற்று நிலங்களில் இக்கிருமிகள் சென்றடைகின்றன. மனிதர்கள் வெள்ளநீரில், வயல் நிலங்களில், சேற்று நிலங்களில் வேலை செய்யும் போது அவர்களின் தோலில் உள்ள புண்கள் அல்லது காயங்கள் மூலம் கிருமிகள் மனித



உடலில் உட்செல்கின்றன.

இந்நோய் ஏற்படும் போது கடுமையான காய்ச்சல், கடுமையான தசைவலி, கடுமையான தலையிடி, இருமல், கண்கள் செந்நிறமாதல், வாந்தி, சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல், சிறுநீர் வெளியேறும் அளவு குறைதல் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம்.

இதனால் மனித உடலில் சிறுநீரகம், சுவாசத்தொகுதி, இதயம், ஈரல், மூளை போன்ற உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு மரணத்தை ஏற்படுத்தும்.

இந்நோயானது பெரும்பாலும் வயல்கள், சேற்று நிலங்களில் பயிர்செய்யும் விவசாயிகள் மத்தியிலும், கடல்நீரேரிகளில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவர்கள் மத்தியிலும், வெள்ள நீருடன் தொடுகையில் ஈடுபடுபவர்கள் மத்தியில் அதிகம் காணப்படுகின்றது.

இந்நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள வயல், சேற்று நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகள் கடல்நீரேரிகளில் மீன்பிடிப்பவர்கள் உடலில் காயங்கள் அல்லது புண்கள் இருப்பின் அவற்றை நீர் உட்புகாத வகையில் கட்டுப்போடுதல் வேண்டும்.

வெள்ளநீரில் அல்லது அசுத்தமான நீரில் பணியாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கால், கைகளுக்கு பாதுகாப்பு அங்கிகளை அணிய வேண்டும். வெள்ளநீரில் அவசியமின்றி விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும்.

வயல்களில், சேற்று நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகளும், கடல்நீரேரி மீன்பிடித்தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளிகளும் இந்நோய்க்கான தடுப்பு மருந்தை உங்களது பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வெள்ளநீருடன் தொடுகை ஏற்படுத்திக் கொள்பவர்களும் மேற்படி தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக முதல் இரண்டு நாட்களுக்குள்ளேயே தகுந்த மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் தாமதமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதனாலேயே உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

எனவே, பொது மக்கள் அனைவரும் இந்த நோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

# வெல்லாவெளிப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான வயல் நிலங்கள் சேதம்

01.12.2025

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் இம்முறை மேற்கொள்ளப்பட்டிருந்த பெரும்போக வேளாண்மைச் செய்கையில் ஆயிரக்கணக்கான வயல் நிலங்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் வெல்லாவெளி கமநல கேந்திர நிலையத்திற்குட்பட்ட வேத்துச்சேனை, வட்டவளை, நாதனைவெளி, ஓட்டடிமுன்மாரி உள்ளிட்ட பல வயற்கண்டங்களில் பல நூற்றுக்கணக்கான வயல் நிலங்கள் இவ்வாறு வெள்ளத்தில் அள்ளுண்டு முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளப் பெருக்கினால் வயல் வெளிகள் அனைத்தும் உடைப்பெடுத்து மீதமுள்ள நெல்நாற்றுக்கள் மண்ணுக்குள் புதையுண்டுள்ள இந்நிலையில் விவசாயிகள் உடைப்பெடுத்துள்ள வரம்புகளை திருத்தி சீரமைத்து வருகின்றனர்.

வெள்ள நீர் வடிந்து கொண்டிக்கின்ற இந்நிலையில் வயல் பாதிப்புகள் தொடர்பில் தற்போதைய நிலையில் தொலைபேசி இணைப்புக்கள் சீராக கிடைக்கப்பெறாத போதும், விவசாய அமைப்புக்களுடாக பாதிப்பின் நிலவரங்கள் தொடர்பில் தரவுகளைச் சேகரிக்கும் செயற்பாடுகளை மோற்கொண்டுள்ளதாகவும், அப்பகுதி பெரும்பாக அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் தெரிவித்தார்.



**உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# திருகோணமலை மாவட்டத்தில் 22,232 குடும்பங்கள் பாதிப்பு

01.12.2025

திருகோணமலை மாவட்டத்தில் சீரற்ற கால நிலை மற்றும் டித்வா புயல் காரணமாக மொத்தமாக 22,232 குடும்பங்களை சேர்ந்த 72,254 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.





திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலக பிரிவை உள்ளடக்கிய 212 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை (25) முதல் திங்கட்கிழமை (01) வரையான தகவலின் அடிப்படையில் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 561 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் பாதிக் கப்பட்ட 17,004 குடும்பங்களை சேர்ந்த 56,479 நபர்கள் உறவினர்கள் மற்றும் சொந்த வீடுகளில் தங்கவைக் கப்பட்டுள்ளனர். 61 பாதுகாப்பான தற்காலிக முகாம்களில் 5,228 குடும்பங்களை சேர்ந்த 15,775 பேர்கள் தங்க வைக் கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் 519 குடும்பங்களை சேர்ந்த 1,844 நபர்களும், தம்பலகாமம் 448 குடும்பங்களை சேர்ந்த 1,373 நபர்களும், மொறவெவ 129 குடும்பங்களை சேர்ந்த 403 நபர்களும், சேருவில 805 குடும்பங்களை சேர்ந்த 2,287 நபர்களும், வெருகல் 1,745 குடும்பங்களை சேர்ந்த 5210 நபர்களும், மூதூர் 6,941 குடும்பங்களை சேர்ந்த 22,378 நபர்களும், கிண்ணியா 4,932 குடும்பங்களை சேர்ந்த 16,339 நபர்களும், கோமரங்கடவல 304 குடும்பங்களை சேர்ந்த 942 நபர்களும் , பதவிஸ்ரீபுர 391 குடும்பங்களை சேர்ந்த 1,242 நபர்களும், குச்சவெளி 5,732 குடும்பங்களை சேர்ந்த 19,255 நபர்களும், கந்தளாய் 286 குடும்பங்களை சேர்ந்த 981 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவிலாறு அனைக்கட்டு உடைப்பெடுத்ததன் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள் ளது.

# இலங்கைத்தீவின் மோசமான அரச நிர்வாக மந்தத்தினால் அப்பாவி பொதுமக்களின் உயிர் மற்றும் உடமை இழப்பு

02.12.2025

இலங்கை தீவின் மோசமான அரச நிர்வாக மந்தத்தினால் அப்பாவி பொதுமக்கள் மீண்டுமொரு தடவை பாரிய உயிர் மற்றும் உடமை இழப்பை சந்தித்திருக்கின்றார்கள்.

நவம்பர் 10ஆம் தேதி AccuWeather இலங்கை தீவு எதிர் கொண்டிருந்த வெள்ளம், நிலச்சரிவு, கடுமையான மழை தொடர்பான முன்கூட்டிய எச்சரிக்கையை வெளியிட்டது.

12ஆம் தேதி BBC Weather யும் இலங்கைத் தீவு தொடர்பாக அதே எச்சரிக்கையை வெளியிட்டது . 14ஆம் தேதி Al Jazeera வும் வெள்ளம், நிலச்சரிவு, மழை தொடர்பான எச்சரிக்கையை வெளியிட்டது.

12 ஆம் திகதி இலங்கை வானிலை அவதானிப்பு மையத்தின் பணிப்பாளர் தொலைக்காட்சி நேரலையில் புயல் தொடர்ச்சியாக வலுவடைந்து வருவது குறித்து எச்சரித்திருந்தார்.

சம நேரத்தில் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா உட்பட்ட துறை சார் நிபுணர்கள் பல்வேறு தளங்களில் இலங்கை தீவு எதிர் கொண்டு வரும் அபாயங்களை எச்சரித்து கொண்டு இருந்தார்கள்.

அதாவது அவசரகால தயார்நிலை நெறிமுறைகளைச் செயல் படுத்துவதற்கு பலவேறு தரப்புகளிடமிருந்து போதிய தரவுகளும் தகவல்களும் தொடர்ச்சியாக ஜேவிபி ஆட்சியாளர்களுக்கு கிடைத்தன.

ஆனால் இயற்கை பேரிடரை எதிர்கொள்ள கூடிய எந்த முன்னேற்பாடுகளும் செய்யப்படவில்லை . 26 ஆம் திகதி கடும் மழை உக்கிரமடைந்த போது கூட நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான திரு அனுரா குமார திசாநாயக்க பேரிடரை எதிர் கொள்ளுவது தொடர்பான அவசர கால கூட்டத்திற்கு தலைமை தாங்க தயாராக இருக்கவில்லை.

மாறாக குறித்த நேரத்தில் திரு அனுரா குமார திசாநாயக்க திரைப்பட துறை சார்ந்தவர்களோடு நேரத்தை செலவழித்து கொண்டிருந்தார்.

விசேடமாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தலைவராகவும் இணைத் தலைவராகவும் உள்ள தேசிய பேரிடர் முகாமைத்துவ சபை (NCDM) செயலற்று இருந்தது.

பேரழிவு நிகழ்ந்து மூன்று நாட்களுக்குப் பின்னர் தான் அனுர குமார திசாநாயக்க State of Emergency தொடர்பான வர்த்தமானியை (29 ஆம் திகதி) வெளியிட்டார்.

அதே நாளில் தான் தடையற்ற நிவாரணம் (Immediate, Unrestricted Relief) குறித்த வழிமுறைகளையும் வெளி யிட்டார்.

இந்த தாமதங்களினால் மாவட்ட அரச அதிபர் காரியாலயம் உட்பட மாவட்ட அரச நிறுவனங்கள் 3 நாட்களாக பேரிடர் மீட்புக்கான உடனடி நிதியை விடுவிக்க முடியாமல் தடுமாறின.

பாதிக்கப்பட்டோர் 48 மணி நேரத்திற்கும் மேலாக வழக்கமான உதவிகள் கூட கிடைக்காமல் தடுமாற நேர்ந்தது.

இடம்பெயர்ந்தோருக்கு தங்குமிடங்கள் கிடைக்கவில்லை.



வைத்தியசாலைகளில் பாதிக் கப்பட்டோருக்கான மருந்துகளை வழங்குவதற்கும் வாங்குவதற்கும் நிதி வழங்க State of Emergency பிறப்பிக்கப்படாத நிலையில் தடுமாறின.

பல இடங்களில் பேரிடர் ஏற்பட்டு முதல் மூன்று நாட்கள் அரசு செலவில் ஒரு சமைத்த உணவு கூட வழங்குவதற்கான ஏற்பாடுகள் இருக்கவில்லை.

இது போததென்று எந்த சேவைகள் அவசியம் என்பது குறித்து தெளிவு இல்லாமல் அரசு ஊழியர்களுக்கு விடுமுறை அறிவித்தார்கள்.

மிக முக்கியமாக மகாவலி அதிகார சபை, இலங்கை மின்சார சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்களுக்கு நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் வெளியேற்றம் குறித்து வழிகாட்டல்கள் வழங்கப்படவில்லை.
மிக பெரிய மழைவீழ்ச்சியை தொடர்ந்து திட்டமிடப்படாத வகையில் நீர்தேக்கங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட நீர் தவிர்த்திருக்க கூட உயிர் இழப்புகளையும் சொத்தழிப்புகளையும் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தியது.

இந்த உண்மைகளையெல்லாம் மறைத்து விட்டு பாராளமன்றத்தில் நிலைமையின் பாரதூரம் குறித்து கருத்துக்களை முன்வைத்த திரு சஜித் பிரேமதாச நாட்டை கேட்பதாக ஜேவிபி சமூக தளங்கள் அவர் மீது அவதூறுகளை அள்ளி வீசுவதிலேயே கவனமாக இருந்தன.

மறுபுறம் State of Emergency யின் அவசியம் பற்றி தொடர்ச்சியாக வலியுறுத்திய தமிழ் பாராளமன்ற உறுப்பினர் திரு சாணக் கியன் மீதும் அவதூறுகள் பரப்பப்பட்டன.

இங்கே 25 நவம்பர் இரவு 10.30 மணிக்கு வங்காள விரிகுடாவின் தென்மேற்கு பகுதியில் உருவான தாழமுக்கம் Depression ஆக வலுப்பெறும் அபாயம் குறித்து வெளியிடப்பட்ட அறிவித்தலின் பின்னர் ஜேவிபி ஆட்சியாளர்கள் செயற்பட தொடங்கியிருந்தாலே பல்வேறு அழிவுகளை தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

ஜேவிபி ஆட்சியாளர்களின் வினைத்திறன் தொடர்பான கேள்விகளுக்கு அப்பால் Disaster Management Centre (DMC) உருவப்பட்டு 25 ஆண்டுகள் கடந்து விட்டன. பல பில்லியன் அரச பணம், வெளிநாட்டு நன்கொடைகள் ஆண்டு தோறும் செலவழிக்கப்படுகின்றது.

ஆனாலும் எந்த மாற்றமும் இல்லை. ஆண்டு தோறும் ஒரே விடயங்களையே. நடந்தேறுகின்றன.

குறிப்பாக இலங்கை தீவின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிக்கும் மலையக மக்களை வினைத்திறனற்ற நிர்வாகங்களினால் இயற்கைக்கு காலத்திற்கு காலம் பலி கொடுக்கின்றார்கள். - இனமொன்றின் குரல் முகநூல்

www.sangathamil.ca

# முல்லை. ஒதியமலைப் படுகொலையின் 41ஆவது ஆண்டு நினைவேந்தல்

02.12.2025

முல்லைத்தீவு ஒதியமலை கிராமத்தில் கடந்த 1984.12.02 ஆம் திகதியன்று சிறீலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழ் மக்களின் 41ஆம் ஆண்டு நினை வேந்தல் இன்று (02.12.2025) உணர்வெழுச்சியுடன் மேற் கொள்ளப்பட்டது.






குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில் குறித்த நினைவேந்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்தவகையில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு ஈகைச்



சுடரேற்றப்பட்டதுடன், நினைவுத் தூபிகளுக்கு மலர்தூவி, மலர் மாலை அணிவிக்கப்பட்டு உறவுகளால் உணர்வுபூர்வமாக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் , புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தபிசாளர் வே.கரிகாலன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் கிரிதரன், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து குறித்த நினைவிட வளாகத்தில் நினை வேந்தல் கூட்டமொன்று இடம்பெற்றதுடன், அதனைத் தொடர்ந்து ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு விசேட அத்மசாந்தி வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டது.













# யாழ். மாவட்டத்தில் 51,879 பேர் பாதிப்பு: 4040 பேர் 46 பாதுகாப்பு நிலையங்களில்

02.12.2025

யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 ஆயிரத்து 312 குடும்பங்களை சேர்ந்த 51 ஆயிரத்து 879 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி, நெடுந்தீவு, வேலணை, சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம், காரைநகர், நல்லூர், கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் 1710 குடம்பங்களைச் சேர்ந்த 5ஆயிரத்து 443 பேர் 59 பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான சமைத்த உணவு பிரதேச செயலாளர்களினால் வழங்கப்பட்டன.

சீரான காலநிலை காரணமாக சில பாதுகாப்பு நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் நேற்றைய தினம் திங்கட்கிழமை மீண்டும் வீடு திரும்பியதால் தற்போது 1264 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 040 அங்கத்தவர்கள் 46 பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான சமைத்த உணவு பிரதேச செயலாளர்களினால் வழங்கப்பட்டு வருகின்றன.

11 046 குடும்பங்களை சேர்ந்த 34 ஆயிரத்து 718 பேர் நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை 2 வீடு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் 322 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என தெரிவித்தார்.



# இலங்கைத்தீவில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

02.12.2025

சீரற்ற காலநிலையின் காரணமாக சுமார் 704 பேர் உயிரிழந்துள்ளனர். எனினும் புயல் தாக்கத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் பதிவான மரணங்களின் எண்ணிக்கை 390 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இன்று மாலை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அத்துடன் 352 பேரை காணவில்லை எனவும் அவர்களை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே கடந்த 27ஆம் திகதி ஏற்பட்ட பேரழிவுகரமான நிலச்சரிவால் தொலைதூர மலைப்பகுதி கிராமமான நெலும்கம எனும் கிராமத்தில் இருந்து 22 பேரின் சடலங்கள் இன்று மீட்கப்பட்டுள்ளன.

மேலும், புயல் தாக்கம் காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் 382ஆயிரத்து 651 குடும்பங்களைச் சேர்ந்த 13 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

432 வீடுகள் முழுமையாகவும், 15,688 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 16,621 குடும்பங்களை சேர்ந்த 52,892 அங்கத்தவர்கள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1,710 குடும்பங்களைச் சேர்ந்த 5,443 அங்கத்தவர்கள் 59



பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# தொற்றுநோய்கள் பரவும் அபாயம்; சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தல்

03.12.2025



பேரிடரின் பின்னர் இந்த நாடு மிகப்பெரிய சுகாதார நெருக்கடியை எதிர்க் கொண்டுள்ளது. இந்நாட்களில் கடும் வயிற்றுப் போக்கு, எலிக்காய்ச்சல், சுவாச நோய்கள், சரும நோய்கள் மற்றும் நுளம்புகளால் பரவக் கூடிய டெங்கு சிக்கன்குனியா போன்ற தொற்றுநோய்கள் வெகுவாக பரவவாய்ப்புள்ளன. ஆகையால் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற சுகாதார நெறிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் தொற்றுநோய்த் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் அத்துல லியனபத்திரன வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் புதன்கிழமை (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேரிடரின் பின்னர் இந்த நாடு மிகப்பெரிய சுகாதார நெருக்கடியை எதிர்க் கொண்டுள்ளது. நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறத் தேவையான சுகாதார நெறிமுறைகளைப் பினபற்றுவது அவசியம்.

பாதிக்கப்பட்ட பலர் பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் தமது வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இந்நாட்களில் கடும் வயிற்றுப்போக்கு, எலிக்காய்ச்சல், சுவாச நோய்கள், சரும நோய்கள் மற்றும் நுளம்புகளால் பரவக் கூடிய டெங்கு சிக்குன்குனியா போன்ற தொற்றுநோய்கள் வெகுவாக பரவவாய்ப்புள்ளன.

சுகாதாரமற்ற உணவு மற்றும் குடிநீரை உணவுக்கு எடுத்துக் கொள்வதால், அஜீரணம், கடும் வயிற்றுப்போக்கு, டைபாய்டு மற்றும் எப்படைடிஸ் போன்ற நோய்த்தொற்றுகளுக்கு ஆளாக நேரிடும்.

வெள்ள அனர்த்தத்தின் பின்னர் நீர் நிலைகள் மாசடைந்துள்ளன, இயலுமானவரை கொதித்தாறிய நீரை பயன்படுத்துங்கள். அதிகளவான மக்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தூய குடிநீர் வழங்கப்பட வேண்டும்.

அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களை தேடி நிவாரணப் பொருட்களை கொண்டு சேர்க்கும் தன்னார்வ தொண்டர்கள் உலர் உணவுப் பொருட்களை மக்களுக்கு வழங்கலாம்.

எனினும் ஆதரவற்ற மக்களுக்கு சமைக்கப்பட்ட உணவு வழங்க வேண்டிய தேவையும் உள்ளது. ஆகையால் சுகாதாரமான உணவுகளை வழங்குங்கள். வயிற்றுப்போக்கு, டைபைட்டு உள்ள நோயாளர்கள் இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து விலகி இருங்கள்.

பாதுகாப்பு நிலையங்களில் தொற்றுநோய்க்கு ஆளாகியுள்ள எவரேனும் இருப்பின் உடனடியாக சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரியை தொடர்புக் கொண்டு தெரிவிப்பது அவசியம்.

வெள்ளத்தின் பின்னர் தூய்மைப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடும் நபர்கள் கண்டிப்பாக எலிகாய்ச்சலுக்கான நோய்த் தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்வது அவசியம். ஈரலிப்பான நிலங்கள், நீர் தேங்கியுள்ள பகுதிகளில் சுத்தப்படுத் பணிகளை மேற்கொள்வதால் எலிக்காய்ச்சல் ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளது.

அத்தோடு இருமல், தடிமன், காய்ச்சல், சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாடுங்கள். இன்புளுவென்சா போன்ற சுவாச நோய்கள் மழைக்காலங்களில் வேகமாக பரவுகிறது.

குறிப்பாக 2 வயதுக்கு குறைந்த குழந்தைகள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் நாட்பட்ட நோயாளர்கள் ஆகியோரின் ஆரோக்கியம் தொடர்பில் மிக அவதானத்துடன் செயற்படுங்கள்.

ஒரு சில இடங்களில் தற்போது தொற்றுநோய்களுக்கு ஆளாகிய நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்றார். சருமநோய்த் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஜனக்க அக்கரவிட்ட தெரிவிக்கையில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பகுதியிலிருந்த மக்களுக்கு சரும நோய்கள் ஏற்பட்டுள்ளன. வெள்ள நீரில் அதிக நோய்க்கிருமிகள் உள்ளன.

ஆகையால் வெள்ள நீரில் அதிக நேரம் இருந்தோர், ஏற்கனவே சரும நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் உரிய சிகிச்சை பெறாதுவிடின் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்றார்.

www.sangathamil.ca

# வெள்ள நீரை வெளியேற்றுவதில் அறிவுசார் அணுமுறையையும் திட்டமிடலையுமே நாம் கோருகின்றோம்

## வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

03.12.2025

நல்லூர் பிரதேச சபையினால் வாய்கால் வெட்டப்பட முயற்சி எடுக்கப்பட்ட போது எனக்கோ அல்லது எமது சபைக்கோ உறுப்பினர்களுக்கோ தெரியாது. நாம் அதில் தடைகளை ஏற்படுத்தவில்லை மக்களே சென்று நேரில் எதிர்த்தனர் என தெரிவித்த வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ், வெள்ளம் ஒரிடத்தில் நிற்கக் கூடாது என்பதற்காக ஒரு பகுதி மக்கள் குடியிருப்பினை வெள்ளக்காடாக மாற்ற முடியாது எனவும் தெரிவித்தார்.







வலிகாமம் கிழக்கு – நல்லூர் பிரதேச சபை ஆகிய பிரதேச சபை எல்லையில் உள்ள வெள்ள, வாய்க்காலுக்குள் மண் அணை போடப்பட்டமை தொடர்பில் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற கடற்தொழில் அமைச்சர், மண் அணையை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு, சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு அறிவித்ததுடன் , அது தொடர்பில் வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் மீது குற்றச்சாட்டையும் முன் வைத்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் வலி, கிழக்கு பிரதேச சபை தவிசாளர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலையே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வலிகாமம் கிழக்கில் புவியியல் அமைப்பில் தாழ் நிலமான இருபாலை, கல்வியங்காடு பிரதேசத்தின் பகுதிகளில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வீடுகளில் குடியிருக்க முடியாதவில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அப் பகுதியில் பாதிக்கப்பட்டவர்களின் வெள்ளத்தினை அகற்ற முடியாதுள்ளது.

அவ்வாறான சூழ்நிலையில் அதிகளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு முறையான தீர்வை முன்வைக்காது தாழ் நிலம் என்ற காரணத்திற்காக ஏனைய பகுதிகளின் நீரை குறித்த குடியிருப்புக்களுள் முழுமையாக வெட்டி விட முடியாது.

அவ்வாறு வெட்டி விடுவதனால் பல நூற்றுக்கணக்கான குடம்பங்களை வலி கிழக்கின் இருபாலை மற்றும் நல்லூர் பிரதேச சபைக்கும் வலி கிழக்கிற்குமான கல்வியங்காடு பகுதி மக்களை குடி எழுப்புதாக அது அமையும்.

வெள்ளம் ஒரிடத்தில் நிற்கக் கூடாது என்பதற்காக ஒரு பகுதி மக்கள் குடியிருப்பினை வெள்ளக்காடாக மாற்ற முடியாது. அனர்த்த முகாமைத்துவக்கொள்கையும் அறிவு சார் அணுகு முறையையும் நாம் பொறுப்புடன் பின்பற்ற வேண்டும்.

வெள்ளம் வழிந்தோடும் செயற்பாட்டினை நடைமுறைப் படுத்தம் போது ஒருபகுதி மக்கள் பாதிக்கப்படாது பரவலாக வெள்ள சமநிலை ஒன்றை பேணும் கொள்கையை நாம் கொண்டுண்டுள்ளோம்.

இதே அணுகுமுறை புத்தார் கிழக்கு மற்றும் உரும்பிராய் வடக்கு – தெற்கு பகுதிகளிலும் பின்பற்றப்படுகின்றது.

இங்கு பிரதேச சபை எல்லை வேறுபாடுகள் கிடையாது. கட்சி அரசியல்வேறுபாடுகள் கிடையாது. ஒருதரப்பினர் முழுமையாகப் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை ஒரு தரப்பிற்காக அல்லது வசதி படைத்தவர்களுக்குச் சாதகமாக மாற்றிவிடமுடியாது.

ஏற்கனவே நல்லூர் பிரதேச சபையில் இருந்து வெள்ள நீரை வலிகாமம் கிழக்கிற்குள் கொண்டு வருவதற்கான வாய்க்கால் கட்டுமானம் பற்றிய சம்பாசணைகள் ஆரம்பிக்கப்பட்ட போது தாழ் நிலமாக உள்ள வலிகாமம் கிழக்குப் பகுதிக்குள் நீரை கொண்டுவருவதில் தடையில்லை ஆனால் வலிகாமம் கிழக்குப் பகுதியில் இருக்கின்ற மக்கள் குடியெழுப்பப்படாது முதலில் வலிகாமம் கிழக்குப் பகுதிக்குள் வெள்ளம் தேங்கக் கூடிய இடங்களுக்கான கால்வாய்கள் பொறிமுறைகள் உரியவாறு அறிவுசார் நிபுணர் அறிக்கை பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். அதற்கான பெரும் நிதியை தேடுகின்றோம்.

தற்போதைய அனர்த்தத்தில் கூட மேற்படி வாய்கால் வெட்டப்பட முயற்சி எடுக்கப்பட்ட போது எனக்கோ அல்லது எமது சபைக்கோ உறுப்பினர்களுக்கோ தெரியாது. நாம் அதில் தடைகளை ஏற்படுத்தவில்லை.

நல்லூர் மற்றும் வலிகாமம் கிழக்கின் ஒருபகுதி மக்களே சென்று நேரில் எதிர்த்தனர். அதனாலேயே வாய்க்கால் வெட்டுவது தடைப்பட்டது. மேற்படி வாய்க்கால் பிரச்சினையில் பிரதேச வேறுபாடுகள் கிடையாது.

வட்டாரங்களின் அடிப்படையில் கல்வியங்காடு எமது சபைக்குரிய வட்டாரம் அதன் வெள்ளமும் மேற்படி வாய்காலினுடாக வெளியேறவேண்டும். அதுபோல வெள்ளம் தாக்கக் கூடிய பகுதியில் நல்லூர் பிரதேச வட்டாரமும் அடங்கியுள்ளது.

ஆகவே இங்கு மக்கள் கேட்பதும் நாம் செயற்படுவதும் அனர்த்த முகைாமைத்துவத்தின் அடிப்படையில் குறைந்த பட்ச பாதிப்பு சமநிலையை பேணுவதற்கே. அதனை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். சகலருக்கும் பாதிப்பள்ளது. அது வேதனையானது.

பிரதான வீதிகளினை அடிப்படையாகக் கொண்டு மட்டும் நாம் நடவடிக்கை எடுத்து உட் கிராமங்களை நாம் வெள்ளத்தில் மூழ்கவிடமுடியாது. குடியிருப்புக்களையும் நிலத்தடி நீர் முகாமைத்தவத்திலும் எமக்கு கரிசனை வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மழை காரணமாக 64,098 பேர் பாதிப்பு

03.12.2025

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்சியான மழை காரணமாக 21,863 குடும்பங்களை சேர்ந்த 64,098 பேர் பாதிப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் தொடர் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வான் பாயத் தொடங்கியுள்ளதுடன், இதனால் தாழ் நிலப்பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

இதன் காரணமாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 1,312 குடும்பங்களை சேர்ந்த 4,124 நபரும், கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 4,658 குடும்பங்களை சேர்ந்த 14,650 நபரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 5,443 குடும்பங்களை சேர்ந்த 17,132 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 5,476 குடும்பங்களை சேர்ந்த 15,395 பேரும், துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 2,418 குடும்பங்களை சேர்ந்த 5,868 பேரும், வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 2,556 குடும்பங்களை சேர்ந்த 6,932 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக இன்றையதினம் (03) காலை 8.30 மணிக்கு வெளியிடப்பட்ட மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மக்கள் மீட்கப்பட்டு ஆறு பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள 40 இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதில் உறவினர் வீடுகளில் 3,872 குடும்பங்களை சேர்ந்த 11,184 நபர்களும், இடைத்தங்கல் முகாம்களில் 1,186 குடும்பங்களை சேர்ந்த




3,537 நபர்களும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**விடுதலைப் போராட்டத்திலிருந்து கலைஞர்களும் – அறிஞர்களும் அந்நியப்படுவது, மக்களிலிருந்தும் வாழ்க்கையின் நிதர்சனத்தில் இருந்தும் அந்நியப்படுவதாக முடியும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# வடக்கு மாகாணத்தில் மிக அதிக பாதிப்பினை எதிர்கொண்ட மன்னார் மாவட்டம்

04.12.2025

மன்னார் மாவட்டம், 40 வருட வரலாற்றில் கண்டிராத வெள்ளப் பாதிப்பினை எதிர்கொண்டு மாவட்டத்தின் ஒட்டு மொத்த மக்களும் பாதிப்படைந்துள்ளனர். இதற்கமைய 30 ஆயிரத்து 569 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 269 அங்கத்தவ்கள் பாதிப்படைந்துள்ளனர். 22 முழுமையாகவும் 822 வீடுகள் பகுதியளவிலும் பாதிப்படைந்துள்ளதோடு பெருமலவிலான கால்நடைகளை காணவில்லை என்றும் இவற்றில் ஒரு சில ஆயிரம் கால் நடைகள் இறந்த



நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதேநேரம் கன மழை பெய்து 3 நாள்கள் கடந்தபோதும் 3ஆம் திகதி மாலைவரை குஞ்சுக்குளம் பகுதி மக்கள் வெளியேற முடியாத நிலையே காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.



# யாழ். தையிட்டி விகாரைப் போராட்டத்தில் சிறீலங்கா பொலிசார் அடாவடி; கொட்டகைகள் பிடுங்கி எறிந்து மகளிர் மீதும் தாக்குதல்!

04.12.2025

யாழ். தையிட்டியில இன்று இடம்பெற்ற போராட்டத்தில் புகுந்து சிறீலங்கா பொலிசார்அடாவடியில் ஈடுபட்டுள்ளனர். கொட்டகைகள் பிடுங்கி எறியப்பட்டதுடன். மகளிர் மீதும் தாக்குதல் நடாத்தினர்.

சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டிய அரசும் காவல் துறையினரும தமிழர்களின் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்ட சட்டவிரோத விகாரை கட்டடத்திற்கு பாதுகாப்பு வழங்கிக்கொண்டு, தங்களது காணிகளை திரும்பி கேட்பவர்களை தாக்குவதென்பது இனவாதத்தின் அதி உச்சம் என போராட்டத்தில் குதித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.









# இலங்கைத்தீவில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் 1,593 கி.மீ. தொடருந்து பாதையில் 478 கி.மீ. மட்டுமே பயன்பாடு!

04.12.2025

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பெரும் சேதம் காரணமாக, இலங்கைத்தீவில் 1,593 கிலோமீட்டர் தொடருந்து வலையமைப்பில் 478 கிலோமீட்டர் மட்டுமே தற்போது பயன்படுத்தக்கூடியதாக உள்ளதாக சிறீலங்காவின் அத்தியாவசிய சேவைகள் ஆணையர் ஜெனரல் பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த சூறாவளி பல மாவட்டங்களில் போக்குவரத்து, விவசாயம், மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்புகளைக் கடுமையாகப் பாதித்துள்ளதாக சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

1,777 குளங்கள், 483 அணைகள், 1,936 கால்வாய்கள் மற்றும் 328 விவசாய வீதிகள் சேதமடைந்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.



அத்துடன், சுமார் 137,265 ஏக்கர் விவசாய நிலங்கள் மற்றும் 305 சிறு நீர்ப்பாசன கால்வாய்களும் அழிந்துள்ளன. அழிவுக்குப் பின்னர் இதுவரை 246 வீதிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் தீவு முழுவதும் 22 பாலங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பு மீட்பு 91 சதவீதமாக உயர்ந்துள்ளது. இருப்பினும் நுவரெலியா மாவட்டத்தில் மறுசீரமைப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட 35 இலட்சத்து 31 ஆயிரத்து 841 மின்சார இணைப்புகளில் 72 சதவீத இணைப்புக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக சிறீலங்காவின் அத்தியாவசிய சேவைகள் ஆணையர் ஜெனரல் பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

# புலிபாய்ந்தகல் சுற்றுலா ஒதுக்கிடத்தில் பெரும்பான்மை இன மீனவர் சிலரால் சட்டவிரோதச் செயற்பாடு; நிலமைகளை நேரில் சென்று ஆராய்ந்ததுடன், சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தல்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

05.12.2025

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் புலிபாய்ந்தகல் சுற்றுலா ஒதுக்கிடத்தில் பெரும்பான்மை இன மீனவர்கள் சிலர் சட்டவிரோதமான முறையில் மீனவ வாடி அமைத்துள்ளதுடன், கடற்கரையில் சட்டவிரோதமாக படகுகளையும் நிறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலமைகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன், இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளுக்கெதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரியதரப்பினரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,





முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட கொக்குத்தொடுவாய், புலிபாய்ந்தகலில் சுற்றுலாத் தலத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் பெரும்பான்மையின மீனவர்கள் சிலர் அத்துமீறி சட்டவிரோதமான முறையில் வாடி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதுடன், சட்டவிரோதமான முறையில் கடற்கரையில் படகுகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இவ்வாறு சட்டவிரோதமாக வாடி அமைக்கப்பட்டுள்ளமை மற்றும் படகுகள் கடற்கரையில் சட்டவிரோதமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களுக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த இடத்திற்கு நேரடியாகச் சென்று நிலமைகளை ஆராய்ந்தார்.



இதன்போது புலிபாய்ந்தகல்லில் சுற்றுலாத் தலத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள கடற்கரையை அண்டிய காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக பெரும்பான்மையின மீனவர்கள் சிலரால் மறைவான வகையில் வாடி அமைக்கப்பட்டிருப்பது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களால் கண்டறியமுடிந்துள்ளது.

அத்தோடு OFFRP-A-0742MLT, OFFRP-A-1000MLT OFFRP-A-0974MLT ஆகிய முல்லைத்தீவு மாவட்டத்தின் பதிவிலக்கங்களைக் கொண்ட மூன்று படகுகளும், OFFRP-A-5017NBO, OFFRP-A-4478NBO ஆகிய நீர்கொழும்பு மாவட்டத்தின் பதிவிலக்கங்களையுடைய இரு படகுகளும், OFFRP-A-5491CHW, OFFRP-A-7209CHW ஆகிய சிலாபம் மாவட்டத்தின் பதிவிலக்கங்களைக் கொண்ட இருபடகுகளுமாக மொத்தம் ஏழு படகுகள் சட்டவிரோதமானவகையில் புலிபாய்ந்தகல் கடற்கரையில் பெரும்பான்மை இன மீனவர்கள் சிலரால் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதையும் நாடாளுமன்ற உறுப்பினரால் இனங்காண முடிந்துள்ளது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் உடனடியாக குறித்த பகுதிக்குரிய கிராம அலுவலர் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசெயலக காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்களுக்கு இந்த விடயங்களைத் தெரியப்படுத்தியதையடுத்து, குறித்த பகுதிக்கு அவர்களும் உடனடியாக வருகைதந்திருந்தனர். இந்நிலையில் இந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய இந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்கெதிராக தம்மால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென குறித்த பகுதிக்குரிய கிராம அலுவலர், கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தர் ஆகியோரால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்திருந்தனர்.

அதன் பிற்பாடு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரிடமும் தெரியப்படுத்தப்பட்ட நிலையில் அவரும் இதுகுறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் அவர்களையும் நேரடியாகச் சந்தித்து இந்த சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் தெரியப்படுத்தியதுடன், இந்த சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக உரிய மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியிருந்தார்.

அந்தவகையில் குறித்த புலிபாய்ந்தகல் பகுதியென்பது சுற்றுலாத் தலத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதியெனவும், அங்கு இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்கமுடியாதெனவும் தெரிவித்த மாவட்ட செயலாளர், குறித்த சட்டவிரோத செயற்பாடுகளுக்கெதிராக உரியவகையில் சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்திருந்தார்.

மேலும் குறித்த புலிபாய்ந்தகல் சுற்றுலா ஒதுக்கிடத்தில் இதற்கு முன்னரும் பலதடவைகள் பெரும்பான்மை இன மீனவர்கள் சிலர் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த நிலையில் அச்செயற்பாடுகள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது தலையீட்டை அடுத்து, உரிய சட்டநடவடிக்கைகளூடாகத் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன. இத்தகைய சூழலில் மீண்டும் குறித்த சுற்றுலாத்தலத்தில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் பெரும்பான்மை இன மீனவர்கள் சிலர் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.







**நாம் தனித்துநின்று இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம்,**
**நாம் தனித்துநின்று உலகின் மிகப் பெரிய இராணுவத்தை எதிர்த்தோம்,**
**நாம் தனித்துநின்று எமது தேசிய சுதந்திரத்தீயை அணையவிடாது போராடினோம், இறுதியில் நாம் வெற்றிகொண்டோம். இந்த வெற்றிக்கு காரணம் எமது மனந்தளராத உறுதி, சாவுக்கு அஞ்சாத எமது வீரம், சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# யாழ். சிறைச்சாலை விளக்கமறியல் கைதி கோமா நிலையில்: உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் என சகோதரி கோரிக்கை!

05.12.2025






யாழ்ப்பாணம் சிறைச்சாலையில், விளக்கமறியல் கைதி ஒருவர் கடந்த 25 நாட்களுக்கு மேலாக கோமா நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அவருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலான உண்மையை சிறைச்சாலை நிர்வாகம் வெளிப்படுத்த வேண்டும் என சகோதரியார் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இன்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்தனாங்க, எனது அண்ணா சிவராமலிங்கம் தர்சன் நீதிமன்ற வழக்கு ஒன்றுக்கு செல்லாததால், புதுக்குடியிருப்பு பொலிசாரினால் கடந்த நவம்பர் மாதம் 06ஆம் திகதி கைது செய்யப்பட்டார். மறுநாள் 07ஆம் திகதி முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் 11 நாட்களுக்கு அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

அதனை அடுத்து அவர் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார், அந்நிலையில் மறுநாள் 08ஆம் திகதி எனக்கு யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகஸ்தர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அண்ணா மாடியில் இருந்து தவறி விழுந்ததால், சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவித்தனர்.

நான் அன்றைய தினம் மாலையே போதனா வைத்திய சாலைக்கு சென்ற போது, 30ஆம் இலக்க விடுதியில் அண்ணா அனுமதிக்கப்பட்டு கைவிலங்குடன் சிகிச்சை பெற்ற நிலையில் இருந்தார். தலையில் காயம் 4 தையல் போட்டுள்ளதாக கூறினார்கள். அண்ணா விடம் என்ன நடந்தது என? என கேட்ட போது எனக்கு அடிச்சு போட்டாங்க என சொன்னார், அதற்கு மேல் பேச காவலுக்கு நின்ற சிறைச்சாலை உத்தியோகஸ்தர் விடாது என்னை அங்கிருந்து அனுப்பினார்.

மறுநாள் 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அண்ணாவுடன் கதைத்த போது, அவரின் கதைகள் மாறாட்டமாக இருந்தது பின்னர் மதியம் தலையில் ஸ்கான் பண்ணி பார்த்து எல்லாம் சரி என கூறி மாலையே வைத்திய சாலையில் இருந்து சிறைச்சாலைக்கு அழைத்து செல்ல வைத்தியசாலை நிர்வாகம் அனுமதித்தது.

நான் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் ஊடாக அண்ணாவிற்கு பிணை விண்ணப்பம் செய்ய சட்டத்தரணி ஊடாக ஏற்பாடு செய்திருந்தேன்.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை அதிகாலை எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அண்ணாவிற்கு திடீரென வலிப்பு வந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என. நான் உடனே அப்பாவை யாழ்ப்பாணம் அனுப்பி விட்டு, முல்லைத்தீவு நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்வதற்கான ஏற்பாடுகளை கவனித்தேன்.

யாழ்ப்பாணம் சென்ற அப்பா சிறைச்சாலை சென்று அண்ணாவை பற்றி கேட்ட போது, மாலை வரை அவரை சிறைச்சாலையில் காத்திருக்க வைத்தனர், பின்னர் அப்பா மாலை 06 மணிக்கு முல்லைத்தீவு பஸ் புறப்பட்டு விடும் என சிறைச்சாலையில் இருந்து, அண்ணாவை பற்றிய எந்த தகவலும் இல்லாமல் வீடு திரும்பினார்.

மறுநாள் அதான். அண்ணா யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வருவதாக தகவல் கிடைத்து, வைத்தியசாலைக்கு சென்று பார்த்தோம்.

11ஆம் திகதியில் இருந்து கோமா நிலையில் அண்ணா இருக்கிறார். 07 நாட்களுக்கு மேல் அவசர சிகிச்சை பிரிவில் வைத்திருக்க முடியாது என கூறி விடுதிக்கு மாற்றியுள்ளனர்.

வைத்தியர்களிடம் கேட்டால், மூளையில் உள்ள சில கலங்கள் இறந்து விட்டன. அவற்றுக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டும். சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமாயின், நோயாளி சுயநினைவுடன் இருக்க வேண்டும். அண்ணாவிற்கு சுயநினைவு திரும்பிய பின்னரே அதனை செய்ய முடியும் 05 வீதமே அதற்கு வாய்ப்பு உள்ளது என கூறி விட்டனர்.

அண்ணாவிற்கு என்ன நடந்தது என வைத்தியர்களிடம் கேட்ட போது, அதனை தாம் அனுமானிக்க முடியாது என கூறினார்கள்.

முல்லைத்தீவில் இருந்து தினமும் வந்து போவது சிரமம் என கூறிய போது, அண்ணாவை மாஞ்சோலை வைத்திய சாலைக்கு மாற்றுங்கள் என வைத்தியர்கள் ஆலோசனை தருகின்றார்கள்.

உண்மையில் அண்ணாவிற்கு என்ன நடந்தது என்பது தொடர்பில், வைத்தியர்களும் கூறுகின்றார்கள் இல்லை. சிறைச்சாலை நிர்வாகமும் கூறுகின்றார்கள் இல்லை. எமக்கு இது தொடர்பிலான உண்மையை கூற வேண்டும் என தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் பாதுகாப்புக்கு இன்றியமையாத வழுக்கையாற்றைப் பாதுகாப்பது காலத்தின் கட்டாயமாகும்

## வடக்கு மாநிலத்துக்கான சிறீலங்கா ஆளுநர் நா. வேதநாயகன்

06.12.2025




யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் பாதுகாப்புக்கு இன்றியமையாத வழுக்கையாற்றைப் பாதுகாப்பது காலத்தின் கட்டாயமாகும். WASPAR திட்டத்தின் ஊடாக இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஆய்வின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண நிர்வாகம் தனது ஒத்துழைப்பை வழங்கும் என வடக்கு மாநிலத்துக்கான சிறீலங்கா ஆளுநர் நா.வேதநாயகன் உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் "பங்கேற்புச் செயல் ஆய்வின் ஊடாக நீர் பாதுகாப்பு" (WASPAR) திட்டத்தின் கீழ், வழுக்கையாறு தொடர்பான ஆய்வின் ஒரு பகுதியாக, உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளுடனான விசேட கலந்தாய்வு சுன்னாகத்தில் இன்றைய தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வை ஆரம்பித்து உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

காலநிலை மாற்றம் இன்று உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. அண்மைய காலங்களில் ஒரே மாதத்தில் கொட்டித் தீர்க்கும் மழை, அடுத்த மாதமே வாட்டி வதைக்கும் வறட்சி என நாம் இதுவரை கண்டிராத அனர்த்தங்களைச் சந்தித்து வருகிறோம்.

இதனை "இயற்கையின் கோபம்" என்று கடந்து செல்வதை விட, "இயற்கையை நாம் கையாளத் தவறியதன் விளைவு" என்று புரிந்து கொள்வதே சிறந்தது. மழைநீர் வழிந்தோட வேண்டிய பாதைகளை நாம் அடைத்துவிட்டு, வீடுகளுக்குள் வெள்ளம் வருகிறது என்று கவலைப்படுவதில் அர்த்தமில்லை.

வழுக்கையாறு போன்ற இயற்கையான நீரோட்டப் பாதைகள் தூர்ந்து போனதும், ஆக்கிரமிக்கப்பட்டதும், பராமரிப்பின்றிக் கிடப்பதுமே இன்றைய பல பேரிடர்களுக்கு மூல காரணமாகும்.

யாழ். குடாநாடு ஒரு தீவுப் பகுதி. எமக்கு ஆறுகள் இல்லை என்று கருதப்பட்டாலும், மழைநீரை கடலுக்குக் கொண்டு சேர்க்கும் அதேவேளை, நிலத்தடி நீரைச் செறிவூட்டும் வழுக்கையாறு போன்ற இயற்கையான வடிகால்கள் எமக்கு உண்டு.

மயிலிட்டித்துறையிலிருந்து அராலித்துறை வரையில் இது செல்கின்றது. வழுக்கையாறு முறையாகப் பராமரிக்கப்பட்டால் மட்டுமே, வலிகாமம் பகுதியின் கிணறுகளில் நீர் சுரக்கும் உவர் நீர் ஊடுருவல் தடுக்கப்படும். அத்துடன், கனமழை காலங்களில் வலிகாமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் வெள்ளத்தில் மூழ்காமல் இருக்க, இந்த ஆறு தடையின்றி ஓட வேண்டும்.

உலக வங்கியின் நிதியுதவியில் குளங்களைத் தூர்வாரும் செயற்பாடு அடுத்த ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது வழுக்கையாற்றுப் படுக்கையில் அமைந்துள்ள குளங்களும் தூர்வாரப்படும். முற்காலத்தில் மழைநீரை வீடுகளுக்குள் சேமிக்கும் பழக்கம் இருந்தது. ஆனால் இன்று வீட்டைச் சுற்றி முழுமையாக சீமெந்து இட்டு, மழைநீர் நிலத்தடியில் இறங்க முடியாதவாறு தடுத்து வைத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தின் குடிநீருக்கும் விவசாயத்துக்கு நிலத்தடி நீரே ஆதாரம் என்பதை உணர்ந்து எமது நீரின் அளவையும் தரத்தையும் பாதுகாப்பது அனைவரதும் பொறுப்பாகும்.

பொறியியலாளர்கள் திட்டங்களை வரைவார்கள், ஆய்வாளர்கள் மாதிரிகளைச் செய்வார்கள். ஆனால், அதனை மக்களிடம் கொண்டு சேர்ப்பது மக்கள் பிரதிநிதிகளாகிய நீங்கள் தான். இந்தத் திட்டத்தின் வெற்றி உங்கள் கைகளிலேயே உள்ளது.

எனவே, வழுக்கையாற்றின் முக்கியத்துவத்தை உங்கள் பகுதி மக்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லுங்கள்" என ஆளுநர் உள்ளூராட்சி மன்றங்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொறியியலாளர்கள், துறைசார் வல்லுநர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

www.sangathamil.ca

# கொக்குத்தொடுவாயில் தமிழர்களின் பூர்வீக காணிகளை சிங்களவர்கள் அபகரிக்க முயற்சி உரியவர்கள் தடுக்காதுவிட்டால் நாம் களத்தில் இறங்குவோம்

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

06.12.2025

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட எல்லைக் கிராமங்களில் ஒன்றான கொக்குத்தொடுவாய் 15ஆம் கட்டையில் தமிழ்மக்களின் பூர்வீக காணிகளை, கொக்கிளாய் முகத்துவாரத்தில் அத்துமீறிக் குடியேறியிருக்கும் பெரும்பான்மை இனத்தவர்கள் ஆக்கிரமிப்புச்செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த ஆக்கிரமிப்பு முயற்சியைத் தடுப்பதற்கு கரைதுறைப்பற்று பிரதேசசெயலகம் உள்ளிட்ட உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்கத் தவறினால், தாம் களத்தில் இறங்கி அபகரிப்பு முயற்சியை தடுத்து நிறுத்துவேண்டிய நிலை ஏற்படுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆக்கிரமிப்பு முயற்சிதொடர்பில் கடந்த 02.12.2025 அன்று நேரடியாகப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாயிலிருந்து தமிழ் மக்கள் கடந்த 1984 ஆம் ஆண்டில் இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அவ்வாறு எமது தமிழ் மக்கள் வெளியேற்றப்படுவதற்கு முன்னர் கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட, 15ஆம் கட்டைப் பகுதியில் சிறுதானியப் பயிர்செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறாக எமது தமிழ் மக்கள் இடப்பெயர்விற்கு முன்னர் சிறுதானியப் பயிர் செய்கைக்காகப் பயன்படுத்திய சுமார் நூறு ஏக்கருக்கும் மேற்பட்ட அவர்களது பூர்வீக காணிகள், கடந்த 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்திற்குப் பிற்பாடு வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களம் போன்ற திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லைக்கற்களும் இடப்பட்டுள்ள.

இத்தகைய சூழலில் இவ்வாறு வனவளத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பிலிருந்த தமது பூர்வீக சிறுதானியப் பயிர்செய்கைக் காணிகளை விடுவிக்குமாறு காணிகளுக்குரிய எமது தமிழ் மக்கள் தொடர்ச்சியாக உரிய தரப்பினரைக் கோரிவந்ததுடன், குறித்த காணி விடுவிப்பினை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தற்போது பெரும்பான்மை இனத்தவர்கள் சிலர், இவ்வாறு வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் ஆக்கிரமிப்பில் இருக்கும் எமது கொக்குத்தொடுவாய் தமிழ் மக்களுக்குரிய பூர்வீக சிறுதானிய பயிர்ச்செய்கைக் காணிகளை ஆக்கிரமிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொக்கிளாய் முகத்துவாரத்தில் தங்கியிருந்து பருவகால மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் சிலராலேயே இவ்வாறு ஆக்கிரமிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக எம்மால் அறியமுடிகின்றது. குறிப்பாக கொக்கிளாயில் பருவகால மீன்பிடியில் ஈடுபடுவோர் தென்னிலங்கையிலிருந்து இங்கு வருகைதந்து உரிய பருவ காலத்தில் மீன்பிடியில் ஈடுபடுவர். பின்னர் பருவகால மீன்பிடிச் செயற்பாடுகள் முடிவுற்றதும் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவிடுவார்கள்.

குறித்த தென்னிலங்கையைச் சேர்ந்த பருவகால மீனவர்கள் தற்போது எமது தமிழ் மக்களுக்குரிய பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து குடியேற முயற்சிக்கின்றனர்.



அந்தவகையில் கொக்கிளாய் - முல்லைத்தீவு பிரதான வீதியின் இருபுறமும் உள்ள, வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பூர்வீக காணிகளுக்கு கயிறு, மற்றும் கம்பிகளை கட்டி அபகரிப்புச்செய்கின்ற செயற்பாடுகளில் குறித்த தென்னிலங்கையைச் சார்ந்த பருவகால மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அபகரிப்பு முயற்சிகள் இடம்பெறும்போது கொக்குத்தொடுவாய் வடக்கு பகுதி மக்கள் தமது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டுத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இது தொடர்பில் என்னிடமும் மக்களால் முறையிடப்பட்டிருந்தது. அதற்கமைய குறித்த ஆக்கிரமிப்பு முயற்சிகள் தொடர்பில் நேரடியாக பார்வையிட்டு, இங்கு இடம்பெற்றுள்ள ஆக்கிரமிப்பு முயற்சிகளை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

இதனையடுத்து இது தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக காணி உத்தியோகத்தருக்கும் இந்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்தியுடன், இவ்வாறு தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை ஆக்கிரமிக்க முயற்சிகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், குறித்த ஆக்கிரமிப்பு முயற்சிகளைத் தடுத்து நிறுத்துமாறும்



வலியுறுத்தியுள்ளேன்.

இத்தகைய ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளுக்குரிய வடிக்கைகளை கரைதுறைப்பற்று பிரதேசசெயலக காணிப்பகுதி மேற்கொள்வதுடன், குறித்த ஆக்கிரமிப்பு முயற்சியினைத் தடுத்து நிறுத்த வேண்டும்.



அவ்வாறு கரைதுறைப்பற்று பிரதேசசெயலக காணிப் பகுதியினர் குறித்த தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் அபகரிப்பதை தடுக்கத் தவறினால், நாம் களத்தில் இறங்கி அபகரிப்பு முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவோம் - என்றார்.



# யாழ்ப்பாணத்தின் செம்மணி பகுதியிலுள்ள அணையா விளக்கு மீண்டும் உடைப்பு!

07.12.2025

யாழ்ப்பாணத்தின் செம்மணி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அணையா விளக்கு போராட்ட நினைவுத்தூபி இனந்தெரியாத விஷமிகளால் மீண்டும் இன்று உடைத்தெறியப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி மீதான இருள் நீங்கவும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திற்கு சர்வதேச நீதி கோரியும் யாழ்ப்பாணத்தின் செம்மணி பகுதியில் "அணையா விளக்கு" போராட்டம் "மக்கள் செயல்" எனப்படும் தன்னார்வ இளையோர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

அங்கு கடந்த யூன் மாதம் 23, 24 மற்றும் 25 ஆம் தினங்களில் அணையாவிளக்கு ஏற்றும் சிறு தூபி அமைக்கப்பட்டு அதில் தீபம் ஏற்பட்டது.

இந்நிலையில், குறித்த அணையா விளக்கு தூபி கடந்த ஒக்டோபர் மாதமும் அடித்து நொருக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது.

இதன்பின் அணையா விளக்கு தூபியின் புனரமைப்புப் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு புதிப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்றைதினம் மீண்டும் அணையா விளக்கு போராட்ட நினைவுத்தூபி இனந்தெரியாத விஷமிகளால் இன்று உடைத்தெறியப்பட்டுள்ளது.





இச் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

# அரசாங்க நடவடிக்கைகளில் குறைபாடுகள்

## மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை

07.12.2025

புதிய அரசாங்கம் ஊழல்களை ஒழிக்கவும், போதைவஸ்தை கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை உறுதியாக்கவும் எடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியன. ஆயினும் தமிழர் நில அபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, இறுதிப் போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இந்த அரசாங்கம் இதுவரை ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய விடயம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இறைவனின் இரக்கத்தாலும், புனித ஆட்சிபீடத்தின் ஆதரவாலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும் திருவருகைக் காலத் திருமடல் - 2025இல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மடலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

திருவருகைக்காலம் இறைப்பற்றும் மகிழ்ச்சியும் நிறைந்த எதிர்பார்ப்பின் காலமாக விளங்குகிறது. இயேசுவின் பிர சன்னத்தை -உடனிருப்பை ஆழமாக உணர்கின்ற ஒரு சிறப்பான சந்தர்ப்பம் இந்தத் திருவருகைக்காலம். 'கடவுள் நம்மோடு இருக்கிறார்' என்ற ஆறுதலின் செய்தியை தனது திரு பிறப்பின் மூலம் இறைமகன் இயேசு மீளவும் இந்நாட்களில் நமக்கு வலியுறுத்துகின்றார்.

எனவே கடவுளின் உடன் இருப்பையும், அவருடைய அளவு கடந்த அன்பையும் இன்னும் ஆழமாக இந்தக் காலத்தில் உணர்ந்து, இறைமகன் இயேசுவின் வருகைக்கு நம்மை தகுந்த முறையில் ஆயத்தம் செய்வோம்.

**மன்னார் மறைமாவட்ட மேய்ப்பு பணி மாநாடு**

ஆண்டுதோறும் நடைபெறும் மன்னார் மறைமாவட்ட மேய்ப்பு பணி மாநாடு இவ்வாண்டும் கடந்த ஒக்ரோபர் மாதம் 27, 28, 29 ஆகிய தினங்களில் மன்னாரில் சிறப்பாக நடைபெற்றது. 2026 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டத்தில் 'தூய ஆவியின் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தூய ஆவியை மையப்பொருளாக கொண்டு இந்த மாநாடு நடைபெற்றது. குருக்கள், துறவியர், பொதுநிலையினர் என ஏறக்குறைய 200 பேர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பங்குகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. தீர்மானங்களை அடியொற்றி ஒவ்வொரு பங்கும், ஆணைக்குழுவும், துறவற இல்லமும் தமது சூழ்நிலை, வசதி, வாய்ப்புகளை கவனத்தில் கொண்டு தமக்கான பிரத்தியேகமான மேய்ப்புப்பணி திட்டங்களைத் தீட்டவேண்டும்.

இந்த மாநாட்டின்போது பங்குகள் ரீதியாக எடுக்கப்படும் தீர்மானங்களையும் உள்ளடக்கியதாக பங்கு மட்ட இறுதித் தீர்மானங்கள் அமைய வேண்டும். புதிய ஆண்டின் முதல் நாளில் இருந்து புதிய ஆண்டுக்கான மேய்ப்புப் பணி திட்டங்கள் நடை முறைப் படுத்தப்பட வேண்டும் என அன் போடு கேட்டுக் கொள்கிறேன்.







**மறைமாவட்டம் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள்**

மன்னார் மறை மாவட்டத்தில் காற்றாலைகளை அமைக்கும் திட்டமும், கனிய மணல் அகழ்வு திட்டமும் பாரிய பிரச்சினைகளாக உள்ளன. மன்னார் தீவில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 30 காற்றாடிகளோடு மேலும் 14 காற்றாடிகள் அமைப்பதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளது.

ஆயினும் இனி வரும் காலங்களில் மேலதிகமாக காற்றாடிகள் அமைக்கப்பட மாட்டாது என்ற உறுதிப்பாட்டை அமைச்சரவைத் தீர்மானமாக நிறைவேற்றி அரசாங்கம் தந்துள்ளது. எனவே இதனையொட்டி மன்னாரில் இடம் பெற்றுவந்த மக்களின் தொடர் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

கனிய மணல் அகழ்வு மன்னார் தீவில் முற்றாக இடம்பெறாது என்ற வாக்குறுதியையும் அரசாங்கம் தந்திருக்கின்றது. கனிய மண் அகழ்வுக்கு நிறுவனங்களின் அலுவலகங்கள் மன்னாரில் இயங்க முடியாது எனவும், கனிய மணல் அகழ்வு ஒரு போதும் நடை பெறாது எனவும் அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றவும் அரசு வாக்குறுதி தந்துள்ளது. அரசு மக்களுக்கு கொடுத்த இந்த வாக்குறுதியை தவறாமல் நிறை வேற்றும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

**வரலாறு காணாத வெள்ள அனர்த்தம்**

முழு இலங்கை நாட்டையும் உலுக்கிய வெள்ள அனர்த்தம் நம்முடைய மறை மாவட்டத்தையும் வெகுவாக பாதித்துள்ளது. நம் மக்களில் சிலர் தம் இன்னுயிரை இழந்துள்ளனர். பலர் அகதிகளாக்கப் பட்டு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்து எண்ணில்லாத பொருட்சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏராளமான விளைநிலங்கள் அழிவுக்குள்ளாகி உள்ளன. கால்நடைகள் பல இறந்துள்ளன. இந்நிலையில் நிவாரண நடவடிக்கைகள் அரசினாலும் நம் மறைமாவட்ட திருச்சபையாலும் ஏனைய சில பொது அமைப்புகளாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதிப்புக்கு உள்ளாகாத மக்கள் பெருந்தன்மையோடு உதவிக் கரம் நீட்டி, பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க முன்வர வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

**நாட்டின் இன்றைய சூழ்நிலை**

பெரும்பான்மை வாக்குகளை பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள புதிய அரசாங்கம் ஊழல்களை ஒழிக்கவும், போதைவஸ்தை கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை உறுதியாக்கவும் எடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியன.

ஆயினும் தமிழர் நில அபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, இறுதிப் போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இந்த அரசாங்கம் இதுவரை ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

எனவே இந்தச் சூழ்நிலையில் தமிழர் நலன் சார்ந்துள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் ஏனைய அமைப்புக்களும் ஒற்றுமையுடன் செயல்பட்டு தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட தொடர்ந்து பற்றுறுதியோடு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என குறித்த மடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த இறை மடலானது இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை (7) மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் காலை திருப்பலியின் போது மக்களுக்கு வாசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் சிறீலங்கா தொல்பொருள் திணைக்களத்தினால் 56 பேருக்கு எதிராக வழக்கு!

08.12.2025

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி காவல் பிரிவுக்குட்பட்ட 35ஆம் கிராமம் பகுதியில் சிறீலங்கா தொல்பொருள் திணைக்களத்தினால் வழிகாட்டல் பதாகை நடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை தடுத்து கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்றில் 56 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அழைப்பாணை வெல்லாவெளி காவல் ஊடாக 35ஆம் கிராம பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி காவல் பிரிவுக்குட்பட்ட 35ஆம் கிராமம் கண்ணன்புரம் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினால் பெயர்ப்பலகையிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது அதற்கு எதிராக பிரதேச மக்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சிறீலங்காப் பொலிசார் உதவியுடன் இந்த பெயர்ப்பலகை நடும் பணிகள் முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் பொதுமக்களின் கடுமையான எதிர்ப்பு காரணமாக குறித்த பணியை இடைநிறுத்தியுடன் அங்கிருந்தவர்களின் விபரங்களை சிறீலங்காப் பொலிசார் சேகரித்துச் சென்றிருந்தனர். இந்த நிலையில் வெல்லாவெளி பொலிசார் ஊடாக நீதிமன்றில் தொல்பொருள் திணைக்களத்தினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 11ஆம் திகதி களுவாஞ்சிகுடி நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில் 35ஆம் கிராமத்தில் உள்ள 56 பேருக்கு அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.



இதில் ஒருவர் அண்மையில் நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் உயிரிழந்திருந்த நிலையில் அவருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு குடும்பத்தில் பலருக்கு இவ்வாறு அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

www.sangathamil.ca

# தமிழர்களை கொல்ல வேண்டும் என்று கூறிய அம்பிட்டியே சுமனரத்ன தேரரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு

08.12.2025

தமிழ் மக்களை வெட்டிக் கொல்ல வேண்டும் என கூறிய அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் கைது செய்யு மாறு பரிந்துரைக்கப்பட்ட அவரை எதிர்வரும் 15 திகதிக்கு முன்னர் ஆஜர்படுத்துமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் திங்கட்கிழமை (8) பொலிஸாருக்கு உத்தரவிட் டதுடன் இது வரை ஏன் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வில்லை என்பதை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டார்.

ஊடகங்களுக்கு சுமணரட்ன தேரர் கடந்த 2023-10-23 திகதி அன்று வழங்கிய செவியின் போது "வடக்கில் உள்ள தமிழ் மக்களையும் தெற்கில் உள்ள தமிழ் மக்களையும் வெட்டிக் கொல்ல வேண்டும்" என தெரிவித்தார்.

இதையடுத்து இந்த தேரர் தெரிவித்த இந்த வன்முறையான கருத்துக்கு எதிராக கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையத் தில் சட்டத்தரணி தனுக்க றனஞ்சக என்பவர் 2023-10-27ஆம் திகதி அன்று முறைப்பாடு செய்ததுடன் (International Covenant on Civil and Political Rights) சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் உள்ள சட்டத் தின் அடிப்படையில் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு தொடர்பாக சட்டமா அதிபருக்கு கோப்புக்கள் அனுப்பப்பட்ட நிலையில் கடந்த மாதம் சட்டமா அதிபர் திணைக்களம் குறித்த தேரரை கைது செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது.

இந்த நிலையில் குறித்த வழக்கு திங்கட்கிழமை (08) அன்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட் டபோது குறித்த தேரர் நீதிமன்றில் சமூகமளிக்காத நிலையில் வழக்கு தொடுநர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரையின் படி குறித்த தேரரை இதுவரை கைது செய்யப்படவில்லை என நீதவான் கவனத் துக்கு கொண்டு வந்தார்.

இதையடுத்து நீதவான் அடுத்த வழக்கு தவணை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் குறித்த தேரரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட் டதுடன் குறித்த தேரரை இதுவரை நீதிமன்றில் ஏன் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்க வில்லை என மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் கட்டளை பிறப்பித்தார்.



# சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம்

10.12.2025

சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்தின் முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் புதன்கிழமை (10) இடம்பெற்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களை தாங் கியவாறும், நீதி கோரிய பதாதைகளை தாங்கியவாறும் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் நாள் இன்றாகும். இந்த மனித உரிமைகள் நாளிலும் எமது உறவுகள் எங்கே? எமது உறவுகளுக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை என அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அத்துடன் அரசியல் கைதிகளுக்கான விடுதலை, பௌத்த மயமாக்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்ததுடன் சர்வதேச நாடுகள் மனித உரிமை நாளிலாவது தங்களுடைய துன் பங்களை புரிந்துகொண்டு தமக்கான தீர்வினை பெற்றுத் தரு வதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதில் பாதிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் பலரும் கலந்துகொண்டு கண்ணீர் மல்க இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









**ஆயுதப் போராட்டம் தோன்றி வளர்ந்த எதார்த்தப் புறநிலைகளை ஆராய்ந்து பார்த்தால் – அதன் காரணிகளை நீக்கிவிட உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் – ஆயுதப் பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

**www.sangathamil.ca**

# அதிகரித்துள்ள சிங்களக் குடியேற்றங்களால் வவுனியா வடக்கிலிருந்து வெளியேறும் தமிழர்கள்: 23 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது

10.12.2025

வுனியா வடக்கில் தற்போது அதிகரித்துள்ள சிங்களக்குடியேற்றங்கள் மற்றும் காணி அபகரிப்பு நெருக்கடிகள் காரணமாக வவுனியா வடக்கிலிருந்து அதிகளவில் தமிழ் மக்கள் வெளியேறியுள்ளதாகவும், கிராமங்களில் மக்கள் இன்மையினால் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 23பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன், மேலும் சில பாடசாலைகள் மூடப்படும் நிலையிலும் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே வவுனியா வடக்கில் இடம்பெறும் திட்டமிடப்பட்ட சிங்களக்குடியேற்றங்கள் மற்றும் அபகரிப்புக்களைத் தடுக்குமாறும், தமிழ்மக்கள் தமது பூர்வீக நிலங்களில் வாழும் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துமாறும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

வவுனிய மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை (9) இடம்பெற்ற நிலையிலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் அதிக பாடசாலைகள் மூடப்பட்ட கல்விவலயமாக வவுனியா வடக்கு கல்வி வலயம் காணப்படுகின்றது.

அந்தவகையில் வவுனியா கல்வி வலயத்தில் 23பாசாலைகள் மூடப்பட்டுள்ளன. இவ்வாறு அதிகளவில் பாடசாலைகள் மூடப்படுவதற்கு காரணமென்ன? அந்தக்காரணத்தினை அதிகாரிகளான நீங்கள் எம்மிடம்  தெரிவித்தாலேயே எம்மாலும் அந்தப் பாரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாக வவுனியா வடக்கில் பெரும்பான்மை இனத்தவர்களின் அத்துமீறிய குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுவதால் எமது மக்கள் வெளியேறுகின்றனர். அத்தோடு பாடசாலைகளில் வளப்பற்றாக்குறைகளும் காணப்படுகின்றன. இந்தக் காரணங்களினாலேயே வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இவ்வாறு பாடசாலைகள் அதிகளவில் மூடப்பட்டுள்ளது - என்றார்.

இந்நிலையில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் இதன்போது பதிலளிக்கையில்,

எம்மைப் பொறுத்தவரைக்கும் வளப்பற்றாக்குறை காரணமாக எந்தப்பாடசாலைகளும் மூடப்படவில்லை. மாணவர்கள் இல்லாமையினாலேயே பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அந்தவகையில் வவுனியா வடக்கு கல்விவலயத்தில் மூடப்பட்ட 23 பாடசாலைகளில் பெரும்பாலான பாடசாலைகளை, ஆளனரையும் அழைத்துச்சென்று பார்வையிட்டிருந்தோம்.

அந்தவகையில் அந்தப்பகுதிகளில்  மக்கள் இல்லாமையினாலேயே பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மாணவர்களின் தொகை குறைவடைவதால் மூடப்படுகின்ற நிலையிலும் இன்னும் சில பாடசாலைகள் காணப்படுகின்றன - என்றார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியா வடக்கு என்பது மிகவும் பின்தங்கிய ஒரு பிரதேசமாகும். இங்கு சிங்கள குடியேற்றங்களினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள், காணிகள் அபகரிப்பால் ஏற்படுகின்ற பாதிப்புக்களினால் இந்தப்பிரதேசத்திலிருந்து எமது மக்கள் வெளியேறிவருகின்ற மிகமோசமான பாதிப்பு நிலை காணப்படுகின்றது.

இந்தவிடயத்தில் ஆளுநரும், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும் கவனஞ்செலுத்தவேண்டும். வவனியா வடக்கில் இடம்பெறும் காணி அபகரிப்புக்கள் தொடர்பில் ஒரு மாதகாலத்திற்குள்



ஆராயப்படுமென பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார். அதனை விரைந்து மேற்கொள்ளுமாறு பிரதி அமைச்சரை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

வவுனியா வடக்கில் சிங்களக்குடியேற்றங்கள் மற்றும் அபகரிப்பு நெருக்கடிகளைத் தடுத்து எமது தமிழ் மக்கள் தமது பூர்வீக வாழிடங்களிலிருந்து வெளியேறாமல் வாழ்வதற்குரிய வாழ்வுரிமையை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இதனைவிட வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் மிக அதிகளவில் வளப்பற்றாக்குறைகளும் காணப்படுகின்றன. அதனை வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மறுக்கமுடியாது. எனவே வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளின் வளப் பற்றாக்குறைகளைத் தீர்ப்பதற்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு அம்பாறையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம்

10.10.2025

அம்பாறை மாவட்ட வலிந்து காணமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில், தம்பிலுவில் பொதுச் சந்தை முன்பாக சர்வதேச மனித உரிமைகள் நாளான இன்று புதன்கிழமை (10)  கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.






அம்பாறை மாவட்ட வலிந்து காணமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் உப-தலைவி கலைவாணி, செயலாளர் ரஞ்சனா தேவி, பொருளாளர் சுனித்திரா தேவி மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளரும், அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஆலோசகருமான தாமோதரம் பிரதீபன் உள்ளிட்டவர்களும் பல பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து வெளியிட்ட மனித உரிமை செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன் உள்ளிட்டோர் தமது உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்படுவதாகவும், மாறி மாறி வருகின்ற ஒவ்வோர் அரசாங்கங்களும் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதியை மறுப்பதாகவும், மனித உரிமைகளை மதிக்கவுமில்லை எனவும், தொடர்ந்தும் வீதி வீதியாகத் தாம் தமக்கான நீதிக்காகப் போராடுவதாகவும் கூறினர்.

ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் அண்மையில் ஊடகவியலாளர்கள் குமணன் மற்றும் கஜகிரீவன் ஆகியோர் அச்சுறுத்தப்பட்டனர் எனவும் தம்மைப் போன்ற செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் தெரிவித்தனர்.



மேலும், வடக்கு, கிழக்கின் பல இடங்களிலும் தொல்லியல் எனும் போர்வையில் காணி அபகரிப்புகள், புத்தர் சிலை நிறுவுதல் எனும் போர்வையில் அபகரிப்புகள் தொடர்ந்த வண்ணமே காணப்படுவதாகவும் கூறினர்.

தமிழர்களுடைய உரிமை, இனப்படுகொலை விவகாரங்களிலும் மற்றும் விசேடமாக செம்மணி போன்ற வடக்கு, கிழக்கிலே காணப்படும் மனிதப் புதைகுழிகள் விவகாரம் போன்றவற்றிலும் சர்வதேச தலையீட்டுடனான விசாரணை பொறிமுறைகள் உருவாக்கப்படவேண்டும் எனவும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திலும் மனித உரிமை விடயங்களிலும் சர்வதேசத்தினுடைய மேற்பார்வையும் தலையீடும் வேண்டும் எனவும் இந்த மனித உரிமைகள் தினத்திலும் சர்வதேசத்திடம் தமது கோரிக்கைகளை முன்வைப்பதாகவும் அவர்கள் கருத்து தெரிவித்தனர்.மனித உரிமை தினத்திலாவது தங்களுடைய துன்பங்களை புரிந்துகொண்டு தமக்கான தீர்வினை பெற்றுத் தருவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதில் பாதிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் பலரும் கலந்துகொண்டு கண்ணீர் மல்க இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

www.sangathamil.ca

# சர்வதேச மனித உரிமைகள் நாளைன இன்று நீதிகோரி ஐ.நா.வுக்கு கடிதம்!

## வடக்கு – கிழக்கு மாகாணங்களில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம்

10.12.2025

சர்வதேச மனித உரிமைகள் நாளான இன்று (10), வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளின் சங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகருக்கு தங்கள் நிலை குறித்து கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

தங்கள் குடும்ப உறுப்பினர்களைத் தேடி 16 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடி வருவதாகவும், இந்தப் போராட்டம் நீதியோ அல்லது உரிய பதில்களோ இல்லாமல் தொடர்வதாகவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1948இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த நாள் முதல், தமிழர்கள் படிப்படியாக ஓரங்கட்டப்பட்டு, ஒடுக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் மிகவும் கொடூரமான இனப்படுகொலையொன்று மேற்கொள்ளப்பட்டதாகவும், சரணடைந்தவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற பொய்யான வாக்குறுதியை நம்பி சரணடைந்த 29 குழந்தைகள் உட்பட குடும்பமாகச் சரணடைந்தவர்களும் உறவுகளால் கையளிக்கப்பட்டவர்களும் காணாமல் ஆக்கப்பட்டனர் என்றும் அந்த கடிதத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடர்ச்சியான சோகத்தை சர்வதேச சமூகம் கருத்தில் எடுக்கத் தவறிவிட்டது ஏன்? என்றும் சங்கத்தினர் தங்களின் கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் ஒரு வருடமாக அதிகாரத்தில் உள்ள போதிலும் இதுவரை நீதி வழங்கப்படும் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரம் மற்றும் டிட்வா புயல் போன்ற காரணங்களால் அரசாங்கத்துக்கு தங்கள் விடயத்தில் கவனம் செலுத்த நேரமில்லை என்றும், இனத்துவேசத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் அரசியல் கட்சிகள் இருக்கும் வரை, எந்தவொரு ஜனாதிபதியும் எதிர்ப்புகளை மீறித் தங்களுக்கு நீதியை வழங்கத் தயாராக இருக்க மாட்டார் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.




எனவே, தங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கடும் அநீதிகளுக்கான பொறுப்பேற்பு சர்வதேச விசாரணை மூலமே காலதாமதமின்றி வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம், இனப்படுகொலை, சர்வதேச குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்த வேண்டும் என்ற நீண்டகாலக் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

# மட்டக்களப்பு போரதீவுப்பற்றில் தொல்பொருள் திணைக்கள பணிக்கு இடையூறு (?) – வழக்கு ஒத்திவைப்பு!

11.12.2025

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 35 ஆம் கிராம பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினால் வழிகாட்டல் பதாகை நடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை தடுத்து கடமைக்கு (?) இடையூறு ஏற்படுத்தியதாக களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றில் 56 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் (29.01.2026)ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



கடந்த மாதம் (25.11.2025)ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 35ஆம் கிராமம் கண்ணபுரம் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினால் பெயர்ப்பலகையிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது அதற்கு எதிராக பிரதேச மக்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வெல்லாவெளி பொலிசாரின் உதவியுடன் இந்த பெயர்ப்பலகை நடும் பணிகள் முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் பொது மக்களின் கடுமையான எதிர்ப்பு காரணமாக குறித்த பணியை இடைநிறுத்தியதுடன் அங்கிருந்தவர்களின் விபரங்களை பொலிசார் சேகரித்துச் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் வெல்லாவெளி பொலிசார் ஊடாக நீதிமன்றில் தொல்பொருள் திணைக்களத்தினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு இன்றைய நாள் (11.12.2025) களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றில் நீதிபதி ரி.பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இரு தரப்பினரின் வாதங்களும் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் வழக்கினை எதிர்வரும்(29.01.2025)ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ள நிலையில் சந்தேக நபர்களை வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்யுமாறு பணித்துள்ளார்.



போரதீவுப்பற்றின் கண்ணபுரம் மக்களுடன் பேசி குறித்த பகுதிகளில் பெயர்ப்பலகையினை இடுமாறு போரதீவுப்பற்று பிரதேச செயகலத்தின் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கூறப்பட்டிருந்த நிலையில் மீண்டும் பெயர்ப்பலகை நடச் சென்றபோது சமூக மட்ட அமைப்புகள் தமது எதிர்ப்பினை பதிவு செய்தாக போரதீவுப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் வி.மதிமேனன் தெரிவித்தார்.

இன்றைய நாள் 35ஆம் கிராமம் கண்ணபுர மக்களுக்கு ஆதரவாக மண்முனை தென்எருவில் பற்று களுதாவளை பிரதேச சபை, போரதீவுப்பற்று பிரதேசசபை, வெல்லாவெளி பிரதேச சபையின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள், உறுப்பினர்கள் வருகை தந்து பொதுமக்களுக்கு நீதிமன்றம் செல்ல தனது சொந்தமான வாகனவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து பொது மக்களுடன் நீதிமன்றம் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்திய இழுவைப் படகுகளுக்கு எதிராக யாழில். கடற்தொழிலாளர் போராட்டம்

12.12.2025

இந்திய மீனவர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்தக் கோரி யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ் மாவட்ட மீனவர்கள் ஒன்றினைந்து முன்னெடுத்த குறித்த போராட்டம் பண்ணை பகுதியில் உள்ள கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அலுவலகத்தின் முன்னால் இருந்து பேரணியாக ஆரம்பமாகி மாவட்ட செயலகம் வரை சென்றடைந்தது.

அதன் போது, யாழ் மாவட்ட செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.



அதனை தொடர்ந்து இந்திய துணைத் தூதரம், வடக்கு மாகாண ஆளுநர், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் ஆதியவற்றிலும் மகஜர் கையளிக்கப்பட்டது.

www.sangathamil.ca

# தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் இருக்கவில்லை!

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

13.12.2025

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்செயற்பாடுகள் இருக்கவில்லையென வும், கடற்புலிகளின் தளபதி வடக்கு, கிழக்கு கடற்பரப்பை தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாகவும் தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அதனால் தாயகப்பரப்பிலிருந்த மீனவர்களின் வாழ்வாதாரம் தன்னிறைவு பெற்று செழித்திருந்ததாகவும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அதேவேளை தற்போது இந்திய இழுவைப்படகுகளின் அத்து மீறலால் தாயகப்பரப்பிலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலுக்கு முற் றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்ற இந்திய இழுவைப்படகுகளின் அத்து மீறல் செயற்பாடுகளுக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிற்கும்போதே நாடா ளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை (12) மிகப் பாரிய ஒரு கவனயீர்ப்புப் போராட்டமொன்று மீனவர்களால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரதிற்காக கையேந்தி நிற்கும் நிலையினை இந்த கவனயீர்ப்புப் போராட்டம் வெளிப்படுத் தியுள்ளது. இந்திய இழுவைப்படகுகளின் அட்டகாசமான செயற் பாடுகள் தொடர்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் கடற்புலிகளின் தளபதி சூசை அவர்கள் இந்திய இழுவைப்படகுகளின் அத்து மீறல் மற்றும் சட்டவிரோதமான செயற்பாடுகள் இல்லாமல் கடற் பரப்பை தனது பூரண கட்டுப்பாட்டில் நேர்த்தியாக வைத் திருந்தார்.

அந்தவகையில் விடுதலைப் புலிகளின் காலத்தில் வடபகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தினைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் தமது கடற்தொழில் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் தற்போது இந்திய இழுவைப்படகுகள் மற்றும் சட்ட விரோத கடற்தொழில் செயற்பாடுகளால் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த இந்திய இழுவைப்படகுகளின் அத்து மீறல்களுக்கு எதிராகவும், சட்டவிரோத கடற்தொழில் செயற் பாடுகளுக்கெதிராகவும் பாராளுமன்றில் தொடற்சியாக நான் குரல் கொடுத்துவருகின்றேன்.



குறிப்பாக ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை, கடற்தொழில் நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் அமைச் சுசார் ஆலோசனைக்குழுக்கூட்டங்கள், பாராளுமன்றில் உரை யாற்றுதல், பாராளுமன்ற வாய்மூல விடைக்கான வினா நேரத் தில் அமைச்சரிடம் கேள்வி எழுப்புவது என பலவளிகளிலும் நான் இந்த இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற் பாடு மற்றும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக் கெதிராக தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றேன்.

அதேவேளை இந்திய உயர்ஸ்தானிகரைச் சந்தித்துக் கலந் துரையாடும் சந்தர்ப்பங்களிலும், இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகளால் எமது மீனவமக்களின் வாழ் வாதாரம் பாதிக்கப்பட்டுவருவதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுமிருக்கின்றேன்.

அந்தவகையில் இந்திய உயர்ஸ்தானிகரும் அதனை ஏற்றுக் கொண்டதுடன், படிப்படியாக இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுமெனவும், அதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரி வித்திருந்தார்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம், முல் லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி நான்கு மாவட்டங்களிலும் வாழும் எமது மீனவக்குடும்பங்கள் தமது அன்றாட வாழ் வாதாரத்தினைக் கொண்டுசெல்வதில் பல்வேறு இடர்பாடர் பாடுகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர். இவ்வாறான தொரு இக்கட்டான நிலையிலேயே மீனவர்கள் இவ்வாறு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஒழுங்கான முறையிலே இந்த மீனவர்களுடைய கடற்தொழில் செயற்பாட்டை இந்த அரசாங்கம் பாதுகாக்கவேண்டும். இந்திய இழுவைப்படகுகளும், தென்னிலங்கையைச் சேர்ந்த சுரக் குவலை உள்ளிட்ட சட்டவிரோத தொழில்செயற்பாடுகளும் நிறுத்தப்படுமெனில் எமது மீனவர்களுடைய வாழ்வாதாரத் திற்கு அரசாங்கம் எதனையும் வழங்கத் தேவையில்லை. எமது மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தினைத் தாமே மேம்படுத்திக் கொள்வார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தினைத் தொடர்ந்து யாழ் மாவட்ட செய லாளரையும் நேரில் சந்தித்து அவருக்கும் இது தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளேன்.

வடபகுதி மீனவர்கள் படும் துன்பங்களை முற்று முழுதாக நான் அறிவேன். முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு மற்றும், நாயாற்றைச் சேர்ந்த மீனவர்களும் 11.12.2025 அன்று இரவு எனக்கு தொலைபேசி அழைப்பெடுத்து இந்திய மீனவர்கள் அத்து மீறி எமது கடற்பரப்பினுள் நுழைந்து சட்டவிரோதமான முறையில் கடற்தொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக என்னிடம் மிகுந்த வேதனையுடன் முறையிட்டனர்.

இவ்வாறான அத்துமீறல் செயற்பாடுகளால் எமது கடல் வளங்கள் அபகரிக்கப்படுவதால், எமது மீனவர்களின் வாழ் வாதாரம் முற்றாகப் பாதிக்கப்படுவதுடன், மீனவக்குடும் பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கின்றன.

இவ்வாறு எல்லைதாண்டி வந்து அத்துமீறலில் ஈடுபடும் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலை இந்த அரசாங்கத்தினால் ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை.

இவ்வாறு அத்துமீறல் செயற்பாடுகளை அரசாங்கம் கட்டுப்படுத் தத் தவறியதனாலேயே எமது மீனவர்கள் மீன்பிடிப் படகுகளை யும், வலைகளையும் காட்சிப்பொருட்களாக வைத்துக் கொண்டு இங்கு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவேண்டிய நிலை எழுந்துள்ளது.

எனவே எமது மீனவர்களின் மீனவர்களின் பாதிப்பு நிலை யுணர்ந்து இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்கள் உட னடியாக கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ளவேண்டும்.

தொடர்ந்தும் இந்த விவகாரத்தில் இந்த அரசு மெத்தனப் போக் குடன் செயற்படக்கூடாது.

இலங்கை மற்றும் இந்திய அரசுகள் முறையான விதத்தில் அணுகி இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டும்.

வடக்கு மீனவர்கள் மாத்திரமல்ல கிழக்கு மீனவர்களும் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்படுகின்ற நிலைகள் காணப் படுகின்றன. ஆகவே எமது மீனவர்களை வாழவிடுங்கள் என்றுதான் கேட்கின்றோம்.

ஏன் எமது மீனவர்களை நோகடிக்கின்றீர்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு ஏற்கனவே நொந்துபோயிருக்கின்ற எமது மீனவ மக்களை மேலும் மேலும் நோகடிக்கின்றீர்கள்.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து எமது மீனவர்களை நிம்மதியாக வாழவிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.














**செல்லுங்கள் – வீழ்த்துங்கள் –வெல்லுங்கள்**
**இதுதான் போரின் உண்மைத் தார்ப்பரியம்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# மலையகத்துக்குள்ளேயே அவர்களின் வாழ்வியலை உறுதிப்படுத்த வடக்கு, கிழக்கு, மலையகமாக ஒன்றுபடுபோம்

## மலையகமே மலையக மக்களின் தாயகம்

## அங்கு சலுகைகளோடு மட்டுமல்ல மண்ணுரிமையோடு வாழ்வதே அரசியல் கௌரவம்

### சமூக நீதிக்கான செயற்காட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்

10.10.2025

மலையகத்துக்குள்ளேயே அவர்களின் வாழ்வியலை உறுதி படுத்த வடக்கு, கிழக்கு, மலையகமாக ஒன்றுபடுவோம். மலை யகமே மலையக மக்களின் தாயகம். அங்கு சலுகைகளோடு மட்டுமல்ல மண்ணுரிமையோடு வாழ்வதே அரசியல் கௌர வம் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல்



இவரால் கடந்த வெள்ளிக்கிழமை (05) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எல்லா கோயில் காணிகளிலும், எல்லா சிதம்பரத்து காணிக ளிலும், எல்லா தர்ம காணிகளிலும் மலையக மக்களை குடி யேற்றி அவர்களை காப்பாற்ற வேண்டும். அவர்கள் இங்கு வந் தால் விவசாயத்தில் செழிப்பாகும் என இயற்கை பேரிடருக்கு முகம் கொடுத்து நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள மலையக மக்கள் விடயத்தில் அவசர உணர்வு பூர்வமான கருத்தினை வெளி யிட்டு இருக்கிறார் சிவ பூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி. ஆறு. திருமுகம் திருமுருகன்.

ஐயாவின் உணர்வு பூர்வமான உளவெளிபாட்டுக்கு மலையக சமூக ஆய்வு மையம் நன்றி கூறுகின்றது. இவ்வாறான உணர் வுபூர்வமான கருத்தினை தமிழ் முற்போக்கு கூட்டணி தலை வரும் வெளிப்படுத்தி இருந்தார். மலையக மக்களின் நிலை யினை இன சுத்திகரிப்பு மற்றும் இன அழிப்பிற்கு உள்ளாகி வரும் மக்களின் நீண்டகால பாதுகாப்பு கருதி அரசியல் அறவிய லில் நின்று கூட்டாக முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதே எமது கருத்து நிலைப்பாடு.

மலையக மக்களும் 1948க்கு பின்னர் திட்டமிட்ட இன அழிப் பிற்கும், இன சுத்திகரிப்பிற்கும் உள்ளாகி நாளாந்தம் சிதைவு களையே சந்தித்தவரும் ஒரு தேசிய இனமாகும். தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் தலை வரும், தற்போதைய ஜனாதிபதியுமான அனுரகுமார திசா நாயக்க மலையகத்தில் வீடற்றிருக்கும் 1,50,000 பேருக்கு கொடுப்பதற்கு போதுமான காணி மலையகத்தில் இல்லை என்பதை மீண்டும் மீண்டும் கூறத் தொடங்கி இருக்கின்றார்.

இது அவர்களின் நீண்ட கால அரசியல் சித்தாந்தம். அதுவே சிங்கள பௌத்த கருத்தியலுமாகும். தற்போது அவர்கள் பேரிடர் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மலையக மக்களை சிதைக்க முயல்வதை இன அழிப்பிற்கும் இன படுகொலைக்குப் முகம் கொடுக்கும் சமூகமாக அதனை தடுத்து நிறுத்துவதற்கும் அவர் களின் எதிர்கால அரசியல் பாதுகாப்பினையும் கருதி கலந் துரையாடல்களை மேற்கொள்ளல் வேண்டும்.

மலையக மக்கள் நாட்டின் சனத்தொகையில் இரண்டாம் இடத் தில் இருந்த போது அவர்களின் அரசியல் எழுச்சிக்கு பயந்து 1948 ஆம் சமூகத்தின் வாக்குகளை பறித்ததோடு மட்டும் நின்று விடாது இந்தியாவின் அயல் நாடுகளுடன் அரசியல் உற வில் ஏற்பட்டிருந்த விரிசலை தனக்கு அதனை சாதகமாக்கி 1964இல் பல இலட்சம் மலையகத்தவர்களை நாட்டை விட்டே வெளியேற்றும் ஒப்பந்தத்தை (சிரிமா-சாஸ்திரி) சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கொண்டார். இது இரு நாடுகளும் இணைந்து நடாத்திய முதலாவது இனப்படுகொலை என்றே அடையாளப்படுத்தல்.

அதே சிறிமாவோ பண்டார நாயக்க தமது 1970-1977 ஆட்சி கால கட்டத்தில் தோட்டங்களை அரசுடைமையாக்குவதாக கூறி சிங்களமயமாக்கி பல தோட்டங்களில் சிங்கள குடியேற் றங்களை உருவாக்கி உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தை அவர்களின் வாழ்விடத்தில் இருந்து சிங்கள காடையர்களைக் கொண்டு அடித்து துரத்த இடமளித்த வரலாறும் உண்டு.

மேலும் நாட்டின் பொருளாதார சீர்திருத்த செயல் திட்டத்தினை முன்னெடுத்து மலையத்தவர்களை பட்டிணி சாவிற்குள் தள்ளி கொலை செய்ததையும் மறக்க முடியாது. இதனால் பல ஆயிரம் குடும்பங்கள் உயிர் பாதுகாப்பு தேடி சுயமாகவும், காந்திய வழி காட்டலோடும் வடக்கு மற்றும் கிழக்கு சென்று குடியேறினர். இதனையே சிங்கள பௌத்தமும் விரும்பியது.

அடுத்து வந்த ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி காலத்தில் திறந்த பொரு ளாதாரம் மற்றும் அபிவிருத்தி எனும் பேரில் மலையகத்தவர் வாழுடங்கள் சூறையாடப்பட்டு அவ் அவ்விடங்களில் இருந்து மலையக மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

அவர்கள் காலத்தில் நடந்த திட்டமிட்ட இனவாத வன் செயலின் காரணமாக பாதிக்கப்பட்டோர் வடக்கு, கிழக்கிற்கும், இந்தியா விற்கும் சென்றனர். மலையகத்தை அபிவிருத்தி திட்டத்திற்குள் கொண்டுவராது, பெருந்தோட்டத் தொழிலுக்கு அப்பால் தொழில் வாய்ப்பினை உருவாக்காது, கல்வி, சுகாதாரத் துறைகளை மேம்படுத்தாது கைவிட்டதால் ஆயிரக்கணக்கானோர் மலை யகத்தை விட்டு தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் தினமும் வெளியேறிவருகின்றனர். இதிலே மௌன மகிழ்வு காண்பது சிங்கள பௌத்த பேரினவாதமே.

அதுமட்டுமல்ல கடந்த காலங்களில் மலையக மக்களுக்கு காணி கொடுப்பதாக கூறிய எந்த பேரினவாத ஆட்சியாளர்களும் அதனை கொடுப்பதற்கு துணியவில்லை. அரசியலுக்காக வீடு களைக் கட்டி சலுகை மாயைக்குள் அவர்களை தள்ளி தேர்தல் அரசியலையே முன்னெடுத்தனர். வீட்டுக்குரிய உரிமை முழுமையாக இதுவரை கொடுக்காது இருப்பதும் காணி உரிமை நிரந்தரமாக அவர்களுக்கு கிடைக்கக் கூடாது எனும் மனநிலையிலாகும்.

மலையக மக்கள் தமக்கே உரிய இன அடையாளங்களை பாது காப்பு தேசிய இனமாக வளர்ந்து நிற்கும் சூழ்நிலையில் அவர்கள் தங்களது கடும் உழைப்பாலும் உயிர்த்தியாகத்தாலும் உருவாக்கிய மலையகம் எனும் தேசத்தில் வாழ்வதே அவர் களுக்கான அரசியல் பாதுகாப்பாகும்.

தற்போது நிகழ்ந்திருக்கும் இயற்கை பேரிடர் இக்கட்டான சூழலை பயன்படுத்தி மலையக மக்களின் நில உரிமையை தட்டி பறிக்கும் செயல்பாட்டுக்கு நேரடியாகவோ மறைமுக மாகவோ எவரும் துணை போகக்கூடாது.

நாட்டில் வடகிழக்கு தமிழர்களும், மலையகத் தமிழர்களும் இந்துக்கள் அல்லது சைவர்கள் என்பதற்காக இதுவரை ஒடுக் கப்படவுமில்லை படுகொலை செய்யப்பட்டவுமில்லை. தமி ழர்கள் என்பதற்காகவே நாம் தொடர்ந்து ஒடுக்கப்படுகின்றோம். அழிக்கப்படுகின்றோம். நில பறிப்பிற்கு உள்ளாகின்றோம். இதற்கு எதிராக கூட்டு அரசியல் செயல்பாடு என்பது அவரவர் நிலத்தில் அவரவரது அடையாளங்களோடு அரசியல் கௌர வத்தோடு வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதாகும்.

இயற்கை அனர்த்தத்தை பயன்படுத்தி ஆட்சியாளர்கள் மலை யக மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துக்கு எடுக்கும் முயற்சிக்கு எந்த வகையிலும் எவரும் இடமளிக்காத இருப்ப தோடு அவர்களின் அரசியல் பாதுகாப்பு மிகு எதிர்காலம் கருதி மலையகத்துக்குள்ளேயே அவர்களின் வாழ்வியலை உறுதி படுத்த வடக்கு, கிழக்கு, மலையகமாக ஒன்றுபடுவோம். மலை யகமே மலையக மக்களின் தாயகம். அங்கு சலுகைகளோடு மட்டுமல்ல மண்ணுரிமையோடு வாழ்வதே அரசியல் கௌரவம் என்று தெரிவித்துள்ளார்.

# தாவரவியல் பூங்காவக மாறவுள்ள மாவீரர் துயிலுமில்லங்கள்?

13.12.10.2025

மாவீரர் துயிலும் இல்லங்களை தாவரவியல் பூங்காவாக பெயர் மாற்றம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு கலங்கம் விளைவிக்கும் வகையில் தாவரவியல் பூங்காவாக பெயர் மாற்றம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாவீரர்கள் போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தினர் பொதுமக்களிடமிருந்து கையெழுத்து வேட்டை ஆரம்பித்துள்ளார்கள். என ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த மாவீரர்கள் போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தின் தலைவர் தீபன் கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மாவீரர் துயிலும் இல்லங்களின் கண்ணியத்தையும் உணர் வுகளையும் உதாசினம் செய்யும் நோக்கில் தாவரவியல் பூங்கா என்ற பெயரில் துயிலும் இல்லங்களை மாற்றம் செய்வதால் விடுதலைப் போராட்டத்தின் வரலாறுகளை முற்றும் முழுதாக அளிக்கும் நோக்கில் செயல்படுகின்றார்கள்.

அவற்றை கண்டித்து மாவீரர்கள் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் என்ற அமைப்பு கையெழுத்து போராட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றார்கள் என குறிப்பிட்டுள்ளார்.



www.sangathamil.ca

# காங்கேசந்துரை இந்து மயானத்தை மீட்டுத் தருமாறு 10 வருடங்களுக்கு மேலாக கோரிக்கை [?]

13.12.2025

காங்கேசன்துறை இந்து மயானத்தை விடுவித்து தருமாறு அப்பகுதி மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வரும் நிலையில், நேற்றைய தினம் சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிபவானந்தராஜா அப்பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, மயானத்தை மீள பெற்று தர நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார் .(?)



1990ஆம் ஆண்டு கால பகுதியில் யுத்தம் காரணமாக காங்கேசன்துறை பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் சுமார் 25 வருடங்களுக்கு பின்னர் அப்பகுதிகளில் கட்டம் கட்டமாக மீள் குடியேற்றங்கள் இடம்பெற்றன.

அதன் போது, காங்கேசன்துறை இந்து மயானம் அமைந்துள்ள காணியும், அதனை சூழவுள்ள காணிகளும் விடுவிக்கப்படாது, உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த நிலையில், தற்போது அப்பகுதி அனைத்தும் துறைமுக அதிகார சபையின் ஆளகைக்குள் உள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் இந்து மயானத்தை விடுவித்து தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் தொடர்ச்சியாக சுமார் 10 வருட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தமது முன்னோர்கள் எரியூட்டப்பட்ட இடத்தில், தமது சொந்த மண்ணில் உள்ள இந்து மயானத்திலையே தமது உடல்களும் தகனம் செய்யப்பட்ட வேண்டும் என அங்குள்ள முதியவர்கள் பலரும் தமது இறுதி ஆசையாக கூறி வரும் நிலையில், மாயனத்தினையும் அதற்கான பாதையையும் மீள பெற்று தருமாறு வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சீத்தா சிவசுப்பிரமணியத்திடம் கோரிக்கை விடுத்ததை, அடுத்து அவரால் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபவானந்தராஜாவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் நேரில் வந்து அவ்விடத்தினை பார்வையிட்டார்.



அதன் போது, மயானத்தினை மீள பெற்றுக்கொள்வது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேசி விரைவில் அதனை பெற்று தர நடவடிக்கை எடுப்பேன் என உறுதியளித்துள்ளார்.

# மட்டக்களப்பு சிறைச்சாலையில் உயிரிழந்த இளைஞன்: நீதி கோரும் தாயார்

13.12.2025

எனது பிள்ளைக்கு நடந்தது போன்று வேறு பிள்ளைகளுக்கு நடக்கக் கூடாது என்று மட்டக்களப்பு சிறைச்சாலையில் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த கைதியின் தாய் கோரிக்கை விடுத்துள்ளார்.

வீட்டிலிருந்து வெளியே சென்ற மகன் சைக்கிள் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் இருந்துள்ளார்.

அவரைத் தாய் தொடர்ச்சியாகப் பார்வையிட்டு உணவு கொடுத்து வந்துள்ளார். நீதிமன்றிற்குக் கொண்டு செல்லும் வேளையில் உணர்வின்றி இருந்துள்ளார். அதன்பின்னர் தாயை அழைத்து உடை மாற்றி நீதிமன்றிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

நீதிமன்றின் விசாரணையின் பின்னர் அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்து நடந்துசென்ற எனது மகனை அடுத்தநாள் பொலிஸ் நிலையத்தில் மயங்கிய நிலையிலேயே சிறைக்கூண்டுக்குள் கண்டேன்.

முதல்நாள் இரவு எனது கையினால் உணவு வழங்கிய பிள்ளைக்கு அடுத்தநாள் என்ன நடந்தது என்று தெரியாத



நிலையில் உயிரிழந்த செய்தி கிடைத்தது எனத் தெரிவித்து நீதி கோரி அவரது தயா் கண்ணீர் விட்டுள்ளார்.

# நிவாரணங்களை வழங்கக் கோரி வெருகல் பிரதேச செயலகம் முன் மக்கள் முற்றுகைப் போராட்டம்

14.12.2025

திருகோணமலை மாவட்ட வெருகல் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நிவாரணங்களை வழங்கக் கோரி போராட்டத்தில் மக்கள் நேற்று சனிக்கிழமை (13) ஈடுபட்டனர்.



சீரற்ற கால நிலை காரணமாகவும் மாவிலாறு அனைக்கட்டு உடைப்பெடுப்பு தொடர்பில் பல சேதங்கள் ஏற்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட தங்களுக்கு நிவாரணங்களை அலுவலகத்தில் பூட்டி வைக்காது பகிருமாறும் கோரி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த வெருகல் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்ட மக்கள் பிரதான நுழைவாயிலை மறித்து போராடினர். பொலிசாரின்




பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வெருகல் பிரதேச செயலக வளாகம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் கொடுப்பனவுகளை வழங்குமாறும் குரல் எழுப்பிய மக்கள் பிரதேச செயலாளரை வெளிதே விடாது தடுத்தனர்.

www.sangathamil.ca

# யாழில். தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல்

14.12.2025





தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் வேலணை - வங்களாவடி பொது நினைவு சதுக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை (14) இடம்பெற்றது.

அதன் போது, தேசத்தின் குரலின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து ஈகச் சுடரேற்றி, மலர் தூவி நினைவு வணக்கம் கூரப்பட்டது.

# முள்ளியவளை நாவற்காடு கிராமத்தில் பெண்களின் கோரிக்கை; கிராம சேவையாளர் மீது குற்றச்சாட்டு

14.12.2025




எனக்கு உதவி செய்யாவிட்டாலும் என்னைபோல் எமது கிராமத்தில் நிறைய பெண்கள் கஸ்டப்படுகின்றார்கள். அவர்களுக்காவது உதவி செய்யுங்கள் என நாவற்காடு கிராமத்தில் கிராம சேவையாளரால் பாதிக்கப்பட்ட மக்கள் கண்ணீர் மல்க ஊடகங்களுக்கு இன்றையதினம் ஞாயிற்றுக்கிழமை (14) கருத்து தெரிவித்தனர்.

முள்ளியவளை வடக்கு நாவற்காடு. கிராம சேவகர் பிரிவில் வசிக்கும். மக்கள் முள்ளியவளை வடக்கு நாவற்காட்டு கிராம சேவகர் மீது குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளனர்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட முள்ளியவளை வடக்கு நாவற்காடு கிராம சேவகர் பிரிவில் 385 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் உண்மையாகவே வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளை நேரடியாக பார்வையிடவில்லை எனவும், வெள்ள அனர்த்த நிவாரணம் வழங்குவதிலும். முறைகேடுகள் இடம்பெறுகிறது எனவும் முள்ளியவளை வடக்கு நாவற்காடு கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் மக்கள் குறித்த பகுதி கிராம சேவகர் மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மக்கள் கருத்து தெரிவிக்கும் போது. முள்ளியவளை வடக்கு நாவற்காடு கிராம சேவகர் பிரிவில் 385 குடும் பங்கள் வசித்து வருகின்றனர். அண்மையில் பெய்த மழையால் எம் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளது. அதனை எமது கிராம சேவையாளர் நேரில் வந்து. பார்வையிடவில்லை.

அவரது கையாட்களை வைத்து தமக்கு பிடித்தவர்களின் பெயர் விபர பட்டியலை எடுத்து. மாவட்ட செயலகம் ஊடாக கொடுப்பனவுகளை வழங்கியுள்ளார். இதனை தட்டி கேட்டால் பொலிசாரை வரவழைத்து மிரட்டுகின்றார். இதேபோன்று ஒரு பிரச்சினையை தட்டிகேட்க சென்ற இருவர் மீது தற்போது வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாவட்ட அரச அதிபருக்கோ, பிரதேச செயலாளருக்கோ தெரியாது.

கிராம அலுவலருக்கு தேவை நிமித்தம். தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியாது. அவருக்கு பிடித்த ஆட்களுக்கே சலுகை வழங்கப்படுகின்றது. நாவற்காடு கிராமத்தில் பெண் தலைமைத்துவ, வறிய குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். எமக்கு பயணம் செய்வதற்கு கூட ஒரு பாதை இல்லை. குளம் உடைத்து. பயணம் செய்ய முடியவில்லை. அதனை சீர் செய்யவோ எம் கிராமத்தினை பார்வையிடவோ யாரும் வரவில்லை. எம் கிராம சேவையாளரின் செயற்பாட்டால் மன உளைச்சலிற்கு உள்ளாகி இருக்கின்றோம். ஆகவே இதனை கருத்தில் எடுத்து எமக்கு சரியான தீர்வினை வழங்கவேண்டும் என தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக குறித்த கிராமத்தில் வசிக்கும் இன்னொருவர் கூறும் போது எனது மகளுக்கு இரு சின்ன பிள்ளைகள் இருக்கின்றனர் கணவர் விட்டிட்டு போட்டார். மகளின் வீட்டுக்கு மின்சாரம் இல்லை, கதவும் இல்லை, கடந்த மழையில் வீட்டுக்கு மேல் மரம் முறிந்து விழுந்தது. அதனை கிராம சேவகர் வந்து பார்வையிட்டார் ஆனால் எதுவித உதவியும் கிடைக்கவில்லை. காரணம் கேட்டால் மகள் வீட்டில் நிற்பதில்லை என கூறுகிறார்.

அதேபோன்று எனது வீட்டிற்கும் கதவு இல்லை. மழை பெய்தால் வீடு முழுவதும் ஒழுக்கு எனக்கு கணவர் இல்லை யுத்தத்திற்கு பின்னர் வீட்டுத்திட்டம் கூட தரவில்லை. எனக்கு நான்கு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் இருக்கின்றனர். மகன் இவ்வருடம் க.பொ.த சாதாரண பரீட்சை எழுதவுள்ளார். மருமகன்களுக்கும் ஏலாது, மகள் போய் கிராம சேவகரிடம் கையொப்பம் இட கேட்க அவர் உங்க அம்மாவுக்கு மனநிலை சரியில்லையா என கேட்டு அவமானப்படுத்தியுள்ளார்.

அதுமட்டுமல்ல வெள்ள அழிவு பார்க்க வேறு ஒரு வீட்டுக்கு வந்து கிராமசேவகர் காறிதுப்பிவிட்டு போனவா காரணம் வீடு நாற்றமாக இருக்குதாம். ஏழு வருஷமா மின்சாரம் இல்லை நான் வசதியா இருந்தால் மின்சாரம் எடுத்திருப்பன் அரசாங்கதிட்ட ஏன் உதவி கேட்கின்றேன். இதுவரை எந்த அரச நிறுவனமோ எமக்கு ஒரு உதவிகூட வழங்கவில்லை. ஆகவே எனக்கு உதவி செய்யாவிட்டாலும் என்னைபோல் எமது கிராமத்தில் நிறைய பெண்கள் கஸ்டப்படுகின்றார்கள். அவர்களுக்காவது உதவி செய்யுங்கள்.

இது தொடர்பாக குறித்த கிராமத்தில் வசிக்கும் இன்னொருவர் கூறும் போது மழை காரணமாக வீடு முழுவதும் ஒழுக்கு மரங்கள் வீட்டின் மேல் முறிந்து விழுந்தது, வீட்டு பயிர்கள் எல்லாமே அழிவடைந்து போயிட்டு, அந்த நேரம் பாம்பு வீட்டுக்குள் வந்து எனக்கு கடித்து உயிருக்கு போராடி சுகமடைந்து வந்துள்ளேன். இது தொடர்பாக அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவகருக்கு அறிவித்தல் வழங்கியும் இதுவரை வந்து பார்வையிடவில்லை.

எம்மை ஒதுக்கியே வைக்கின்றார்கள். எனக்கு கணவர் இல்லை கடைசி பிள்ளைக்கு பிறப்பத்தாட்சி பத்திரம் எடுக்க சென்றபோது என்னை அவமானப்படுத்தி அனுப்பினவா, நாம் கிராம சேவகருக்கு எதுவித கெடுதலும் செய்யவில்லை, ஏன் எம்மை ஒதுக்கி வைக்கிறார்கள், என்னைபோல் பலர் பாதிக்கப்பட்டுள்ளார்கள் கதைப்பதற்கு அச்சப்படுகின்றார்கள். என தெரிவித்திருந்தனர்.

ஆகவே குறித்த பிரதேச செயலகத்திற்குரிய பொறுப்பு வாய்ந்த உயர் அதிகாரிகள் நேரடியாக சென்று ஆராய்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய தீர்வுகளை உடனடியாக பெற்று கொடுக்க வேண்டும்.

**சாவுக்கும் அழிவுக்கும் அப்பால், பசிக்கும் பஞ்சத்துக்கும் அப்பால், சுயநல வாழ்வின் சுகபோகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான – கௌரவமான வாழ்வில் காதல்கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப்பற்றை நான் பாராட்டுகின்றேன்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca




# கனடாவில் நிலநடுக்கம், காட்டுத்தீ அபாயம்; விஞ்ஞானிகள் எச்சரிக்கை

02.12.2025

கனடா, இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் மிகவும் பின்தங்கியுள்ளதாக புதிய ஆய்வு எச்சரிக்கிறது.

யூகோன் பிராந்தியத்தில் உள்ள 'Tintina Fault' எனப்படும் பிளவு கோடு, 12,000 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் செயல்படும் அறிகுறிகளை காட்டுகிறது.



இது பெரிய நிலநடுக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் கனடா வரலாற்றிலேயே அதிகமான காட்டுத்தீ பாதிப்பை சந்தித்தது. இதனால், ஒட்டாவா, ரொரான்ரோ, மான்ட்ரியல் போன்ற நகரங்களில் காற்றுத் தரம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

கடந்த கோடையில், புகைமூட்டம் காரணமாக வெளிப்புற நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன, பலரின் நுரையீரல் ஆரொக்கியம் பாதிக்கப்பட்டது.

ஒரு ஆய்வில், கனடாவில் உள்ள வீடுகளில் 25 சதவீத குடம்பங்கள் மட்டுமே வானிலை சார்ந்த அவசர நிலைக்கு முன்னெச்சரிக்கை எடுத்துள்ளதாக தெரியவந்தது.

பெரும்பாலானோர், பேரிடர் தயார்நிலையை அரசு அல்லது மீட்பு படையினரின் பொறுப்பாகவே கருதுகின்றனர்.

நகரங்கள் பழைய வெள்ள அபாய வரைபடங்களைப் பயன்படுத்துகின்றன. பள்ளிகள் காற்றோட்டம், காற்றுத் தரம் மேம்படுத்தும் அடிப்படை மாற்றங்களை புறக்கணிக்கின்றன. போக்குவரத்து அமைப்புகள் பழைய உள்கட்டமைப்பில் இயங்குகின்றன.



சைபர் பாதுகாப்பு அமைப்புகள், நீர், மின்சாரம் போன்ற முக்கிய கட்டுப்பாட்டு அமைப்புகள் மீது வெளிநாட்டு தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் ப்ரோடி ராமின் (Brodie Ramin), "பேரிடர்கள் திடீரென நிகழ்வதில்லை, அவை பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட எச்சரிக்கைகளின் விளைவுகள். கனடா, தடுப்பு மனப்பாங்கு (Prevention Mindset) கொண்டு செயல்பட வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

# உக்ரைனுக்கு மேலும் 235 மில்லியன் டொலர் வழங்கும் கனடா!

03.12.2025

உக்ரைனுக்கு மேலும் 235 மில்லியன் டொலர் உதவிகள் வழங்கப்படுவதாக கனடா அறிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் டேவிட் மெக்கின்டி மற்றும் வெளி விவகார அமைச்சர் அனிதா ஆனந்த் ஆகியோர் இந்த உதவி குறித்து அறிவித்துள்ளனர்.

கனடா, அமெரிக்காவில் இருந்து பெறப்படும் 500 மில்லியன் டொலர் மதிப்பிலான முக்கிய இராணுவ உபகரணங்களை கொள்வனவு செய்வதில் நேடோ கூட்டாளிகளுடன் இணைந்து செயல்படும் எனவும் இதில் கனடாவின் பங்கு 200 மில்லியன் டொலர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெல்ஜியத்தின் பிரஸெல்ஸில் நடைபெற்ற நேடோ வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டத்தில் அனிதா ஆனந்த் இந்த உதவி குறித்து அறிவித்துள்ளார்.

கனடா அரசு, உக்ரைனின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மைக்கு தொடர்ந்த ஆதரவை வழங்கும் எனவும், இத்தகைய உதவி, ரஷ்யா தாக்குதலுக்கு எதிராக நாட்டின் பாதுகாப்புத் திறனை வலுப்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளது.




# இந்த ஆண்டு கனடா முழுவதும் குழந்தைகள் மத்தியில் காய்ச்சல் பரவுகை அதிகரிப்பு!

04.12.2025

இந்த ஆண்டில் வழக்கத்தை விட முன்கூட்டியே காய்ச்சல் பரவத் தொடங்கியதால், கனடா முழுவதும் மருத்துவமனைகள் குழந்தைகளில் காய்ச்சல் தொற்றுகளின் அதிகரிப்பை சந்தித்து வருகின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் 17 குழந்தைகள் மட்டுமே காய்ச்சல் வைரஸிற்கு உள்ளாகியிருந்த இருந்த நிலையில், இந்த ஆண்டு அதே மாதத்தில் 145 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது எட்டு மடங்கு அதிகரிப்பு என கிழக்கு ஒன்ராரியோ குழந்தைகள் மருத்துவமனை (CHEO) வெளியிட்ட தரவுகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகி 12 ஆக உயர்ந்துள்ளது.

மருத்துவர்கள் பாதுகாப்பு உருவாக இரண்டு வாரங்கள் ஆகும் என்பதால் உடனடியாக காய்ச்சல் தடுப்பூசி எடுக்குமாறு மக்களிடம் வலியுறுத்துகின்றனர்.

பிற குழந்தைகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதால் பள்ளி வயதுடைய குழந்தைகளே முதலில் பாதிக்கப்படுவார்கள் என்றாலும், இரண்டாண்டுகளுக்கு குறைவான குழந்தைகள் மற்றும் முன் நோய்கள் கொண்டவர்கள் அதிக ஆபத்தில் உள்ளனர் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூத்த வயதினர், குறிப்பாக 75 வயதுக்கு மேற்பட்டவர்களும் தீவிர நோய்க்கு உள்ளாகும் அபாயம் காரணமாக கூடுதல் கவனம் தேவைப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




www.sangathamil.ca



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# அனர்த்த அழிவின் மீள்கட்டுமான பணியில் உலகத்தமிழ் அமைப்புகளை ஒன்றிணையுமாறு அனைத்துலகத் தமிழ் பேரவை (FGT) அழைப்பு

01.12.2025

இலங்கைத்தீவில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அவதி அடைந்துவருகின்றன. வீடுகள், வாழ்வாதாரம், அத்தியாவசியப்பொருட்கள் அனைத்தும் பாதிக்கப்பட்ட நிலையில், உலகத்தமிழர் சமூகத்தின் ஒருங்கிணைந்த மனிதாபிமான உதவி இந்நேரத்தில் மிக அவசியமாகியுள்ளது.

இதனைமுன்னிட்டு, **அனைத்துலகத் தமிழர் பேரவை** (FGT) உலகம் முழுவதும் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அனைத்தையும் **ஒற்றுமையுடன் இணைந்து வட – கிழக்கு மற்றும் மலையக அனர்த்த அழிவின் மீள் கட்டுமானப் பணி யில் செயல்படுமாறு** அழைக்கிறது.

**FGT-யின் 7 பேர் கொண்ட பணிக் குழு அமைப்பு**

உதவித்திட்டங்களை திட்டமிட்டு பொறுப்புடன் செயல்படுத்த, **FGT ஒரு 7 பேர் கொண்ட சிறப்பு பணிக் குழுவை** அமைத்துள்ளது. இக்குழு கீழ்க்கண்ட பொறுப்புகளை ஏற்கும்:

- களத்தில் உள்ள அவசரத் தேவைகளை மதிப்பாய்வு செய்தல்
- களத்தில் நம்பகமான கூட்டாளர்களுடன் இணைந்து செயல்படுதல்
- நிதி மற்றும் வளங்களை ஒருங்கிணைத்தல்
- உதவிப் பொருட்களை தெளிவான முறையில் விநியோகிக்கப்படுவதை கண்காணித்தல்
- தமிழ்ப்புலம்பெயர் அமைப்புகள் மற்றும் பொது மக்களுக்குக் சமகாலத் தகவல் வழங்குதல்

இக்குழு, FGT-யின் பொறுப்புடனும் கட்டுக்கோப்புடனும் பணிகளை மேற்கொள்ளும் என்ற உறுதியை வலியுறுத்துகிறது.

**அமைப்புகள் ஒன்றிணைய வேண்டிய தருணம்**

“இது சாதாரண உதவி கேட்கும் தருணம் அல்ல - இது தமிழர் ஒற்றுமை வெளிப்பட வேண்டிய வரலாற்றுப் பொழுது. நம் தாயகம் நம்மை நாடுகிறது. ஒன்றிணைந்து உதவினால் மட்டுமே மீட்பு வேகம் பெறும்.”

FGT அன்போடுஅழைக்கிறது:

- சமூக மற்றும் நல அமைப்புகள்
- பண்பாட்டு மற்றும் மத அமைப்புகள்
- மாணவர் & இளைஞர் அமைப்புகள்
- தொழில் முறை மற்றும் வணிக வலைப் பின்னல்கள்
- நன் கொடையாளர்கள் மற்றும் பொதுமக்கள்

**உதவி வழங்க / இணைந்து செயல்பட தொடர்புகொள்ள**
**மின்னஞ்சல்:**communication@tamilfederation.org
**தொலைபேசி:** (416) 473-5348
**இணையதளம்:** www.tamilfederation.org

எல்லோரும் கை கோர்த்து, மனிதாபிமான முயற்சியில் இணைந்து செயல்பட வேண்டுகிறோம்.

அனைத்துலகத் தமிழர் பேரவை
FEDERATION OF GLOBAL TAMILS

நிமால் விநாயகமூர்த்தி,
தலைவர்,
அனைத்துலகத் தமிழர் பேரவை

# ஒன்ராரியோவில் ‘ஒற்றைக்கட்டண’ திட்டம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிப்பு

04.12.2025

ஒன்ராரியோ அரசு, ரொரான்ரோ பெரும்பாகம் மற்றும் ஹமில்ரன் பகுதிகளில் பொதுப்போக்குவரத்தை தொடர்ந்தும் குறைந்த செலவிலும் எளிதாகவும் வைத்திருக்க, ‘ஒற்றைக்கட்டண’ திட்டத்தை 2025 டிசம்பர் 1 ஆம் திகதியிருந்து மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது. 2024ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ள இத்திட்டத்தின் மூலம் இதுவரை ஒன்ராரியோ வாழ் மக்கள் சுமார் 200 மில்லியன் டொலர்களைச் சேமித்ததோடு, ரீரீசி, கோ போக்குவரத்துச் சேவை, பிரம்ரன் போக்குவரத்து, டூறம் பிரதேசப் போக்குவரத்து, மிசிசாகாவின் “மைவே”, பீல் போக்குவரத்து, யோர்க் பிரதேசப் போக்குவரத்து போன்ற சேவைகளுக்கிடையில் மொத்தம் 62 மில்லியன் இலவச மாற்றுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் பயணிகள் ஒருமுறை மட்டும் கட்டணம் செலுத்துவதால், ஒவ்வொருவரும் சராசரியாக



ஆண்டிற்கு 1600 டொலர்கள் வரை சேமிக்க முடிகிறது.

இத்திட்ட நீட்டிப்பு குறித்து அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் குறிப்பிடும்போது,“பொருளாதாரச் சுமை மிகுந்த இக்காலகட்டத்தில், ஒற்றைக்கட்டணத் திட்டத்தை நீட்டிப்பது பயணச் செலவைக் குறைப்பதற்கும் மேலாக, உழைக்கும் வர்க்க குடும்பங்களுக்கு உடனடி மற்றும் கணிசமான நிவாரணத்தை அளிக்கிறது. ஆண்டு ஒன்றிற்கு 1600 டொலர்கள் வரை சேமிக்க உதவி செய்வதன் மூலம், அவர்கள் உழைக்கும் பணத்தில் அதிக சேமிப்பைச் செய்யவும் முடிகிறது. அதேசமயம் அவர்களின் அன்றாடப் பயணச் செலவீனங்களையும் குறிப்பிடத்தக்க முறையில் குறைக்கிறது” என்றார்.

இந்தத் திட்டத்தின் நீட்டிப்பு, ஒன்ராரியோ அரசின் 70 பில்லியன் டொலர் மதிப்பிலான போக்குவரத்து விரிவாக்கத் திட்டத்தை மேலும் வலுப்படுத்தி, பிரதேசங்களுக்கிடையேயான தடையற்ற பயணத்தை வழங்குகிறது.

# கனடிய மத்திய வங்கி இறுதி ஆண்டு நிதிக் கொள்கை முடிவில் வட்டி விகிதில் மாற்றமில்லை; 2.25% ஆகத் தக்கவைப்பு

10.12.2025

கனடா வங்கி (Bank of Canada) 2025-ஆம் ஆண்டின் இறுதி நிதிக் கொள்கை முடிவில் வட்டி விகிதத்தை மாற்றாமல், 2.25% ஆகத் தக்க வைத்துள்ளது.

“தற்போதைய கொள்கை வட்டி விகிதம் பணவீக்கத்தை 2% அருகில் வைத்திருக்கவும், பொருளாதாரம் ‘கட்டமைப்பு மாற்றம்’ (Structural Adjustment) எனும் காலகட்டத்தைக் கடக்க உதவவும் சரியான அளவில் உள்ளது” என வங்கியின் ஆளுநர் டிஃப் மேக்லெம் தெரிவித்துள்ளார்.

நடுநிலை வட்டி வீச்சின் (Neutral Range) கீழ் முனையில் கொள்கை விகிதத்தை வைத்திருப்பது பொருளாதாரத்துக்கு லேசான ஆதரவை அளிக்கும் அதே நேரத்தில் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும்” என்று அவர் தெரிவித்தார்.

தனியார் துறை பொருளாதார வல்லுநர்கள் இம்முடிவை முன்கூட்டியே எதிர்பார்த்திருந்தனர்.

2026-ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களுக்கும் விகிதம் மாறாது என அவர்கள் கருதுகின்றனர்.

கனடா வங்கியின் அக்டோபர் நிதிக் கொள்கை அறிக்கையின் படி, அமெரிக்காவின் புதிய கட்டணங்கள் மற்றும் வர்த்தக மோதல்கள் காரணமாக 2026 இறுதிக்குள் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சுமார் 1.5% அல்லது 40 பில்லியன் டாலர் அளவுக்கு குறைவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2026 மற்றும் 2027இல் சராசரி GDP வளர்ச்சி 1.4% ஆக இருக்கும் என வங்கி தெரிவித்துள்ளது.

“புதிய அதிர்ச்சிகள் அல்லது தரவுகள் எதிர்பார்த்ததை விட வேறுபட்டால், நாங்கள் உடனடியாக பதிலளிப்போம்” என



மேக்லெம் உறுதியளித்தார்.

அமெரிக்க கட்டணங்கள் இருந்த போதிலும், நுகர்வோர் செலவினம், வணிக முதலீடு, உற்பத்தித்திறன் வளர்ச்சி ஆகியவை எதிர்பார்த்ததை விட சிறப்பாக உள்ளதாக ஆளுநர் சுட்டிக்

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



## தூய்மைப்பணி தனியார் மயத்தை எதிர்த்து உண்ணாவிரதம்

27.11.2025

தூய்மைப் பணிகளை தனியாருக்கு வழங்குவதை எதிர்த்து, காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் 4 தூய்மைப் பணியாளர்களின் உடல்நிலை குறித்து, தினமும் காவல் நிலையத்துக்கு அறிக்கை அளிக்க, உழைப்போர் உரிமை இயக்கத்துக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின், 2 மண்டலங்களில் தூய்மைப் பணிகளை தனியாருக்கு வழங்குவதை எதிர்த்து, தூய்மைப் பணியாளர்களான பாரதி, கீதா, ஜெனோவா மற்றும் வசந்தி ஆகிய 4 பேர் அம்பத்தூரில் உள்ள உழைப்போர் உரிமை இயக்க அலுவலகத்தில் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உயர்நீதிமன்ற உத்தரவின்படி, போராட்டத்தில் ஈடுபடும் 4 பேரின் உடல்நிலையை பரிசோதித்த ஆவடி அரசு மருத்துவ மனை மருத்துவர், அவர்களின் உடல் நிலை மோசமடைந்துள்ளதாக அறிக்கை அளித்திருந்தார்.

இந்த அறிக்கை, நீதிபதி ஜெகதீஷ் சந்திரா முன் தாக்கல் செய்த காவல் துறை தரப்பு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் முகிலன், "அவர்களை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்க வேண்டும்.

அவர்களுக்குப் பதிலாக வேறு 4 நபர்கள் உண்ணாவிரதத்தை தொடர அனுமதிக்கலாம்" என கேட்டுக் கொண்டார். ஆனால், 4 பேரின் உடல் நிலை இயல்பாக உள்ளதாக உழைப்போர் உரிமை இயக்கம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, தனியார் மருத்துவமனை மருத்துவர் மூலம் 4 பேரின் உடல் நிலையை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க உழைப்போர் உரிமை இயக்கத்துக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்தார். அதன்படி, உழைப்போர் உரிமை இயக்கம் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட தனியார் மருத்துவரின் அறிக்கையில், 4 பேரும் நல்ல உடல்நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.



இதையடுத்து, 4 பேரின் உடல் நிலை குறித்து தினமும் மாலை 7 மணிக்கு அம்பத்தூர் போலீஸாருக்கு அறிக்கை அளிக்கும்படி, உழைப்போர் உரிமை இயக்கத்துக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## சென்னை, புறநகரில் தொடர் மழை: நீர் வடியாத பகுதிகளில் பொதுமக்கள் அவதி

04.11.2025

தொடர் மழையால் நீர் வடியாத பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். வெள்ளம் சூழ்ந்த பகுதியில் சிக்கிய 30-க்கும் மேற்பட்டோர் படகுகள் மூலம் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

வங்கக் கடலில் உருவான டிட்வா புயல் காரணமாக, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த நவ.29ஆம் தேதி முதல் மழை பெய்து வருகிறது. கடந்த டிச.1, 2 தேதிகளில் அதிகன மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக, மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் பல்வேறு இடங்களில் குடியிருப்புகளை மழைநீர் தேங்கியுள்ளது. இதனால், அப்பகுதிகளில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

குறிப்பாக, மாதவரம் அடுத்த வட பெரும்பாக்கம் சாலை, ராஜாஜி நகர், வியாசர்பாடி முல்லைநகர், திரு.வி.க.நகர் மண்டலம், காந்திநகர், வாட்டர் ஒர்க்ஸ் சாலை, தேனாம்பேட்டை மண்டலம், டிரஸ்ட் புரம், அண்ணாநகர் மண்டலம் மில்லர்ஸ் சாலை, சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகர், அம்பத்தூர் தொழிற்பூங்காவின் சில பகுதிகள், பட்டாளம் ஆஞ்சநேயர் கோயில் பகுதி, புளியந்தோப்பில் சில சாலைகள் உள்ளிட்டவற்றில் மழைநீர் தேங்கியுள்ளது.

செங்குன்றம் பகுதியில் மழைநீர் சூழ்ந்ததால், அப்பகுதியில் வசித்த 30-க்கும் மேற்பட்டோரை பைபர் படகுகள் மூலம் பேரிடர் மீட்பு படையினர்

மீட்டனர். ஓட்டேரி பகுதியில் கனமழையால் வீடு இடிந்ததில் 3 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சென்னை மாநகரில் மழைநீர் தேங்கிய பகுதிகளில் ராட்சத மோட்டார்கள் மூலம் மாநகராட்சி சார்பில் வெளியேற்றப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேற்று ஒரே நாளில் மாநகராட்சிசார்பில் 2,74,600 பேருக்கு காலை உணவு, 3,51,300 நபர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.

பொதுமக்களுக்கு நோய்த்தொற்று பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கும் வகையில், நேற்று 103 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

பொதுமக்களை மீட்பதற்காக தேசிய பேரிடர் மீட்புப் படையினர் 300 பேர், மாநில பேரிடர் மீட்புப் படையினர் 50 பேர் தயார் நிலையில் உள்ளனர்.

மழையின் காரணமாக விழுந்த 64 மரங்களும் வெட்டி அகற்றப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள 22 சுரங்கப் பாதைகளில் மழைநீர்த் தேக்கம் இன்றி போக்குவரத்து சீராக உள்ளது என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



கனமழை காரணமாக கிண்டி ரேஸ் கோர்ஸ் வளாகத்தில் மாநகராட்சி சார்பில் புதிதாக அமைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்ட 4 குளங்களில் நீர் நிறைந்து காணப்படுகிறது.

இதன் காரணமாக, அப்பகுதியை சுற்றியுள்ள கிண்டி, 5 பர்லாங் சாலை, மடுவின் கரை, வேளச்சேரி குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேக்கம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர் மழை காரணமாக சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் இன்று (4ஆம் திகதி) பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளித்து மாவட்ட ஆட்சியர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளனர்.

## தமிழ்நாடு 950 மெட்ரிக் டன் அத்தியாவசிய நிவாரணப் பொருட்கள் அனுப்பிவைப்பு

06.12.2025

"டித்வா" புயலால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளால் கடுமையாக பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவுவதற்காக தமிழக அரசு பெருந்தொகையான நிவாரணப் பொருட்களை அனுப்புகிறது.

டித்வா புயலின் தாக்கத்தால் இலங்கையின் பல மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அங்குள்ள மக்களுக்கு உடனடி உதவி அளிக்கும் நோக்கில் தமிழக அரசு இந்த நிவாரணப் பொருட்களை அனுப்பியுள்ளது.

மருத்துவப் பொருட்கள், குடிநீர், உலர் உணவுப் பொருட்கள், தங்கும் கூடாரங்கள், போர்வைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய இந்த நிவாரணக் கப்பல், தமிழக அரசின் ஒருங்கிணைப்பில் இலங்கை நோக்கி அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் சூழ்நிலையில் அங்குள்ள மக்களை ஆதரிக்கும் விதமாக, இரு நாடுகளின் நட்புறவையும் மனிதாபிமான உணர்வையும் வலுப்படுத்தும் இந்த உதவி நடவடிக்கை, பரவலாக பாராட்டப்படுகிறது.

இந்த பேரிடரில் உயிரிழந்தோருக்கு, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்திருந்தார்.

மேலும், இலங்கை மக்களின் துயரைத் துடைக்க தமிழக அரசு முழுமையான உதவிகளை மேற்கொள்ளும் என்றும், உணவு மற்றும் மருத்துவப் பொருட்கள் உள்ளிட்ட நிவாரணங்களை அனுப்ப ஆணையிட்டார்.

அதனடிப்படையில், சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் இருந்து இன்று சனிக்கிழமை (6) இலங்கை நோக்கி பெரிய அளவில் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

சென்னையில் இருந்து அனுப்பும் கப்பலுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் கொடியசைத்து அனுப்பினார்.

புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு தமிழக அரசு சார்



பில் 950 தொன் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழக அரசு, தேவையான அளவு கூடுதல் நிவாரண உதவிகளையும் வழங்க தயார் நிலையில் இருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மடப்புரம் அஜித்குமார் கொலை வழக்கில் டிஎஸ்பி, காவல் ஆய்வாளர் உட்பட 4 பேர் குற்றவாளிகளாகச் சேர்ப்பு

13.12.2025

மடப்புரம் அஜித்குமார் கொலை வழக்கில் மானாமதுரை டிஎஸ்பி, திருப்புவனம் காவல் ஆய்வாளர் உட்பட 4 பேர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோயில் காவலாளி அஜித்குமார் நகை திருட்டு வழக்கில் தனிப்படை போலீஸாரால் விசாரிக்கப்பட்டபோது, போலீஸார் தாக்கியதில் உயிரிழந்தார். இது தொடர்பாக தனிப்படை காவலர்கள் கண்ணன், ஆனந்த், பிரபு, ராஜா, சங்கர மணிகண்டன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கை சிபிஐ விசாரித்து, மதுரை 5ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. பின்னர், தனிப்படை காவல் வேன் ஓட்டுநர் இராமச்சந்திரன் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், வழக்கு தொடர்பான கூடுதல் குற்றப் பத்திரிகையை நீதிபதி ஜோசப் ஜாய் முன்னிலையில் சிபிஐ நேற்று தாக்கல் செய்தது.

அதில், சம்பவத்தன்று பணியில் இருந்த மானாமதுரை சரக டிஎஸ்பி சண்முகசுந்தரம் மற்றும் திருப்புவனம் காவல் ஆய்வாளர் இரமேஷ்குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் சிவக்குமார், தலைமைக் காவலர் இளையராஜா உள்ளிட்ட 4 பேரின் பெயர்களும் குற்றவாளிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

அஜித்குமார் கொலை வழக்கில் இதுவரை தனிப்படைக் காவலர்கள் 6 பேர் கைதாகி சிறையில் உள்ள நிலையில், அவர்களுக்கு இதுவரை ஜாமீன் கிடைக்கவில்லை.

கூடுதல் குற்றப் பத்திரிகையில் டிஎஸ்பி உட்பட 4 பேர் சேர்க்கப்பட்டிருப்பதால், அவர்களும் கைது செய்யப்படும் வாய்ப்புள்ளது.

இதுகுறித்து சித்ரவதைகளுக்கு எதிரான கூட்டமைப்பின் சார்பில்



வழக்கறிஞர் ஹென்றி திபேன் கூறும்போது, “இந்த வழக்கில் டிஎஸ்பிக்கு கட்டளையிட்டது யார்? டிஎஸ்பியை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டது யார்? என்பது குறித்தான விசாரணையை சிபிஐ நடத்தி, முழு உண்மையை வெளிப்படுத்த வேண்டும்” என்றார்.

# தமிழகத்தில் குழந்தை பிறப்பு விகிதம் சரிவு ஆண்டுகளில் 18 சதவீதம் வீழ்ச்சி

14.12.2025

இந்தியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 121 கோடியே 8 இலட்சத்து 54 ஆயிரத்து 977 பேர் இருந்தனர். ஆனால் தற்போது இந்த எண்ணிக்கை 146 கோடியாக உயர்ந்து இருக்கும் என்று மதிப்பிடப்பட்டு உள்ளது. அதாவது ஆண்டுக்கு 1.5 சதவீதம் என்ற அடிப்படையில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் இருக்கிறது.

உலகின் மக்கள் தொகை அதிகம் இருந்த நாடான சீனாவை, இந்தியா பின்னுக்கு தள்ளிவிட்டது. நாட்டில் இறப்பு விகிதங்கள் ஒருபுறம் இருந்தாலும், அதனை விட பிறப்பு விகிதம் அதிகமாக இருப்பதே மக்கள் தொகை உயர்வுக்கான முக்கிய காரணமாக உள்ளது.

ஆனால் தமிழகத்தை பொறுத்தவரை நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. இங்கு பிறப்பு விகிதம் ஆண்டுக்கு, ஆண்டு கடும் சரிவை சந்தித்து வருகிறது.பிறப்பு விகிதங்கள், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 1-ந்தேதி முதல் டிசம்பர் மாதம் 31-ந்தேதி வரை பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.





அதன்படி தமிழகத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு 9 இலட்சத்து 45 ஆயிரத்து 842 குழந்தைகள் பிறந்து இருக்கிறார்கள். அதாவது தினமும் சராசரியாக 2 ஆயிரத்து 591 குழந்தைகள் பிறந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு, நேற்று வரை பதிவு செய்யப்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை 7 இலட்சத்து 41 ஆயிரத்து 928 ஆக இருக்கிறது. அதன்படி சராசரியாக ஒரு நாளைக்கு 2 ஆயிரத்து 138 குழந்தைகள்தான் பிறந்துள்ளனர். இன்னும் டிசம்பர் மாதம் முடிய 18 நாட்கள் மட்டுமே இருப்பதால் தமிழகத்தில் இந்த ஆண்டு 7 இலட்சத்து 80 ஆயிரம் குழந்தைகள் மட்டுமே பிறக்க வாய்ப்பு இருக்கிறது

என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை சற்று அதிகரித் தாலும் 8 இலட்சத்தை தாண்டுவது சற்று சிரமம்தான் என்று தெரிகிறது. இந்த எண்ணிக்கையை கடந்த 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதாவது 6 ஆண்டுகளில் குழந்தைகள் பிறப்பு எண்ணிக்கை 18 சதவீதம் அளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 1.3 முதல் 1.5 சதவீதம் குழந்தைகள் பிறப்பு விகிதம் அதிகரித்து வந்தாலும் தமிழகத்தில் மட்டும் கடந்த 6 ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு 3.1 சதவீதம் அளவுக்கு பிறப்பு விகிதம் வீழ்ச்சி அடைந்து இருக்கிறது.கடந்த 2020ஆம் ஆண்டு தமிழகத்தில் 9 இலட்சத்து 39 ஆயிரத்து 788 குழந்தைகள் பிறந்திருக்கின்றனர்.

2021ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 9 இலட்சத்து 12 ஆயிரத்து 875 ஆக குறைந்தது. தொடர்ந்து 2022ஆம் ஆண்டில் 9 இலட்சத்து 36 ஆயிரத்து 361 குழந்தைகளும், 2023ஆம் ஆண்டில் 9 இலட்சத்து 2 ஆயிரத்து 329 குழந்தைகளும் பிறந்து இருக்கிறார்கள். ஆனால் மிக குறைவாக தொடர்ந்து 2024ஆம் ஆண்டில் 8 இலட்சத்து 47 ஆயிரத்து 715 குழந்தைகள் மட்டுமே பிறந்து இருக்கின்றன. கடந்த 2024ஆம் ஆண்டுடன், இந்தாண்டு இதுவரை பிறந்த குழந்தைகள் எண்ணிக்கையை ஒப்பிட்டால் சுமார் 67 ஆயிரத்து 715 குழந்தைகள் குறைவாக பிறந்து இருக்கிறது. இது 8 சதவீதம் சரிவு ஆகம். ரிசர்வ் வங்கியும், தமிழகத்தில் குழந்தை பிறப்பு விகிதம் சரிந்து வருவதை தனது ஆய்வறிக்கையில் அதிர்ச்சி தகவலாக சுட்டிக்காட்டி உள்ளது. அந்த அறிக்கையில் ‘கடந்த 2004ஆம் ஆண்டு தமிழகத்தில் 1,000 மக்களுக்கு 17 குழந்தைகள் என்ற பிறப்பு விகிதம் பதிவாகி இருந்தது.

ஆனால் கடந்த 2024ஆம் ஆண்டில் இது 12 என்று கடும் வீழ்ச்சியை சந்தித்து இருக்கிறது. தமிழகத்தில் இந்த போக்கு தொடர்ந்தால், எதிர்காலத்தில் இளைஞர்களின் எண்ணிக்கை மிக கணிசமாக குறைந்து தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டு மாநிலத்தின் வளர்ச்சி தடைபடும். அதேபோல மக்கள் தொகையின் அடிப்படையில்தான் மத்திய அரசு, மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதால், தமிழகத்திற்கான பங்கீட்டு தொகை குறையும். ஆனால் அதே நேரத்தில், சரியான கொள்கை திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டால், குறைந்த மக்கள தொகையுடன் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை உருவாக்கும் வாய்ப்பாக இது இருக்கும் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

அதேசமயம் முதியோர் விகிதம் அதிகரித்தால் சமூக பாதுகாப்பு செலவுகள் உயர்வு, முதியோர் நலத்திட்டங்களுக்கு கூடுதல் அழுத்தம் போன்ற சவால்களை தமிழக அரசு எதிர்காலத்தில் சந்திக்க நேரிடும்..

**மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்துகொள்ளவார்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# உலக செய்திகள்

## மாவீரர் நாள் தமிழர் நாற்காட்டியில் மிக முக்கிய நாளாகும்; அவுஸ்திரேலிய செனெட் உறுப்பினர் ஷூபிரிட்ஜ்

27.11.2025



மாவீரர் நாள் என்பது தமிழர்களின் நாற்காட்டியில் மிகமுக்கியமானதொரு தினமாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ள அவுஸ்திரேலிய செனெட் உறுப்பினர் டேவிட் ஷூபிரிட்ஜ், தமிழர்களின் தியாகங்களைத் தாம் அங்கீகரிப்பதாகவும், கடந்தகாலம் குறித்து நேர்மையாகப் பேசுவதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மாவீரர் நாளை நினைவுகூரும் வகையில் கடந்த செவ்வாய்க் கிழமை (25) அவுஸ்திரேலிய செனெட் சபையில் உரையாற்றியபோதே டேவிட் ஷூபிரிட்ஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“மாவீரர் நாள்” என்பது தமிழர்களின் நாற்காட்டியில் மிகமுக்கியமானதொரு தினமாகும் எனச் சுட்டிக்காட்டிய அவர், உலகவாழ் தமிழர்கள் யுத்தத்தில் உயிரிழந்தோரை 27 ஆம் திகதி மாலை 5.45 மணிக்கு நினைவுகூர்வதானது ஒருமைப்பாட்டின் மிக வலுவானதொரு அடையாளமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று அவுஸ்திரேலியாவிலும், ஏனைய உலக நாடுகளிலும் வாழும் தமிழர்களுடன் தான் உடன்நிற்பதாகவும் டேவிட் ஷூபிரிட்ஜ் தெரிவித்துள்ளார்.

“நான் இப்போது இந்த வார்த்தைகளை அவுஸ்திரேலிய செனெட் சபையில் கூறுகின்றேன். இந்தத் தினத்தை நினைவுகூருவதற்காக ஒன்றுபட்டிருக்கும் நியூ சவுத் வேல்ஸ் உள்ளிட்ட அவுஸ்திரேலியவாழ் தமிழர்களே, உங்களது தியாகங்களை நாம் அங்கீகரிக்கின்றோம். கடந்த காலம் தொடர்பில் நேர்மையாகப் பேசுவதுடன் அமைதியையும், ஒருமைப்பாட்டையும் அடைந்துகொள்வதற்கு ஒன்றிணைந்து பணியாற்றத் தயாராக இருக்கின்றோம்” எனவும் அவர் உறுதியளித்தார்.

## உக்ரைனின் முக்கிய நகரான போக்ரோவ்ஸ்கைக் கைப்பற்றிய ரஷ்யா

02.12.2025

கிழக்கு டொனெட்ஸ்கில் உள்ள முக்கிய நகரத்தை ரஷ்யப் படைகள் கைப்பற்றியதாக கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை போராட்ட களத்தில் ரஷ்ய இராணுவத்தின் ஒரு கட்டளைப் மையத்திற்குச் இராணுவம் போக்ரோவ்ஸ்க் மற்றும் வோவ்சான்ஸ்க் நகரைக் கைப்பற்றுவது குறித்து இராணுவத் தளபதிகளிடமிருந்து செய்திகளைக் கேட்டறிந்தார். எனினும் இந்தக் கூற்றுக்களை மேற்கு நாடுகளால் சுயாதீனமாகச் சரி பார்க்க முடியவில்லை.

போக்ரோவ்ஸ்க் ஒரு முக்கியமான தளவாட மையமாகும், போருக்கு முன்பு சுமார் 60,000 மக்கள் தொகையைக் கொண்டிருந்தது. இருப்பினும், பெரும்பாலான பொதுமக்கள் நீண்ட காலத்திற்கு முன்பே தப்பி ஓடிவிட்டனர்.

ரஷ்யா அந்த நகரத்தைக் கைப்பற்றினால், அதை ஒரு தளமாகப் பயன்படுத்தி, டொனெட்ஸ்க் பகுதியில் மீதமுள்ள இரண்டு பெரிய உக்ரேனிய கட்டுப்பாட்டில் உள்ள நகரங்களான கிராமடோர்ஸ்க் மற்றும் ஸ்லோவியன்ஸ்க் மீது முன்னேற முடியும்.

மாஸ்கோ, தான் இணைத்துக் கொண்டதாகக் கூறும் டொனெட்ஸ்க் பகுதி முழுவதையும் கைப்பற்றும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.



2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் போரின் இரத்தக்களரிப் போர்களில் ஒன்றான அவ்திவ்கா நகரத்தைக் கைப்பற்றியதிலிருந்து, உக்ரைனில் ரஷ்யாவின் மிக முக்கியமான பிராந்திய ஆதாயமாக போக்ரோவ்ஸ்கைக் கைப்பற்றுவது இருக்கும்.

## 2030க்குள் உலகப்போர் நடக்கும்; எலான் மஸ்க்

03.12.2025

உலகின் நம்பர் 1 கோடீஸ்வரரான எலான் மஸ்க், உலகம் விரைவில் ஒரு உலகளாவிய மோதலில் சிக்கும் என்று எச்சரித்துள்ளார்.

உலகளாவிய நிர்வாகத்தின் மீது அணுசக்தி தடுப்பின் விளைவு குறித்து “X” தளத்தில் ஒரு பயனர் விவாதித்ததற்குப் பதிலளிக்கும் விதமாகவே மஸ்க் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

போர் தவிர்க்க முடியாதது.

ஹண்டர் ஆஷ் என்ற எக்ஸ் பயனர், அணு ஆயுதங்கள், வலிமை வாய்ந்த நாடுகளுக்கு இடையே போரையோ அல்லது போரின் அச்சுறுத்தலையோ தடுக்கின்றன. போர் அச்சுறுத்தல் இல்லாததால் உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் செயலற்றுப் போயுள்ளன, எனவே நிர்வாகத்தில் அவற்றின் செயல்திறன் குறைந்துள்ளது என்று பதிவிட்டிருந்தார்.

எக்ஸ் சமூக ஊடகத்தின் உரிமையாளராகவும் உள்ள எலான் மஸ்க் இதற்கு பதிலளிக்கையில், “போர் நிச்சயம் நடக்கும். எப்போது என்று நீங்கள் கேட்கலாம். என் கணிப்புப்படி 2030-க்குள் நடக்கும். போர் தவிர்க்க முடியாதது. இன்னும் ஐந்து ஆண்டுகளில், அல்லது அதிகபட்சமாக 10 ஆண்டுகளில் அது நடக்கும்” என்று வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், தனது இந்தக் கருத்து குறித்து எலான் மஸ்க் குறிப்பிட்டோ அல்லது விரிவாகவோ எதுவும் கூறவில்லை. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கீழ் அரசாங்க செயல்திறன் துறையின் (DOGE) தலைவராக மஸ்க் பெற்ற அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, அவரது இந்தக் கருத்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.



## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# சிறுவர் சமூக வலைத்தளக் கணக்குகளை நீக்காவிடில் 50 மில்லியன் அபராதம்; அவுஸ்திரேலியா

04.12.2025

ஆவுஸ்திரேலியாவில் சிறுவர் சமூக வலைதளக் கணக்குகளை நீக்காத சமூக ஊடக நிறுவனங்களுக்கு 33 மில்லியன் டாலர்கள் வரை அபராதம் விதிக்கப்படும் என ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

ஆவுஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர் சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்த ஆவுஸ்திரேலிய அரசு தடை விதித்து வழிமுறைகளை வகுத்து சட்டம் இயற்றியுள்ளது. இச்சட்டம் டிச. 10ஆம் திகதி முதல் ஆவுஸ்திரேலியாவில் அமலுக்கு வருகிறது.

முகநூல், இன்ஸ்டாகிராம், கிக், ரெடிட், ஸ்நாப்சாட், த்ரெட், டிக் டாக், எக்ஸ் மற்றும் யூடியூப் ஆகிய சமூக ஊடக நிறுவனங்களுக்கு டிச., 10ஆம் தேதி முதல் 33 மில்லியன் அமெரிக்க டாலர் (ஆவுஸ்திரேலிய மதிப்பில் 50 மில்லியன்) அபராதம் விதிக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

முடக்கப்பட்ட கணக்குகளின் விவரங்கள் குறித்து டிச., 11 ஆம்




திகதி இந்த 10 சமூக ஊடக நிறுவனங்களிடம் அறிக்கை மூலம் தரவுகளைப் பெற அரசு திட்டமிட்டுள்ளது.

இதுமட்டுமின்றி அடுத்த 6 மாதங்களுக்கு மாதாமாதம் அறிக்கை மூலம் தரவுகள் பெறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பேசிய ஆவுஸ்திரேலிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அனிகா வெல்ஸ் (Anika Wells).

சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவோரின் வயது உறுதிப் பாட்டை நியாயமாகவும் துல்லியமாகவும் அறிய சில வாரங்கள் அல்லது மாதங்கள் ஆகும் என்பதை அரசு ஆமோதிக்கிறது.

எனினும், சட்டத்திற்கு புறம்பாக சமூக ஊடக நிறுவனங்கள் செயல்படுகின்றன என்பது கண்டறியப்பட்டால் அதற்கான அபராதத்தை அவர்கள் சந்திக்க நேரிடும்.

தொடர்ந்து விதிமீறல்கள் கண்டறியப்பட்டால் அதிகபட்ச தொகையை அபராதமாக நீதிமன்றமே விதிக்க நேரிடும் எனக் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை ஆவுஸ்திரேலியாவில் உள்ள 16 வயதுக்குட்பட்ட பயனர்கள் தங்கள் கணக்குகளில் இருந்து எந்த நேரத்திலும் வெளியேறலாம் என கூகுள் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ரிக்டர் அளவில் 7 ஆக பதிவு: அமெரிக்காவின் அலாஸ்காவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

07.12.2025

அமெரிக்காவின் அலாஸ்கா-கனடா எல்லையில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.அலாஸ்காவின் ஜூனாவ் வில் இருந்து வடமேற்கே சுமார் 370 கிலோமீட்டர் தொலைவிலும், கனடா வின் யூகோனின் வைட்ஹார்சுக்கு மேற்கே 250 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது ரிக்டர் அளவில் 7 ஆக பதிவானது.

10 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கம் அலாஸ்காவின் யாகுடாட், ஜூனாவ் ஆகிய இடங்களில் உணரப்பட்டது. சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் வீடுகள் பயங்கரமாக குலுங்கின. இதனால் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர்.

பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டபோதிலும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. சுனாமி அச்சுறுத்தல் இல்லை என்று பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்தது. நிலநடுக்கத் தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக தகவல் வெளி யாகவில்லை.




# ஜப்பானை அதிர வைத்த 7.6 ரிக்டர் நிலநடுக்கம்!

08.12.2025

ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரிக்டர் அளவுகோலில் 7.6 அலகுகளாகப் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

ஜப்பானின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதுடன், ஹொக்கைடோ, அமோரி மற்றும் இவாட் ஆகிய மாகாணங்களுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தின் மையம் அமோரி மாகாணத்தின் கடற்கரையி லிருந்து 80 கிலோமீற்றர் தொலைவிலும், 50 கிலோமீற்றர் ஆழத்திலும் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானின் வடகிழக்கு கடற்கரைப் பகுதிகளில் மூன்று மீற்றர் உயரத்திற்கு சுனாமி அலைகள் எழக்கூடும் என ஜப்பானிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.




# ஜேர்மனியில் கடும் எதிர்ப்புகளை மீறி கட்டாய இராணுவ மசோதா நிறைவேற்றம்

09.12.2025

ஜேர்மனியில் 18 வயது நிரம்பியவர்களுக்கு கட்டாய இராணுவ சேவை என்ற மசோதா நிறைவேற்றப்பட்டதாக தகவல் வெளி யாகியுள்ளது.

இராணுவத்திற்கு ஆட்கள் சேர்ப்பது தொடர்பிலான மசோதா குறித்து ஜேர்மனி நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப் பட்டது.

ரஷ்யாவின் ஐரோப்பிய ஊடுருவலால் பல நாடுகள் கலக்க மடைந்த நிலையில்தான், ஜேர்மனி தமது இராணுவத்தைப் பலப்படுத்த இதனை கையில் எடுத்தது.

வாக்கெடுப்பில் ஆதரவான வாக்குகள் அதிகம் கிடைத்தன. ஆனால், அரசின் இந்த மசோதாவிற்கு ஜேர்மனியில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. தலைநகர் பெர்லினில் சுமார் 3000 பேர் போராட்டத்தில் இறங்கினர்.

இந்த நிலையில், கடும் எதிர்ப்பையும் மீறி ஜேர்மனி நாடாளு மன்றத்தில் இந்த இராணுவ மசோதா நிறைவேற்றப்பட் டுள்ளது.

இதன்மூலம் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் இராணுவ வீரர் களின் எண்ணிக்கையை 2 இலட்சத்து 60 ஆயிரமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




அதே சமயம் இடதுசாரி கட்சியினர் இந்த கட்டாய இராணுவ சேவைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

தற்போது ஜேர்மனி இராணுவத்தில் சுமார் 1 இலட்சத்து 82 ஆயிரம் வீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



**சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகின்றது.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**








சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கும் மாவீரர்கள்

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் தினம்.

எமது விடுதலைப் போராட்டத்தை ஒப்பற்ற வீரகாவியமாக உலக வரலாற்றில் பொறித்துச் சென்ற உன்னதமானவர்களை நாம் நினைவில் நிறுத்திப் பூசிக்கும் புனித நாள்.

மாவீரர் மகத்தான இலட்சிய வாதிகள். நாம் தழுவிக் கொண்ட இலட்சியத்தை தமது உயிரிலும் மேலாக நேசித்தவர்கள். மக்களின் விடுதலையை தமது மானசீக இலட்சியமாக, வாழ்வின் உயரிய குறிக்கோளாக வரித்துக் கொண்டவர்கள் அந்த; இலட்சியத்திற்காகவே மடிந்தவர்கள்.

மனித வாழ்வில் சுதந்திரம் உன்னதமானது; மனித நற்பண்புகளில் தலை சிறந்தது. மனித வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது. சுதந்திரம்தான் மனித வாழ்விற்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது; முழுமையைக் கொடுக்கிறது.

மனித ஆன்மாவின் ஆழுமான அபிலாசையாகவே மனிதனிடம் சுதந்திர தாகம் பிறக்கிறது.

நாகரிகம் தோன்றிய காலந்தொட்டு யுகம் யுகமாக மனித குலம் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறது. அடிமைத் தளைகளிலிருந்து, அடக்கு முறையிலிருந்து விடுதலை பெற விழைந்து வருகிறது. காலம் காலமாக இந்தப் பூமியில் நிகழ்ந்த போராட்டங்கள், புரட்சிகள், யுத்தங்கள் எல்லாம் மனித விடுதலை எழுச்சியின் வெளிப்பாடுகளன்றி வேறென்றுமல்ல.

மனிதனை மனிதன் அடிமை கொள்கிறான்; அழிக்க முயல்கிறான். மனிதனை மனிதன் சுரண்டி வாழ்கிறான். அன்று தொட்டு இன்று வரை மனிதனே மனிதனின் முதன்மையான எதிரியாக விளங்கி வருகிறான். ஒருவனது சுதந்திரத்தை இன்னொருவன் விழுங்கி விட எத்தனிக்கும்போது தர்மம் செத்துவிடுகிறது. உலகில் அதர்மமும், அநீதியும் பிறக்கிறது. சாதி என்றும், வர்க்கம் என்றும், இனம் என்றும் பிளவுகள் எழுந்து மனிதரிடையே முரண்பாடு தோன்றுகிறது. மோதல்கள் வெடிக்கிறது. இந்த உலகில் அநீதியும் அடிமைத் தனமும் இருக்கும் வரை சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத் தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி. ஏனெனில் சுதந்திர எழுச்சியின் உந்துதலால் தான் மனித வரலாற்றுச் சக்கரமும் சுழல்கிறது.

ஒடுக்கப்படும் உலக மக்களில் ஒரு பிரிவினராக நாமும் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறோம். எல்லா விடுதலைப் போராட்டங்களையும் விட எமது போர்க்குரல் இன்று உலக அங்கில் மிகப் பெரிதாக ஒலிக்கிறது. எமது சுதந்திரப் போர் ஏனைய விடுதலைப் போராட்டங்களை விட சாராம் சக்தில் வித்தியாசமானது; தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டது; ஒப்பற்ற சிறப்பம்சங்களைக் கொண்டது.

உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புக்களும் இங்கு. எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும். இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீரருக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன். இப்படியானதொரு மகிமையும், மேன்மையும் வாய்ந்த ஒரு மகத்தான வீரகாவியத்தை எமது மாவீரர் படைத்துச் சென்றிருக்கிறார்கள். எமது மாவீரரின் இந்த ஒப்பற்ற சாதனைகளால் ஒடுக்கப்படும் உலகிற்கு எமது போராட்டம் ஒரு உந்து சக்தியாக, ஒரு முன்னுநாரணமாக, ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கிறது. சாவுக்கு அஞ்சாத அவர்களது துணிவும் உறுதிப்பாடுமே எமது போராட்டத்தின் பலமும் வளமுமாகும். எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும், பணத்தையும் வாரி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கைநீட்டி நிற்கவில்லை. எவரிடமும் தங்கி நிற்க வில்லை. நாம் எமது சொந்தமண்ணில், எமது சொந்த மக்களில், எமது சொந்தக் கால்களில் தங்கி நிற்கிறோம். எமது சொந்தக்கைகளால் போராடுகி றோம். இதுவே எமது தனித்துவத்தின் தனிச்சிறப்பாகும். எமது சொந்தப் பலத்தில், நாம் வேரூன்றி நிலையாக நிற்பதால் மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்துகொடாமல் எம்மால் தலை நிமிர்ந்து நிற்கமுடிகிறது.

புதிய சவால்களும், புதிய நெருக்கடிகளும் நிறைந்ததாக இன்று எமது தேசிய விடுதலைப் போராட்டம் மிகவும் சிக்கலான வரலாற்றுச் சூழ்நிலையை எதிர் கொண்டு நிற்கிறது.

குறிப்பு: 27 11.1992 அன்று மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையின் ஒரு பகுதியை இங்குதருகிறோம்.



Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும் பொன் நகை மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன் நகையால் மேலும் ஒளிரும் உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்




HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ 416-993-8001
Professional & License Technician
Airehvac70@gmail.com




K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித வைபவங்களுக்கான தலை, முக அலங்காரங்கள் உங்கள் விருப்பத்திற்கேற்ப சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & Draping ★
Hair Flowers & Bouquet ★
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu



ஆழிப்பேரழிவின்
இருபத்தோராம் ஆண்டு
நினைவில்

# எய்தவன் இருக்க அம்பை நொந்தோம்?

எங்கள்
நேசிப்பிற்குரிய தேசத்தின்
நெய்தல் பெரு நிலத்தை
ஆழிப்பேரலை அடித்துத் துவைத்தது.
நாட்கள் நகர்ந்தாலும்,
நெஞ்சு துடிக்கிறது இன்றும்...

அலையே...!
அமைதியானாய், எப்படி...?
மருங்கு நீளவும் மரணக்காடாய் சபித்துவிட்டு
மௌனித்துக் கிடக்கிறாய், எப்படி...?
எந்தக் குற்ற உணர்வும் இல்லாது
பொய்யாய் நுரை பொங்க,
எப்படிச் சிரிக்க முடிகிறது உன்னால்?
ஆனாலும் உன்னை,
வேண்டாம் என வெறுக்கவும் முடியவில்லை
அன்பாய் ஈர்த்து அணைக்கவும் முடியவில்லை.

கரைவந்து கால்தழுவி
கடல்மீளும் வெள்ளலையே
காதலித்தாய் என்றெல்லோ
கனவுகள் கண்டோம்.
அணைத்த கைதானே அடித்தும் போட்டது.
நாமும் தான்...
அன்றெழுந்த வெஞ்சினத்தில்
பாதகி மூளிக் காட்டேரி என்று
கரித்துக் கொட்டினோம், சபித்தோம்
அவசரத்தில் வார்த்தைகளை
அள்ளி அனல் குழம்பாய் விதைத்தோம்
எம் தார்மீக கோபம் நியாயம்தானே!
தவறு என்பதால் தாங்கி கொண்டாய்
ஆனாலும் என் தவிப்பும்
தாமதமாய் புரிந்தது...

கடல் நடுவே நிலம் பிளந்து
காவு கொள்ள உனை
கரை அனுப்பி வைத்தது
எய்தவன் இருக்க அம்பை நொந்தோம்!

ஆழிப் பேரணங்கே...
சரி... வா!
சமரசம் செய்து கொள்வோம்
என்ன இருந்தாலும்
எஞ்சிக் கிடக்கின்ற ஏதிலி உறவுகள்
பாய்விரித்து நாளை படகேற வேண்டும்.
அலையேறி துடுப்பசைத்து
வலைவீசி வாழ்தலன்றி
இயைந்து எதுசெய்ய இயலும் இவர்க்கு?
உப்பு நீரோடு வாழ்வெனினும்
உவப்பான வாழ்வன்றோ
அடித்த அலைக்கரங்களே! [?] மீண்டும்
அணைத்துக் கொள்.

சாம்பரில் இருந்து தளிர்த்து எழுந்த
சந்ததி எங்களது
அலை எழுதிய அவலம்
அழித்தெழுத மாட்டோமா?
புலத்து உறவுகள், பொதியாய் மதியாய்
பொருண்மிய வலுச்சேர்க்க வந்தார்.
இத்துயர் களைந்தும்
இடர்தாண்டி எழுவோம்!

அலையே...
அழித்த உயிர் தவிர்த்து
அனைத்தும் மீட்போம்!

– நன்றி: சோதியா












# சுதந்திரத்திற்கான பல்திசைப்பயணியின் இருப்பும் வாழ்வும்

## சில வரலாற்றுக் குறிப்புக்கள்




**அன்ரன் பாலசிங்கம் என்ற அந்த மாமேதை வாழ்ந்த நாட்கள், வாழ்ந்த கணங்கள், தமிழர் தேசத்தின் உன்னதமான உயரிய நாட்களும், அவர் தேசத்தின் குரலாய், தேசத்தின் தத்துவ ஒளியாய் என்றும் அவர் வாழ்ந்துகொண்டிருப்பார்.**

சாவு ஒரே நொடியில் - ஒரு கணப்பொழுதில் எல்லாவற்றையும் மாற்றி விடுகிறது; எல்லாவற்றையும் புரட்டிப் போட்டுவிடுகிறது; ஒரு மனிதனுடைய ஆசை, அபிலாசை, இருப்பு என்று எல்லா வற்றையும் இந்தச் சாவு அழித்துவிடுகிறது. 2006 நவம்பர் மாதத்தில் எங்கள் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பால சிங்கம் அவர்களுக்கு - கொடிய புற்று நோய் தாக்கியிருப்பதாக வும் இன்னமும் குறைந்தபட்சம் நான்கு மாதங்களே அவர் உயிர் வாழ்வார் என்றும் - மருத்துவர்கள் நாட் குறித்துவிட்ட போது அவரது சாவுக்கான நாள் குறிக்கப்பட்டுவிட்டதாகவே தமிழ் கூறும் நல்லுலகம் கலங்கியது. ஆனால் சாவு என்பது வாழ்வின் முடிவல்ல என்பதையும் அதை மக்களுக்காக - மக்களின் விடுதலைக்காக தங்களை அர்ப்பணிப்பவர்களை சாவு அழித்து விடுவதில்லை என்பதையும் போராளிகள் ஒரு போதும் புதைக்கப்படுவதில்லை விடுதலையின் வித்தாக விதைக்கப்படுகின்றார்கள் என்பதையும் உணர்ந்த எங்கள் தேசத்தின் குரல் எங்கள் பாலா அண்ணா அந்த சாவை நெஞ் சுறுதியோடு எதிர்கொண்டார்.



சிங்களப் படைகளின் கொடூரத்தனங்களால் ஈழத் தமிழ் மக்கள் படும் இன்னல்களுடன் ஒப்பிடும் போது. தன்னுடைய உடலை வருத்தும் கொடிய நோய் தரும் வலி பெரிதல்ல என்று கூறிய அந்த மாமேதை தன்னுடைய வாழ்வின் இறுதிக் கணங்களை எண்ணி ஒரு போதும் கலங்கவில்லை.

தனக்கே உரித்தான கம்பீரத்துடன் தனக்கே உரித்தான தன் னம்பிக்கையுடனும் அவர் மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்டார்; 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி தாயகத்தின் வடமராட்சி கரவெட்டி மண்ணில் முதல் முதலாக ஒலித்த அந்த தேசத்தின் குரல். 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி பிற்பகல் 1:45 மணிக்கு லண்டன் மாநகரத்தில் அடங்கி விட்டது. மார்க்கண்டு ஸ்ரெனிஸ்லஸ் பாலசிங்கம் அல்லது அன்ரன் ஸ்னிஸ்லஸ் என்ற இந்த மனிதரின் வாழ்வில் பொது வுடமை சித்தாந்தவாதி, ஊடகத்துறை விற்பன்னர், தமிழ் தேசிய விடுதலைப் போராளி என்ற மூன்று பரிணாமங்கள் இருக் கின்றன. தென் தமிழீழத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தை பூர் விகமாகக் கொண்ட இந்துப் பாரம்பரியத்தை உடைய தந்தை யாருக்கும் வட தமிழீழுத்தின் வடமராட்சி கரவெட்டி நகரத்தின் கிறிஸ்தவ பாராம்பரியத்தை கொண்ட தாயாருக்கும் தமிழ் தேசியத்தினதும் மத இணக்கப்பாட்டினதும் சின்னமாகப்பிறந்த ஸ்ரெனிஸ்லஸ் பாலசிங்கம் அவர்கள் கரவெட்டி இருதயக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியை கற்றகாலத்தில் அந்தப் பிரதேசத்தில் நிலவிய சமூக ஒடுக்குமுறையும் அதற்கு எதிரான போராட்டங்களும் பொதுவுடமை சித்தார்ந்தத்தின் பால் அவரை நாட்டங்கொள்ள வைத்தன. சமூக ஒடுக்குமுறைக்கு எதிராக வும் மதத்தின் பேரால் மாணவர் சமூகம் பிளவுபடுத்தப்படுவதை யும் எதிர்த்து அவர் மேற்கொண்ட பரப்புரைகள், அவர் கர வெட்டியில் தொடர்ந்து தங்கியிருப்பதற்கும் திரு இருதயக் கல்லூரியில் படிப்பதற்கும் முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தின. இந்த நிலையில் யாழ்ப்பாணம் சென்பற்றிக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்வதற்காக மார்கண்டு என்ற தனது தந்தை யின் பெயருக்கு அன்ரன் என்று கிறிஸ்தவப் பெயர் சூட்ட வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. மார்க்கண்டு ஸ்ரெனிஸ்லஸ் பாலசிங்கம் என்று அழைக்கப்பட்ட அவர் அதன் பின்னர் அன்ரன் ஸ்ரெனிஸ்லஸ் பாலசிங்கம் என்று அழைக்கப் பட்டார். தனது கல்லூரி காலத்திலேயே சமூகத்தின் கருத்தியில் தளத்தில் உறைந்து கிடக்கும் மூட நம்பிக்கைகளை ஒழித்து புதிய கருத்தியல் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று அதற்கு ஊடகத் துறையைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் விரும்பினார். அந்த காலத்திலேயே ஆக்கபூர்வமான கருத்துக்களையுடைய கட்டுரைகளை எழுதிவந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் 1960களின் பிற்பகுதியில் தனது கல்லூரி படிப்பை முடித்த பின்னர் சிரித்திரன் ஆசிரியர் சுந்தரின் ஒத்தாசையால் வீரகேசரி நாளிதழில் ஊடகவியலாளராக தனது கருத்தியல் போராட்ட வாழ்க்கையை ஆரம்பித்தார். பிரம்ம ஞானி என்ற பெயரில் பல்வேறு அரசியல் தத்துவக் கட்டுரை களை எழுதி வந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மலையகத்திலிருந்து வெளிவந்த "செய்தி" என்ற நாளிதழில் ஐம்பது அத்தியாயங்களுக்கு மேல் தொடராக எழுதிய தத்துவக் கட்டுரை அவரது ஆளுமையையும் மெஞ்ஞான செழுமையை








யும் வெளிப்படுத்தியது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வீரகேசரி நாளிதழில் உதவி ஆசிரியராக பணிபுரிந்த காலத்தில் தமிழ் சமூகத்தின் கருத்தியல் தளம் பல்வேறு பிற்போக்கும் தனங்களால் கட்டமைக்கப்பட்டிருந்தது. சமூகம், அரசியல், தத்துவம், ஊடகம் என்று எல்லா துறைகளிலேயும் அவை மலிந்து போயிருந்தன.

தமிழ்ச் சமூகம் சாதி, சமயம், பிரதேசம் என்று பிளவுபட்டுப் போயிருந்தது. ஊடகத்துறை என்பது இந்த பிற்போக்குத் தனங்களைக் கண்டு கொள்ளாத அல்லது இவற்றை கண்டும் கொள்ளாத அல்லது இவற்றை கண்டும் காணாமல் நடுநிலமை என்ற பெயரில் மதில்மேல் பூனையாக நடந்துகொள்ளும் சந்தர்ப்பவாதப் போக்குடையதாக இருந்தது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இந்த சந்தர்ப்பவாத நழுவல் போக்கை உடைத்து புதிய கருத்தியல் சித்தாந்தப் போக்குகளை ஊடகத்துறையில் புகுத்துவதற்கு முனைந்தார். தமிழ்ச் சமூகத்தின் உண்மையான மெய்யியல் அடையாளத்தைத் தேடிய அவர் பௌத்த மெய்யியல் அடையாளங்கள் பற்றியும் நிறையவே எழுதினார்.

ஆக்கிரமிப்பு கருத்தியல்களால் மாசுபட்டுப் போயிருந்த, திரிவுபட்டுப் போயிருந்த தமிழ்ச்சமூகக் கருத்தியல் தளத்தை உடைத்து புத்துயிர் அளிக்க முயன்றார். அவருடைய ஆளமை மிக்க எழுத்துக்கள், அவற்றிலிருந்து தத்துவ வீச்சுகளை பாமரனும் புரிந்துகொள்ளும்படி எளிமையாகச் சொல்லிய விதம் இவையெல்லாம் தமிழ் சமூகத்தின் தத்துவ ஆசிரியனாக அவரை இனம் காட்டின.

1970களின் முற்பகுதியில் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தில் மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றிய காலத்தில் உடன் பணியாற்றிய தமிழ் பெண்ணை மணந்து அவருடன் இணைந்து லண்டன் மாநகருக்கு புலம்பெயர்ந்து தனது தத்துவ மேற்படிப்பை தொடங்கினார். அவரது துணைவியார் சிறுநீரக நோய்வாய்ப்பட்டு உயிரிழத்த நிலையில் 1976 காலப்பகுதியில் அவுஸ்திரேலியப் பிரஜையான அடேல் அம்மையாரை சந்தித்தது அவரது வாழ்க்கையின் மற்றொரு பரிணாமமாகவும் திருப்பு முனையாகவும் அமைந்தது.

அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த கருத்தியல் ஒற்றுமையும் பரஸ்பர புரிந்துணர்வும் பொதுவுடமை சித்தாந்தத்தின் தந்தையான கார்ல் மாக்ஸிற்கும் அவரது வாழ்நாள் எல்லாம் அவருடன் இருந்து அரியதத்துவ பொக்கிஷங்களை வெளியிடுவதற்கு துணைபுரிந்த அவரது மனைவி ஜென்னி மாக்ஸ்சுக்கும் இணையாக பேசப்படுகிறது.



1979 ஆம் ஆண்டு சென்னையில் தமிழீழ தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை சந்தித்ததானது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மைல் கல்லானது.

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைகளுக்கும், செயல்களுக்கும், அவர் அரசியல் தத்துவார்த்த தளங்களில் புதிய வடிவமும், புதிய பரிணாமமும் கொடுத்தார். அந்தக்கால கட்டத்திலே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கென்று புறப்பட்ட பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த பல்வேறு நபர்கள் தங்களது மேதாவித் தனத்தையும், கருத்தியல் செருக்கையும் வெளிப்படுத்திக்கொண்டிருந்த நேரத்தில் அவர் அவர்களிலிருந்து வேறுபட்டு உண்மையான தமிழ்த் தேசிய விடுதலைக்கான கருத்தியலை கட்டமைத்தார். அவர் எப்பொழுதும் எதையும் தமிழ் மக்கள் மீது திணிக்கவில்லை. தமிழ்த் தேசியத் விடுதலைப் போராட்டத்தளத்தில் தேசியத்தலைவர், தளபதிகள், போராளிகள், மக்கள் என்று அனைவரிடமும் கற்றுக் கொண்ட விடயங்களையும் அவர்களுடைய அனுபவப்பதிவுகளையும் தன்னுடைய அனுபவப்பதிவுகளையும் ஒருசேர இணைத்து தமிழ்த் தேசியக் கருத்தியலைச் செழுமைப்படுத்தினார். சோசலிசத் தமிழீழத்தை நோக்கி என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் முதலாவது தத்துவ நூலாக அமைந்தது.

தான் ஒரு மேதை, நிறையக் கற்றவன், லண்டன் சீமையில் இருந்து வந்தவன் என்ற பெருமைகள் எதுவுமே இல்லாது ஒரு சாமானியனாக போராளிகளோடு போராளியாக அவர் பழகியதை இன்றும் அவருடன் பழகச் சந்தர்ப்பம் கிடைத்த அனைத்துப் போராளிகளும் நினைத்து நினைத்து நெஞ்சுருகுகின்றார்கள்.

1985 இல் திம்புப் பேச்சுவார்த்தையிலிருந்து 1990 ஆம் ஆண்டு பிரேமதாசாவுடன் நடந்த பேச்சுவார்த்தை, அதன் பின் சந்திரிகா ஆட்சிக் காலத்தில் நடந்த பேச்சுவார்த்தை, தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானபின் நடந்த அனைத்துப் பேச்சுவார்த்தைகளிலும் தன்னுடைய ஆளமையாலும் வாதத் திறமையாலும் தமிழர் தரப்பின் நியாயங்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அரசியல் பரிணாமங்களையும் சர்வதேச அரங்கில் ஆணித்தரமாக நிலைநிறுத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் அவருடைய ஆளுமையையும், இராஜதந்திர நகர்வுகளையும் அவர் பயன்படுத்திய இராஜதந்திர மொழியையும் பார்த்து சிங்கள அதிகாரவர்க்கம் மட்டுமல்லாது, தமிழ் மக்களை மேலாதிக்க வலைப் பின்னல்களுக்குள் சிக்கவைப்பதற்கு பொறி வைத்து காத்திருந்த மேலாதிக்க சக்திகளும் கலக்கம் கொண்டன். தமிழர் தரப்பின் தலைசிறந்த இராஜதந்திரி என்றும் தத்துவ வித்தகர் என்றும் மேற்குலக ஊடகங்களும் மேற்குலக அரசியல் நிபுணர்களும் அவரைப்புகழ்ந்துரைத்தனர். விடுதலை, போரும் சமாதானமும் போன்ற அவரது நூல்கள் தமிழர் தரப்பின் தத்துவ செழுமைக்கும் அவரது ஈடு இணையில்லாத தன்மைக்கும் சான்றாக விளங்குவதாக பல விமர்ச்கர்கள்

30 வருடங்களுக்கு மேலாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்தமையால் அவைரது சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் 2000 ஆம் ஆண்டு நோர்வேயில் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை மேற்கொண்டிருந்தார்.

2002 ஆம் அண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டபின் 5 தடவைகள் லண்டனில் இருந்து வன்னி பெருநிலப்பரப்புக்கு சென்று தேசியத் தலைவரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

2002 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் நடத்திய சர்வதேச ஊடகர் மாநாட்டை கலாநிதி அன்ரன் பாலசிங்களம் அவர்கள் முன்னின்று நடத்திய வீதம் அவரது ஊடகத்துறை ஆளுமைக்கு சான்றாக அமைந்தது.

ஜெனிவாவில் கடந்த ஒக்டோபர் மாதம் நடந்த பேச்சுவார்த்தையில் உடல் நலம் குன்றிய நிலையில் கலந்து கொள்ளாதிருந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு கொடிய புற்றுநோய் தாக்கியிருக்கிறது என்ற விபரம் அவருக்கே தெரியாமல் இருந்தது.

நவம்பர் 27 ஆம் நாள், தமிழீழ தேசிய மாவீரர் நாள் நிகழ்வின் போது தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றும் உரைக்கு விளக்க உரைபோல் வருடா வருடம் லண்டன் மாநகரில் கலாநிதி அன்ரன் பாலசிங்களம் அவர்கள் ஆற்றும் உரை இம்முறை (2006ஆம் ஆண்டு) இடம்பெறாததும் தமிழ் நெஞ்சங்களை கலங்க வைத்தது.

2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி லண்டன் நேரம் பிற்பகல் 1:45 மணியளவில் தமிழீழ தேசத்தின் தத்துவச் சுடர் அணைந்ததாக செய்தி வெளியானபோது தமிழ் கூறும் நல்லுலகமே கலங்கி நின்றது. தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் “தேசத்தின் குரல்” என்ற உயரிய சிறப்பைக் கொடுத்து அவருக்கு மதிப்பளித்தார்.

அன்ரன் பாலசிங்களம் என்ற அந்த மாமேதை வாழ்ந்த நாட்கள், வாழ்ந்த கணங்கள், தமிழர் தேசத்தின் உன்னதமான உயரிய நாட்களும், அவர் தேசத்தின் குரலாய், தேசத்தின் தத்துவ ஒளியாய் என்றும் அவர் வாழ்ந்துகொண்டிருப்பாரர.

திறலோன் - எரிமலை நவம்பர் -டிசம்பர் 2006








# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# மிருசுவில் படுகொலை 19.12.2000

யாழ். மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தில் "படித்த மகளிர் குடியேற்றத்திட்டம்" என்று சொல்லப்படுகின்ற மிருசுவில் கிராமம் அமைந்துள்ளது. முகமாலைப் பகுதியிலிருந்து யாழ். நகர்நோக்கி மேற்குப் புறமாக மூன்று கி.மீ. தூரத்தில் மிருசுவில் கிராமம் அமைந்துள்ளது.

வாழ்வியலுக்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தவேளை ஒன்பது பேரையும் கைது செய்த சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் கண்களை கட்டி சித்திர வதை செய்தனர். ஒன்பது பேரில் ஒருவர் தப்பி மந்திகைப் பகுதிக்கு வந்து ஏனையவர்களின் உறவினரிடம் எட்டுப்பேரின் நிலைமை










2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தென்மராட்சியின் பல பாகங்களிலும் கடுமையாக நடந்த சண்டைகளால் தென்மராட்சிப் பகுதி மக்களிற் பெரும்பாலானோர் வடமராட்சியின் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர். இதில் ஒரு பகுதியினர் மிருசுவில் வடக்கு படித்த மகளில் குடியேற்றத்திட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி கரவெட்டியில் அமைந்துள்ள நாவலர் மடப் பகுதியில் தஞ்சமடைந்திருந்தனர்.

19.12.2000 அன்று மிருசு விலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி கரவெட்டியில் தங்கியிருந்த ஒன்பது பேர் தமது வாழ் விடங்களைப் பார்வையிடச் சென்றனர். அங்கிருந்த தமது

யினையும் தெரிவித்தார்.

காணாமற்போனர்களின் உறவினர்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து அச்சம்பவத்திற் தப்பிவந்த பொன்னையா மகேஸ்வரன், மற்றும் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்ட சிங்கள இராணுவ வீரர் லான்ஸ் கோஸ்ரல் ஆர். எம். எஸ். ரத்னநாயக்கவும் கொடுத்த தகவின் பேரில் அப்போதைய யாழ். காவற்றுறை அத்தியட்சகர் உபாலி குணசேகர, உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் நிமல் ஸ்ரீநாத், சாவகச்சேரி நீதவான் அன்னலிங்கம் பிரேம் சங்கர், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் அடையாளம் காட்டப்பட்ட மனிதப் புதைகுழி 25.11.2000 அன்று மாலை 3:30 மணியளவில் தோண்டப்பட்டது. புதைகுழி தோண்டும் போது இரண்டு அடி ஆழத்தில் சடலங்கள் ன்பட்டன. அப்பகுதியிற் காணா மற்போன எட்டுப் பேரது உடல்களும் பெட்டப் பட்டு, கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப் பட்டன.

மிருசுவில் சம்பவம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கீழ் வருமாறு (29.12. 2000 வீரகேசரி) தகவல் கொடுத்தார்.

"தப்பி வந்த பொன்னையா மகேஸ்வரனும், லான்ஸ் கோப்ரல் ஆர்.எம். எஸ் ரட்ணாயக்காவும் அடையாளம் காட்டிய எழுதுமட்டுவாள் பகுதியிலிருந்த மனிதப் புதைகுழியைத் தோண்டியபோது இரண்டடி ஆழத்தில் மனிதனின் முழங்கை ஒன்று தென்பட்டது. அதைச்சுற்றி மண்ணை அவதானமாக அப்புறப்படுத்தி வேளை மரக்கட்டை காணப்பட்டது. மனித சடலத்தின் தலை ஒன்றும் காணப்பட்டது. அதை அவதானமாக எடுத்த போது இருபத்தொரு வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் காணப்பட்டது. இச்சடலம் சிவப்பு வெள்ளை நிறச்சாறியினால் சுற்றப்பட்டிருந்தது. இரண்டாவதாகச் சிறுவனின் சடலம் எடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து மேலும் சடலங்கள் எடுக்கப்பட்டன. சிறுவனின் சடலம் மேற்றோல் உரிந்து றோஸ் நிறமாகக் காணப்பட்டது. கூரிய ஆயுதத்தால் குரல் வளைகள் வெட்டப்பட்ட நிலையில், கால், தலை துண்டிக்கப்பட்ட நிலையிலும் சடலங்கள் காணப்பட்டன." எனத் தெரிவித்தார்.

**19.12.2000 அன்று மிருசுவிற் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. சின்னையா வில்வராசா (41)
2. செல்லத்துரை தெய்வகுலசிங்கம் (31)
3. வில்வராசா பிரசாத் (05)
4. வில்வராசா பிரதீபன் (15)
5. பாஸ்கர் ஞானபாஸ்கரன் (19)
6. ஜெயச்சந்திரன் நடேசு (21)
7. ஞானச்சந்திரன் கதிரன் (35)
8. ஞானச்சந்திரன் சாந்தன் (-)

# மன்னார், பேசாலைப் படுகொலை 23, 12. 2005

மன்னார் மாவட்டத்தில் சிங்கள அரசபடைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலை அடுத்து சிங்கள படையினர் தமது கொலை வெறியாட்டத்தைப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டனர். தம்மைத் தாக்குவோரை அடையாளம் காண முடியாத படையினர், வன்முறைகளை பொதுமக்கள் மீது திணிப்பது இதுதான் முதற்தடவையல்ல. காலங்காலமாக தமக்கேற்படும் இழப்புக்களுக்காக பொதுமக்களையே இவர்கள் பழிதீர்த்து வருகின்றனர்.

அவ்வாறே 13.12.2005 அன்றைய மன்னார்ச் சம்பவமும் அமைந்துள்ளது. அன்றையதினம் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து படையினரால் சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்று நடத்தப்பட்டது. அப்போது இரு குடும்பங்களைச் சோந்த நான்கு வயதுக் குழந்தை உட்பட ஐந்து பேரை இராணுவத்தினர் கடத்திச் சென்றனர். இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட ஐந்துபேரும் 100 வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் எரியூட்டப்பட்ட சடலங்களாகக் கண்டு பிடிக்கப்பட்டனர்.

**23.12.2005 அன்று மன்னார், பேசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. திரேசா குருஸ் (40)
2. இம்மானுவேல் குருஸ் (43)
3. குருஸ் அந்தோனியம்மா (38)
4. குருஸ் டிலக்சன் (04)

25.12.2005 நினைவுநாள்



## மாமனிதர் ஜேசப் பரராசசிங்கம்

மாமனிதர் ஜேசப் பரராசசிங்கம் இலங்கை, மட்டக்களப்பு பகுதியை சார்ந்த தமிழ் தலைவர்களில் ஒருவரான இவர் டிசம்பர் 25 2005 அன்று படுகொலை செய்யப்பட்டார். மட்டக்களப்பு தேவாலயத்தில் நடந்த நத்தார் நள்ளிரவு திருப்பலிப் பூசையின் போது அரச ஆதரவுபெற்ற துப்பாக்கிதாரிகளால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்திரிகையாளர் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் முன்னின்றுழைத்தவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு முன்னின்று உழைத்த தலைவர்களுள் ஒருவர். தமிழ்த் தேசிய விடுதலைக்காக அறவழியில் போராடிய அன்னாருக்கு தமிழீழத் தேசியத் தலைவரால் மாமனிதர் விருது வழங்கப்பட்டது.







16.12.2005 படுகொலை



## பாலியல் வன்கொடுமை

இளையதம்பி தர்சினி – படையினர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திப் படுகொலை இளையதம்பி தர்சினியை 2005, டிசம்பர் 16 ஆம் நாள் இலங்கை இராணுவம் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திப் படுகொலை செய்தது. புங்குடுதீவில் நிலைகொண்டிருந்த கடற்படையினர் 16.12.2005 அன்று தர்சினியை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர். பின்னர் அவரைக் கொலை செய்து முகாமுக்கு அருகிலிருந்த பாழடைந்த கிணறொன்றினுள் வீசினர். கொல்லப்படுவதன் முன், அவர் பலரால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு இருப்பதற்கான தடயங்களையும், உடலின் பல இடங்களில் நகக்கீறல்கள், பற்கடிகளும் காணப்பட்டிருந்ததுடன், அவரது ஒரு மார்பு மிக மோசமாகச் சிதைக்கப்பட்டிருந்ததாகவும் வைத்தியசாலைச் சான்றிதழ் உறுதிப்படுத்தியது. ஆயினும் வழமைபோல் படையினர் எவரும் தண்டனை பெறவில்லை.





இளையதம்பி தர்சினி
(1985 - 16.12.2005)
புங்குடுதீவு)

# தென் தமிழீழப் படுகொலைகள் ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் 2006

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த திருகோணமலைப் பகுதிகளும் அதன் அருகாக இருந்த மட்டக்களப்பு பகுதிகளும் ஆறுமாத காலத்துக்கு மேலாக சிறீலங்கா சிங்கள இராணுத்தின் பெருமெடுப்பிலான தாக்குதலுக்குள்ளானது. அதன்போது பொதுமக்கள் கூட விட்டுவைக்கப்படவில்லை.



இந்தக்காலத்தில் இப்பகுதி துண்டிக்கப்பட்டிருந்தால் இதன்போது ஏற்பட்ட 210 பொதுமக்களின் இழப்புக்கள் இதுவரை சரியாக பதிவுக்குட்படுத்தப்படவில்லை.

இந்த 6 மாதகாலத்து நிகழ்வுள் தொடர்பான ஒரு சுருக்கமான விபரமே இதுவாகும். இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் விபரம் முழுமையாக இல்லாவிட்டாலும் குடும்ப அங்கத்தவர்களின் இழப்புக்கள் தொடர்பாக குடும்பங்கள் மேற்கொண்ட பதிவுகளின் அடிப்படையில் உதவி அரச அதிபர் அலுவல்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் சரியான பார்வையைத் தருகிறது.

மாவிலாற்றிலிருந்து நீர் திறந்து விடப்படும் வான் கதவை கட்டுப்பாட்டில் கொண்டுவருவ தென்ற சாட்டில் இத்தாக்குதல் ஆரம்பமானது. திருகோணமலையின் மூதூர் தமிழ் மக்கள் அந்தப் பகுதியில் அமைந்திருக்கும் இந்தக் குளத்திலிருந்து தங்களுக்கும் நீர் வசதிசெய்து தரப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல ஏக்கர் நெல் வயல்களுக்கு நீரை வழங்கும் இந்த வான் கதவைப் பூட்டியிருந்தனர். இலங்கை கண்காணிப்புக் குழுவின் தலையீட்டினால் இப்பிரச்சனை தீர்க்கப்பட்ட பொழுதும் சிங்கள அரசாங்கம் தாக்குதலை முன்னெடுத்துச் சென்றது.

முதலாவதாக ஆகஸ்ட் 06 ஆம் நாள் மாவிலாறு பிரச்சனையை வைத்து ஆகாய, தரைப்படைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த நாட்களில் இடம்பெற்ற தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிராமங்களுள் ஈச்சிலப்பத்தை, நல்லூர், மற்றும் உப்பாறு உள்ளடங்கும். சம்பூருக்கு அண்மியதாக முன்பு நடாத்தப்பட்ட தாக்குதலால் இடம்பெயர்ந்த மக்கள் இக்கிராமங்களுக்கு ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்தனர்.

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களை இணைக்கின்ற ஒரு ஒடுங்கிய கரையோரப் பகுதியான வாகரைக்கு திருகோணமலையின் மூதூர் கிழக்கிலிருந்து மக்கள் தொடர்ச்சியான தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. ஆகஸ்ட் 19 ஆம் நாள் இரண்டாவது மிகப்பாரிய தாக்குதல் வாகரையை இலக்குவைத்து நடாத்தப்பட்டது. பொதுமக்கள் மீது மீண்டும் நடாத்தப்பட்ட ஆகாயம், தரைத்தாக்குதலால் 100 இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். அவ்வாறு இறந்தவர்களுக்கு முறைமையான இறுதி நிகழ்வுகளை நடாத்தக்கூட குடும்பத்தவர்களுக்கு வசதி கிடைக்கவில்லை.

இந்த நிகழ்வின் பின்பும் வாகரைக்கு வடக்கே மூதூர் கிழக்கில் தங்கியிருந்தவர்களை தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் குடும்பங்களெனக்கருதி ஆகஸ்ட் 28ஆம் நாள் இவர்கள் மீது கொடூரமான தாக்குதலை சிறீலங்கா சிங்கள இராணுவம் நடாத்தியது. சிறீலங்கா சிங்கள இராணுவத்தால் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் இலங்கைத் துறை முகத்துவாரம் பாலமூடாக வெளியேறுவதற்கு மக்கள் முயற்சித்தனர். மக்கள் தப்பிச் செல்வதை தடுக்கும் நோக்கமாக பாலம் சிறீலங்கா இராணுவத்தால் தகர்க்கப்பட்டது. இதன்போது இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 25 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

மூதூர் கிழக்கில் இவ்வாறு தாக்குதலை நடத்தி மக்களை வெளியேற்றிய சிறீலங்கா சிங்கள இராணுவம் இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கமாக வாழ்ந்த வாகரைப் பகுதி மீது தாக்குதலை ஆரம்பித்தனர். இந்தப் பிரதேசத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெரும் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதன் போது நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இந்நிகழ்வு இடம்பெற்ற ஆறு மாத காலத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் இலங்கை கண்காணிப்புக்குழு ஆகியன வாகரைக்குச் செல்வதை தடுத்தது. இறுதியில் குண்டு மற்றும் செல் தாக்குதலிலிருந்து தங்களை பாதுகாக்குமாறு இலங்கை கண்ணகாணிப்புக் குழுவிடம் மக்கள் மன்றாடினார்கள். ஆறு மாதகாலத்துக்கு உணவு தொடரணி கூட வாகரைக்கு செல் வதை சிறீலங்கா சிங்கள அரசாங்கம் அனுமதிக்கவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உணவுத் தொடரணியை எடுத்துச்செல்ல இரு தடவைகளும் மேலாக முயற்சித் ததையும் சிறீலங்கா சிங்கள அரசாங்கம் முறியடித்தது.

இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒரு வழியாக எல்லா மக்களையும் வாகரையிலிருந்து வெளியேற்றுவதில் சிறீலங்கா சிங்கள அரசாங்கம் வெற்றி கண்டது. தப்பியோடும் பொதுமக்களைத் தடுத்ததற்காகவும் வாகரையை விட்டு நேரகாலத்தோடு மக்கள் வெளியேறுவதை அனுமதிக்காததற்காகவும் சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளும் கண்டிக்கப்பட்டார்கள். பசியிலிருந்தும் தாக்குதலிலிருந்தும் தப்புவதாக சில பொதுமக்கள் நடையாகவே காடுகளை கடந்தார்கள். வள்ளத்தில் சென்று ஐந்து பொது மக்கள் வள்ளம் அமிழ்ந்ததில் நீரில் மூழ்கினர். மறு வளத்தில் மனிதாபிமான உதவிகள் கிடைக்காமையைச்செய்தமை பொதுமக்கள் மீதான பாரபட்சமான தாக்குதல் என்பவற்றை சர்வதேச சமூகம் கண்டிக்காமையையிட்டு தமிழ் மக்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

**உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு**

1. அ. அரசரட்ணா (42)
2. கோ. கணேசராஜா (46)
3. ஞா. சறோஜா (10)
4. ஞா. றகுமார் (06)
5. ஞா. சீவிதா (10)
6. ஞா. மஞ்சுளாதேவி (23)
7. இ. பவானி (24)
8. க. நற்குணம் (36)
9. மு. தங்கவேல் (22)
10. சீ. மகாலிங்கம் (32)
11. செ. சந்திரகலா (18)
12. சி. திரவியமலர் (55)
13. சி. முத்துலிங்கம் (45)
14. சி. ரஸ்யப்பிரியன் (01)
15. சி. சிவகுமார் (25)
16. சா. தவன்ஜா (21)
17. சு. யோகேஸ்வரன் (29)
18. சு. கணபதிப்பிள்ளை (62)
19. த.புமணி (45)
20. வே. தர்மலிங்கம் (50)
21. ந.டேவிட் (25)
22. ந. குணராசா (22)
23. ந. பாக்கியராசா (40)
24. ந. விமலேந்திரன் (35)
25. நா. யோகேஸ்வரன் (28)
26. நகுலேஸ்வரன் (32)
27. நா. திரவியமலர் (65)
28. ந. தனுசலீன் (04)
29. ந. நிசாந்தன் (20)
30. பா. நாகேந்திரன் (20)
31. பா. தயாநந்தினி (22)
32. ப. கோணேஸ்வரன் (31)
33. பி. தவனேசன் (36)
34. ற. றாமச்சத்திரன் (32)
35. இ. பிரபு (17)
36. ற. சதுர்சன் (-)
37. ற. விஜயா (30)
38. ந. தியாகராசா (48)
39. அ. செல்வறட்ணம் (-)
40. ற. கோபிநாத் (22)
41. க. பத்மா (-)
42. கு. தெய்வகரன் (-)
43. மா. நாகேஸ்வரன் (-)
44. மா. சுந்தரராஜா (-)
45. நா. இந்தரன் (46)
46. நா. பிறேமலதா (35)
47. சி. சிவசோதி (-)
48. வ. சுமநாதன் (-)
49. வெ. கோணேஸ்வரன்(-)
50. வி. றதிகலா (-)
51. யோ. சிதம்பரம் (45)
52. அ. அரசறட்ணம் (33)
53. ச. சண்முகநாதன் (29)
54. ச. சந்திரசேகரன் (22)
55. ச. கோஸ்பிரியன் (-)
56. சி. பவானி (22)
57. செ. தர்மலிங்கம் (31)
58. வ. திவ்வியா (14)
59. ஜீ. சித்திரவேல் (-)
60. கா. றாஜேஸ்வரன் (-)
61. றா. தேவராச் (25)
62. சி. சிவசங்கர் (27)
63. வெ. ஆறுமுகம் (28)
64. க. புஸ்பன் (25)
65. க. றதி (31)
66. க. றஜீன்திரன் (27)
67. க. சங்கர் (23)
68. க. சாந்தகனகம் (20)
69. கோ. நாகேந்திரன் (70)
70. கோ. தனபாக்கியம் (28)
71. கோ. தவராசா (32)
72. லோ. சசிகரன் (26)
73. ம. வரதன் (24)
74. மா. கள்ளிப்பிள்ளை (52)
75. மு. சிவமணி (58)
76. மு. பாஸ்கரன் (29)
77. ம. குணராசா (31)
78. அ. யோகநாதன் (12)
79. ஆறுமுகம் (34)
80. சு. நந்தினி (-)
81. அ. யோகநாதன் (26)
82. பா. தவமணி (27)
83. செ. ஜெயகாந்தன் (24)
84. டி. பட்மசிறி (27)
85. க. சசிக்குமார் (17)
86. T. பூமணி (-)
87. T. மஞ்சுளாதேவி (-)
88. சு. கோமளாதேவி (32)
89. ச. கிளிராசா (50)
90. கு. காந்தன் (22)
91. வே. றாஜன் (35)
92. T. குமார் (07)
93. T. டயானா (15)
94. A வேல்முருகா (47)
95. ச. கிளியரசன் (50)
96. கு. சத்தியராசா (17)
97. கலாபவனம் (45)
98. சேரன் (-)
99. சி. குணமணி (25)
100. ஞா. கோபால் (19)
101. இ. தர்சினி (07)
102. ஜெ. மாணிக்கப்போடி (19)
103. ஜெ. சகுலேஸ்வரன் (21)
104. க. அஜந்தன் (15)
105. ளு. ஜெயகாந்தன் (21)
106. ளு. முகிருபறாச் (30)
107. ளு. சிவனேசன் (25)
108. ளு. தயாகரன் (29)
109. ச. மாணிக்கப்போடி (27)
110. செ.ஸ்ரீகாந்தராசா (17)
111. சி. நிறஞ்சன் (20)
112. சி. நித்தியானந்தம் (22)
113. வி. விஸ்வலிங்கம் (19)
114. விக்னேஸ்வரன் (-)
115. த. நிமலநாதன் (34)
116. வி. துரைசாமி (-)
117. த. விவேகானந்தன் (36)
118. வே. கதிர்காமத்தம்பி (55)
119. வி. யாழினி (13)
120. A. ரகுவரன் (17)
121. I. பவானி (23)
122. I டெனிஸ்சிவானந்தன் (27)
123. K. ஜெயானந்தி (16)
124. K. கிருபேஸ்வரன் (-)
125. K. நற்குணம் (33)
126. K. சரத்பாபு (18)
127. M . கழிப்பிள்ளை (52)
128. M தவராசா (34)
129. N. யோகஸ்வரன் (-)
130. N. ரவீந்திரராசா (-)
131. P. கமல் (17)
132. P. கிருஸ்ணபிள்ளை (56)
133. S. ஜீவாநந்தன் (31)
134. S. நந்தினி (13)
135. S. றஸ்யப்பிரியன் (-)
136. S. சந்திரிக்கா (17)
137. S. தவப்பிரியா (20)
138. T. தவராசா (-)
139. V. பாலகுமாரன் (19)
140. V. கதிர்காமத்தம்பி (51)
141. V. றணீஸ்வரன் (17)
142. அ. சுதர்சினி (17)
143. கா. சரஸ்வதி (17)
144. நா. றவீந்திரராசா (41)
145. றா. சாளினி (04)
146. ர. றாமச்சந்திரன் (30)
147. சு. மகேந்திரராசா (43)
148. சு. றாஜேஸ்வரன் (26)
149. தி. றேகன் (21)
150. A. பிரியா (-)
151. A. தமயந்தி (-)
152. V. தர்மலிங்கம் (-)
153. சேரன் (-)
154. சி. குணரட்ணம் (60)
155. சி. குணமணி (60)
156. வி. சுசிகரன் (10)
157. க. கோமளாதேவி (32)
158. A. வனிதா (-)
159. வே. றாஜன் (-)
160. ஆ. மேனா (10)
161. V. தர்மலிங்கம் (-)
162. சி. சந்திரன் (39)
163. சி. ச்நதிரமூர்த்தி (23)
164. சி. பாக்கியராஜா (30)
165. சி. இந்திரன் (46)
166. சி. விஜயா (34)
167. சு. கோணேஸ்வரன் (28)
168. சு. யுவந்தன் (10)
169. த. விறதறாஜ் (22)
170. த. பிள்ளையான் (51)
171. த. றஞ்சன் (24)
172. த. யோகேஸ்வரன் (27)
173. த. சுமதி (42)
174. த. சந்திரன் (20)
175. தி. தர்சிகா (11)
176. தி. தஸ்காந்தி (16)
177. வ. குணவதி (58)
178. வே. மனோகுமார் (28)
179. S. திலசிகா (09)
180. S. கோகுலவாணி (-)
181. S. சோதி (-)
182. S. கேமலதன் (09)
183. P. மயில்வாகனம் (-)
184. N. தீபன் (17)
185. M. நாகேஸ்வரன் (38)
186. கு. சத்தியராசா (17)
187. ஆனந்தஜோதி (24)
188. கலாபவனம் (450
189. T. சர்மிளா (-)
190. K. நிறுசாந்தினி (12)
191. கு. காந்தன் (22)
192. ஆனந்தஜோதி (24)
193. குணரட்ணம் (60)
194. வி. வசீகரன் (10)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# டிசம்பர் 28, 1999 அன்று மிக கொடூரமான ஒரு துன்புறுத்தல் ஈழத்து பெண் சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் என்ற பெண்ணுக்கு நிகழ்ந்தது

இந்த பெண் பலரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டுப் படுகொலை செய்யப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்ட தமிழ்ப் பெண் ஆவார். இவரை பாலியல் வன்புணர்வு செய்தவர்கள் சிறீலங்கா கடற்படையினர் இந்த கொடு மையை செய்தார்கள் என இந்த பகுதி மக்கள் உறுதியாக கூறுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டம், புங்குடுதீவில் சரவணபவானந்தக் குருக்கள் என்பவரது மனைவியும் இரண்டு பிள்ளை களின் தாயுமான 29 வயது சாரதாம்பாளின் இறந்த உடல் சருகுகளுக்கும் இலைகளுக்கும் கீழ் வல்லுறவுக்கு உள் ளாக்கப்பட்ட நிலையில் கிடந்ததை ஊர்மக்கள் கண்டு பிடித்தனர்.

இந்நிகழ்வு பலரையும் அதிர்ச்சி கொள்ள வைத்த பொழு தும் இன்றளவும் இதற்கு நீதி வழங்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (AHRC) அறிக்கையின் படி, உள்ளூர் இந்துக் கோயில் குரக் களின் மகளான 29 வயது சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் சிறீலங்கா கடற்படையினர் எனச் சந்தேகிக்கப் படுவோரால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புங்குடுதீவு என்ற இடத்தில் அவரது வீட்டில் இருந்து பலவந்தமாக இழுத்துச் செல்லப் பட்டு சிதைக்கப்பட்டார் என கூறப்படுகின்றது.

பன்னாட்டு மன்னிப்பு அவையின் அறிக்கையின் படி, சாரதாம்பாளின் வீடு கடற்படைத் தளத்தில் இருந்து 500 மீ தூரத்தில் அமைந்திருந்தது. அவரது தந்தையும், சகோ தரரும் கறுப்பு உடையில் வந்திருந்த பாதுகாப்பு அதிகாரி களால் வீட்டினுள் வைத்து கட்டப்பட்டது.

சாரதாம்பாளின் இறந்த உடல் வீட்டில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் உள்ள தரிசு நிலமொன்றில் அடுத்த நாள் கிடக் கக் கண்டுபிடிக்கப்பட்டது.

புங்குடுதீவிலும், யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்ற பொது மக்களின் ஆர்ப்பாட்டங்களை அடுத்து சாரதாம்பாளின் உடல் மருத்துவ ஆய்வுக்காக கொண்டு செல்லப்பட்டது.

உடலைப் பரிசோதித்த அரசு மருத்துவ அதிகாரி, பெண் ணின் உள்ளாடை அவரது வாயினுள் அடைக்கப்பட்டதில் மூச்சுத் திணறி இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

இறப்புக்கு முன்னர் அவர் பலவந்தமாக பாலியல் வன் முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அவரது அறிக்கை தெரிவித்தது.

சாரதாம்பாளின் இறுதி நிகழ்வுக்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து மனித உரிமை ஆர்வலர்கள் பலர் சென்று உரை நிகழ்த்தினர்.

அன்று அரசுத்தலைவராக இருந்த சந்திரிக்கா குமாரதுங்க 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விசாரணை ஒன் றுக்கு உத்தரவிட்டார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கவனிக்கும் ஐநா சிறப்புப் பிரதிநிதி ராதிகா குமாரசாமி சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட் டுகளை விசாரிப்பதற்கு சிறீலங்கா அரசிடம் இருந்து பெரு மளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித் தார்.

டிசம்பர் 1999 பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சிறிதளவு முயற்சியே மேற்கொள்ளப்பட் டதாக அவர் தெரிவித்திருந்தார்.

தமது வீட்டுக்கு வந்திருந்த கடற்படையினரின் ஆளடை யாளத்தை வெளியிடக் கூடாதென சாரதாம்பாளின் தந்தையும் சகோதரரும் எச்சரிக்கப்பட்டதாக பன்னாட்டு மன்னிப்பு அவை தெரிவித்துள்ளது.

சிறீலங்கா காவல்துறையின் புலன்விசாரணைத் திணைக் களத்தின் தலைவர் வெளியிட்ட அறிக்கையில்,

“சகோதரர் தமது வீட்டுக்கு வந்திருந்த நால்வரின் ஆளடை யாளத்தை நிரூபிக்கத் தவறி விட்டார்”. எனக் கூறினார்.

குற்றம் சுமத்தப்பட்ட கடற்படை அதிகாரிகள் வேறு இடங் களுக்குப் பணி மாற்றம் செய்யப்பட்டதாக பன்னாட்டு மன் னிப்பு அவை தனது அறிக்கையில் தெரிவித்தது.

சாரதாம்பாளின் பாலியல் வன்புணர்வு மற்றும் படு கொலை வழக்கில் சாட்சியங்கள் எவையும் சமர்ப்பிக்கப் படாதமையால், வழக்கைத் தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் மே 2001 இல் விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்தது.

இதே போல் கிருஷாந்தி குமாரசுவாமி, இளையதம்பி தர்சினி, கோணேஸ்வரி முருகேசபிள்ளை என பல தமிழ் பெண்களின் கொடூரமான படுகொலைகள் விசாரிக்கப் பட்டோ நீதி வேண்டியோ உண்மைகளை உலகுக்கு எடுத்து சொல்லாமலே மண்ணுக்குள் கொடும் துயரத்தை புதைத்து ஊமையாய் இருக்கின்றது...

28.12.1999




## சாரதாம்பாள் பாலியல் வன்முறையும் படுகொலையும்

சாரதாம்பாள் மீது படையினரின் பாலியல் வன்முறையும் படுகொலையும் யாழ் புங்குடுதீவில் சரவணபவானந்தக் குருக்கள் என்பவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளின் தாயுமான 29 வயதுடைய சாரதாம்பாள் சிறிலங்கா கடற்படையினரால் தனது வீட்டில் இருந்து பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் சாரதாம்பாளின் வீடு கடற்படைத் தளத்தில் இருந்து 500 மீ தூரத்தில் அமைந்திருந்தது. அவரது தந்தையும், சகோதரரும் கறுப்பு உடையில் வந்திருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் வீட்டினுள் வைத்து கட்டப்பட்டுள்ளனர். சாரதாம்பாளின் இறந்த உடல் கடற்படையின் முகாமின் அருகில் சருகுகளுக்கும் இலைகளுக்கும் கீழிருந்து ஊர்மக்களால் கண்டறியப்பட்டது. உடலைப் பரிசோதித்த அரசு மருத்துவ அதிகாரி, பெண்ணின் உள்ளாடை அவரது வாயினுள் திணிக்கப்பட்டதில் மூச்சுத் திணறி இறப்பு ஏற்பட்டதாகத் தெரிவித்தார். இறப்புக்கு முன்னர் அவர் பலவந்தமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்தார். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கவனிக்கும் ஐநாவின் சிறப்புப் பிரதிநிதியான ராதிகா குமாரசாமி இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு இலங்கை அரசிடம் இருந்து பெருமளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார். சிங்கள அரசு விசாரணைக்குழுவை அமைத்தது. சாரதாம்பாள் மீதான பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை வழக்கில் சாட்சியங்கள் எவையும் சமர்ப்பிக்கப்படாதமையால், வழக்கைத் தொடர முடியாது என சிறிலற்கா சட்டமா அதிபர் திணைக்களம் வழமைபோல் மே 2001 இல் விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்தது.



# கிளிநொச்சிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் பொது மக்கள் பலி 17.12.2008

வடக்கச்சியில் உள்ள ஹட்சன் சாலையில் உள்ள தகரப்-பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள இடம்பெயர்ந்தோர் குடிசைக்குள் தூங்கிக் கொண்டிருந்த 5 மாதக் குழந்தை, சனிக்கிழமை காலை 9:30 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தின் (SLA) பீரங்கித் தாக்குதலால் தலை துண்டிக்கப் பட்டது.



இடம்பெயர்ந்தோர் குடியிருப்பை குறிவைத்து நடத்தப் பட்ட பீரங்கித் தாக்குதலில் குழந்தையின் 26 வயது தாய் காயமடைந்தார். இதற்கிடையில், மரவள்ளிக்கிழங்கு வேர்களை அகற்றுவதற்காக கிளிநொச்சி நகரத்தின் புறநகர்ப் பகுதியான கனகபுரத்தில் உள்ள தங்கள் விவசாய நிலங்களுக்குச் சென்ற இரண்டு ஆண்கள் காலை 11:45 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டனர். 17 வயது இளைஞன் ஒருவர் ஷெல் தாக்குதலில் காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினார்.

வட்டக்கச்சியில் இலங்கை ராணுவத்தினரின் எறிகணை தாக்குதலில் 5 மாத குழந்தை கொல்லப்பட்டது. கொல்லப்பட்ட குழந்தை ஜெயரூபன் அஜந்தன். எறிகணை தாக்குதலில் காயமடைந்த அவரது தாயார் 26 வயது ஜான்சி ராணி ஜெயரூபன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர்கள் பெரியபண்டிவிரிச்சானில் இருந்து வட்டக்கச்சிக்கு இடம்பெயர்ந்தவர்கள்.

கனகபுரத்தில் கொல்லப்பட்ட ஆண்கள் கிளிநொச்சியைச் சேர்ந்த 41 வயது பாலையா புலேந்திரன், விசுவமடுவுக்கு இடம் பெயர்ந்தவர் மற்றும் பல்லவராயன்காட்டில் இருந்து விசுவமடுவுக்கு இடம்பெயர்ந்த 34 வயது கிருஷ்ணன் சுதா என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.





பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் குடும்பங்களைப் பாதுகாக்க பணம் சம்பாதிக்கும் முயற்சியில் கனகபுரத்தில் உள்ள விவசாய நிலங்களில் மரவள்ளிக்கிழங்கு வேர்களை வெட்டி எடுக்கச் சென்றிருந்தனர்.

கனகபுரத்தில் காயமடைந்த இளைஞர் புளியம்பொக்கணையில் உள்ள பெரியகுளத்தைச் சேர்ந்த ஜெயகரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

கனகபுரத்தில் கொல்லப்பட்ட இரண்டு ஆண்களின் சடலங்கள் கிளிநொச்சி நகர மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு தர்மபுரத்திற்கு மாற்றப்பட்டன.

இதற்கிடையில், விமானப்படை (SLAF) போர் விமானங்கள் வட்டக்கச்சி மற்றும் பரந்தன் பகுதிகளில் 6 முறை குண்டுவீச்சு நடத்தியது.



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**





# வன்னி பரந்தன் பகுதியில் சிறீலங்கா விமானப்படை கொத்து குண்டு வீச்சு 24.12.2008

கிறிஸ்துமஸுக்கு ஒரு நாள் முன்பு, செவ்வாய்க்கிழமை இரவு 10:30 மணியளவில், பரந்தன் முல்லைத்தீவு சாலையில், பரந்தன் சந்திப்பிலிருந்து 600 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஹோலி கிராஸ் கான்வென்ட் மீது சிறீலங்கா விமானப்படை (SLAF) குண்டுவீச்சு நடத்தியது. தாக்கப்பட்ட வளாகத்தின் கூரையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் அடையாளங்கள் இருப்பதைக் கணாப்பட்டது. அருகிலுள்ள தேவாலயமும் சேதம் அடைந்தது. குண்டுவீச்சில் கொத்து குண்டுகளை விமானப்படை பயன்படுத்தியதாக, அங்கிருந்து தப்பி ஓடிய குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். கான்வென்டிலிருந்து சில மீட்டர் தொலைவில் உள்ள ஒரு மந்தையைச் சேர்ந்த 85 பசுக்கள் தாக்குதலில் கொல்லப்பட்டன.



























சந்திப்புக்கும் கான்வென்டுக்கும் இடையில் அமைந்துள்ள காரைச்சி வடக்கு கூட்டுறவு சங்க கட்டிடத்தையும் விமானப்படை குண்டுவீச்சுக்காரர்கள் தாக்கினர், இதனால் மீதமுள்ள பொது மக்கள் அந்த பகுதியை விட்டு வெளியேறினர்.

சிறீலங்கா விமானப்படையினர் (SLAF) ஐந்துக்கும் மேற்பட்ட முறை பரந்தன் மீது குண்டுவீச்சு நடத்தியதால், கான்வென்டுக்கு அருகில் வசிக்கும் பொதுமக்கள் அந்த பகுதியை விட்டு வெளியேறினர். இந்த கண்மூடித்தனமான குண்டுவீச்சு பரந்தன் மற்றும் குமாரபுரத்தில் உள்ள கடைகள் மற்றும் பிற வணிக நிறுவனங்களையும் குறிவைத்தது.

செவ்வாய்க்கிழமை இரவு மூன்று முறையும், புதன்கிழமை காலை இரண்டு முறையும், காலை 7:30 மணி மற்றும் காலை 9:00 மணி வரை பரந்தனில் சிறீலங்கா விமானப்படையினர் குண்டுவீச்சு நடத்தினர்.

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர்

# அகதிகள் குடியிருப்புகள் மீது சிறீலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு – 17.12.2008

17.12.2008 - புதன்கிழமை, சிறீலங்கா விமானப்படை (SLAF) போர் விமானங்கள் வட்டக்கச்சியில் உள்ள அகதிகள் குடியிருப்புகள் மீது நான்கு முறை குண்டுவீச்சு நடத்தியதில், 5 மாத குழந்தை மற்றும் 25 வயது ஆண் ஒருவர் கொல்லப்பட்டனர், மேலும் மூன்று குழந்தைகள் உட்பட 13 அகதிகள் காயமடைந்தனர். கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண எல்லைகளில் சிறீலங்கா இராணுவம் (SLA) நடத்திய சமீபத்திய தாக்குதல் நடவடிக்கையில் அதிக உயிரிழப்புகளை அடுத்து, பொதுமக்கள் இலக்குகள் மீது விமானப்படை குண்டுவீச்சு நடத்தப்பட்டது. இரண்டாவது தாக்குதல் வட்டக்கச்சியில் உள்ள மருத்துவமனைக்கு அருகில் 250 மீட்டர் தொலைவில் நடந்ததாக அறிவிக்கப்பட்டது. இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்புகள் மீது மீண்டும் மீண்டும் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல்களை, போர்க்களத்தில் பெரும் உயிரிழப்புகளைச் சந்தித்த சிறீலங்காப் படைகளால் “கூட்டுத் தண்டனை” என்று வன்னியில் உள்ள பொதுமக்கள் விளக்கினர்.





அகதிகள் குடியிருப்பு பகுதியில் கண்மூடித்தனமான குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 5 மாத குழந்தை ரஜிதன் ரவிசங்கர் என மருத்துவ வட்டாரங்கள் அடையாளம் கண்டுள்ளன. குண்டு வீச்சில் கொல்லப்பட்ட ஆண் ஜெயசுந்தரம் செல்வரத்தினம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முதல் தாக்குதல் காலை 7:30 மணிக்கு வட்டக்கச்சியில் உள்ள ஹட்சன் சாலையில் நடந்தது. காலை 10:00 மணிக்கு வட்டக்கச்சியில் உள்ள மருத்துவமனைக்கு அருகில் நடந்த இரண்டாவது தாக்குதலில் இரண்டு குழந்தைகள் காயமடைந்தனர். 10 வயது மிதுஷன் ஸ்ரீரஞ்சன் என்ற ஒரு குழந்தையின் கால் மருத்துவமனையில் துண்டிக்கப்பட்டது. மேலும் அவரது 8 வயது சகோதரி சிந்துஜா ஸ்ரீரஞ்சனின் வயிற்றில் பலத்த காயம் ஏற்பட்டது.





ஜோசப் தர்மாதேவி - 15, நல்லதம்பி நந்தகுமார்-44, மகேந்திரன் ரவிசங்கர் - 36, யோகராசா யோகேஸ்வரன் -30, ரவிசங்கர் சுஜானிதி - 28, ராஜ மகேந்திரன் - 59, சின்னத்தம்பி நன்னிகுணத்தன், லக்ஷ்மி - 5, ஜோசப் தர்மாதேவி, நல்லதம்பி நந்தகுமார -44, யோகராசா யோகேஸ்வரன், என தர்மபுரம் வைத்தியசாலையின் மருத்துவ வட்டாரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பாலசுப்ரமணியம் தங்கமலர் - 55, கரன் - 32.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தெற்கில் உள்ள வட்டக்கச்சி, ஒடிசுட்டான் மற்றும் முள்ளியவலை ஆகிய பகுதிகளில் உள்ள சிவிலியன் குடியிருப்புகளை இலக்கு வைத்து சிறீலங்கா இராணுவம் (SLA) அண்மைய நாட்களில் பீரங்கித் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

திங்கட்கிழமை, முல்லைத்தீவு பொது மருத்துவமனையின் மீது பீரங்கி குண்டுகள் வீசப்பட்டன, இதில் இரண்டு நோயாளிகளுக்கு லேசான காயம் ஏற்பட்டதாக மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் வி. சண்முகராஜா தெரிவித்தார். அருகிலுள்ள வார்டில் இருந்த பல நோயாளிகளும் ஊழியர்களும் கட்டிடத்தின் ஒரு பகுதியையும் மருத்துவ உபகரணங்களையும் அழித்த குண்டுவெடிப்பிலிருந்து மயிரிழையில் தப்பினர்.











# கிளிநொச்சி மருத்துவமனை மீது சிறீலங்கா இராணுவம் பீரங்கித் தாக்குதல் 26.12.2008

கிறிஸ்துமஸ் தினத்தன்று (26.12.2008) இரவு 7:30 மணியளவில் கிளிநொச்சி பொது மருத்துவமனை வளாகத் திற்குள் சிறீலங்கா இராணுவத்தின் இரண்டு பீரங்கி குண்டுகள் விழுந்தன. இதில் மூன்று மருத்துவமனை கட்டிடங்கள் சேத மடைந்தன. தாய்மார்களுக்கான புதிதாகப் பிறந்த குழந்தை செவிலியர் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு மற்றும் மருத்துவ மனை வரவேற்பு கட்டிடத்தின் கண்ணாடி பலகைகள் தாக்குத லில் சேதமடைந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரி வித்தன.








உள்ளூரில் உள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் மூலம் பலமுறை கோரிக்கைகள் இருந்தபோதிலும், போரால் பாதிக்கப்பட்ட மக்களின் முக்கியமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் மருத்துவமனையை குறிவைத்து சிறீலங்கா இரா ணுவம் சர்வதேச விதிமுறைகளை மீறி வருவதாக மருத்துவ மனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு நாட்களில் சிறீலங்கா இராணுவத்தால் வீசப்பட்ட எறிகணை தாக்குதல்கள் கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட கல்விச் செயலகக் கட்டிடங்கள் உட்பட A9 இல் அமைந்துள்ள கல்வி நிறுவனங்களுக்கு மேலும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

முல்லைத்தீவு மருத்துவமனையும் கடந்த வாரம் 15, 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் மூன்று நாட்களில் சிறீலங்கா இராணு வத்தால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியது. இது மருத்துவமனை கட்டிடங்களுக்கு சேதத்தை ஏற்படுத்தியதுடன், இரண்டு நோயாளிகள் மற்றும் இரண்டு மருத்துவ ஊழியர் களையும் காயப்படுத்தியது.

நான்காவது ஜெனீவா மாநாட்டின் பிரிவு 18, காயமடைந் தவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள், பலவீனமானவர்கள் மற்றும் மகப்பேறு வழக்குகளுக்கு சிகிச்சை அளிக்க ஒழுங் கமைக்கப்பட்ட சிவில் மருத்துவமனைகள் எந்த சூழ்நிலை யிலும் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடாது, ஆனால் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரால் எப்போதும் மதிக்கப்பட்டு பாதுகாக்கப் பட வேண்டும் என்று கூறுகிறது.

இலங்கை (சிலோன்) முதலாவது, இரண்டாவது மற்றும் மூன் றாவது ஜெனீவா உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டுள்ளது. மேலும் 1949 ஆம் ஆண்டின் நான்காவது ஜெனீவா உடன் படிக்கையை, 23.02.1959 அன்று அதனுடன் இணைத்துக் கொண்டு அங்கீகரித்தது.


















# சிறீலங்கா விமானப்படை கிளி. கிறிஸ்தவ சிறுமியர் இல்லம் மீது தாக்குதல் 26.12.2008

கிளிநொச்சி நகரத்தில் A9 நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந் துள்ள அனாதை மற்றும் ஊனமுற்ற சிறுமிகளுக்கான கிறிஸ் தவ மையமும் மையமுமான "கருணா நிலையம்" மீது சிறீலங்கா விமானப்படை குண்டுவீச்சுக்காரர்கள் கிறிஸ்துமஸ் தினத்தன்று (26.11.2008) மாலை 4:30 மணியளவில் தாக்குதல் நடத்தியதாக கிளிநொச்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அங்கு வசிக்கும் சிறுமிகள் வேறு கட்டிடத்திற்கு மாற்றப்பட் டுள்ளனர், தாக்குதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று நிர்வாகிகள் தெரிவித்தனர்.









அந்தப் பகுதி "பாதுகாப்பு மண்டலமாக" நியமிக்கப்பட்டது. மேலும் அவர்களின் நிறுவனம் ஏன் சிறீலங்கா இராணுவத் தின் இலக்காக மாறியது என்பதில் அவர்கள் குழப்பமடைந் துள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

கருணா நிலையம் யாழ்ப்பாண கத்தோலிக்க மறைமாவட்டத் தால் நிர்வகிக்கப்படுகிறது.











# முரசுமோட்டைப் படுகொலை 31.12.2008

பரந்தன் - முல்லைத்தீவு சாலையில் உள்ள முரசுமோட்டையில் உள்ள முருகானந்தா பள்ளிக்கு அருகிலுள்ள பொதுமக்கள் குடியிருப்பு மீது சிறீலங்கா விமானப்படை குண்டுவீச்சு தாக்குதல் நடத்தினர், இதில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களும் ஒரு ஆணும் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். படுகாயமடைந்த மற்றொருவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ஒரு தம்பதி உட்பட 16 பொதுமக்கள் காயமடைந்தனர். இந்த தாக்குதல் புதன்கிழமை (31.12.2008) காலை 8:00 மணியளவில் முரசுமோட்டையில் உள்ள மூன்று பொதுமக்கள் குடியிருப்புகளை குறிவைத்துள்ளது. தப்பியோடிய பொதுமக்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் குடிசைகள், ஐ.சி.ஆர்.சி கரைச்சி கிளை அலுவலகத்திற்கு அருகில், ஒரு பள்ளி, கோயில் மற்றும் விவசாய நிலங்கள் மீது கண்மூடித்தனமான குண்டுவீச்சு நடத்தப்பட்டதாக பார்வையாளர்கள் தெரிவித்தனர்.









மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் காயங்களுடன் தப்பினார், ஆனால் அவரது பைக் சாலையில் இருந்து 70 மீட்டர் தொலைவில் வீசப்பட்டது.

சிறீலங்கா விமானத் தாக்குதல் முருகானந்த பள்ளிக்குப் பின்னால் உள்ள பொதுமக்கள் வீடுகளையும், செல்லையா கடை சந்திப்பில் ஒன்று மற்றும் முரசுமோட்டையில் உள்ள சீத்துக் கண்டி அம்மன் கோயிலுக்குப் பின்னால் உள்ள இரண்டு அகதிகள் குடியிருப்புகளையும் குறிவைத்தது. சில மணி நேரங்களுக்குப் பிறகு, சிறீலங்கா விமானப்படை போர் விமானங்கள் அதே கிராமத்திற்குத் திரும்பி குண்டுகளை வீசின, ஒரு மாடு மேய்ப்பவர் தனது பசுக்களுடன் பரந்தனில் இருந்து தனது சொந்த கிராமமான தர்மபுரத்திற்குச் சென்று கொண்டிருந்த போது. இரண்டாவது குண்டுவெடிப்பில் மேலும் இருவர் காயமடைந்தனர்.

இரண்டாவது குண்டுவெடிப்பில் காயமடைந்த மாடு மேய்ப்பவர் 24 வயதான மாயலகு விஜயரத்னம் என அடையாளம் காணப்பட்டார். காயமடைந்த மற்ற இரண்டு பொதுமக்கள் நடராசா தவனேசன், 36, மற்றும் கொலம்பஸ், 24, ஆவர்.

இதற்கிடையில், 2வது மைல் போஸ்டில் உள்ள குடியிருப்புகளை குறிவைத்து சிறீலங்கா இராணுவம் (SLA) பீரங்கி குண்டுகளை வீசியதில் 29 வயதான டி. சசிகரன் என்ற ஆண் படுகாயமடைந்தார்.

24 வயதான ஜீடா மார்கரத் ஆசீர்வாதம், 55 வயதான அசர்வாதம் மரியம்மா மற்றும் மார்கண்டு சிவானந்தன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தர்மபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட காயமடைந்தவர்களில் 52 வயதான சந்திரபோஸ் மற்றும் 37 வயதான கண்ணன் ஆகிய இருவரும் தீவிர சிகிச்சைப் பிரிவில் உயிரிழந்தனர்.

மூன்று பிரதேசங்கள் மீதான முதலாவது குண்டுத் தாக்குதலில் காயமடைந்த பொதுமக்கள் ஐ.நிர்மலன் - 15, எஸ். ரகுலன் - 21, அருமைத்துறை ஜெசினால்ட் -26, ராமச்சந்திரன் குமணன் - 30, செல்வராஜா குலேந்திரன் - 33, கே.ஜெயஸ்ரீ - 38, சோமசுந்தரம், சந்திரக் - 4, சந்திரகுமார் - 5 வெள்ளைச்சாமி அன்னக்கொடி - 49, எஸ்.பாலசுந்தரம் - 51, பழனியப்பன் சுப்ரமணியம் - 52, ரஞ்சிதாமலர் - 58, சரவண பவானந்தன் - 62.

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

































# இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம் 10.12.2025

–பா.அரியநேத்திரன்–

அனைத்துலக மனித உரிமைகள் தினமானது 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் திகதி முதல் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 10ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இத்தினமானது அனைத்து மக்களினதும் சௌபாக்கியம், நீதி, சமத்துவம், கௌரவம், பங்கேற்பு, பொறுப்புக்கூறல் போன்ற நீதி தொடர்புபட்ட விடயங்களை பிரதான நோக்காகக் கொண்டு அனுஷ்டிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் என்பவற்றுள் அடங்குவதாகக் கருதப்படும் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுள், வாழும் உரிமை, சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், சட்டத்தின் முன் சமநிலை, நகர்வுச் சுதந்திரம், பண்பாட்டு உரிமை, உணவுக்கான உரிமை, கல்வி உரிமையென்பன முக்கியமானவை.

ஆனால் இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழ்மக்களுக்கு இவைகளில் எந்த உரிமை உண்டு என்பதை இன்றைய நாளில் சிந்திப்போம்...!




*பதினாறு ஆண்டுகளாய் தேடுகிறோம்.!*
*பாதகரால் கடத்தி சென்ற பிள்ளைகளை..!*
*ஆண்டு தோறும் மனித உரிமை தினத்தில்..!*
*அழுதுகொண்டு அனைத்துலக நீதி கேட்டோம்!*

*ஆட்சியாளர் மாறினாலும் அவலங்கள் தீரவில்லை!*
*சூழ்ச்சிகளும் சுரண்டல்களும் தொடர்கிறது!*
*காட்சிகள் எல்லாமே பூச்சியமாய் மாறுகிறது!*
*காணாமல் போனோர்க்கும் அநீதி தொடர்கிறது!*

*உலகமும் எமை திரும்பிப்பார்க்கவில்லை.!*
*உயிர்களுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை.!*
*உள்ளநாளெல்லாம் தவிர்க்கின்றோம்.!*
*உரிமைக்காய் பணிகளை தொடர்கிறோம்!*



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**




JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Free! ESTIMATES
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com

# தொல்லியல் சுவடுகள்...



# “வரலாற்றுப் பதிவுகளே ஒரு சமூதாயத்தின் கண்ணாடி”

## *பழம் பாலி நகரத்தைப் பக்குவப்படுத்தல்*

எஸ். ஆறுமுகம் BSc (Lond) / MICE, MIWE
(நீர்ப்பாசனப் பகுதி அதிபர்) சிறீலங்கா மார்ச் 1957



மங்களம் மலரும் மாங்குளம் என்னும் இடத்திற்குத் தென் மேல் திசையில் சற்றேறக் குறையப் பத்து மைல் தூரத்தில் காடடர்ந்த இடத்தில் ஓர் சீரழிந்த குளம் உண்டு. அதன் பெயர் இப்பொழுது “வவுனிக் குளம்” என்பதாகும். இந்தக் குளம் எப் பொழுது, யாரால் கட்டப்பட்டது என்பன இன்று எவருக்கும் தெரியாத மறை பொருளாக இருக்கின்றன.

இதைப்பற்றி யாம் முதன் முதல் கேள்விப்படுவது மகாவம்சம் (Mahavamsa XXVIII. 39) எனும் நூலிலாகும். அதில் கூறப்படு வதிலிருந்து இக்குளம் கி.மு. 3ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த எல்லாள மன்னன் காலத்தில் அமைக்கப்பட்டிருக் கலாம் என பொறித்துறை ஆராய்ச்சியாளர்களாகிய ஹென்ரி பாக்கரும் (Henry Parker) அவரையொட்டி புரோகியரும் (R. L. Brohier) அனுமானித்திருக்கின்றனர்.

பின் வசபன் செய்கை பற்றிப் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டிலும் இக் குளத்தின் பெயர் விளங்குகின்றது. அதன் பின் ஆங்கிலேய இஞ்சினியர்களின் அறிக்கைகளில் 1887 ஆம் ஆண்டு தொடக் கம் இக் குளம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

### ஊர்ச் சிறப்பு

இக்குளம் இருக்கும் இடத்தின் அயல் எல்லாம் பார்ப்பார்கள் வெளியென்றும், மன்னர் குளம் என்றும், தட்டான் குளம் என் றும், பாணன்கமம் என்றும், வாணன் கமம் என்றும் இன்னும் இவ்வகைத்தான பெயர்களைக் கொண்ட கிராமங்களாய் இருந் திருக்கின்றன. இங்குள்ள காட்டில் ஒரு பகுதி கோவில் காடு என்ற பெயருடையதாய் இருக்கின்றது. கோவில்கள் இருந்ததற் குப் பல சான்றுகள் இன்றும் காணப்படுகின்றன.

இவ்வாறு கோவிலும் குளமும் பார்ப்பார், மன்னர், தட்டார், பாணர், வாணர், ஆதியாம் பற்பல குலத்தாரும் வாழ்ந்த இடங் களும் இருந்து வந்தமையால் இங்கு ஒரு நகரம் இருந்திருக்க வேண்டும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளி திற் புலனாகும். ஆராய்ந்து பார்க்குமிடத்து இது முன்பு சொன்ன வசபன் கல்வெட்டில் சொல்லப்படுகின்றது. இந்த நகரத்திற்கு அக்காலத்தில் பாலி நகரம் என்ற பெயர் வழங்கியிருக்கின்றது.

இப்பொழுதும் இவ்விடத்தில் ஓடும் ஆறு பாலி ஆறு என வழங் கப்படுகின்றது. கோயிலை நடுநாயகமாகக் கொண்டு நகரமைக் கும் முறை பன்னெடுங்காலமாகத் தமிழால் கையாளப்பட்டு வருகின்றது.

இப்பாலியாற்றின் அருகிலுள்ளதும், சரித்திரத்திற்கும் எட் டாததாய் இருக்கின்றதும், இலங்கையில் முதன் முதல் கட்டப்பட் டதெனப் படுவதுமாய “பாலிக் குளம்” இன்று வன்னிய அவனி புரக்கும் நீர்த்தேக்கமாகையினால் வவுனிக் குளம் என வழங்குகின்றது போலும்.

“கோவிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்” என்ற சமய குரவர் கூற்றுக்கு இலட்சியமாய் இருந்தார்கள் நம் பாலி நகரார். இன்று அக்கோவில் ஸ்தலம் யாவும் கோவில்காடு எனக் கிடக் கின்றது, அக்கோவிற்காட்டில் இன்று பல விக்கிரகங்கள் உடைந்து கிடப்பதைக் காணலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த, வவுனிக் குளம் என்னும் பாலி வாளித் தடாகத்தை, இப்போது நீர்ப்பாசன இலாகா எஞ்சினியர்கள் புதுக்குவதற்கு முயலுகின் றனர்.

### அபிவிருத்திச் சரித்திரக் குறிப்புகள்

பழைய நீர்த்தேக்கத்தில் தற்போதுள்ள மண் அணைக்கட் டுகளில் ஆங்காங்கே காணப்படும் உடை கடவான்களைக் கட்டி 88 சதுர மைல் பரப்பு வடித்தரையினின்று வழியும் நீர், தடா கத்தில் சேமிக்கப்படும். இந்த அணைக்கட்டு வரம்பு இரண்டரை (2 1/2) மைல் நீளத்திற்கு மேலுடையதாய் இரு அந்தங்களும் உயர்ந்த மேடுகளில் தொடுக்க; இணைக்கும், 700 அடி அகல சீமென்றுக் கொன்கிரீட் வரம்பு மிதவையால் பாலியாற்றின் மிகுதி நீர் பாயும். கடல் மட்டத்திலிருந்து 142 அடி உயாத்திற்கு நீர் தேங்கி நிற்கும். 4 அடி அகலமுள்ள இரு நீர் வடிமதகுகளால் நீர்ப்பாசனத் தேவைக்கு வேண்டிய நீர் பெறப்படும். இம்மத குகள் ஆற்றின் இடது கரைப் பிரதேசத்திற்கும் வலது கரைப் பிரதேசத்திற்கும் நீரளிக்கும், 30,000 ஏக்கர் அடி நீர் வாவியில் சேமிக்கப் பெறும்.

இப் புதுக்குதற் திட்டம் வலது கரையோரக் குளக்கட்டிலிருந்து துணுக்காய் வரையும் உள்ள பிரதேசத்தில் விளைவுக்கு நீர ளித்து, விவசாயிகள், குடியேற்றப் பிரதேசமாகும், இடது கரை யோரம் குளக்கட்டிலிருந்து துணுக்காய் பூவரசங்குளம் றோட்டு வரை பரந்த பிரதேசத்தில் விளைவுக்கு நீரளித்து நடுத்தர வகுப் பினர் புலப்பிரதேசமாகும்.

வவுனிக்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கம்



வவுனிக்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தர்சிலை



“ நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும்” என்றார் ஔவையார்.

நன்றி: எஸ். ஆறுமுகம் BSc (Lond) / MICE, MIWE
(நீர்ப்பாசனப் பகுதி அதிபர்)

தரவு: ஈழத்து வரலாறும் தொல்லியலும் – முகநூல்

# வங்கதேச முன்னாள் பிரதமருக்கு மரண தண்டனை!

# வரலாற்றில் மரண தண்டனை பெற்ற உலகத் தலைவர்கள்

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

04.12.2025

மனித குலத்திற்கு எதிராக செயற்பட்டதாக, வங்தேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவிற்கு மரண தண்டனை விதித்து சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கி உள்ளது.



## மாணவர்கள் போராட்டம் :

வங்கதேசத்தில் கடந்த ஆண்டு ஜுலையில், இட ஒதுக்கீடுக்கு எதிராக நடந்த மாணவர் போராட்டத்தில், 1,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட வழக்கில், முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதித்து, அந்நாட்டின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் தீர்ப்பளித்துள்ளது. கடந்தாண்டு ஜுனில், சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டம் அமலுக்கு வந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர். சுதந்திர போராட்ட தியாகிகளின் இட ஒதுக்கீட்டை எதிர்ப்பவர்கள் தேச துரோகிகள் என, அப்போது பிரதமராக இருந்த அவாமி லீக் கட்சியின் ஷேக் ஹசீனா தெரிவித்தார்.

இதனால், ஆத்திரமடைந்த மாணவர்கள் 2024 ஜுலையில் நாடு முழுதும் போராட்டத்தை விரிவுபடுத்தினர். இந்த போராட்டங்களை தடுக்க போலீசார், பாதுகாப்பு படையினர் மற்றும் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியினர் முயன்றதால், போராட்டம் வன்முறையாக மாறியது.



தலைநகர் டாக்காவிலும், பிற நகரங்களிலும் போராட்டக்காரர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் இடையே மோதல் ஏற்பட்டது. டாக்காவில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலர் கொல்லப்பட்டனர். போராட்டக்காரர்களை கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால், கலவரம் மேலும் தீவிரமடைந்தது.

நீண்ட காலமாக இட ஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் நடாத்தி வந்தனர். ஆனால் இம்முறையே பெரிய வன்முறையாக வெடித்தது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த வன்முறையே பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவின் தலைமையிலான அரசுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

மாணவர் போராட்ட நிலைமையை கட்டுப்படுத்த முடியாத நிலையில், கடந்த ஆண்டு ஆகஸ்ட் ஐந்தில் ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை ராஜினாமா செய்து, இந்திய நாட்டுக்கு தப்பி வந்தார். ஜுலை முதல் ஆகஸ்ட் வரை நடந்த கலவரத்தில், 1,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக வங்கதேச சுகாதார துறையும், 1,400க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக ஐ.நா., மனித உரிமைகள் கமிஷனும் கூறின.

ஷேக் ஹசீனா பதவியை விட்டு விலகியதை தொடர்ந்து நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது. புதிய அரசு அமைந்த பிறகு ஹசீனாவுக்கு எதிராக இனப்படுகொலை, ஊழல் உள்பட பல வழக்குகளை பதிவு செய்துள்ளது. இட ஒதுக்கீட்டு கொள்கைக்கு எதிராக போராடுவோரை சுட்டு கொல்ல ஹசீனா உத்தரவிட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பான ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பில் ஷேக் ஹசீனா, முன்னாள் உள்துறை அமைச்சர், முன்னாள் பொலிஸ் ஐஜி ஆகியோர் மீது மனித குலத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கு தலைநகர் டாக்காவில் உள்ள சர்வதேச குற்ற தீர்ப்பாயம் விசாரித்து வந்தது. இந்த நிலையில் மனித குலத்துக்கு எதிராகக் குற்றம் புரிந்த வழக்கில் வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா குற்றவாளி என சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியது. மேலும் மொத்தம் 5 குற்றச்சாட்டுகள் ஷேக் ஹசீனா மீது வைக்கப்பட்ட நிலையில் 3 குற்றச்சாட்டுகளில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



## மிக மோசமான கலவரம்:

வங்கதேச வரலாற்றில் நடந்த மிக மோசமான கலவரங்களில் ஒன்றாக இது அமைந்தது. ஷேக் ஹசீனா நாட்டை விட்டு தப்பி ஓடிய பின், நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது. இந்த கலவரம் குறித்து விசாரிக்க, வங்கதேச சர்வதேச குற்றவியல் தீர்பாயம் என்ற சிறப்பு நீதிமன்றத்தை, முகமது யூனுஸ் அரசு அமைத்தது. அதில், ஷேக் ஹசீனா மனித குலத்திற்கு எதிராக குற்றம் புரிந்தவர் என, அரசு சார்பில் வாதிடப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பு அண்மையில் வழங்கப்பட்டது. 2024 ஜுலை போராட்டத்தில் 1,400க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட் டதற்கு ஷேக் ஹசீனாவே பொறுப்பு. அவரே இந்த படுகொலைக ளுக்கு மூளையாகச் செயல்பட்டவர். இது, சந்தேகத்திற்கு இட மின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டதால், அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது என தெரிவித்தனர்.

## இந்தியா ஷேக் ஹசீனாவை ஒப்படைக்குமா?

ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து, அவரை ஒப்படைக்கும்படி, இந்திய அரசிடம் வங்கதேச அரசு கோரியுள்ளது. இந்நிலையில் தீர்ப்பு குறித்து இந்திய வெளி யுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், நெருங்கிய நாடான வங்கதேசத்தில், மக்களின் அமைதி, ஜனநாயகம், நிலைத்தன்மை போன்ற நலன்களுக்கு இந்தியா எப்போது உறுதுணையாக இருக்கும். அதற்காக அந் நாட்டுடன் இணைந்து செயல் படுவோம் என கூறப்பட்டுள்ளது.

ஆனால், தீர்ப்பு குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. ஹசீனாவை ஒப்படைப்பது தொடர்பாகவும் இந்திய மத்திய அரசு தரப்பில் இதுவரை எதுவும் கூறப்படவில்லை.

## மரண தண்டனை பெற்ற உலக தலைவர்கள்:

மரண தண்டனை விதிக்கப்பட்ட உலக நாடுகளின் தலைவர்களில் ஷேக் ஹசீனா குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளமை முதல் வழக்கு அல்ல. வரலாற்று ரீதியாக, பாகிஸ்தான் பர்வேஸ் முஷாரஃப் உட்பட பல உயர்மட்ட தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரஃப் 2001 முதல் 2008 வரை அதிபராக இருந்தார். 2007 ஆம் ஆண்டு அரசியலமைப்பை இடைநிறுத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பான தேசத்துரோக வழக்கில் 2019 ஆம் ஆண்டு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்த தண்டனை 2020 இல் ரத்து செய்யப்பட்டது. இருப்பினும், பர்வேஸ் முஷாரஃப் 2023 இல் துபாயில் நாடுகடத்தப்பட்ட நிலையில் இறந்தார்.

கிரேக்க நாட்டின் அதிபராக இருந்தவர் ஜார்ஜியோஸ் பாப்படோ பௌலோஸ். 1967 ஆட்சிக் கவிழ்ப்புக்கு தலைமை தாங்கிய இந்த இராணுவ சர்வாதிகாரி 1973 இல் தூக்கியெறியப்பட்டார். தேசத்துரோகம் மற்றும் கிளர்ச்சி குற்றச்சாட்டுகளின் பேரில் 1975 இல் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அந்த தண்டனை ஆயுள் தண்டனையாகக் மேலும் அவர் 1999 இல் சிறையில் இறந்தார்.

தென் கொரியாவின் ஜனாதிபதியாக இருந்த சுன் டூ-ஹ்வான் (1980-1988) 1979 இராணுவ சதிப்புரட்சி மூலம் தனது ஆட்சியை கைப்பற்றினார். 1980 குவாங்ஜு படுகொலையில் அவரது பங்கிற்காக சுன் டூ-ஹ்வானுக்கு 1996 இல் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அவரது தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு 1997 இல் அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. அவர் 2021 இல் இறந்தார்.

## ஈராக் சதாமுக்கு தூக்கு :

ஈராக்கின் ஜனாதிபதி சதாம் உசேன் 1982 ஆம் ஆண்டு துஜெயிலில் 148 ஷியா முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக தண்டனை விதிக்கப்பட்டது. சதாம் உசேன் 2006 ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். அமெரிக்க அரசின் உதவியுடன் டிசம்பர் 30, 2006 அன்று அவருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி முகமது நஜிபுல்லாக்கு 1996 ஆம் ஆண்டு தலிபான்களால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. தலிபான்கள் காபூலைக் கைப்பற்றிய பிறகு, அவர் ஐ.நா. வளாகத்தில் இருந்து பிடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, செப்டம்பர் 1996 இல் பகிரங்கமாக தூக்கிலிடப்பட்டார்.

பாகிஸ்தான் ஜனாதிபதியாக சுல்பிகர் அலி பூட்டோ 1971 தொடக்கம் 1977 வரை இருந்தார். 1977 ஆம் ஆண்டு ஒரு இராணுவ சதியில் சுல்பிகர் அலி பூட்டோ பதவி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் அவர் ஒரு அரசியல் போட்டியாளரைக் கொலை செய்ய சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். சர்வதேச முறையீடுகள் இருந்தபோதிலும், அவர் ஏப்ரல் 1979 இல் தூக்கிலிடப்பட்டார்.

ஈரானின் பிரதமர் அமீர்-அப்பாஸ் ஹொவைடா 1965-1977 வரை பதவியில் இருந்தவர். 1979 இஸ்லாமியப் புரட்சியைத் தொடர்ந்து, கடவுளுக்கு எதிராகப் போர் தொடுத்தல் மற்றும் ஊழல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் அவர் கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். ஏப்ரல் 1979 இல் அவர் துப்பாக்கிச் சூடு மூலம் கொல்லப்பட்டார்.

முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரஃப் (1)



முகமது நஜிபுல்லா - ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி



சுன் டூ-ஹ்வான் - தென் கொரியாவின் ஜனாதிபதி (1980-1988)



அமீர்-அப்பாஸ் ஹொவைடா - ஈரானின் பிரதமர் (1965-1977)



சதாம் உசேன் - ஈராக்கின் ஜனாதிபதி



_ஜார்ஜியோஸ் பாப்படோபௌலோஸ்



மற்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி (1971-1977)



# வருமுன் காத்தல்: அனர்த்த காலத்தின் பேச்சாளர்கள்

07.12.2025

அனர்த்த காலங்கள் அவற்றுக்கேயான புதிய பேச்சாளர்களை வெளிக்கொண்டு வரும். இறுதிக்கட்டப் போரின்போது வன்னி கிழக்கில் வாழ்ந்த மக்களின் சார்பாக குரல்தரவல்ல அதிகாரியாக மருத்துவர் சத்தியமூர்த்தி காணப்பட்டார். அப்படித்தான் அண்மை ஆண்டுகளில் இயற்கை அனர்த்தங்களின்போது மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கைகளை விடுக்கும் ஒரு “பப்ளிக் இன்ரலெக்சுவலாக” பேராசிரியர் பிரதீபராஜா மேலெழுந்துள்ளார்.



கடந்த செப்டம்பர் மாதம் 03.09.2025 புதன்கிழமை அவர் முகநூலில் எதிர்வரும் மாதங்களுக்கான வானிலை மாற்றங்கள் குறித்து நீண்ட முன்னறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் நவம்பர் மாத நடுப்பகுதியிலும் இறுதிப்பகுதியிலும் ஏற்படக்கூடிய தாழமுக்கங்கள் தீவிர தாழமுக்கங்கள் ஆகவோ அல்லது புயல்களாகவோ மாறலாம் என்பதை கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்னரே முன்னறிவித்திருந்தார்.

அரச வளிமண்டலவியல் திணைக்களம் உத்தியோகபூர்வமாக வானிலை மாற்றங்களை அறிவிக்கும். வரக்கூடிய ஆபத்துக்களையும் முன்கூட்டியே அறிவித்து எச்சரிக்கும். ஊடகங்கள் அவற்றை உடனுக்குடன் அறிவித்து மக்களை எச்சரிக்கை செய்யும். இம்முறை டித்வா புயல் தாக்கப்போவது குறித்து அரச வளிமண்டலவியல் திணைக்களம் பொருத்தமான எச்சரிக்கைகளை முன்னறிவிக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. புயல் அனுராதபுரத்தை அடையும் வரையிலும் அதுதொடர்பான எச்சரிக்கைகள் விடுக்கப்படவில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால் தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தவரை குறிப்பாக யாழ்ப்பாணத்தில், பிரதீபராஜா இதுபோன்ற இயற்கை அனர்த்தங்களைக் குறித்து ஏற்கனவே சில நாட்களுக்கு அல்லது பல நாட்களுக்கு முன் எச்சரிப்பதுண்டு. அவருடைய எச்சரிக்கைகள் சில சமயங்களில் பிழைக்கலாம். மிகைப்படுத்தலாகவும் இருக்கலாம். அதனால் சில சமயங்களில் மீனவர்களுக்கோ விவசாயிகளுக்கோ அல்லது ஏனைய துறையினருக்கோ நட்டங்கள் ஏற்படலாம். ஆனால் அவர் எதிர்வு கூறியதுபோல இயற்கை அனர்த்தங்கள் நிகழ்ந்து அதனால் ஏற்படக்கூடிய உயிர்ச் சேதங்களோடு ஒப்பிடுகையில், வருமுன் காக்கும் நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய பொருட்சேதம் பொருட்படுத்தத்தக்கது அல்ல.

மழைக்காலங்களில் மலைகளில் மண் சரிவு ஏற்படுவது வழமை. ஒவ்வொரு பருவ மழைக்கும் மலையக மக்கள் மண் சரிவுகளில் சிக்கி உயிரிழந்து வருகிறார்கள். மழை வீழ்ச்சி அதிகரிக்கும்போது, மண் சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் வாழும் மக்களை எச்சரிக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு உண்டு. அந்த மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. இக்கட்டுரையில் முன் கூறியதுபோல வருமுன் காக்கும் நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய சிரமங்கள், நட்டங்களை விடவும் அந்த முன்னெச்சரிக்கையின்படி நிகழும் அனர்த்தத்தால் இழக்கும் உயிர்களின் நட்டம் பெரிது. நாடு இப்பொழுது அவ்வாறான உயிர்ச் சேதத்தைத்தான் எதிர்கொண்டிருக்கிறதா?

ஒரு புயல் தாக்கப் போகிறது என்பதனை பிரதீபராஜா ஏற்கனவே தெளிவாகக் கூறியிருந்தார். அதை அவர் வழமைபோல தனது முகநூல் பக்கத்தில் மட்டும் பகிரவில்லை. இந்தமுறை வடமாகாண ஆளுநர் அவரை தன்னுடைய அலுவலகத்துக்கு உத்தியோகபூர்வமாக அழைத்து உரையாடியுள்ளார். அந்தச் சந்திப்பில் சம்பந்தப்பட்ட துறைசார் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது பிரதீபராஜா தெரிவித்த தகவல்கள் பின்னர் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளிவந்தன. அதன்படி 130 ஆண்டுகளுக்குப் பின் ஒரு பேரிடர் நாட்டை நெருங்கி வருவதனை அவர் முன்கூட்டியே எச்சரித்திருந்தார்.

இந்த விடயத்தில் இப்போதுள்ள வடமாகாண ஆளுநர் வேதநாயகன் பாராட்டப்பட வேண்டியவர். ஏனென்றால் அவருக்கு முன் இருந்த ஒரு பெண் ஆளுநர் பிரதீபராஜாவை பொருட்படுத்தவில்லை. அந்தப் பெண் ஆளுநரின் காலத்தில் நடந்த ஒரு மெய்நிகர் சந்திப்பில் பிரதீபராஜா தனது கருத்தைக் கூற முற்பட்டபோது ஆளுநர் அவரைப் பொருட்படுத்தவில்லை. இது தொடர்பாக அரச வளிமண்டலவியல் திணைக்களங்கள் தரும் தகவல்களைத்தான் நாங்கள் உத்தியோகபூர்வமாக எடுத்துக் கொள்ள முடியும். உங்களுடைய தகவல்கள் எங்களுக்குத் தேவையில்லை என்ற பொருள்பட அவர் பிரதிபராஜாவை அவமதித்திருக்கிறார்.

ஆனால் இம்முறை டித்வா புயலுக்கு முன்னரே வடமாகாண ஆளுநர் பிரதீபராஜாவுக்கு உரிய கௌரவத்தை கொடுத்து அவரை அழைத்துப் பேசியிருக்கிறார். பிரதீபராஜா எச்சரித்ததை போலவே புயல் பேரிழப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதில் பிரதீபராஜாவைப் போலவே சென்னையை மையமாகக் கொண்ட செல்வக்குமார் என்ற வானிலை முன்னறிவிப்பாளரும் இலங்கையை நோக்கி முன்னெச்சரிக்கைகளை விடுத்திருக்கிறார்.

“வானிலை அறிவியல்” என்ற யூடியூப் தளத்தில், செல்வகுமார் இலங்கைக்கான வானிலை அறிக்கை என்ற தலைப்பில் ஒரு காணொளியை 24ஆம் திகதி வெளியிட்டார். நவம்பர் 26 தொடக்கம் 28 வரையிலுமான மூன்று நாட்களில் முன்னப்பொழுதும் காணாத பெருமழை பெய்யும் என்றும் நிலச்சரிவு ஏற்படும் என்றும் எச்சரித்திருந்தார். (https://youtu.be/p-ayF49Ov7Q?si=lf20WuDgEkL-hr0R ) இந்த இயற்கை அனர்த்தத்தில் இருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கு மக்கள் கால்நடைகளையும் முக்கிய ஆவணங்களையும் எடுத்துக்கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர வேண்டும் என்றும் எச்சரித்திருந்தார். இந்த இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் அவசர கால நிலையை பிரகடனம் செய்ய வேண்டிவரும் என்பதையும் செல்வகுமார் முன்கூட்டியே மிகச்சரியாக ஊகித்திருந்தார். தன்னுடைய எச்சரிக்கையை இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறும் அந்த காணொளியில் அவர் கேட்டிருந்தார். அவர் பயன்படுத்திய வார்த்தைகளில் மிகைப்படுத்தல்கள் இருந்திருக்கலாம். ஆனால் இழக்க கொடுத்தவர்களின் நோக்குநிலையில் இருந்துபார்த்தால் அவை மிகைப்படுத்தலாகத் தெரியாது.

அதாவது நாட்டுக்குள் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புவியியல் துறை பேராசிரியரும் நாட்டுக்கு வெளியே அயலில் தமிழகத்திலிருந்து ஒரு துறைசார் வல்லுநரும் எச்சரித்த போதும்கூட அந்த எச்சரிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களின் காதில் விழவில்லை. அதற்குக் காரணம் என்ன?

பொதுவாக சமூக வலைத்தளங்களில் யூடியூப்களில் வரும் செய்திகள், தகவல்கள், எச்சரிக்கைகள் தொடர்பாக பொருட்படுத்தாத ஒரு பொதுப் புத்தி வளர்ந்து வருகிறது. யூடியூப் தலைப்புக்கள் அல்லது எச்சரிக்கைகள் மிகைப் படுத்தப்பட்டவை என்ற அபிப்பிராயம் பரவலாக உண்டு. வியூவர்ஸை கவர்ந்திழுப்பதற்காக கவர்ச்சியான தலைப்புகளைப் போடும் யூடியூப் பாரம்பரியமானது பாரதூரமான விடையங்களின் மீதான சீரியஸான கவனிப்பைக் குறைத்து விடுகிறது.பல யூடியூப்களில் தலைப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் தொடர்பு இருப்பதில்லை. இதனால் தலைப்பைக் கண்டு உள்நுழைந்து ஏமாற்றமடைந்த வியூவர்ஸ் குறிப்பாக அறிவு தெளிந்த, புத்திசாலித்தனமான வியூவர்ஸ் மீண்டும் ஒரு தடவை யூடியூப்களின் கவர்ச்சியான தலைப்புகளை, எச்சரிக்கைகளைக் கண்டு ஏமாற விரும்புவதில்லை. இந்த யூடியூப் பண்பாடு, வானிலை முன்னெச்சரிக்கை போன்ற விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

யூடியூப் பார்வையாளர்கள் மட்டுமல்ல ஏனைய சமூக வலைத்தள நுகர்வோரும் அவ்வாறுதான். எல்லாவற்றையும் ஸ்குரோல் பண்ணிக் கடக்கும் ஒரு சமூக வலைத்தளச் சூழல் வளர்ந்து விட்டது. உண்மையான எச்சரிக்கை எது உண்மையான ஆபத்து எது என்பதனை பகுத்தறிய முடியாத அளவுக்கு சமூக வலைத்தளச் சூழல் மேலோட்டமானதாக, அதிகம் ஜனரஞ்சகமானதாகக் காணப்படுகிறது.

பிரதீபராஜாவையும் செல்வகுமாரையும் தொடர்ந்து அவதானித்துவரும் சீரியசான சமூக வலைத்தளப் பாவனையாளர்கள்



அவர்களுடைய எச்சரிக்கைகள் முன்னுணர்த்தும் ஆபத்துக்களை விளங்கிக் கொள்வார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் அனுராத ஜயரட்ன கூறுவதுபோல, இலங்கை அரசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் வருமுன் காக்கும் நடவடிக்கைகளை எடுத்திருந்தால், அழிவை ஒப்பீட்டளவில் குறைத்திருக்கலாமா ?

நாடாளுமன்ற உறுப்பினர் அநுராத ஜயரட்ன, நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, கம்பளை பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பேரழிவுக்கும், உயிரிழப்புகளுக்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று குற்றம் சாட்டினார். அது இயற்கை அனர்த்தம் என்ற போதிலும் உயிரிழப்புகள் இந்தளவுக்கு அதிகரிக்கக் காரணம், உரியநேரத்தில் முன்னெச்சரிக்கை விடுக்கப்படாமையே என்றும் கூறினார். வழக்கமாக 160 மில்லிமீற்றர் மழை பெய்தாலே மகாவலி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உண்டு. ஆனால், இம்முறை 400 மில்லிமீற்றர் மழை பெய்யும் என முன்கூட்டியே தெரிந்திருந்தும், மக்களுக்கு அதுகுறித்து எவ்வித எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை என்றும், குறிப்பாக, நவம்பர் 27ஆம் திகதி ஏற்படவுள்ள ஆபத்தை உணர்ந்து, 26ஆம் திகதி நடைபெறவிருந்த உத்தியோகபூர்வ கூட்டங்கள் ரத்து செய்யப்பட்ட போதிலும், சாதாரண மக்களுக்கு அந்த ஆபத்துக் குறித்து அறிவிக்கப்படாததற்கு, சம்பந்தப்பட்ட திணைக்களங்களே பொறுப்பு என்று அவர் குற்றம் சாட்டினார். நாவலப்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்கள உப அலுவலகம் நீர்மட்டத்தை அளவிட்டிருந்தும், அந்தத் தகவலை கம்பளை மக்களுக்குப் பரிமாறத் தவறியதே பல உயிர்கள் பறிபோகக் காரணமாக அமைந்தது என்றும் அவர் கூறினார். மேலும், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி கொத்மலை அணை திறக்கப்பட்டமை நிலைமையை மேலும் மோசமாக்கியது என்றும் அவர் குற்றம் சாட்டினார்

புயலுக்கு பின்னரான உரையாடல்கள் அவ்வாறு அரசு திணைக்களங்களின் மீதான விமர்சனங்களாகவே காணப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை விமர்சிக்க வேண்டும் என்பதற்காக ஒரு பகுதியினர் அரசு திணைக்களங்களில் பிழை பிடிக்கிறார்கள் என்று அரசாங்கத்துக்கு ஆதரவானவர்கள் கூறுகிறார்கள். எவ்வளவுதான் தொழில்நுட்பம் வளர்ந்தாலும் இயற்கை அனர்த்தங்களை துல்லியமாக எதிர்வு கூற முடியாது என்று அரசாங்கத்துக்கு ஆதரவான தமிழ் விரிவுரையாளர்கள் நியாயம் கூறுகிறார்கள்.

உண்மை. பேரியற்கையோடு ஒப்பிடுகையில் மனிதர்கள் அற்பமானவர்கள். சீனர்களுடைய பாரம்பரிய ஓவியங்களில் வரும் நிலக்காட்சிகளை இங்கு சுட்டிக்காட்டலாம். அந்த நிலக் காட்சிகளில் இயற்கை மிகப் பிரமாண்டமாக வரையப்படும். மனிதர்களோ மிகச் சிறிய, அற்ப புள்ளிகளாக காட்டப்படுவார்கள்.

எனவே பேரியற்கையின் போக்கை துல்லியமாக எதிர்வுகூறுவது கடினம்தான். ஆனால் அவ்வாறு சில துறைசார் நிபுணர்கள் எதிர்வுகூறிய போதிலும் அதை சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்கள் கவனத்தில் எடுத்திருந்தால் இந்த அளவுக்கு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்குமா? முன்னெச்சரிக்கை மிக்க வருமுன் காக்கும் நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய நட்டத்தை விடவும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இடர் பெரியது. இழப்பு பெரியது. துயரம் பெரியது.

நன்றி: நிலாந்தன்

அந்த அறிவிப்பைக் கேட்டதும் அவள் அதிர்ந்து போனாள். அந்த அறிவிப்பு அந்த ஊரில் எப்போதாவது நடக்கும். அந்த அறிவிப்பு எழுந்தால் சந்தோஷங்கள் தொலைந்து போய்விடும். பயம் முளைத்துச் தொலைந்து போய்விடும். பயம் முளைத்துச் சிறகுகளை விரிக்கும். தூக்குக் கயிற்றில் தொங்கும் வேதனையில் மனங்கள் உயிர்பற்றிய ஆசையில் தவித்தழுங்கள்.

அந்த அறிவிப்பைக் கிளப்பியவர்கள் வீதிகளை நிறைந்து வந்தனர். அவர்களுக்கு நீதி, நியாயங்கள் பழி, பாவங்கள் ஏதும் தெரியாது உயிர் குடித்தலில் ஊறிப்போனவர்கள். ஆள் பிடித்தலே அவர்களின் அன்றாட தொழில்.

அவர்கள் எவரையும் பிடித்தால் பிடித்தவர்கள் வீடுதிரும்ப மாட்டார்கள். பிடித்தவர்களை நீண்ட நாட்களுக்கு தங்களுடன் வைத்திருக்கவும் மாட்டார்கள். எங்கேனும் ஒரு வெளியினில் அல்லது பற்றைகளுக்குள் கழுத்துகளை முறித்துவிட்டு மூடி விடுவார்கள்.

அப்படி ஒரு நிறைவேற்று நிகழ்வுக்காகவே அந்த அதிகாலை வேளையில் அந்த ஒலிபெருக்கி அனைவரையும் விழுந்தாலடிப் பிள்ளையார் கோயிலினில் கூடும்படியாய் அலறியது.

அவர்களின் அழைப்பை ஏற்காமல் வீடுகளில் இருப்பவர்களை ஒளித்தோடுபவர்கள் என நினைத்து வாழ்வை ஒப்பாரிகளாக்கி விடுவார்கள். அந்த ஒப்பாரிகளை விருப்பாது அவள் மகளை அழைத்துக் கொண்டு அந்தப் பிள்ளையார் கோயிலுக்கு ஓடினாள்.

அந்தக் கோயில் முற்றத்தில் சனங்கள் நிரம்பி வழிந்தன. ஒவ்வொரு முகங்களிலும் பயங்கள் பொங்கிச் சரித்தன. கடும் வெய்யில் வரும்வரையும் ஏ்நத விசாரிப்புகளும் நடக்கவில்லை. வேர்த்தொழுகியது. தேகங்கள் சீலைகளால், சால்வைகளால் சிலர் தலைகளை மூடியிருந்தனர். பசியால் சுருண்டனர் குழந்தைகள். முதியவர்கள் சுடுமணலில் சுருண்டு படுத்துக் கொண்டு நெளிந்தனர் மண்புழுவைப்போல்.

அவர்கள் மரநிழல்களில் நின்றனர். பாடல்கள் பாடி ஆடிக் கொண்டிருந்தனர். அந்தப் பாடல்கள் பெண்களை கேலி செய்வதாக அவர்களின் மொழி புரிந்தவர்கள் எரிந்துகொண்டிருந்தனர். பெண்கள் அவர்களைப் பார்க்கவில்லை குமைந்து கொண்டிருந்தனர்; தலைகளை கவிழ்த்தபடி.

கிழக்குப் பக்கமாக ஒரு வாகனம் இன்னும் சிலரை நிரப்பிக் கொண்டு வந்து அந்த ஆலமரத்துக்கு கீழே நின்றது.

அதிலிருந்து அனைவரும் குதித்தார்கள். குதித்தவர்களில் சிலர் முகங்கள் கறுத்தத் துணிகளால் மூடியிருந்தனர். சிலர் மூடாமலும் விழிகளை அகட்டிக்கொண்டிருந்தனர்.

அந்தக் கறுத்தத் துணிகாரர்களைக் கண்டால் கர்ப்பம் கரையும் பீதி அவளுள் முளைக்கும். மகளை கையால் பற்றியபடி இருந்தாள்.

அந்தத் தணிகாரரின் உதவிகளோடும், உதவிகள் அற்றும்தான் முன்பு அவர்கள் ஊர்களுக்குள் நுழைந்தார்கள். சிலரை அள்ளிக்கொண்டு சென்றார்கள். அள்ளியவர்கள் இன்னும் வீடுகள் திரும்பவில்லை. அவர்களின் கதைகள் நீள்கின்றன... சிறகுகள் முளைத்துப் பறக்கின்றன... அந்தச் சிறகுகளை ஒடிப்பதுக்காய் ஒரு பெருவெளியையே விழுங்கி விட்டார்கள்.

இன்றும் எந்தப் பெருவெளியை நிரப்பவோ... எவரெவரை அள்ளவோ... குரங்காய் அவளின் நினைவுகள் மரங்களெங்கும் தாவியது.

அந்தக் கறுப்புச்சட்டைக்காரர்களோடு அவர்களும் அந்தச் சுடுமணில் இறங்கினார்கள். அவர்களின் கால்களுக்கு சூடு தெரியாது வேதனைகள் தெரியாது.

அவர்கள் பார்க்கும்போது விழிகளைப் பிதுக்குபவர்கள், உடல்



# அறிவிப்பு



களில் நடுக்கங்கள் எடுப்பவர்கள் எல்லாம் அவர்களின் எதிராளிகள், அழைத்துச் சென்று சப்பியும் விடுவார்கள்.

சிரித்து முகங்களை சாந்தமாய் வைத்திருப்பவர்களை பிடிக்கும் பிடித்துச் செல்லமாட்டார்கள். அவளும், மகளும் சிறு பன்னகைகளை நறுக்கினார்கள். அவர்கள் கடந்தனர். மகளினதும் மூச்சுக்கள் இப்போதுதான் இதமாகியது.

அவர்கள் நிறையப்பேரை அள்ளி விட்டார்கள். முகங்களில் சிரிப்புக்கள் ஒப்பனைகளோடு ஆடைகட்டி அலங்கரித்தது. அனைவரையும் வீட்டுக்குச் செல்லும்படி பணித்தார்கள். அவளும் மகளும் வீட்டுக்கு நடந்தனர், சிலர் சேர்ந்து போனவர்கள் இல்லாது தவித்துக் கொண்டிருந்தனர். தவிப்பவர்களை அவர்கள் விரட்டிக் கொண்டிருந்தனர்.

“அம்மா”

வழியில் ஒருவன் அவளையும், மகளையும் மறித்தான். அவள் நன்றாகவே அவனைப் பார்த்தாள். அவனின் முகம் காய்ந்திருந்தது. தெத்தாலயிருக்கும் குட்டிப் பற்களைக் காட்டிச் சிரித்தான். அவளுக்கு ஞாபங்கள் கிழறின. சுவறியிரந்த தலைமயிர்களை விரல்களால் கோதி, என்னம்மா பாக்கிறியள்?

சிறுகதை

நான்தான் றிங்கோத்தம்பி”

அதிர்ந்தாள். உள்ளிழுத்த மூச்சு வெளியில் வர தாமதித்தது. விழிகள் உருண்டன. எஜமான் முன்னிலையில் அகப்பட்ட ஒரு திருடனைப் போல.

“போயிடு தம்பி, எங்களோட கதைக்காதை” வாயைப் பொத்தினாள். வெடிக்கும் விம்மல்களை அடக்கிக் கொண்டு மகளின் கையை இறுகப்பற்றினாள். வேகமாய் நடந்தாள்.

அவளால் வேகமாய் நடக்க முடியவில்லை உடல் உருகி, ரத்தமாய் விழிகளால் வடிவதாயிருந்தது. வெங்கடாந்தி போல் சுற்றிய அவனின் நினைவிலிருந்து அவளால் விடுபடமுடியவில்லை.

றிங்கோத்தம்பி அவளின் பிள்ளையாய் எந்நேரமும் அவளின் வீட்டில் சுற்றிச் சுழன்றவன். அவனை இர கண்களாய் நேசித்தாள். சாப்பாடுகள் கொடுத்து அவனை தூங்க வைத்து தாலாட்டும் பாடி இருக்கின்றாள்.

போராளிகளில் றிங்கொத்தம்பியை அவளுக்கு அதிகமாய் பிடிக்கக் காரணம் அவனுக்குத் தாய் தகப்பன் எவருமில்லை ஒரு நில அள்ளுகையில் அந்தத் துப்பாக்கிப் பேய்கள் இரவிரவாய் ஊருக்குள் புகுந்து நரபலி எடுத்ததில்தான் அவன் தாய் தந்தையரை இழந்தான். அவனுக்குத் தாய் தானென்றுதான் அவனுடனான உறவைப் பெருக்கினாள்.

அப்படிப்பட்ட உறவை அதறிவிட்டதை நினைத்துத் துடித்தாள். அந்த உயிர் குடிக்கும் பேய்களுக்குப் பயந்துதான் அவள் வெடிகுண்டாய் அந்த வார்த்தைகளை அவனுக்கு விசிறினாள். அப்படி அந்தத் தெய்வங்களை அணைத்தவர்களில் சிலர் அவர்களின் கண்களில் பட்டு செம்மணிக் கதைகளாய் நீள்கின்றனர். அப்படியாய் தங்களுக்கும் ஆகக்கூடாது என்றுதான் அவள் அப்படி அவனுக்குத் கூறினாள். ஆனால் அவளின் மனமோ அவனின் வாடிவறண்ட முகத்திலும், மெலிந்த உடலிலும் பதிந்து இமைகளை நனைத்துக் கெணா்டிருந்தன. நடையை நிறுத்தி அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் ஒரு ஒற்றையடிப் பனங்கூடலால் போய்க் கொண்டிருந்தான்.

அவனை யார் கவனிப்பார்கள்? அச்சம் கவனிப்பவர்களை தடுக்காமலாவிடும்? சாப்பாடுகள் நேரத்துக்கு நேரமில்லாமல் பற்றைகளுக்குள்ளும் செடிகளுக்குள்ளும் மழையிலும், வெய்யிலிலும், பனியிலும் எங்கெங்கு உறங்குகிறார்களோ…

அவனின் நினைவைச் சுமந்தபடி ஓடிப்போய் திண்ணையில் விழுந்தாள். அவன் வந்து அவளின் கண்களைத் துடைத்து நொந்த கால்களுக்கு ஒத்தணமிடவதாய் அவளுக்கு இருந்தது. இனி அவன் நிழலாய் அவளுள் ஊசலாடுவான். அந்த ஊசலாட்டத்தால் அவள் வெந்து வெந்து தன்னை உருக்கிக் கொண்டாள்.

நாட்கள் நகர்ந்தன…

ஒரு நாள் காலை அதே ஒலிபெருக்கி மீண்டும் ஒரு அறிவிப்பை ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த அறிவிப்பு வழமைக்கு மாறாய் இருந்தது. அவளின் இதயத்தைக் கிளிப்பதுவாய்… உடல்களை கருக்குவதாய் இருந்தது.

இரண்டு மணித்தியாலத்துக்குள் அனைவரையும் ஊரைவிட்டு வெளிக்கிடும் படியாய் ஈன இரக்கமின்றி அந்த அறிவிப்பு இருந்தது.

காலகாலமாய், தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்த நிலத்தை மாற்றானுக்குவிட்டுப் போவதென்றால்…

இப்படி ஒரு கொடிய அறிவிப்பை கேட்டதிலிருந்து அவள் வெந்து இத்துப்போனாள். உணர்வற்றவளாய் அப்படியே திண்ணையில் சரிந்தாள். வீட்டைவிட்டு விரட்டுவது அவர்களுக்கு சார்வ சாதாரணம். இவளுக்கோ தாங்கமுடியாத வலியாய் இருந்தது.

மனம் இறுகி வேதனைச் சிலுமை நெஞ்சை அழுத்த மூட்டை முடிச்சுடன் வீட்டைவிட்டு வெளியேறினாள். வெய்யில் தொப்பளங்களாய் ஆத்திரங்கள் அவளில் விரவின.

கால்களுக்குத் தெரியவில்லை எங்கே நடப்பதென்று உறவுகள் என்று எவருமில்லை. அவர்கள் நீரேரிக்கப்பால் நிம்மதியாய் தூங்கி எங்கும் அச்சமின்றித் திரிவார்கள். வா… போ…, இரு… எழும்பு… எந்த ஏவல்களுமில்லாத ஒரு சுதந்திர வாழ்க்கை. அந்த வாழ்க்கையோடு தங்கள் வாழ்க்கையை நினைக்க அவளுக்கு அழுகை பீறிட்டது.

அவள், அந்த நீரேரிக்கப்பாலான வாழ்க்கை தங்களுக்கு எப்போது கிடைக்குமெனத் தவித்தாள். அந்த கறுத்த மொட்டாக்கிட்ட உருவங்களையும், அந்தத் துப்பாக்கிப் பேய்களையும் சப்பித் துப்பிவிட்டு - எவருக்கும அச்சமின்றி உறவுகள், சுற்றமென இழந்த சௌந்தர்யங்களை மீண்டும் அதே மண்ணில் பெறவேணும் போலவிருந்தது, அவளுக்கு.

அப்படியான ஒரு காலத்தின் பிரசவிப்புக்காய் மனம் தவித்தது. றிங்கோத்தம்பியை தேடியபடி கால்களை எறிந்து நடந்தாள்.

நன்றி: கருணை ரவி – டிசம்பர் 2000 எரிமலை 27





கையள்ளி மகிழ்ந்த எம் பூமி
காலாற நடந்து திரிந்த எம் பூமி
மெய்வருந்திச் செழிப்பித்த மாவீரர்
உயிரினும் இனியவள் தாயைப்
போற்றிய புதல்வர்

கருவினுள் நொந்தவள் துயரினைச்
சுமந்து
இனிவரும் நாளில் எம் சந்ததி
சிரிக்க வென்றே எழுந்தவர் வீரம்
எம்முளும் எழுகவே.

Shiyara
Financial Services
(An Agency for the Real Estate, Mortgages & Finance)
BUSINESS LOANS - LINE OF CREDITS
MORTGAGES
SECOND MORTGAGES
REFINANCING
CALL:
KRISHNA
647 308 6069
Shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

# புயல்
# அனுரா அரசங்கத்தைப் பலப்படுத்தியிருக்கிறதா?

13.12.2025



புயல் அனுரா அசங்கத்தைப் பலப்படுத்தியிருக்கிறது. அனைத்துலக அளவிலும் உள்நாட்டிலும் அரசாங்கத்தைப் பலப்படுத்தத் தேவையான ஒரு மனிதாபிமானச் சூழல் உருவாகியிருக்கிறது. இந்த மனிதாபிமான அரசியல் சூழல் அல்லது நிவாரண அரசியல் சூழல் எனப்படுவது அதன் தர்க்கபூர்வ விளைவாக அரசாங்கத்தைப் பலப்படுத்தும்.

அனைத்துலக அளவில் பெரும்பாலான நாடுகள் வரிசைகட்டி நின்று உதவி செய்கின்றன. குறிப்பாக முதலில் உதவியதும் இந்தியா. அதிகம் உதவியதும் இந்தியாதான். தவிர வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களும் உதவுகிறார்கள். சில புலம் பெயர்ந்த தமிழர்களும் அரசாங்கத்துக்கு நிதி சேர்த்துக் கொடுக்கிறார்கள். அல்லது தாம் சேர்த்த நிதியை தாம் வாழும் நாட்டின் அரசாங்கத்துக்கு ஊடாகக் கொடுக்கிறார்கள்.

உள்நாட்டில் செழிப்பான ஒரு மனிதாபிமானச் சூழல் மேலெழுந்துள்ளது. தொண்டு நிறுவனங்கள், மத நிறுவனங்கள், சிறிய சமூக அமைப்புக்கள் என்று பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளும் தனி நபர்களும் தன்னார்வமாக முன்வந்து உதவிகளைச் சேகரித்து, தேவைப்படும் மக்களுக்குத் கொண்டு சென்று கொடுக்கிறார்கள். நிவாரணத்தைச் சேகரிக்கும்பொழுது உள்ளூர் வணிகர்களும் காசு உள்ளவர்களும் தங்களால் இயன்ற அளவுக்கு அள்ளிக் கொடுக்கிறார்கள். சிங்களப் பகுதி ஒன்றில் ஒரு முதிய பெண் தன்னுடைய பங்குக்கு தன்னிடம் இருந்த இரண்டு பனடோல் மாத்திரை அட்டைகளை அன்பளிப்பாகக் கொடுத்தது ஒரு நிகழ்ச்சியான சம்பவமாக சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டது.

அதேசமயம் தமிழ்ப் பகுதிகளில் தன்னார்வமாக இளையவர்களும் தொண்டு நிறுவனங்களும் நிவாரணங்களை சேகரித்துக் கொண்டு மலையகத்தை நோக்கிச் செல்கிறார்கள். புயல் ஓய்ந்த அடுத்தடுத்த நாட்களில் ஒரு பகுதியினர் தனித்துவிடப்பட்டிருக்கும் முல்லைத்தீவை நோக்கியும் வன்னியின் எனைய பகுதிகளை நோக்கியும் சென்றார்கள். அங்கே தங்களால் முடிந்த உதவிகளைச் செய்த பின் மலையையகத்தை நோக்கித் திரும்பினார்கள். வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் மலையகத்தை நோக்கி உதவிகள் செல்கின்றன. புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலானது தமிழ் சகோதரத்துவத்தை மேலும் பலப்படுத்தியிருக்கிறது.

முஸ்லிம்கள் தங்களுடைய மதக் கட்டமைப்புகளுக்கு ஊடாகவும் தொண்டு நிறுவனங்களுக்கு ஊடாகவும் பொருட்களை சேகரித்து பாதிக்கப்பட்ட மக்களை நோக்கிச் செல்கிறார்கள். உதாரணத்துக்கு, “கெலி ஓயா அபிவிருத்தி நிதியம்” என்ற அமைப்பு கண்டி மாவட்டத்தில், உடுநுவர பிரதேச செயலர் பிரிவில், பள்ளிவாசலை மையமாக கொண்டு இயங்குகிறது. டித்வா புயல் அழிவுகளின் பின் உருவாக்கப்படட அமைப்பு இது.

தென்னிலங்கையில் பாதிக்கப்படாத பகுதிகளை சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை நோக்கி தன்னார்வமாகத் திரண்டு செல்கிறார்கள். அரச கட்டமைப்புகள் உதவிக்கு வரும் அதே வேளை, மக்கள் தாங்களாக முன்வந்து தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிறார்கள். வெள்ளம் கட்டுக்கடங்காது ஓடிய பகுதிகளில் வீதிகள், வீடுகள், பொது இடங்கள் போன்றவற்றில் சேறு கழி போல மூடிக்கிடக்கின்றது. சில இடங்களில் கால் புதையக் கூடிய அளவுக்கு சேறு. அதனை அரச உதவி வரும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல், அயலில் உள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தாங்களாக முன்வந்து அகற்றுகிறார்கள். தெருக்களிலும் வீடுகளிலும் பொது இடங்களிலும் உள்ள சேற்றைக் கழுவி அகற்றுகிறார்கள். முறிந்து விழுந்த மரங்களையும் குப்பைகளையும் சேகரித்து ஓரிடத்தில் குவிக்கிறார்கள்.

இதுவிடயத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரே சமயத்தில் அரச கட்டமைப்புகள்,அரசுசாரா கட்டமைப்புகள், தன்னார்வலர்கள், இவர்களோடு உதவிக்கு வந்த நாடுகளின் தொண்டர்கள், படையினர் மற்றும் வெளிநாட்டவர்கள் என்று எல்லாத் தரப்பும் இணைந்து அந்தப் பகுதியை துப்புரவாக்கும் காட்சி அற்புதமானது. சில இடங்களில் உல்லாசப் பயணிகளாக வந்த வெள்ளைக்காரர்களும் காணப்பட்டார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களே மக்களுக்கு உதவும் தன்னார்வ தொண்டுச் செயற்பாடுகளில் ஜேவிபியின் அடிமட்ட வலைப்பின்னல் பலமாகச் செயல்படுகின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடித்தளமாக இருப்பது ஜேவிபி. அது அடிப்படையில் ஓர் இயக்கம். அடிமட்ட கிராமிய வலைப் பின்னலைக் கொண்ட ஓர் இயக்கம். எனவே அவர்களிடம் உள்ள அடிமட்ட வலையமைப்பு புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலை அரசாங்கத்துக்குச் சாதகமாகக் கட்டமைத்து வருகிறது.

இவ்வாறாக டித்வா புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல் என்பது ஒரு விதத்தில் அனுரவுக்குச் சாதகமானதாகவே காணப்படுகிறது. ஒருபுறம் நாட்டை நோக்கி உதவிகள் குவிக்கின்றன. இன்னொருபுறம், ஒரு பேரிடருக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல் அதிகம் நெகிழ்ச்சியானதாகவும் உணர்வுபூர்வமானதாகவும் காணப்படுகிறது.

“(நாட்டில் நிலவும் )மிகவும் பலமான ஒரு சகோதரத்துவத்துக்கு நாங்கள் உயர் முக்கியத்துவம் கொடுக்க விரும்புகிறோம். என்னைப் பொறுத்தவரை இது அசாதாரணமானது. நாடு முழுவதும் மக்களும் மக்கள் அமைப்புகளும் ஒன்றாக திரண்டு ஒருவர் மற்றவருக்கு உதவ முன்வருகிறார்கள். இதுபோன்ற சகோதரத்துவத்தை என்னுடைய நாட்டில் காண முடியுமா என்பதை என்னால் உறுதியாக கூறமுடியாது என்பதனை நான் இங்கே கூறவேண்டும். சிறீலங்கர்கள் காட்டும் இந்த வகையான சகோதரத்துவம் அசாதாரணமானது.” இவ்வாறு இலங்கைக்கான ஐநாவின் வதிவிடப் பிரதிநிதி அண்மையில் தெரிவித்துள்ளார்.

இது இயற்கைப் பேரிடர் ஒன்றுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல். ஆனால் இங்கு இயற்கை மட்டும் பேரிடரை ஏற்படுத்தவில்லை. மனிதத் தவறுகளும் இதற்குக் காரணம் என்று எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகின்றன. ரணில் விக்கிரமசிங்க இந்த அரசாங்கம் பதவியேற்ற புதிதில் இது ஓர் “எல்போர்ட்” அரசாங்கம் என்று நக்கலடித்திருந்தார். அனர்த்த காலமொன்றை முகாமை செய்ய இந்த அரசாங்கத்தால் முடியவில்லை என்று நிரூபிப்பதற்கு எதிர்க் கட்சிகள் முயற்சிக்கின்றன.

நுகேகொட பேரணிக்குப் பின் டித்வா புயலானது எதிர்க் கட்சிகள் அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு அதிகரித்த வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்துள்ளது வழமைபோல எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை எதிர்ப்பதனை ஒரு மரபாகப் பேணுகின்றன என்று அரசுக்கு ஆதரவான அறிவுஜீவிகள் நியாயம் கற்பிக்கின்றார்கள். ஆனால் அது உண்மை அல்ல. எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் சிலவற்றை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். ஏற்கனவே முன்னெச்சரிக்கைகள் கிடைத்த போதிலும் அரசாங்கம் வருமுன் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்ற குற்றச்சாட்டு உண்மையானதுபோல தெரிகிறது.

இந்திய வானிலை ஆய்வு மையம் புயல் தொடர்பாக நவம்பர்



13ஆம் திகதியே எச்சரித்திருந்தது. நவம்பர் 26வரை அனைத்துத் தகவல்களும் இலங்கையுடன் பரிமாறப்பட்டுள்ளன என்று “இந்தியன் எக்ஸ்பிரஸ்” இணையத்தளம் கூறுகிறது. அதுபோலவே தமிழக வானிலை முன்னறிவிப்பாளர்களில் ஒருவராகிய செல்வக்குமார், தன்னுடைய யூடியூப் தளத்தில் இது தொடர்பாக இலங்கையை 24ஆம் திகதி எச்சரித்திருந்தார். குறிப்பாக முன்னெப்பொழுதும் ஏற்பட்டிராத வெள்ளப்பெருக்கும் மண்சரிவும் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்திருந்தார். அதைவிடக்குறிப்பாக, இந்தப் பேரிடரின் காரணமாக இலங்கை அரசாங்கம் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்த வேண்டிவரலாம் என்றும் செல்வக்குமார் மிகத்துல்லியமாக எதிர்வுகூறியிருந்தார். அது மட்டுமல்ல தன்னுடைய முன்னெச்சரிக்கையை அரசாங்கத்திடம் கொண்டு சென்று சேர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார். அவருடைய முன்னெச்சரிக்கை அடங்கிய காணொளி 24 ஆம் தேதி வெளியிடப்பட்டது. இலங்கை வானிலை என்ற தலைப்பில் அது வெளியிடப்பட்டது

அதேபோல, யாழ்ப்பாணத்தில் வசிக்கும், யாழ் பல்கலைக்கழக, புவியியல் துறையின் தலைவராகிய பேராசிரியர் பிரதீபராஜா ஒரு புயலைக் குறித்து ஏற்கனவே எச்சரித்திருந்தார். கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்பு அதாவது செப்டம்பர் மாதத்தின் தொடக்கத்தில் அவர் அந்த எச்சரிக்கையை விட்டிருந்தார். அவர் வழமையாக தன்னுடைய முகநூல் தளத்தில் வானிலை அறிவிப்புகளை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார்.

அவர் ஒரு புவியியல் துறை பேராசிரியர். இயற்கை அனர்த்தங்களைக் குறித்து எச்சரிப்பது அவருடைய உத்தியோகபூர்வ கடமை அல்ல. அதைச் செய்ய வேண்டியது வளி மண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் போன்றனதான். ஆனால் பிரதீபராஜா அதைத் தன்னார்வமாகச் செய்கிறார். இம்முறை பருவ மழையை முன்னிட்டு அவர் முகநூலில் பதிந்த நீண்ட முன்னெச்சரிக்கைகள் அடங்கிய பதிவு ஒன்றில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அதன்பின் வடமாகாண ஆளுநர் வேதநாயகன் அவரை தன்னுடைய அலுவலகத்துக்கு அழைத்து துறைசார் திணைக்களங்களின் பொறுப்பாளர்களையும் அழைத்து ஒரு கலந்தாலோசனை செய்தார்.

எனவே ஒரு பேரிடரைக் குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று அரசாங்கம் கூறமுடியாது. இந்த முன்னெச்சரிக்கைகளை அரசாங்கம் உரிய பாரதூரத் தன்மையோடு உள்வாங்கியிருக்கவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. மேலும் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் கூறியது போல திணைக்களங்களுக்கு இடையில் போதிய ஒருங்கிணைப்பு இருக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் அரசாங்கம் அனர்த்தமொன்றை வினைத்திறனுடன் முகாமை செய்யவில்லை என்று பொருள் கொள்ளத்தக்கது.

எதிர்க்கட்சிகள் இதுபோன்ற குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன. எனினும், பேரிடருக்குப் பின்னரான மனிதாபிமான உதவிகளுக்கான சூழலானது, எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டுகளை கூர்மையிழக்கச் செய்கின்றது. அதோடு அரசாங்கம் அறிவித்திருக்கும் இழப்பீட்டுத் தொகையும் மிகப்பெரியது. இதுவரையிலும் இருந்த அரசாங்கங்கள் இதுபோன்ற அனர்த்தங்களின் போது அறிவித்திராத பெரிய தொகை இழப்பீடு அது. இந்த இழப்பீட்டின் மூலம் அரசாங்கம் தன்னை ஏழைகளின் நண்பனாக மீண்டும் ஒரு தடவை நிரூபிக்க முயற்சிக்கின்றது. அரசாங்கம் அறிவித்திருக்கும் பெரிய அளவிலான இழப்பீட்டுத் தொகையானது மக்கள் அபிமானத்தை வென்றெடுப்பதற்கு உதவும். இதனாலும் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகளை அடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

எனவே புயலுக்கு பின்னரான அரசியல் சூழலைத் தொகுத்துப் பார்க்கும்போது, அது மனிதாபிமானத் தேவைகளை முன்னிறுத்தும் சூழலாக மேலெழுகிறது. இதனால் அனுர அரசாங்கம் எதிர்க்கட்சிகள் எதிர்பார்த்ததைப் போல பலவீனம் அடையவில்லை, மாறாக பலமடைந்திருக்கிறது என்றுதான் தோன்றுகிறது.

நன்றி நிலாந்தன்

# உக்ரைனை உலுக்கிடும் ஊழல்: ஜெலென்ஸ்கியின் தளபதி சிக்கினார்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

03.12.2025







**ஜெலென்ஸ்கியின் நெருங்கிய ஒருவரே அதிகரித்து வரும் ஊழல் தொடர்பாக அழுத்தத்திற்கு உள்ளாகி பதவி விலகியுள்ளார். தற்போது தான் போர் முனைக்கு செல்வதாகவும் ஊடகங்கள் முன்னிலையில் தன்னை காட்சிப்படுத்தி உள்ளார்**

உக்ரைனின் அதிபராக 2019 ஆம் ஆண்டு ஜெலென்ஸ்கி தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து அவர் எதிர்கொண்ட மிகக் கடுமையான ஊழல்களில் ஒன்றாக இந்த ஊழல் உருவெடுத்து இருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் உறுப்பினராவதற்கு ஊழலுக்கு எதிரான போராட்டம் முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாக உள்ளது. உக்ரைனிய அரசாங்கத்தின் பதிலும், ஜெரன்ஸ்கியின் தளபதி யெர்மக்கின் பதவியைத் தக்கவைக்கும் திறனும் உக்ரைனின் அரசியல் எதிர்காலத்திற்கு மிக முக்கியமானதாக தற்போது இருக்கிறது.

எவ்வாறு இருப்பினும் இது ரஷ்ய படைகளின் தாக்குதலுக்கு உக்ரைனின் எதிர்ப்பை பலவீனப்படுத்தும். உக்ரைனில் கடுமையான போர் நிலவி வரும் இந்தச் சூழ்நிலைக்கு மத்தியில், நாட்டில் ஒரு பெரும் ஊழல் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கியின் நெருங்கிய வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் இந்த ஊழலில் ஈடுபட்டிருப்பது விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஊழல் வழக்கில் சம்பந்தப்பட்ட நபர், எரிசக்தித் துறையில் சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு முறைகேடு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

உக்ரைனிய புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் இது தொடர்பான விபரங்களை கண்டறிந்துள்ளனர். ரஷ்யாவின் தீவிர தாக்குதலுக்கு மத்தியில் நாட்டுக்கான அத்தியாவசியத் தேவைகளில் இவ்வளவு பெரிய அளவில் நிதி மோசடி நடந்திருப்பது அதிர்ச்சியை ஐரோப்பிய நாடுகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி ஜெலென்ஸ்கி ஊழலுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ளதாக கூறினாலும், இவ்வாறான நிலையில் இந்தச் சம்பவம் அவரின் கைகளும் சுத்தமாக இல்லை என்பது தெளிவாகிறது. இது உக்ரைனிய அரசியல் வட்டாரத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

ஊழல் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட நபரின் மீதான விசாரணைகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று கீவ் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஜெலென்ஸ்கியின் தலைமைப் பணியாளர் ராஜினாமா செய்துள்ளார்.

உக்ரைனின் ஊழல் எதிர்ப்புப் பிரிவினர் ஜெலென்ஸ்கியின் வீட்டில் சோதனை நடத்தியதை அடுத்து, அவரது தலைமைப் பணியாளர் ராஜினாமா செய்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஊழல் விவகாரம் பல வாரங்களாக உக்ரைனை உலுக்கி வருகிறது. அத்துடன் ஜெலென்ஸ்கியின் சொந்த நிலைப்பாட்டை பலவீனப்படுத்துகிறது. மற்றும் ஒரு தீர்க்கமான நேரத்தில் அமெரிக்காவுடனான நாட்டின் பேச்சுவார்த்தை நிலைப்பாட்டை மேலும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

ராஜினாமா செய்த உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியின் தலைமைப் பணியாளர் 54 வயதான ஆண்ட்ரி யெர்மக் ஆவார். அவர் ரஷ்யாவின் முழு அளவிலான போர் முழுவதும் ஜெலென்ஸ்கியின் நெருங்கிய ஆலோசகராக இருந்து வருகிறார். ஆனால் அதிகரித்து வரும் ஊழல் தொடர்பாக அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளார். தற்போது தான் போர் முனைக்கு செல்வதாகவும் ஊடகங்கள் முன்னிலையில் காட்சிப்படுத்தி உள்ளார்.

ரஷ்யா-உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஒரு புதிய முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் நிலையில், முக்கியமான பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை தாங்க ஜெலென்ஸ்கி சமீபத்தில் அவரை தான் நியமித்தார்.

ஆனாலும் ஐரோப்பிய நட்பு நாடுகளின் ஆதரவுடன், உக்ரைன், அமெரிக்கா தலைமையிலான சமாதான வரைவு திட்டத்தின் விதிமுறைகளை மாற்ற முயன்றுள்ளது. ஆனால் அமெரிக்க முதலில் ரஷ்யாவை நோக்கி பெரிதும் ஆதரவில் சாய்ந்ததாகக் கூறப்படுகிறது.

பேச்சுவார்த்தை பாதையில் உக்ரைனின் நிலைப்பாடு எப்போதும் தேவைக்கேற்ப முன்வைக்கப்பட்டதற்கு ஆண்ட்ரிக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், அது எப்போதும் ஒரு தேசபக்தி நிலைப்பாடாக இருந்தது, என்று உக்ரைன் ஜனாதிபதி கியேவில் தனது வீடியோ உரையின் போது கூறியுள்ளார்.

## சட்டவிரோத பணம்?

கடந்த சில மாதங்களாக உக்ரைனின் தேசிய ஊழல் தடுப்புப் பணியகம், எரிசக்தித் துறையில் ஒரு பரந்த அளவிலான விசாரணையைத் தொடங்கியது. அரசுக்குச் சொந்தமான அணுசக்தி நிறுவனமான எனர்கோடோம் சம்பந்தப்பட்ட பரிவர்த்தனைகளில் சட்டவிரோத பணம் செலுத்துதல்களைக் கண்டறிந்துள்ளது. அத்துடன் ஆயிரக்கணக்கான மணிநேர ஆடியோ பதிவுகள் கைப்பற்றப்பட்டன. அவை எரிசக்தி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் செயல்படும் ஒரு உயர் மட்ட குற்றவியல் அமைப்பின் செயல்பாட்டிற்கான சான்றாகும் என்று உக்ரைனின் ஊழல் தடுப்புப் பணியக கூறியுள்ளது.



உக்ரேனிய நாட்டின் புலனாய்வாளர்களின் கூற்றுப்படி, பல அதிகாரிகள் இந்தக் குற்றம் தொடர்பான குழுவில் ஒரு பகுதியாக உள்ளனர். குற்றவியல் அமைப்பின் அடையாளம் காணப்பட்ட உறுப்பினர்களில் எரிசக்தி அமைச்சரின் முன்னாள் ஆலொசகர், கூட்டு-பங்கு நிறுவனமான எனர்கோடோமின் உடல் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்கான நிர்வாக இயக்குனர், ஒரு பிரபலமான தொழிலதிபர் மற்றும் நான்கு பேர் அடங்குவர் என்றும் கூறப்படுகிறது.

பணம் செலுத்துவதைத் தடுக்கவோ அல்லது விநியோக அந்தஸ்தைப் பராமரிக்கவோ, கூட்டாளர் நிறுவனங்களிடமிருந்து 10 முதல் 20 வீதம் வரை இலஞ்சம் கேட்டதாக அவர்கள் சந்தேகிக்கப்படுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து எரிசக்தி அமைச்சகமோ அல்லது எனர்கோடோமோ எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

பொதுமக்களின் பெரும் அழுத்தத்திற்கும் சர்வதேச அழுத்தத்திற்கும் பிறகு, ஜூலை மாதம் ஊழல் எதிர்ப்பு அமைப்புகளின் சுதந்திரம் மீட்டெடுக்கப்பட்ட பின்னர் இந்த விசாரணை தொடங்கியது.

## ஜெலென்ஸ்கி கூட்டாளி ஒருவர்?

உக்ரைனின் தேசிய ஊழல் தடுப்புப் பணியகம் (NABU) மற்றும் சிறப்பு ஊழல் தடுப்பு வழக்கறிஞர் அலுவலகம் (SAP) 100 மில்லியன் யூரோ எரிசக்தி ஒப்பந்தத்துடன் தொடர்புடைய ஊழல் திட்டத்தின் மையத்தில் இருக்கும் யெர்மக் மீது இலக்கு விசாரணையை கடுமையாக நடத்தியது. வெளிநாட்டிற்கு தப்பிச் சென்ற ஜெலென்ஸ்கியின் கூட்டாளிகளில் ஒருவர், இந்த சட்டவிரோத திட்டத்தின் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த சோதனை பற்றிய செய்தி வெளியானதிலிருந்து, பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் உக்ரேனிய அரசின் முக்கிய அதிகாரிகளின் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை அரசாங்கத்திற்குள் ஊழலுக்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். யெர்மக், தனது பங்கிற்கு சோதனையை உறுதிப்படுத்தினார். புலனாய்வாளர்கள் அவரது சொத்துக்களை முழுமையாக அணுக முடியும் என்று கூறினார். ஊழல் எதிர்ப்பு நிறுவனங்களின் சுயாட்சியை மட்டுப்படுத்த அரசாங்கம் சமீபத்தில் மேற்கொண்ட முயற்சிகளால் இந்த நிலைமை மேலும் சிக்கலாகியதால் பொது மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

## நெருக்கடியான சூழல்?

இந்த ஊழல் விசாரணை நடைபெற்று வரும் தருணம் உக்ரைனுக்கு மிகவும் கடினமான காலமாகும். பாரிய ஆயுத மோதலை மட்டுமல்ல, எரிசக்தி நெருக்கடியையும் எதிர்கொள்கிறது. ரஷ்ய தாக்குதல் அதிகரித்து வருவதுடன், மின்சார பற்றாக்குறையும், ஏற்கனவே பல ஆண்டுகளாக மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அதிருப்தியை அதிகப்படுத்தியுள்ளது.

உக்ரைனில் ஊழல் என்பது வெறும் அரசியல் பிரச்சனை மட்டுமல்ல. அது உக்ரைனியர்களின் அன்றாட வாழ்வில் பாரிய நேரடி விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பின்னணியில், மேற்கத்திய நட்பு நாடுகள், குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம், உக்ரைனில் நடக்கும் நிகழ்வுகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன.

உக்ரைனுக்கு இராணுவ மற்றும் நிதி உதவி ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான உண்மையான அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன், அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலுக்கான அழைப்புகள் பெருகி வருகின்றன.

அவ்வாறு செய்யத் தவறினால், பொது மக்கள் மற்றும் சர்வதேச பங்காளிகளின் பார்வையில் ஜெலென்ஸ்கியின் அரசாங்கத்தின் சட்டபூர்வமான தன்மை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று கருதப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஜெலென்ஸ்கி தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து அவர் எதிர்கொண்ட மிகக் கடுமையான ஊழல்களில் ஒன்றாக இந்த ஊழல் உருவெடுத்து இருக்கிறது. தற்போது இது ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு உக்ரைனின் எதிர்ப்பை பலவீனப்படுத்தும் என்று கருதப்படுகிறது.

# அவர்கள் விடுதலைக் காற்றாக மீண்டெழுவார்கள்...

புகழேந்தி தங்கராஜ்

27.11.2025

இடுப்பிலிருந்து இறங்க மறுக்கும் குழந்தையைப் போல், நம் மனத்திலிருந்து அகல மறுக்கும் கவிதைகளை விரல்விட்டு எண்ணி விடலாம். அப்படியொரு கவிதை, ஈழத்துக் கவிஞர் நித்தியானந்தனின் கவிதை:

பொய்க்காலுடன் ஒருவன்
முன்னே போகிறான்...
இரண்டு கைகளும் இழந்த தோழி அதோ..
பக்கத்தே பாருங்கள் –
நான்கு பிள்ளைகளையும்
வேள்விக்கு இரையாக்கி
நொய்ந்து கிடக்கும் ஒரு தாய்.
வேரிழந்து விழுதுகளிழந்த ஒரு தந்தை
அந்தோ... கச்சான் விற்கிறார்.
ஊன் உயிர் அனைத்தையும்
விடுதலைக்குக் கொடுத்த ஒரு சமூகம்
வதங்கிக் கிடக்கிறது...

யதார்த்தம் இதயத்தைக் கிழிக்க, படிக்கத் தொடங்கியவுடனேயே கண்களை நனைத்து விடுகிற இந்தக் கவிதை, இத்துடன் முடிந்து விடவில்லை. விழிகளில் கண்ணீர் வடிந்து கொண்டிருக்கிறபோதே, நமது இரண்டு கன்னத்திலும் ஓங்கி அறைகிறது, கவிதையின் கடைசி வரி:

'தழும்பு சுமந்தவர்களுக்குத் தாழ்வு
கொழும்பு சுமந்தவர்களுக்கு வாழ்வு'

என்று, கவிதையை முடிக்கிற இடத்தில் நம்மைக் கொதிக்க வைக்கிறார், நித்தியானந்தன். தனது கண்ணீராலேயே அவர் எழுதிய கவிதை இது! அந்தக் கண்ணீர் சுடுகின்றது.

ஒரே நேரத்தில் இரண்டு பிள்ளைகளை விடுதலை வேள்விக்கு அர்ப்பணித்த ஒரு ஈழத்துத் தாயை, ஈழத் தாய்மண்ணில் தரிசித்த நினைவு, இப்போது கூட நெகிழச் செய்கிறது என்னை!

அந்தத் தாயைப் பார்க்க விரும்பியதும், தோழர்கள் என்னை அங்கே அழைத்துச் சென்றார்கள். நாங்கள் சென்றபோது, அந்த எளிய வீட்டின் எதிர்ப்புறம் வீழ்ந்து கிடந்த அடிமரம் ஒன்றின் மீது, அந்த வீரத்தாய் அமர்ந்திருந்தார். அவரை எனக்கு அறிமுகப்படுத்தியதும், அவரின் தாள் தொழுது வணங்கினேன்.

அந்தத் தாயுடன் சேர்ந்தே வீட்டை நெருங்கினோம். IN, முருவு பாணியில் உள்ளே நுழைய இரண்டு பாதைகள். என்னை அழைத்துச் சென்ற தோழர்கள், என்ன நடந்ததென்று விவரித்தபோது அதிர்ந்து போனேன்.

சிங்களப் படையுடனான மோதல் ஒன்றில், மூத்த மகன் உயிரிழக்கிறான். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வழிகாட்டுதலின் படி, அவனது வித்துடல், தாய்வீட்டுக்கு எடுத்து வரப்படுகிறது. உற்றார், உறவினர் அஞ்சலி செலுத்துகின்றனர். அதன்பின், அந்த வீரனின் உடல், பொதுமக்களும், புலிகளும் வீர வணக்கம் செலுத்துவதற்காக, பொது இடத்தில் வைக்கப்படுவது வழக்கம். அந்த மூத்த மகனின் உடல், உற்றார் உறவினரின் அஞ்சலிக்குப் பிறகு, பொது இடத்தில் வைப்பதற்காக இரண்டு வெளி வாசல்களில் ஒன்றின் வழியாக வெளியே எடுத்துச் செல்லப்பட்ட அதே கணத்தில், இன் னொரு வாயிலில் நுழைகிறது, களத்தில் பலியான இளைய மகனின் திருவுடல்.

தோழர்கள் விவரித்தபோது, அந்தக் கொடும் துயர்க்காட்சி மனக்கண்ணில் விரிய, நிலைகுலைந்து நின்றேன்.

எந்த சங்க இலக்கியத்திலும், ஏன், எந்த உலக இலக்கியத்திலும், இப்படியொரு காட்சி எழுதப்பட்டிருக்காது என்று உறுதியாக நம்புகிறேன் நான். இப்படியொரு ஒரிஜினல் இலக்கியத்தைப் படைத்தது, எங்கள் தமிழீழத் தாய் மண் தான்!

அந்தத் தாயின் கைகளை நான் நெகிழ்ச்சியோடு பற்றியதும், ஒரு மௌனப் புன்னகையுடன் அந்த வீரத்தாய் என்னைப் பார்த்ததும், நெஞ்சை விட்டு நீங்காத அழுத்தமான பதிவு. அப்படியொரு தாயைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்பு, என் வாழ்வில் எனக்குக் கிடைத்த ஆகப் பெரிய வரம்.

நித்தியானந்தனின் கவிதையையும், அந்த வீரத்தாயைச் சந்தித்த நிகழ்வையும், ஒருசேர நினைத்துப் பார்க்கையில், உடலின் ஒவ்வொரு நரம்பும் சிலிர்க்கிறது. இரண்டு மாவீரர்களைத் தம் தாய் மண்ணுக்கு அர்ப்பணித்த தாய்மார்கள், தந்தைமார்கள், இன்னும் பல பேர் இருப்பார்கள். அவர்கள் இருக்கும் போதே, தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதுதான், அந்த வீரப் பெற்றோருக்கு நாம் செலுத்துகிற உண்மையான நன்றிக்கடனாக இருக்கும். இதை உணர்ச்சி பொங்க என்னிடம் சொன்னவர், சகோதரி தமிழினி.

தமிழினியை உங்களைப் போலவே நானும் மறக்கவில்லை. அவரைப் பற்றிய வதந்திகளையெல்லாம் பொசுக்குகிறது அவரது அர்ப்பணிப்பு. மறுவாழ்வு முகாம் கொடுமைகளால் உடல் நலிந்து உயிரிழந்த அவரது உடல் வெளியே எடுத்து வரப்பட்டபோது, 'இயக்கம் இருந்திருந்தால் எப்படி எடுத்திருப்பாங்க' என்று, அவரது தாய்வழி உறவுகள் கண்ணீருடன் கதைத்ததைக் கேள்விப்பட்டபோது, இதயம் கனத்தது. மரத்துப்போகாத மனோதிடத்துடன் இருந்தவர்கள் அந்த இறுதி நிகழ்வில் கலந்து கொண்டது ஆறுதலாக இருந்தது. தமிழீழக் காற்றோடு காற்றாக கரைந்து போனது தமிழினியின் கனவு.

அதைப்போலவே 'அபித' கப்பலைத் தனி ஒருத்தியாகத் தகர்த்த பெண் வேங்கை அங்கயற்கண்ணியின் உயிரும் உடலும் காங்கேசன்துறை சமுத்திரத்தின் காற்றோடு காற்றாகக் கலந்து விட்டது. அங்கு வீசும் காற்றில் இப்போது கூட கேட்டுக் கொண்டிருக்கிறது, 'நான் காத்தோடு காத்தாய்ப் போயிடுவேன் அம்மா' என்று, தன் தாயிடம் கயல் சொன்ன கடைசி வார்த்தைகள்.

தாயிடம் சொன்னதைக் காட்டிலும், தோழிகளிடம் அவள் சொன்னது, ஈடு இணையற்ற வரலாறு.

கயல் என்கிற அங்கயற்கண்ணி, கரும்புலித் தாக்குதலுக்காக தனக்குத் தரப்படுகிற வாய்ப்பு, நல்லூர்க்கோயில் திருவிழாக் காலமாக இருக்க வேண்டுமென்று விரும்பினாள். ஏன் என்று கேட்ட தோழிகளிடம் கயல் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் இதயத்தைப் பிழிகிற இலக்கியம். புறநானூறுகளெல்லாம் பேசாத ஒன்றை, தமிழீழ மண்ணின் பெண்ணரசி கயல் பேசிய வரலாறு.

கயலின் குடும்பம், எளிய குடும்பம். நல்லூர் கோயில் திருவிழாவில் கச்சான் விற்பாள் கயலின் தாய். அது, நாலைந்து மாதம் குடும்பச் செலவுக்குப் பேருதவியாக இருக்கும். நாலு காசு கையிலிருக்கும்.

தன்னிடம் கேள்வி கேட்ட தோழிகளிடம் கயல் சொன்னாள்: 'அடுத்த வருஷம் இதே நாளில் அம்மாவைப் பார்த்து ஆறுதல் சொல்ல நீங்கள் என் வீட்டுக்குப் போவீர்கள் தானே... வீடு தேடிப் போகிற என் தோழிகளுக்கு, அம்மா, வாய்க்கு ருசியா சமைச்சுப் போட வேண்டாமா? அதுக்கு, அவங்க கையில் நாலு காசு இருக்கணும் இல்லையா... நல்லூர் கோயில் திருவிழா சமயத்துலதான் அது முடியும்... அதனாலதான், திருவிழா நாளில் எனக்கான வாய்ப்பு கிடைக்கணும்னு நினைக்கிறேன்!'

கயல் என்ற அந்த பீனிக்ஸ் பறவை, போர் இலக்கியங்கள் எழுதாத ஒரு இணையற்ற வீரத்தைப் பேசுகிறது. தாய் மண்ணுக்காகச் செத்து விடுவாளாம் அவள்... அதைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படமாட்டாளாம்... துக்கம் விசாரிக்க வருகிற தோழிகளுக்கு வாய்க்கு ருசியாக அம்மா சமைத்துப் போட வேண்டுமாம்.. இதைப்பற்றி மட்டும்தான் கவலைப்படுவாளாம்... எப்படியொரு மனசு அந்தப்பெண் வேங்கைக்கு!

கயல்...
நீ கரும்புலி மட்டுமல்ல...
உலகின் ஈடு இணையற்ற சிருஷ்டி!
நீ
காற்றோடு காற்றாகப்
போயிருக்கலாம் தாயே!
ஆனால்
தமிழீழ மண்ணை
சுதந்திரக் காற்று தழுவுகிறபோது
அந்தக் காற்றோடு காற்றாய்
நிச்சயம் நீ திரும்பி வருவாய்!
வருவாய்க்காக மட்டுமே
வெறும் வாயோடு உலவுகிற
வாய்ப்பேச்சு வீரர்கள்,
விடுதலைக்காற்றாய்
நீ உயிர்த்தெழும்போது
தலைமறைவாகிவிடுவார்கள்!

'தழும்பு சுமந்தவர்களுக்குத் தாழ்வு
கொழும்பு சுமந்தவர்களுக்கு வாழ்வு'

என்கிற நித்தியானந்தனின் கண்ணீர்க் கவிதையை, காற்றோடு காற்றாய் விடுதலையைத் தவழவிடும் எங்கள் மாவீரரின் மூச்சுக்காற்று நிச்சயமாகத் திருத்தி எழுதும்! யாருக்குத் தாழ்வு, யாருக்கு வாழ்வு என்பது அப்போது தெரிய வரும்.



எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.
நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்
உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு
தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.



www.sangathamil.ca

# புட்டினின் இந்திய வருகையின் எதிரொலி: மோடியை மீள அரவணைக்கும் ட்ரம்ப்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



புட்டினின் இந்தியா வருகையின் எதிரொலியால், மோடியை மீள அரவணைக்கும் அளவுக்கு ட்ரம்ப் தள்ளப்பட்டுள்ளார். இதற்குரிய முக்கிய காரணம் பொருளாதார நலன் சார்ந்தது தான். ஐரோப்பிய நாடுகள் உக்ரேனுக்கு முண்டு கொடுத்து போரை நிறுத்தாமல், ரஷ்யாவை தொடர்ந்து பரம விரோதி-யாகவே தொடர்ந்து பார்த்து வருகின்றனர். அமெரிக்காவின் அமைதி திட்டத்தை தட்டிக் கழிப்பதுடன் போர் நிறுத்தம் செய்ய ஐரோப்பிய நாடுகள் மறுத்து வரும் சூழலில் புட்டினின் இந்திய வருகை முக்கியத்துவம் பெறுகிறது

12.12.2025

உலக அரங்கில் அரசியல் மாற்றங்கள் பாரியளவில் மாறி வருகின்றன. தற்போது மீண்டும் இந்தியா தான் எங்கள் முக்கியமான கூட்டாளி நாடு என அமெரிக்கா அறிவித்துள்ளது. இதற்கு முக்கிய காரணமாக இருப்பது புட்டினின் இந்திய வருகையின் எதிரொலி தான்.

ஐரோப்பிய நாடுகள் உக்ரேனுக்கு முண்டு கொடுத்து போரை நிறுத்தாமல், ரஷ்யாவை தொடர்ந்து பரம விரோதியாகவே தொடர்ந்து பார்த்து வருகின்றனர். அமெரிக்காவின் அமைதி திட்டத்தை காரணம் இல்லாமல் தட்டிக் கழிப்பதுடன் போர் நிறுத்தம் செய்ய ஐரோப்பிய நாடுகள் மறுத்து வருகின்றன. இது தற்போதைய உலக அரசியலில் பெரும் விவாதங்களை கிளப்பியுள்ளதுடன், மாறி வரும் அரசியல் சூழலையும் ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்த வேளையிலே புட்டினின் இந்தியா வருகையின் எதிரொலியால், மோடியை மீள அரவணைக்கும் அளவுக்கு ட்ரம்ப் தள்ளப்பட்டுள்ளார். இதற்குரிய முக்கிய காரணம் பொருளாதார நலன் சார்ந்தது தான்.

### "அமெரிக்கா முதலில்" கொள்கை:

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதை தொடர்ந்து 'அமெரிக்கா முதலில்' (America First) என்ற கொள்கையை பின்பற்ற தொடங்கினார். மேலும் இந்தியா மீதான கடுமையான பொருளாதார வரிகளை ஆரம்பம் முதலே தொடர்ந்தார்.

குறிப்பாக இந்தியா மீது அதிகபட்சமாக ஐம்பது சதவீதம் இறக்குமதி வரிவிதிப்பு, சட்டவிரோதமாக குடியேறியதாக கூறி இந்தியர்களை கைவிலங்கிட்டு நாடு கடத்தியது, இந்தியர்கள் அதிகம் பெறும் அமெரிக்காவின் எச்-1பி விசா கட்டணத்தை 1 மில்லியன் டாலர்கள் உயர்த்தி அறிவித்தது உள்ளிட்ட பல்வேறு அழுத்தங்களை அவர் கொடுத்தார்.

இதனால் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி, அமெரிக்காவில் இருந்து உழைத்து அனுப்பப்படும் பணம் உள்ளிட்டவை சரிந்து பொருளாதாரம் வெகுவாக பாதித்தது. இருப்பினும் இதையும் இந்தியா கண்டு கொள்ளாமல் இருந்தது. குறிப்பாக இந்த நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் அமெரிக்க தடைகளை கடந்து 7.3 சதவீதமாக உயரும் என இந்திய மத்திய வங்கி வட்டாரங்களும், பல அமெரிக்க பொருளாதார நிறுவனங்களும் கணித்துள்ளன.

இத்தகைய உலக அரசியல் சூழலில் ரஷ்ய அதிபர் புட்டின் அரசு முறை பயணமாக இந்தியா வந்தார்.

இந்தியா அரசு ரஷ்யா உடன் நட்பு பாராட்டி வருகிறது. அதே போல் அமெரிக்கா அரசுடன் பொருளாதார ஒத்துழைப்பையும் பேணி வருகிறது. புதிய வரிகளால் இந்திய பொருளாதாரம் மேலும் பாதிக்கப்பட்டாலும், அரசியல் ரீதியாகவும் நட்புறவை மேம்படுத்தி வருகிறது.

இந்நிலையில் புட்டினின் இந்திய பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது. நீண்ட காலமாக ரஷ்ய அரசை தனிமைப்படுத்த ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் முயன்று வந்தன. ஆனால் தற்போது ரஷ்யா தனது சுய பொருளாதார பலத்தில் உறுதியாக முன்னேறி வருகிறது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை மட்டுமின்றி, உலக பொருளாதார அமைப்பின் கூட்டமைப்பே தெரிவித்துள்ளது.

இந்த நிலையில்தான் அமெரிக்க அதிபர் மூலோபாய பொருளாதார ரீதியாக இந்திய அரசை மீண்டும் அரவணைத்து செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். ரஷ்ய அதிபர் புட்டினும் இந்தியா கூட்டாளி என்கிற அந்தஸ்தை கடந்து தங்களுடைய நீண்டகால நண்பராக காட்டி வருகிறார்.

அத்துடன் இந்தியாவின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளை செய்ய தயாராக இருப்பதாக புட்டின் தெரிவித்துள்ளார். ஒருநாட்டின் பொருளாதாரம் அதன் ஆற்றல், இராணுவம், வர்த்தகம் அதற்கான மூலப் பொருட்களை உள்ளடக்கியது. இந்தியா போன்ற பெரிய மக்கள் தொகை கொண்ட நாட்டிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் ரஷ்ய அதிபர் புட்டின் அளிப்பதாக கூறியது அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளை கதிகலங்க செய்துவிட்டது என்றே சொல்லலாம்.

### வேற்றுமையில் ஒற்றுமை :

புட்டினின் இந்திய வருகை, மேற்கத்திய நாடுகளின் புறக்கணிப்பை முறியடித்தல், இந்தியா-ரஷ்ய உறவை வலுப்படுத்துதல், குறிப்பாக பாதுகாப்பு மற்றும் எரிசக்தி துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது போன்ற விடயங்களே முதன்மை நோக்கமாக இருந்தன.

இந்தியாவை வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடாகப்

புட்டின் பாராட்டியதுடன், மற்றும் புவிசார் அரசியல் தாக்கங்கள் குறித்து பரவலான விவாதங்களையும், பாராட்டுகளையும் இந்திய அரசு பெற்றுள்ளது. ஆனால் மேற்கத்திய நாடுகளின் அவதானம் இந்திய அரசின் மீது மேலும் அதிகரித்துள்ளது. ரஷ்யாவுடனான இந்தியாவின் நெருக்கத்தை மேற்கத்திய நாடுகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

2021க்கு பிறகு புட்டினின் இந்தியா வருகை, இரு நாடுகளின் சிறப்பு வாய்ந்த உத்தி கூட்டாண்மையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

பாதுகாப்பு, எரிசக்தி, ஆயுதங்கள், போன்ற முக்கிய துறைகளில் இந்தியா-ரஷ்யா இடையேயான ஒப்பந்தங்கள் மற்றும் ஒத்துழைப்பு முக்கியத்துவம் பெறுகின்றன.

இதேவேளை இந்தியா தனது பன்முகத்தன்மையில் ஒற்றுமையைக் கண்டிருப்பதாக புட்டின் புகழ்ந்துரைத்துள்ளார். உக்ரைன் போர் மற்றும் உலகளாவிய அரசியல் பதட்டங்களுக்கு மத்தியில் இந்த வருகை, இந்தியா தனது நடுநிலைமையையும், ரஷ்யாவுடனான உறவையும் தொடர்வதைக் காட்டுகிறது.

புட்டினின் இந்திய வருகை இருதரப்பு உறவை வலுப்படுத்துவதோடு, உலக அரசியலில் இந்தியாவின் நிலைப்பாட்டை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறது.

### அமெரிக்கா புதிய தேசிய பாதுகாப்பு கொள்கை:

இந்த நிலையில் அமெரிக்கா புதிய தேசிய பாதுகாப்பு கொள்கை என்ற பெயரில் தமது கொள்கையை திருத்தி வெளியிட்டுள்ளது. அதில் இந்தியாவை முக்கிய கூட்டாளி நாடாக அறிவித்துள்ளது. வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் உலக பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு நிலைத்தன்மை, தொழில்நுட்ப முன்னேற்றம் அகியவற்றில் இந்தியா முக்கிய சக்தியாக உள்ளது. அதனால் இந்தியாவுடன் நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவது, அமெரிக்காவின் பாதுகாப்பு குறிக்கோளில் முக்கிய அங்கமாக இணைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ட்ரம்பின் வெளியுறவு கொள்கைகளை இராணுவ தலைமையகமான பெண்டகனின் முன்னாள் அதிகாரி மைக்கேல் ரூபின் விமர்சித்துள்ளார். இந்தியா உடனான டிரம்பின் வெளியுறவு கொள்கைகள் பெரும் பிழையை ஏற்படுத்திவிட்டது. இதனால் நீண்டகால நட்புறவில் இருந்த இந்தியாவை ரஷ்யா உடன் சாய செய்துவிட்டது. ரஷ்யா உடன் இந்தியா செயல்பட செய்ததற்காகவே ட்ரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு கொடுக்க வேண்டும் என அவர் விமர்சித்தார்.

### இந்திய – ரஷ்ய உறவு:

உக்ரேனிய போருக்கு பின்னர் இந்திய - ரஷ்ய பொருளாதார உறவு மேலும் வலுவடைந்து உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்த்தால், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எட்டு பில்லியன் டாலராக இருந்த வர்த்தகம் இப்போது 68 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

ரஷ்யாவிற்கு எதிராக மேற்கத்திய நாடுகள் விதித்த தடைகள் இருந்த போதிலும், இந்தியா ரஷ்யாவிடம் இருந்து மசகு எண்ணெய் வாங்குவதைத் தொடர்கிறது. இந்திய இராணுவம் இன்றும் ரஷ்யாவிடமிருந்து பெற்ற ஆயுதங்களை நம்பியே உள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்ய அதிபர் புட்டின் இந்தியா வந்தபோது இருந்த உலகம் இப்போது கணிசமாக மாறியுள்ளது. அந்தப் பயணத்திற்குப் பிறகுதான் ரஷ்யா உக்ரேன் மீது தாக்குதல் நடத்தியது. அதன் காரணமாக உலக அரங்கில் ரஷ்யாவை தனிமைப்படுத்த மேற்குலக நாடுகள் முயன்றன.

அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அதிபராகியதன் பிறகு இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் பதற்றமான சூழ்நிலை நிலவியது. அதே சமயம் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து வலுவடைந்தன.

மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை தனிமைப்படுத்த முயன்றாலும், அந்தத் தந்திரம் வெற்றிபெறவில்லை. மேலும் மேற்கு நாடுகளுக்கு வெளியே இந்தியா, சீனா, ஆபிரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவில் நாடுகளில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் தலைமையிலான அரசை வரவேற்கிறார்கள், மேலும் உறவை பேணி காக்கிறார்கள்.

இதற்கு முக்கிய காரணம் ரஷ்யா நீண்ட காலமாக இந்த நாடுகளுக்கு ஆதரவளித்து வருகிறது. இப்போது இந்த நாடுகள் ரஷ்யாவிற்கு ஆதரவளிக்கின்றன. இது ரஷ்யாவுக்கு மிக முக்கியமான காலகட்டமாகும்.

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவுகளுக்கு ஒரு நீண்ட வரலாற்று தொடர்பு உள்ளது. புட்டின் பதவிக்கு வந்த பிறகான கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இந்த உறவு வளர்ந்து கொண்டே இருக்கிறது.

மேலும் பாதுகாப்புத் துறை, அணுசக்தி வளத்துடன் ரஷ்யாவுடன் நீண்ட காலமாக உறவை இந்திய அரசு தொடர்ந்து கொண்டுள்ளது.





# புலம்பெயர் நாடுகளில் விதிக்கப்படும் தடைகளுக்கு முகம் கொடுப்பது எப்படி?

**– தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும், சமர் நூலாக்கப் பிரிவுப் பொறுப்பாளருமான யோகரட்ணம் யோகி –**

தமிழகம் உட்பட புலம்பெயர் நாடுகளில் பரப்புரைப் பணிகள் மற்றும் அரசாங்கங்களால் விதிக்கப்படும் தடைகளுக்கு முகம் கொடுப்பது எப்படி? என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும், சமர் நூலாக்கப் பிரிவுப் பொறுப்பாளருமான யோகரட்ணம் யோகி விளக்கம் அளித்துள்ளார்.

இந்த சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஊடாகவும் அனைத்துலகம் சொல்கின்ற சில நடைமுறைகளுக்கு ஊடாகவும் சில விடயங்களில் ஒத்துப் போகின்றோம். அளவுக்கு மீறிப்போனால் ஒத்துப்போக முடியாத விடயங்களில் ஒத்துப்போக முடியாது தான். ஆனால் பல வழிகளில் நாங்கள் ஒத்துப்போய் இருக்கின்றோம்.

உலக அரசியலில் ஒரு பக்கமாகத்தான் எல்லாம் நடைபெறும். ஆனாலும் ஏதோ ஒரு கட்டத்திலே அவர்கள் இந்த சிங்கள அரசாங்கத்துடன் எதுவுமே செய்ய முடியாது என்ற நிலைமைக்குத் தள்ளப்படலாம். அவர்களும் சில விடயங்களைப் பார்க்கிறார்கள்.

விடுதலைப் புலிகள், அடக்கப்பட வேண்டும். சிங்கள தேசம் ஏதாவதொரு தீர்வுத் திட்டத்தை அது உண்மையில் ஒரு போலியாக இருந்தாலும் அதனை முன்வைக்கும். அதற்கு ஊடாக ஏதாவது செய்வதுபோல் காட்டிக்கொள்ளலாம் என்பது போன்ற ஒரு போக்கை கடைபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எதுவுமே நடக்கப்போவதில்லை என்பது தெரியும். ஆக ஏதோ ஒரு கட்டத்தில் அனைத்துலகம் ஒட்டுமொத்தமாக இதிலிருந்து விலக வேண்டி வரலாம். ஆக்கப்பூர்வமாக செயல்பட வேண்டி வரலாம்.

ஆக்கப்பூர்வமாக செயற்படாது போனால், அவர்கள் தங்கள் சார்ந்த, தங்கள் விடயங்கள் சார்ந்து ஒரு தோல்வியை ஏற்கத்தான் வேண்டும்.

அதனை எவ்வளவு தூரம் ஏற்பார்கள் என்று தெரியவில்லை. இருந்தாலும் எதிர்மறையாக அவர்கள் செயற்படவில்லை என்ற ஒரு கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். அதற்காக நாங்கள் மனம் தளர்ந்துவிடக் கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்தாகும்.

ஒருவகையில் இந்தப் புலம்பெயர் வாழ் தமிழர்களுடைய வளர்ச்சி மூலம், அவர்கள் செய்கின்ற பண உதவியை அல்லது வேறு பல உதவிகளை நிறுத்துவதன் மூலம், புலிகளை செயலிழக்கச் செய்யலாம் என்று இந்த அனைத்துலக நாடுகள் நினைக்கின்றன. அந்த வகையிலே இந்தப் புலம்பெயர் வாழ் தமிழர்களுக்கு ஒரு அச்சுறுத்தலை தரத்தான் அதனைச் செய்கிறார்கள். புலம்பெயர் வாழ் மக்கள் ஒன்றை தெரிந்து கொண்டிருப்பார்கள் என நினைக்கிறேன். அனைத்து நாடுகளும் பல சட்டதிட்டங்களை வைத்திருக்கின்றன. அதற்குள் பல ஓட்டைகளை வைத்திருக்கின்றன.

ஏனெனில் அவற்றின் மூலம் தாங்களும் தப்ப வேண்டும் என்பதற்காகவே அந்த ஓட்டைகள் அங்கு வைக்கப்பட்டுள்ளன. ஆக அனைத்துலக நாடுகளுடைய அந்த அரசியல் அமைப்புக்கு உட்பட்டுத்தான் புலம்பெயர் வாழ் தமிழர்கள் போராட்டங்களை நடத்த முடியும், சட்டத்திற்குள் நுழைந்து வர முடியும். இவர்களில் ஒருசிலரைப் பிடித்து விட்டார்கள் என்பதற்காக ஒதுங்கிப்போய் இருப்பதென்பது சரியான முறையல்ல.

ஏதோ வகையில் அந்த நாட்டுக்குரிய சட்டத்திட்டங்களுக்கு உட்பட்ட அங்கு பெரிய போராட்டங்களை அவர்கள் நடத்த முடியும். தொடர்ந்து போராட்டங்கள் நடக்கும்போது, சில பிரச்சினைகள் வரலாம். சில வேளைகளில் சிலரைக் கைது செய்யலாம், அவர்களைச் சிறையில் அடைக்கலாம். அவற்றையெல்லாம் எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் வகையில் மக்கள் போராடினால், அந்த நாட்டினுடைய கொடுமையான இந்த அடக்குமுறைகள் தோல்வி அடையும்.

ஒரு கட்டத்துக்கு மீறி ஓரளவுக்கு ஜனநாயகம், மனித உரிமைகள் இவற்றையெல்லாம் வெளிநாடுகளுக்குச் சொல்வதற்காக, தங்கள் மக்களுக்காக விட்டு வைக்கிறார்கள். இவையெல்லாம் தங்களைப் பாதிக்கிறது என்பதனை அந்தந்த நாட்டு மக்கள் உணரும்போது அவர்களும் எங்கள் போராட்டத்துடன் இணையத்தான் செய்வார்கள், எங்களுடன் குரல் கொடுக்கத்தான் செய்வார்கள்.

எனவே அங்கே, நாங்கள் எவ்வளவு உற்சாகமாக, உறுதியாக துணிந்து அந்த நாட்டினுடைய சட்ட திட்டங்களுக்கு ஊடாக, அவர்கள் அந்த நாட்டின் சட்ட திட்டங்களில் இருக்கின்ற ஓட்ட, உடைவுகளுக்கு ஊடாக அவர்கள், கூறுகின்ற சட்டங்களை உடைப்பதற்கான ஒரு முயற்சியை செய்வோமாக இருந்தோமானால் நிச்சயமாக நாங்கள் வெற்றி பெறுவோம். அதில் நாங்கள் தோற்க மாட்டோம்.

புலம்பெயர் வாழ் தமிழர்களின் முழுமையான செயற்பாடுகள் என்ன என்பதனை நான் முழுமையாக அறிந்துகொண்டவன் அல்ல.



கடமையுணர்வோடு பல்வேறு அமைப்புகளுடன் சேர்ந்து புலம்பெயர் வாழ் தமிழர்கள் கணிசமான பங்களிப்பை இடைப்பட்ட காலத்தில் செய்திருக்கிறார்கள் என்பதனை நாம் அறிவோம்.

ஆனால் அந்தப் பங்களிப்பையும் அந்த முயற்சியையும் தடுப்பதற்கான ஒரு முயற்சியைத்தான் அனைத்துலக அரசுகள் செய்கின்றன. புரப்புரைகளும் அந்த வகையிலேதான் சிங்கள அரசும் பலரும் செய்கின்றனர்.

புலம்பெயர் வாழ் தமிழர்கள் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்க வேண்டும்.

அதாவது என்னவெனில், நாங்கள் உதவுவோம், தோற்றால் உதவமாட்டோம் என்ற மனநிலை இருக்கக் கூடாது.

நாங்கள் எவ்வளவுக்களவு சிக்கல்களை, சிரமங்களைச் சந்திக்கிறோமோ அந்த நேரத்தில்தான் அவர்கள் எங்களுடன் உறுதியாக இருக்க வேண்டும். இந்நிலைப்பாட்டில் உறுதியாக நிற்க வேண்டும். அதில் தெளிவாக இருக்க வேண்டும்.

எங்களுக்குரிய பணி என்னவென்று சொன்னால் அங்கு போராடுகின்ற நோக்கம் இதுதான்.

எங்களுடைய குறிக்கோளில் தடம்புரண்டதில்லை. 20 ஆயிரத்துக்கும் மேலான போராளிகளை, பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தப் போராட்டத்துக்காக உயிரிழந்திருக்கிறார்கள்.

இந்த மண் மீட்கப்பட வேண்டுமானால், எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், எங்களால் இந்தப் போராட்டம் வலுவூட்டப்பட வேண்டும் என்பதிலே குழப்பம் அடையாமல், அனைத்துலகம் எந்த வகையில் தடைபோட்டாலும், அச்சுறுத்தினாலும், அதற்கு அப்பாற்பட்டு, பரப்புரைகள் எல்லாம் சரிகள் இருக்கலாம் பிழைகள் இருக்கலாம் அது வேறு விடயம். அவற்றையெல்லாம் தள்ளி வைத்துவிட்டு, நாங்கள் ஒன்றுபட்டு நின்று இந்தப் போராட்டத்தில் நிச்சயமாக வெல்வோம் என்ற நம்பிக்கையோடு, இப்போது எந்த வகையில் அவர்கள் உதவி செய்தார்களோ, இப்போது சிலவேளை அச்சம் காரணமாக அவர்கள் ஒதுங்கியிருக்கலாம். ஆனால் அந்த ஒதுக்கத்திலிருந்து வெளியே வந்து அவர்கள் மீண்டும் எப்படி எங்களோடு நின்றார்களோ, அதுபோல எங்களுடன் இருப்பார்கள் என்றால், எங்களுக்கு நம்பிக்கை தரும். எங்களுடைய உளவுரணை கூட்டும். நாங்கள் பல விடயங்களை எளிதாகச் சாதிக்க உதவும்.

கூட்டு முயற்சி ஒருபக்கம் இருந்தாலும், இன்றைய சூழ்நிலையில் தனிமனித முயற்சி என்பதும் முக்கியம் எனக் கருதுகிறேன். நாங்கள் கணினிகளைப் பயன்படுத்தலாம், தொலைக்காட்சியைப் பயன்படுத்தலாம், செய்தித்தாள்களைப் பயன்படுத்தலாம்....

ஆனால் உள்ளூரில் இருக்கின்றவர்கள் தங்களின் கருத்துக்களைச் சொல்லலாம்.

இங்கு நடக்கின்றன படுகொலைகளை, இங்கு நடைபெறும் கொடுமைகள், அனைத்துலக நாடுகள் அவற்றைக் கண்டும் காணாமல் இருக்கின்ற தன்மைகள், இவற்றையெல்லாம் துண்டுப் பிரசுரங்களாகவோ, கலந்துரையாடல்களாகவோ வெளியிட்டு அல்லது இதுபோன்ற வேறு வகையிலோ தொடர்ந்து செய்து கொண்டுதான் வர வேண்டும்.

பல நாடுகளில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கலாம், அல்லது மிகப்பெரிய நிறுவனங்களில் வேலை செய்பவர்களாக இருக்கலாம். அவர்களைச் சந்திப்பதும், அவர்களுடன் கலந்து உரையாடுவதும், அவர்களுடன் பண்பாடு ரீதியில், கலாச்சார ரீதியில் உறவுகளை வளர்த்துக் கொண்டு, அதன் மூலம் இக்கருத்துக்களை முன்வைப்பதும், இப்படியாக ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது.

இதனைப் பலர் சேர்ந்து செய்யலாம். அல்லது தனிமனிதராகவும் செய்ய முடியும்.

ஈழவேந்தனை எடுத்துக் கொண்டால் அவர்கள் தனி மனிதர் தான். அவர் உலகம் எல்லாம் செல்கிறார்.

உலகம் எல்லாம் செல்லும் இடங்களில் தன் கருத்துக்களை சொல்லி வருகிறார். அதில் இருக்கின்ற விடயம் என்வெனில், அது எந்தளவில் வெற்றியைக் கொடுக்கிறது என்பதும் முக்கியமல்ல.

நீங்கள் செய்ய வேண்டிய வேலையை தொடர்ந்து செய்ய வேண்டும். எல்லோருடனும் தொடர்பு கொண்டு, உறவாடி, நட்பை வளர்ப்பதுதான் முக்கியம். அந்த நட்பின் துணையோடு கருத்துக்களை வளர்ப்பது.

இதன் மூலம் எங்களுக்குரிய தொடர்பாடல்களை உருவாக்குவதும் முக்கியம்.

இத்தகைய தொடர்பாடல்களும், தொடர்புகளும், அவர்களின் மூலமாகக் கிடைக்கும் நட்பும்தான் பல போராட்டங்களின் தலைவிதியை தீர்மானித்துள்ளன.
ஆகவே அந்த முயற்சியிலேயே எல்லோரும் ஏதோ ஒரு வகையில் கணிசமான நேரத்தை ஒதுக்கிச் செயற்பட வேண்டும். அது பெரிய பயனைத் தரும்.

இங்கு நான் ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும். அங்கு எனென்ன மாதிரியான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர், என்னென்ன செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரியாது. நாங்கள் சில விடயங்களைச் குறைவென்று சொல்லிவிடலாம் தான். ஆனால் அது பலருடைய மனதைப் புண்படுத்தக்கூடும். ஆகவே இதற்கு அப்பாற்பட்டு, இருக்கின்ற சிக்கல் என்னவெனில், பொதுவாக மனித இயல்பு எப்படிப்பட்டதென்றால்,

www.sangathamil.ca

வெற்றிகளைக் கண்டு பூரிப்பதும், தோல்விகளைக் கண்டு துவளுவதும்தான். இந்த இயல்பு பொதுவானது.

இருந்தாலும் நாங்கள் நம்பிக்கையோடு இருக்கின்ற மனிதர்கள், இதனையெல்லாம் பொதுவாகப் பார்க்கின்ற மனிதர்கள், தெளிவான பார்வை உடையவர்களுக்கு நம்பிக்கையூட்டி, தொடர்ச்சியாக அவர்களது பங்களிப்புக்கு உற்சாகமூட்டி, தொடர்ந்து செயற்பட வேண்டிய சூழல்தான் இருக்கிறது.

அதாவது வெற்றியின்போது பலர் கூட இருப்பார்கள். தோல்வியின்போது ஒருவரும் உடன் இருக்கமாட்டார்கள். இதனைப் பலமுறை சந்தித்திருக்கிறோம்.

ஆக இப்படியான கால கட்டங்களில்தான் குறிப்பிட்ட சில மனிதர்களின் முயற்சி என்பது முக்கியமாகிறது.

இதற்கு ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் தானே பொறுப்பேற்றுக்கொண்டு செயல்பட முன்வருவார்களேயானால், இங்கு பரப்புரை செய்பவர்களுக்கு பக்கபலமாக உதவியாக இருக்கும்.

ஊடகங்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசிய உணர்வை, தமிழரின் தொன்மையை, எங்களுடைய விடுதலைப் போராட்டத்தினுடைய ஆழமான அர்ப்பணிப்பு உணர்வை கேள்விக் குறியின்றி வெளியிட வேண்டும்.

இந்த விடயத்தில் அவர்கள் குழம்பிக் கொண்டிருக்கக் கூடாது. உதாரணமாக நீங்கள் எடுத்துக் கொண்டால், டி.பி.எஸ். ஜெயராஜ் போன்றவர்கள் தங்களை நடுநிலையாளர்கள் என்று கூறிக்கொண்டு பல்வேறு விடயங்களை எழுதுவார்கள். ஆனால் சில விடயங்களில் இடறுவார்கள். அது முறையுமல்ல, சரியுமல்ல. அவரிடமும் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

அமெரிக்காவில் மனித விழுமியங்கள் என்று பேசுகிறார்கள் என்று சொன்னால், அது ஒரு பெரிய ஆலமரம். அந்த மரத்தின் ஒன்றிரண்டு கொப்புக்களை தட்டவிடுவார்கள். நாங்கள் இந்த ஆலமரத்தின் நிழலுக்குள்ளே உயிர்த்தெழுந்து வருகின்ற ஒரு சிறிய மரம். இதனை கொப்புத் தட்டுகின்ற வேலைகளை நீங்கள் பார்க்க வேண்டாம்.

அவர்கள் தட்ட விடுகிறார்கள் என்பது உண்மையில் அது பொய்மை. இதற்குள் சேரன் போன்றவர்கள் கூட ஒரு காலத்தில் அகப்பட்டுத்தான் கிடந்தார்கள். அவர்கள் பேசிய மனித விழுமியங்களை அவர்கள் கைவிட்டு விட்டு குவான்தம் பே அப்படி, இப்படி சிறைக்கைதிகள் மீது சித்ரவதை என்பதெல்லாம் இன்று வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றது. இது இன்று நடக்கின்ற விடயமில்லை. காலங்காலமாக நடந்து கொண்டிருக்கும் விடயம்தான். ஆனாலும் இவர்கள் அள்ளுப்போகின்ற தன்மையொன்று உண்டு.

இவர்கள் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில், உலக அரசியல் என்பது, அரசு என்பது தன்னலம் சார்ந்தே செயற்படும்.

தமிழர்களைப் பொறுத்தவரையில், எங்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளைப் பொறுத்தவரையில், நியாயமான சில குறைபாடுகள் இருக்கலாம். அதனை ஒதுக்கி வைத்துவிட்டு, இந்தப் போராட்டத்துக்குப் பின்னால் முழுமையான அர்ப்பணிப்போடு, அந்தப் போராட்டத்தினுடைய சரியான விடயங்களை தெளிவாகச் சொல்லிக் கொண்டு வந்தாலே போதும்.

அதில் இடையிடையே குழப்பம் இருக்கத் தேவையில்லை. இதில் நடுநிலைமை என்று ஒன்றில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எங்களுக்கு எதிராக உலக அரசாங்கம் மட்டுமல்ல, சிங்கள அரசாங்கம் மட்டுமல்ல, பல்வேறு சிறுசிறு குழுக்களும் பரப்புரை செய்கின்றன.

நாங்கள் ஒன்றுபட்டு நிற்போமேயானால் அவர்களுடைய பரப்புரைகள் எல்லாம் தோல்வியடைந்து எங்களுடைய பரப்புரைகள் வெற்றி பெறும். இதில் நாங்கள் தெளிவாக இருந்தால் போதும். அதனைத்தான் நாங்கள் சொல்ல முடியும்.

ஆனால் இதுவரையில் அந்த அரசாங்கம் அவ்வாறு செயற்படவில்லை. அவ்வாறு செயற்படுவதற்கான எந்த அறிகுறியையும் நாங்கள் காணவில்லை. எனினும், அண்மைக்காலமாக பல ஆய்வாளர்கள், எங்களோடு பேச்சு நடத்தியவர்களுடன் தொடர்புடையவர்கள், எங்களைப் பற்றி கடுமையான கருத்துக்களைக் கொண்டிருந்தவர்களும் கூட, எங்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, இன்று சிங்கள அரசின் செயற்பாடுகள் குறித்து விமர்சிக்கும்போது அது இந்திய நலனுக்கு உகந்ததாக அமையவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

காலப்போக்கில் அவர்கள் சிங்கள அரசாங்கத்துக்கு ஆதரவு என்ற நிலையிலிருந்து மாறி, நடுநிலைமை வகித்தால் அதுவே எங்களுக்குப் போதுமானதுதான். இது நடைபெறுமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏற்பட வேண்டும்.



ஏனெனில் இந்தியாவுடன் உறவு ஏற்பட்டால்தான் உலக நாடுகளின் போக்கில் மாற்றம் ஏற்படும். அதற்கான முயற்சிகளோடும் நம்பிக்கையோடும் நாங்கள் இருக்கிறோம்.

இன்று அதுமாதிரியான சூழ்நிலை இல்லை என்றாலும், இருந்தாலும் நாங்கள் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அங்கு பல சிக்கல்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் உறுதியாக சில முடிவுகளை எடுத்தால், அவர்கள் உறுதியாக ஒரு செயற்பாட்டுக்கு வந்தால், மத்திய அரசால் ஒன்றும் செய்ய இயலாது. நான் யாரையும் குறை சொல்ல விரும்பவில்லை.

அவரவர்க்கு பல அரசியல் நிர்பந்தங்கள் இருக்கலாம். ஆனால் இங்கே நாள்தோறும் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். சிங்கள அரசாங்கம் தமிழர்களை அடியோடு அழிப்பதில் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறது என்பது தமிழக அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, தமிழக மக்களுக்கும் தெரியும்.

எனவே அவர்கள் ஏதோ ஒரு கட்டத்தில் ஆங்காங்கே எங்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பத்தான் செய்கிறார்கள். ஒருமித்த குரலாக எங்கள் பின்னால் அணிவகுத்து நிற்கும்போது இந்தியாவின் மத்திய அரசும் மாறுவதனைத் தவிர வேறு வழியில்லை. இந்திய மத்திய அரசுக்கு அங்குள்ள மக்கள் தரும் அழுத்தம் தவிர இந்திய அரசும் தனது நலன் கருதி மாற வேண்டிய சூழ்நிலையும் வரும்.

முன்பே சொன்னதுபோல இது நடக்குமா நடக்காதா என்று பார்ப்பது எங்கள் வேலை அல்ல. எங்களுடைய பணி என்பது எங்களுக்கான போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதுதான். காலமும் சூழலும் வருகின்றபோது, அனைத்தும் தானாகக் கனியும் என்ற நம்பிக்கையுடன் போராடுவோமே தவிர, வேறு ஒரு வழியும் இல்லை.

நான் முன்பே சொன்னதுபோல இந்த விடயங்கள் குறித்து ஆழமாக விவாதிக்கின்ற போது பல சிக்கல்கள் ஏற்படும்.

இன்று தமிழகத்தில் எங்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடியவர்கள் குரல் கொடுக்கத்தான் செய்கிறார்கள். ஆங்காங்கே எங்கள் சார்பாக போராட்டங்களை நடத்தத்தான் செய்கிறார்கள். ஆனால் எங்களுக்குள்ள ஒரு கவலை என்னவென்று சொன்னால், இராமதாசாக இருந்தாலும் சரி, நெடுமாறன் ஐயாவாக இருந்தாலும் சரி, வைகோவாக இருந்தாலும் சரி, திருமாவளவனாக இருந்தாலும் சரி, தனித்தனியாக அல்லாமல் இவர்கள் எல்லோரும் ஈழத் தமிழர்கள் விடயங்கத்தில் ஒருங்கிணைந்து, ஒன்றிணைந்த குரலாக செயற்படுவார்களேயானால், மிகுந்த மகிழ்ச்சி அடைவோம். அந்தக் காலத்தை எதிர்பார்த்து நாங்கள் காத்திருக்கிறோம்.

இந்தியாவின் அனுசரணை என்பதல்ல முக்கியம். இதில் பிரச்சனை என்னவென்று சொன்னால், தனிநாடு என்கிற அங்கீகாரம் வருகின்றன போது, உலக நாடுகளின் அங்கீகாரம் என்று வருகின்ற போது, இந்திய அரசின் கருத்தையும் உலக நாடுகள் கேட்கும். ஆனால் அது ஒரு நிலை.

எங்களைப் பொறுத்தவரையில் இந்திய அரசு அனுசரணை செய்துதான் நாங்கள் போராட்டத்தை வெல்வோம் என்றில்லை.

புலம்பெயர்வாழ் தமிழர்கள், உலகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் எல்லாம் தமிழர்களுக்கென்று ஒரு நாடு வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தால், யார் உதவியும் எங்களுக்குத் தேவையில்லை. நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம். அதற்குரிய நம்பிக்கையும் உறுதியும் அர்ப்பணிப்பும் எங்கள் மண்ணில் உள்ள போராளிகளிடம் உண்டு. அதனை வழிநடத்துகின்ற தலைவரிடம் உண்டு.

எனவே உலகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் இந்த விடயத்தில் ஒன்றுபட்டு இருப்பார்களேயானால் யாருடைய அனுசரணையும் எமக்கு தேவையில்லை.

ஆனால் தனிநாடு என்று வருகின்றபோது இவர்களுடைய ஆதரவு நிலை தேவைதான். ஆக அத்தகைய களச்சூழல் வரும்போது, ஆதரவு நிலையும் வரும். இந்த நம்பிக்கையுண்டு.

இங்கே இந்தப் புலம்பெயர்ந்த நாடுகளில் எப்படி அந்த அரசுகளுடன் உறவு ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கிறோமோ, அதுபோல தமிழகத்தில் இருப்பவர்களோடும், இந்திய அரசியலில் இருப்பவர்களோடும், டில்லியில் உள்ள அமைப்புக்களோடும் உறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டிய பணி புலம்பெயர் வாழ் தமிழர்களுக்கு உண்டு. அவர்கள் செய்கின்ற பல பணிகளில் இதுவும் ஒன்று.

ஆனால் இந்தியா அனுசரணை இருந்தால்தான் இந்தப் போராட்டம் நடக்கும், வெற்றி பெறும் என்று நினைத்துப் போராட முடியாது.

நாங்கள் இவ்வளவு காலம் இப்படியான ஒரு போராட்டத்தை நடத்தியிருக்கின்றோம். தமிழ் மக்கள் எங்களுடன் ஒன்றாக இருந்தாலே போதும். நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம்.

நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தில் பொருளில்லை என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் இதில் இருந்த விடயம் என்னவெனில், மற்ற கட்சிகளைச் சார்ந்தவர்கள் அல்லது குழுக்களைச் சார்ந்தவர்கள் யாராவது அங்கே பேசிக் கொண்டிருப்பார்கள். அங்கே இருந்து கொண்டு அரசின் வாய்ப்பு வளங்களைப் பயன்படுத்திக் கொண்டு எங்களுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள். இது அரசினுடைய வாய்ப்பு வளங்களைப் பயன்படுத்திக்கொண்டு எங்கள் சார்பான நடவடிக்கைகளை இவர்கள் செய்து கொண்டிருப்பார்கள். அது பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கிறதா இல்லையா என்பது வேறு விடயம்.

தமிழர்களைப் பொறுத்தவரையில் இவர்களுக்கு அப்பாற்பட்டு, இந்தப் போராட்டத்தில் புலிகளுக்குச் சார்பாக இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பக்கூடிய அளவுக்கு அந்த இயக்கம் பலமாக இருக்கின்றது என்ற வகையில், ஒரு கருத்தியல் உருவாக்குவதில் அது சார்பாக இருக்கிறது.

அரசியல் என்பது இப்படித்தான் நடக்க வேண்டும் என்று நடப்பதில்லை. அதற்கென சில வளைவு, நெளிவு, சுழிவுகளும் உண்டு. இந்த வளைவு, நெளிவு சுழிவுகளுக்குள் பாதை மாறாமல், எங்கள் இலக்கை நோக்கிச் சென்றால் சரி. அந்த வகையில் இதில் கிடைக்கின்ற வளங்களை எதிரிகள் பயன்படுத்துவதனை தடுக்க வேண்டும். அதற்கு ஊடாக வருகின்ற சில சாதகமான நிலைகளை பெற்றுக்கொள்வதனைத்தவிர தவிர வேறு எதற்கும் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும்.

எங்களை அடக்குகின்றவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய ஆற்றல் உள்ளவர்கள் எங்கள் மீது அடக்குமுறைகளைப் பயன்படுத்தினாலும் சரி, நாங்கள் போராடுவோம்.

எங்கள் மண்ணை மீட்கின்ற வரை எங்கள் போராட்டம் தொடரும். அந்தப் போராட்டத்தை நாங்கள் நிச்சயமாக மிகுந்த அர்ப்பணிப்போடு நடத்துவோம். இதனைச் சொல்கின்ற அதே வேளையில், இத்தகைய அர்ப்பணிப்புடன் இங்கே போராடும் போராளிகளுக்கு அதனை வழிநடத்துகின்ற தலைவருக்கு உறுதுணையாக பக்கபலமாக பல வழிகளிலும் இந்தப் புலம்பெயர் வாழ் தமிழர்கள் மன வேறுபாடுகளை, தனிப்பட்ட கோபதாபங்களை, பிரச்சினைகளைப் புறந்தள்ளிவிட்டு, தமிழர்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்ற உணர்வோடு, ஒன்றுபட்டு நின்றால், நிற்க வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கையும் வேண்டுதலும் ஆகும் என்றார் யோகி.

**தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக் கொள்ளும் பொழுது தான் ஒரு தேசம் தனக்கே உரித்தான – தனித்துவமான – ஆளுமையைப் பெறுகின்றது**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

உலக வணிகம் ULAGA VANIKAM

# 2026



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



## உலக வணிகம் ULAGA VANIKAM

விளப்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல
அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள்
செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு
நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை
பெருகச் செய்யும். அது உங்கள் வணிக
முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது
உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# சுனாமி 2004 உதவியை நிறுத்திய ஜேவிபி!

## P-TOMS நிராகரிப்பு – ஜேவிபியின் வரலாற்றுத் துரோகம்!

– நவீனன் –

02.12.2025

2004ம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி காலையில் ஆழிப் பேரலை வடக்கு கிழக்கு கரையோரங்களை கடுமையாகத் தாக்கி அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டது. இவ் ஆழிப் பேரலையின் பயங்கரத்தையும் அதன் நாசகாரமான அழிவுகளையும் அது தாக்கிக் கொண்ட தமிழ் மக்கள் பெரும் துயராகவும் பேரழிவுகளாகவும் நீண்டகாலம் அனுபவித்துக் கொள்ள வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

### ஆழிப்பேரலையும் வடகிழக்கும்:



இவ் ஆழிப் பேரலையைத் தொடர்ந்து வெளிநாடுகளில் உதவிகள் பெருந்தொகையில் அரசாங்கத்திற்கும் அரசு சாரா நிறுவனங்களுக்கும் தாராளமாகக் கிடைத்தன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்றைய ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் கிடைத்த வெளிநாடுகளின் உதவிகொண்டு நிவாரணம் வழங்க முன்வந்தது. ஆனால் வடக்குக் கிழக்கின் பெரும் பருதி குறிப்பாக ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்கள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இப் பிரதேசங்களில் சுமார் முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஆழிப் பேரலையால் கொல்லப்பட்டனர்.

இத்தகைய சூழலில் கடும் பாதிப்பை அடைந்த வடக்குக் கிழக்கு மக்களுக்கு நிவாரணமும் மறுவாழ்வும் வழங்குவதை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஏற்றுக் கொண்டனர். இதனை நோர்வேயும் இணைத்தலைமை நாடுகளும் வலியுறுத்திக் கொண்டன.

ஆழிப் பேரலை 2004இல் சுனாமியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு உட்பட ஆறு மாவட்டங்களில் சர்வதேச உதவிகளைச் சமமாக விநியோகிக்க, இலங்கை அரசாங்கமும் புலிகளும் இணைந்து ஒரு தற்காலிக மனிதாபிமான கட்டமைப்பை (Post-Tsunami Operational Management Structure - P-TOMS) அமைக்கும் உடன்படிக்கையில் ஜூன் 24, 2005 அன்று கையெழுத்திட்டு இருந்தனர்.

### P- TOMS கட்டமைப்பு :



எனவே அரசாங்கமும் விடுதலைப் புலிகளின் நிர்வாக அரசும் வடக்குக் கிழக்கில் சுனாமி நிவாரணத்தை முறையாக வழங்குவதற்கான இணக்கப்பாட்டிற்கு வந்தனர். அதற்கான ஒரு நிவாரண நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கிக் கொண்டனர்.

இரு தரப்பினர்களுக்கிடையிலும் சமுகங்களுக்கிடையிலும் ஒத்துழைப்பதற்கு வசதியளிப்பதற்கான தேவை இருப்பதால் P-TOMS என்ற ஒப்பந்தத்தினை செய்து கொள்ள இரு தரப்பினரும் இணங்கிக் கொண்டனர்.

அதாவது சுனாமிக்குப் பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றை (P-TOMS)அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஒன்றுக்கு அரசாங்கமும் புலிகளின்












அமைப்பும் இணங்கிக் கொண்டன.

P-TOMS அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமானது அமைப்பு என்ற முதலாவது பிரிவு தொடக்கம் நிறைவேற்றுகை என்ற ஒன்பதாவது பிரிவு வரை பல்வேறு பயன் உள்ள நடைமுறைச் சாத்தியமான பிரதான அம்சங்களையும் உப அம்சங்களையும் உள்ளடக்கியிருந்தது. இது நடைமுறைக்கு வந்திருக்குமானால் ஆழிப்பேரலையால் அழிவுகளுக்கும் பாதிப்புகளுக்கும் ஆளாக்கப்பட்ட வடக்குக் கிழக்கின் ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பயனும் நிவாரண உதவிகளும் பெற்றிருப்பர்.

பல பில்லியன் கணக்கான டாலர்கள் உதவிக்காக உலக நாடுகள் வழங்க காத்திருந்தன. ஆனால் இன்றைய ஆளும் அரசான ஜேவிபி கட்சியினர் இந்த உடன்படிக்கையை புலிகளுக்குச் சலுகை என்றும், தேசத்துரோகம் என்றும் சித்தரித்து, சிங்கள நாடு முழுவதும் பெரும் போராட்டத்தை நடத்தினர்.

புலிப் பயங்கரவாதிகளுடன் பொதுக் கட்டமைப்பு வேண்டாம் என்றும் தமிழர்களுக்கு அவசர உதவி சென்றடைவதை விட, அரசியல் நலனே அவர்களுக்கு முக்கியமானதாக இருந்தது. அக்கால கட்டத்தில் இந்த இனவாதப் பிரச்சாரத்தை முன்னெடுத்தவர்களில் விமல் வீரவன்ச மற்றும் சோமவன்ச அமரசிங்க போன்றோர் முக்கியப் பங்கு வகித்தனர். இதன் விளைவாக, ஜேவிபி தொடர்ந்த சட்டப் போராட்டத்தின் மூலம், ஜூலை 15, 2005 அன்று உச்ச நீதிமன்றம் P-TOMS உடன்படிக்கையின் முக்கியப் பிரிவுகளுக்குத் தடை உத்தரவு விதித்தது.

இதனால், தமிழர்கள் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குக் கிடைக்க வேண்டிய சர்வதேச உதவிகளும் மறுசீரமைப்புப் பணிகளும் முற்றிலுமாக நிறுத்தப்பட்டன.

## ஜேவிபியின் வரலாற்றுத் துரோகம்:

ஆனால் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்குக் கிடைக்க இருந்த நிவாரணத்தை முடக்குவதற்கு ஜே.வி.பி. பரந்துபட்ட எதிர்ப்பிரசாரத்தில் ஈடுபட்டது. அத்துடன் நின்றுவிடாமல் பேரினவாத சட்ட வல்லுளர்களின் தீவிர ஆலோசனை பெற்று உயர் நீதிமன்றத்தில் P-TOMS கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கு எதிரான வழக்கு ஒன்றை தொடுத்து அதில் வெற்றியும் பெற்றுக் கொண்டது. அதன் மூலம் சுனாமியால் வடக்குக் கிழக்கின் அவலங்கள் இழப்புகளுக்கு உள்ளான மக்களுக்கு ஜே.வி.பி தனது பேரிவவாத நிலைப்பாட்டின் ஊடாகப் பெரும் துரோகமிழைத்து கொண்டது.

இது ஜே.வி.பி. பேரினவாதிகளை விட மோசமான இனவாத கட்சி என்ற கணிப்பை நூற்றுக்கு நூறு வீதம் நிரூபித்துக் கொண்டது. ஆழிப் பேரலையின் அழிவை எதிர்கொண்ட வடக்குக் கிழக்கு மக்கள் ஏற்கனவே யுத்த அழிவுகளை எதிர்கொண்ட மக்களாகவே இருந்து வந்தனர்.

ஜே.வி.பி. ஆழிப்பேரலை நிவாரணக் கட்டமைப்பை உயர் நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று அதனைச் செயல் பட விடாது தடுத்துக் கொண்டதுடன் நின்று விடவில்லை. அந்த உற்சாகத்தில் பல வருடங்களாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இருந்து வந்த வடக்குக் கிழக்கு ஒரே மாகாண அலகாக இருந்து வந்ததையும் உயர்நீதி மன்ற வழக்கின் மூலம் பிரித்துக் கொண்ட பேரினவாத கைங்கரியத்தையும் செய்து கொண்டது.



இதற்கான முன் ஆலோசனையையும் வழிகாட்டலையும் பேரின வாதச்சட்ட வல்லுனர்கள் மட்டுமன்றி நீதித்துறையின் உச்சத்தில் இருந்தவர்களும் இணைந்தே செயலாக்கினர். நீதித்துறை சுயாதீனமானதும் சுதந்திரமானதும் பக்கசார்பற்றதும் என்று கட்டமைத்துப் பரப்புரை செய்யப்பட்டு வந்தமையானது இதில் வெட்ட வெளிச்சமாகி அம்பலமாகிக் கொண்டது.









# என்றோ ஒரு நாள் நமது மாவீரர் கண்ட கனவு நனவாகும் என்பதனை உறுதியாக நம்புவோம்!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

நவம்பர் 27, 2025

இன்றுமாவீரர்நாள்.

எங்கள் தேசத்தின் விடுதலைக்காய் தமது இன்னுயிரை ஈகம் செய்த வீர மறவர்களின் நினைவுநாள்.

தமிழீழ விடுதலைக்காய் வித்தாய் வீழ்ந்த நமது மாவீரர்களை எமது மக்கள் தமது இதயக்கோவிலில் வைத்து வணாங்கும் நாள்.

எமது மாவீரர்கள் விடுதலையை இலட்சியமாகக் கொண்டு களமாடி நின்றவர்கள். எதிரி காலடிகளை நமது மண்ணி லிருந்து அகற்றி, எமது மண் விடுதலைக் காற்றைச் சுவாசிக்க அயராது உழைத்தவர்கள்.

எமது மாவீரர்கள் தமது வாழ்வை ஈகம் செய்தமை எமது அடுத்த தலைமுறை நமது மண்ணில் மகிழ்வுடன் வாழ வேண் டும் என்ற உணர்வுடன் தான். நான் என்பது முக்கியமல்ல நமது நாடே முக்கியம் என்ற உணர்வுடன் நமது மாவீரர்கள் களம் சென்றார்கள்.

ஈழத் தமிழர் தேசத்தின் தேசிய இனப்பிரச்சனையை உள் நாட்டு பிரச்சனையாக சுருக்கி விடுவதற்கு சிறீலங்கா அரசாங்கமும் அனைத்துலக அரசுகளும் முயற்சி எடுத்த வேளையில் நமது தேசியப்பிரச்சனை அனைத்துலகப் பிரச்சனையாக உரு வெடுக்க காரணமாக நின்றவர்கள் நமது மாவீரர்கள்.

ஆண்ட தமிழினம் மீண்டும் ஆள வேண்டும் என்ற பழம் பெருமை பேசுவதற்காக நமது மாவீரர்கள் களமாடி நிற்க வில்லை. சிறீலங்கா அரசின் திட்டமிட்ட இன அழிப்பிலிருந்து ஈழத் தமிழ் மக்களை பாதுகாப்பதற்கு சுதந்திரமும் இறைமை யும் கொண்ட தமிழீழத் தனி அரசு ஒன்றே தீர்வாக அமைய முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் களத்தில் நின்ற வர்கள் நமது மாவீரர்கள்.

தேசிய விடுதலையை நாம் அடைந்து கொண்டால் மட்டும் போதாது; சாதிய ஒடுக்குமுறை அகன்ற, மத ஒருமைப்பாடும் ஆண்- பெண் சமத்துவமும் நிலவும் சமூகநீதியும், சுற்றுச் சூழல் நீதியும் நிலவுகின்ற ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்கின்ற ஒரு கனவுடன் தான் நமது மாவீரர்கள் களமாடி நின்றார்கள்.

தமது மண்ணையும் மக்களையும் பாதுகாத்து நின்றவர்கள் நமது மாவீரர்கள். தமது உயிரினை ஈகம் செய்யும் போது, இந்த மண்ணில் வித்தாய் வீழும்போது நமது எதிர்கால தலைமுறை சுதந்திரம் பெற்ற, விடுதலை அடைந்த ஒரு தலைமுறையாக வாழவேண்டும் என்ற கனவுடன் தமது உயிரை ஈகம் செய்து நின்றவர்கள் நமது மாவீரர்கள்.

எங்கள் மாவீரர்கள் சிந்திய குரதி நமது சிவந்த மண்ணை இன்னும் சிவப்பாக்கி இருக்கிறது. மாவீரர்களின் மூச்சுக்காற்று எமது காற்றுடன் கலந்து எமது மக்களின் மூச்சுடன் மூச்சாகக் கலந்திருக்கிறது.

நமது மண்ணெங்கும் நமது கடற்பரப்பெங்கும் நமது வான் வெளி எங்கும் நமது மாவீரர்களின் தடங்கள்பரந்து




கிடக்கின்றன. காலாதி காலமாக இந்த நினைவுகள் எமது மண்ணை எமது கடலை எமது வானை நிறைத்தே இருக்கும்.

நமது மாவீரர்கள் சிந்திய குருதி இன்றும் நம் மண்ணைப் பாதுகாத்து நிற்கின்றது. தமிழீழ மக்களை, தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனையை அங்கீகரித்து தீர்வுகாண்பதற்கு பதி லாக, தமிழ் மக்களுடைய அடையாளத்தை அழித்து, அவர்களின் தேசிய தகமையைத் தகர்த்து இனக் கபளீகரம் செய்து விடலாம் என்று சிங்கள அரசுபோடும் திட்டங்களை எல்லாம் முறியடிக்கும் ஆற்றலை மாவீரர்கள் சிந்திய குருதி எமது மக்களுக்கு வழங்கி இருக்கிறது.

தேசியத் தலைவர் அவர்களால் கட்டி எழுப்பப்பட்ட ஒரு பெரும் விடுதலை இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கர் வித்தாகி விழுந்த நவம்பர் 27 ஆம் நாள் உலக மெங்கும் வாழுகின்ற தமிழ் மக்கள் மாவீரர்களை மனமுருகி வணங்கி நிற்கிறார்கள்.

இன்றைய மாவீரர் நாளில் தமிழீழ விடுதலைக்காய் தமது இன்னுயிரை ஈகம் செய்த மாவீரர்களை நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் சிரம் தாழ்த்தி வணங்கிநிற்கிறது.



அன்பான மக்களே,

நாங்கள் இன்று முக்கியமான ஒரு அரசியல் கட்டத்தில் இருக்கின்றோம். தமிழ் ஈழமக்களின் தேசிய இனபிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக சிறீலங்காவில் வாழுகின்ற எல்லோரும் ஒரே மக்கள் என்கின்ற ஒரு கருத்தை முன் நிறுத்துகின்ற அரசியல் சூழல் வளர்ச்சி அடைந்து வருகின்ற ஒரு காலகட்டத்தில் வாழ்கின்றோம்.

இலங்கைதீவு பிரித்தானியரிட மிருந்து சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்துதீவின் அரசு சிங்கள பௌத்த அரசாக நிறுவனமயப்பட்டு வளர்ச்சி அடைந்து தற்போது இறுக்கமான இனவாத அரசாக சிறீலங்காவின் அரசு மாற்றம் கண்டிருப்பதனை நாம் அறிவோம்.

ஓர் அரசின் அங்கங்களாக இருக்கக் கூடிய பாராளுமன்றம், அரச நிர்வாக இயந்திரம், நீதித்துறை ஆகியனவும், நாலாவது அரசின் கட்டு மானமாக கருதப்படுகின்ற ஊடகத்துறையும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் பிடியில் சிக்குண்டுள்ள நிலை நிலவுகிறது.

சிங்கள பௌத்த மக்கள் தீர்மானிக்கின்ற முறையிலேயே ஏனைய மக்கள் வாழவேண்டிய ஒரு நிலை கொண்ட அரசாகவே சிறீலங்காவின் அரசு இருக்கிறது.

சிங்கள பௌத்த பெரும்பான்மையினரின் பிரதிநிதிகள் ஏனைய மக்களின் சம்மதமின்றி ஏனைய மக்களை ஒடுக்குகின்ற, அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்ற எந்த அரசியல் தீர்மானத்தையும் சிறீலங்காவின் நாடாளுமன்றத்தில் மேற்கொள்ள முடியும்.

அரசும் மத சார்பற்ற அரசாக இல்லாமல் பௌத்த அரசாக கட்டமைக்கப் பட்டிருக்கிறது. அரசு அதிகாரத்தில் பௌத்த மத நிறுவனங்களின் அதிகாரம் வலுவாக வலுப்பெற்று இருக்கிறது.

சிறீலங்கா அரசின் நிர்வாக கட்டமைப்பானது சிங்கள தலைமை அதிகாரிகளின் சிங்கள பௌத்த மேலாண்மை மனப்பான்மையுடன் இறுக்கமாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. நீதித்துறையும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தைக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற அரசியல் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டே இயங்கி வருகிறது.

சிறீலங்காவில் நிலவுவது ஜனநாயகம் அல்ல; இனநாயகமே என்ற கருத்தை பல அறிஞர்கள் முன்வைத்திருக்கிறார்கள், எண்ணிக்கையில் பெரும்பான்மையான பிரதிதிகளைக் கொண்டு, ஏனைய மக்கள் மீது ஒடுக்குமுறைகளை ஜனநாயகம் என்ற பெயரில் கட்டவிழ்த்துவிடக்கூடிய அரசியல் சூழல் நிலவுகின்றமையினால் சிறீலங்காவில் நிலவுவது ஜனநாயகம் அல்ல இனநாயகமே என்று பல அறிஞர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

இத்தகைய ஒரு சூழலில் சிறீலங்காவில் எல்லா மக்களும் சமமானவர்கள் என்று கூறுவது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் கீழ், அவர்கள்எடுக்கும்முடிவுக்கு, அவர்களின் விருப்பத்திற்கு, அவர்களின் நிர்ணயத்தின் கீழ் ஏனைய மக்கள் வாழ வேண்டும் எனக்கூறுவதுதான்.

சிறீலங்காவின் தற்போதைய அரச கட்டமைப்பு சிங்கள பௌத்த இனவாதக் கட்டமைப்பாக இறுகிப்போய் இருக்கின்ற அரச கட்டமைப்பின் கீழ் இலங்கைத்தீவின் தேசிய பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என்று எவராவது கூறுவாராக இருந்தால் அது ஏமாற்றுத் தனமாகத்தான் இருக்கமுடியும். எவராவது நம்புவாராக இருந்தால் அந்த நம்பிக்கை இலவு காத்த கிளியின் நம்பிக்கையாகத்தான் இருக்க முடியும்.

இலங்கைதீவின் தேசிய இனபிரச்சனைக்கு, தமிழ் ஈழ மக்களின் தேசிய இனபிரச்சனைக்கு சிறீலங்காவின் அரச கட்டமைப்புக்குள் தீர்வு காணுவது சாத்தியமே இல்லை.

சிறீலங்காவின் அரச கட்டமைப்பினை இனவாத கட்டமைப்பாக இல்லாமல் மாற்றி அமைத்து விட்டால் தமிழ் முஸ்லிம் மக்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முடியும் என்றும், அவ்வாறுமாற்றி அமைப்பதுதான், அதற்கான முயற்சி எடுப்பதுதான் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்கான சரியான அணுகு முறையாக இருக்கமுடியும் என்ற கருத்தை முன்வைக்கும் தோழர்களும் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு நாம் சொல்லிக்கொள்ள விரும்புவது இது தான். இலங்கைதீவின் அரச கட்டமைப்பு சிங்கள பௌத்த இனவாத அரச கட்டமைப்பாக வளர்த் தெடுக்கப்படாது பல்லின பல தேசிய இனங்களுக்குரிய அரச கட்டமைப்பாக வளர்த் தெடுக்கப்பட்டிருக்குமாக இருந்தால், இலங்கைத்தீவில் தேசிய பிரச்சனை தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்து கூர்மையடைந்து ஆயதப் போராட்டமாக வடிவெடுத்து அனைத்துலகப் பரிமாணம் பெறும் நிலைமை உருவாகாமலே இருந்திருக்கக்கூடும்.

ஆனால் இலங்கைதீவின் வரலாறு அவ்வாறு அமையவில்லை. சிங்கள பௌத்த மேலாதிக்கம் இலங்கைதீவின் அரச கட்டமைப்பை சிங்கள பௌத்த அரச கட்டமைப்பாக வளர்த்தெடுத்து இறுக்கமான நிறுவனமாக நிறுவி இருக்கிறது. இந்த அரச கட்டமைப்பைபல்லின - பல்தேசியக் கட்டமைப்பாக மாற்றி அமைப்பதற்கு எந்த வாய்ப்புகளும் இருப்பதாக நமக்கு தெரியவில்லை.

இலங்கையில் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் சிங்கள பௌத்த தேசிய வாதத்தினால் நிராகரிக்கப் பட்டிருக்கின்றன. தமிழ் மக்களுடைய தேசிய பிரச்சனையும் ஆயுதப் போராட்டமும் இந்த நிராகரிப்பின் எதிர் வினையாகத்தான் தோற்றம் பெற்றிருக்கின்றன.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலங்கைதீவில் இனப்பிரச்சினை இருக்கின்றது; அதற்கு ஒரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டவர்களாக இல்லை.

இலங்கைத்தீவின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணாமல், இலங்கைதீவில் இனப்பிரச்சனை என்று ஒன்று இல்லை என்கின்ற ஒரு நிலையை உருவாக்கி விட முடியும் என்று இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நம்புவது போல் தெரிகிறது.

இந்த விடயத்தில் தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்ற செய்தியினை இந்த மாவீரர் நாளில் நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

தேசிய மக்கள் கட்சி அரசாங்கம் மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கமாகத்தான் (JVP) இருக்கிறது. மக்கள் விடுதலை முன்னணியுடன். அவர்களை ஏற்றுக் கொண்ட சில சிறிய அமைப்புகள் இணைந்து அதற்கு தேசிய மக்கள் சக்தி என்ற ஒரு புதிய முகத்திரை கொடுத்திருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் ஈழத்தமிழருடைய தேசிய விடுதலைப் போராட்டம் சார்ந்து, ஈழத்தமிழ் மக்களுடைய தேசிய இனப் பிரச்சனை சார்ந்து மக்கள் விடுதலை முன்னணி இனவாத முடிவுகள் பலவற்றை எடுத்தும் செயற்படுத்தி வந்ததையும் நாம் அறிவோம்.

முள்ளிவாய்க்காலில் சிந்திய தமிழரின் குருதிக்கு, முள்ளிவாய்க்காலில் சிறீலங்கா இனவாத அரசு நடத்திய இனவழிப்பு வெறியாட்டத்திற்கு மக்கள் விடுதலை முன்னணியின் பங்கும் இருந்திருக்கிறது என்பதும், அங்கே சிந்திய குரதியின் கறைகள் அவர்களின் கைகளில் படிந்து இருக்கின்றன என்பதும் நாம் அறிந்த உண்மைகள்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு, தமிழ் மக்கள் மீது மேற் கொள்ளப்பட்ட இன அழிப்புக்கு மனம் வருந்தி தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோருகின்ற எந்த ஒரு மாற்றத்தையும் அதற்கான சமிக்ஞையும் தேசிய மக்கள் சக்தியிடமிருந்தோ அல்லது தற்போதைய அரசதலைவர் அனுரா குமார திசநாயவிடமிருந்தோ ஆட்சிக்கு வந்து ஓராண்டு கடந்தும் வெளிப்படவில்லை.

இதனால் தமிழ் மக்களாகிய நாம் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை புரிந்து அதற்கு ஒரு அரசியல் தீர்வு காணுகின்ற எண்ணமோ விருப்பமோ தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத் திடம் இருக்கிறது என்று நம்புவதற்கு எந்த அடிப்படைகளும் இல்லை.

இந்த அரசாங்கம் எமது தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை காணுவதற்கான எந்த முன்னெடுப்புகளையும் செய்யப் போவதில்லை. மாறாக இலங்கைதீவில் இனப்பிரச்சனை என்று ஒன்று இல்லை என்பதனை வெவ்வேறு உத்திகளின் மூலமும் முயற்சிகளின் மூலமும் அதனை வெளிப்படுத்தவே அரசாங்கம் முயற்சிஎடுக்கும்.

இலங்கைதீவில் தேசிய இனபிரச்சனை இருக்கின்றது என்று ஏற்றுக் கொண்டல் உண்மையில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே அரசியல் தீர்வு காண்பதற்கான ஒரு அரசியல் விருப்பு இருக்க வேண்டும். அவ்வாறான எந்த விருப்பும் இந்த ஆட்சியாளர்களிடம் இல்லை.

மேலும், சிறீலங்காவின் அரசு ஓர் இனவாத அரச கட்டமைப்பாக இறுகிப்போய் இருக்கின்ற சூழலில் அதனை மாற்றி அமைப்பதற்கு எந்த வாய்ப்புகளும் இல்லாத ஒரு சூழலில் எவர்தான் ஆட்சிக்கு வந்தாலும் அந்த அரசுக்கு சேவகம் செய்பவர்களாக இருப்பார்களேயொழிய தமிழ் மக்களுடைய தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதை தமது நோக்கமாக கொண்டிருக்க மாட்டார்கள்.

இங்கே தனி மனிதர்கள் எவ்வளவு இனவாதிகளாக இருக்கிறார்களா இல்லையா என்பதனைவிட அவர்கள் எத்தகைய அரச கட்டமைப்புக்கு தலைமை தாங்குகிறார்கள் என்பதுதான் முக்கியமானது. அனுரா குமார திசநாயக்க அடிப்படையில் இனவாதியாக இருக்கிறாரோ இல்லையோ என்பது அல்ல இங்கு முக்கியம்.

அவர் எந்த அரச கட்டமைப்புக்கு தலைமை தாங்குகிறார் என்பதுதான் முக்கியம். அவர் தலைமை தாங்கின்ற அரச கட்டமைப்பு எத்தகைய அரசியல் முடிவுகளை தன்னகத்தைக் கொண்டிருக்கிறது என்பதுதான் முக்கியம். அவருடைய அரச கட்டமைப்பிலே எத்தகைய முடிவுகள் எடுக்கப்படும் என்பதுதான் முக்கியம். அந்த அரச நிர்வாகத்தினை நடத்துகின்ற அதிகாரிகளுடைய சிங்கள பௌதிக மேலாதிக்க மனநிலை எவ்வாறு இருக்கின்றது என்பதுதான் முக்கியம். சிறீலங்காவின் நாடாளுமன்றத்திலே எத்தகைய அரசியல் தீர்மானங்கள் நிறை வேற்றப்படுகின்றன என்பதுதான்முக்கியம்.

சிங்கள தேசத்தின், சிங்கள பௌத்த மக்களுடைய பிரதிநிதி





களின் தனித்த முடிவின் அடிப்படையிலேயே எத்தகைய தீர மானத்தையும், ஏனைய மக்களை பாதிக்கக்கூடிய தீர்மானங் களைக் கூட அவர்கள் தனித்து எடுத்த விடமுடியும் என்கின்ற நிலை இருக்கின்றதா இல்லையா என்பதுதான் முக்கியம்.

இதனால் தமிழ் மக்கள் தேசிய இனப்பிரச்சனைக்கு இந்த அரசாங்கம் தீர்வுகண்டுவிடும் என்று நம்பிக்கை கொள்வதற்கு எந்த அடிப்படையும் இல்லை என்பதனை மீண்டும் அறிவுறுத்த விரும்புகிறோம்.

தற்போதைய தேசிய மக்கள் முன்னணி அரசாங்கம் ஊழல் ஒழிப்பு விவகாரத்திலும் போதைவஸ்து பரவலுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் சில காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து வருவதை நாம் அவதானிக்கிறோம். இலங்கைத்தீவில் வாழ்கின்ற மக்களுக்கு இவை பயன்தரக்கூடியவைதான். மாவீரர் வணக்கத்துக்கும் இது வரைதடை விதிக்காது இருக் கிறார்கள். கடந்த கால ஏனைய ஆட்சியாளர்களுடன் ஒப்பிடும் பொழுது இந்த விடயங்களில் இவர்கள் முன்னேற்றமாக இயங் குகிறார்கள் என்பதனையும் உணர முடிகிறது அதனை நாங்கள் புரிந்து கொள்ளலாம். அதற்காக பாராட்டுகளை தெரிவித்தும் கொள்ளலாம்.

ஆனால், தமிழ் மக்களுடைய தேசிய பிரச்சினையில் ஒரு சரியான முடிவை எடுக்க முடியாத அரசாங்கத்தை தமிழ் மக்கள் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதரவு வழங் கமுடியாது. நாம், எமது நலன்களின் அடிப்படையில் உறுதியாக நிலை நின்று தான் இந்த விடயத்தில் செயற்படவேண்டும்.

தமிழ் மக்களுடைய அரசியல் பிரச்சனைகளுக்கான கோரிக்கைகளை, அதற்கான போராட்டங்களை நாம் தொடர்ச்சியாக முன்னெடுக்கவேண்டும். இதற்கான அற வழிப் போராட்டம் முன்னெடுக்கப்படுதல் மிகமிக அவசியமாக இருக்கிறது. நாம் எந்தக் கோரிக்கைகளை முன்வைத்து நிற்கின்றோம் என்பதையும் நாங்கள் தெளிவாக பேச வேண்டி இருக்கிறது.

தாயகத்திலே ஆறாவது அரசியல் அமைப்பு திருத்தச்சட்டம் நடை முறையில் இருக்கின்ற காரணத்தினால் எமது தேசியப் பிரச் சனைக்கு அரசியல் தீர்வாக சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனி அரசு ஒன்று அமைப்பதனை கோரிக் கையாகவும் செயற்பாடாகவும் கொள்ள முடியாத அரசியற் சூழல் தாயகத்தில் நிலவுகின்றது என்பதை நாம் அறிவோம் அதனை புரிந்து கொண்டு செயற்பாடுகளை செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்த இடத்தில் நாம் ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்பு கின்றோம். தாயகத்தில் தமிழ் மக்கள் தங்களுடைய அரசியல் ஜனநாயக வழிகளை விரித்துக்கொள்வதற்காக முயற்சிகளை, போராட்டங்களை பலப்படுத்த வேண்டும்.

இலங்கைத்தீவில் அரச அமைப்பின் ஆறாவது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்துக்கு எதிராக செயல்பட முடியாத ஒரு சட்ட வரையறை இருக்கின்றதே யொழிய அந்த ஆறாவது திருத்த சட்டத்தையே நீக்க வேண்டும் என்று கோரிக்கையை முன்வைக்கவும், தமிழ் மக்கள் தங்களுடைய அரசியல் ஜன நாயக வெளியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப் புகளை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை முன்வைத்து செயல்படவும் இடம் இருக்கிறது.

உலகளாவிய அனுபவங்கள் இரண்டை நாம் இங்கு எடுத்துக் கொள்வோம். பிரித்தானியாவில் நடை பெற்ற ஸ்கொட்லாந்து மக்கள் வாக்கெடுப்பை நாம் அறிவோம். இதே போன்று கனடாவில் இடம் பெற்ற கியுபெக் வாக்கெடுப்பையும் நாம் அறிவோம்.

இந்த நாடுகளில் மக்கள் தங்களுடைய விருப்பத்தை வெளிப் படுத்துவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. வெளிப் புகள் அடிப்படையில் மக்கள் தனி நாடாகப் பிரிந்து போவதற்கு இது வரை பெரும் பான்மையினர் ஆதரவு வழங்கவில்லை என்ற நிலைப்பாடு வெளிப்பட்டதையும் நாம் அறிவோம். இந்த இடத்தில் நான் ஏனைய நாடுகளில் நடை பெற்ற வாக்கெடுப் பைத் தவிர்த்து இந்த இரண்டு வாக்கெடுப்புகளை குறிப்பிடு வதற்கு காரணம் உண்டு.

மேற்குலக நாடுகள் இலங்கைதீவில் அரசியல் பிரச்சினைக்கு தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணபதற்கான முயற்சிகள் குறித்து பேசும் போது மக்கள் வாக்கெடுப்புச்சாரந்து இவ் விடயத்தை வலியுறுத்த விரும்புகின்றோம்.

இலங்கைதீவில் தேசிய பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு ஒரு மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்' அதன் அடிப்படையில் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டை நாம் வலியுறுத் துகின்றோம் .

இத்தகைய வாக்கெடுப்புகள் பிரித்தானியாவிலும் கனடாவிலும் அரசு ஆதரவுடன் நடை பெற்றிருக்கின்றன. மக்கள் பிரிந்து போவதற்கான வாக்களிப்பதற்கான சுதந்திரமும் வழங்கப்பட் டிருக்கின்றது.

இலங்கைதீவின் தேசிய இன பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு, ஆயிரக்கணக்கான போராளிகளும் இலட்சக் கணக்கான மக்களும் உயிரிழந்த ஒரு வரலாற்றைக் கொண்ட ஒரு போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்ட ஒரு பிரச் சனைக்குத் தீர்வு காண்பதற்கு, ஒரு மக்கள் வாக்கெடுப்பின் ஊடாக அரசியல் தீர்வு காண்பதுதலே ஜனநாயக ரீதியில் வெளிப்படையானதாகவும் சரியானதாகவும் அமையமுடியும்.

ஒரு பொது மக்கள் வாக்கெடுப்பினை ஈழத்தமிழ்மக்கள் வாழு கின்ற தாயக பிரதேசத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் நடத்த வேண்டும் எனவும் இந்த பொதுசன வாக்கெடுப்பில் தனியரசு உட்பட ஏனைய அரசியல் தீர்வு வடிவங்களும் முன்வைக் கப்படலாம் எனவும் இதில் தமிழ் மக்கள் எந்த தீர்வினை ஆத ரித்து நிற்கிறார்களோ அந்த தீர்வின் அடிப்படையில் அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும் எனவும் நாம் நமது நிலைப்பாட்டை முன்வைத்துச் செயல்பட்டு வருகிறோம். இத்தகைய வாக்கெடுப்பு நடைபெறும் நிலை உருவாகும் போது தமிழ் மக்கள் சுதந்திரத் துக்காக வாக்களிப்பார்கள் என்பதில் எள்ளளவு ஐயமும் எமக்கு இல்லை.

தமிழீழத் தனி அரசுக்கு மாற்றான தீர்வை வலியுறுத்துபவர்கள் தங்கள் நிலைப்பாட்டை முன்வைத்துச் செயற்படட்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்களே தமது அரசியற் தலைவிதியியை தீர்மானிக்கட்டும். இதுவெ எமது நிலைப்பாடு.

தாயகத்திலே வாழுகின்ற மக்களும் புலம் பெயர்ந்து வாழ்கின்ற மக்களும் இணைந்து இயங்கக்கூடிய வகையிலே நாம் ஒரு ஜனநாயக ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு ஆறாவது திருத்த சட்டம் தடையாக இருக்கின்றது என்கின்ற நிலைப்பாட்டின் அடிப் படையில் அதனை நீக்க வேண்டும் என்று கோரிக்கைகளை நாம் முன்வைக்கின்றோம். தாயகத்தில் உள்ள தமிழ்த் தலைவர்களும் மக்களும் இதனை முன்வைத்து செயல்பட வேண்டும் என்பதனை நாம் வலியுறுத்துகிறோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலே தமிழ் பொது வேட்பாளர் அவர்களுடைய அரசியல் விஞ்ஞாபனத்தில் பொது வாக் கெடுப்பின் ஊடாக அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது கவனத்துக்குரியது.

நாம் தொடர்ச்சியாக எமது நிலைப்பாட்டை முன்வைத்து போராட்டங்களை நடத்துவதும் அந்தப்போராட்டங்களின் ஊடாக எமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக முயற் சிகளை மேற்கொள்வதும் தான் சரியானதாக இருக்க முடியும்.

இலங்கைதீவில் அரகல ஜனநாயக போராட்டம் நடைபெற்று இருக்கா விட்டால் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருப்பது என்பது நடைமுறையில் சாத்தியப் பட்டிருக்காது.

ஐந்து வருடங்களுக்கு முன்பு இப்படி ஒரு சூழல் ஏற்படும் என்றோ, இப்படி ஒரு வாய்ப்பு ஏற்படும் என்றோ தேசிய மக்கள் சக்தியினர் உட்பட எவரும் கற்பனை செய்து இருக்க மாட் டார்கள். ஆனால் மாற்றம் நடை பெற்று இருக்கின்றது அதற்கு இந்த அரகல போராட்டம் நடைபெற்றது முக்கியகாரணமாக இருக்கிறது இதேபோல் தான் தமிழ் மக்களும் தங்கள் அரசியல் போராட்டங்களை, கோரிக்கைகளை முன்வைத்து எமது போராட்டத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், அவர்களுக்கு என்று தாயகம் உண்டு அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அந்த சுயநிர்ணயத்தின் அடிப்படையிலேயே ஒரு அரசியல் தீர்வு தேசிய இனப்பிரச்சினையை காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாடுகள் அடிப்படையானவை.

இவை 1985 இல் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தலைவர்களால் ஒன்றிணைந்து முன்வைக்கப்பட்டபட்டு, திம்புக் கோட்பாடுகளாக அடையாளம் காணப்படுகின்றன தமிழ் மக்களுடைய இறைமையும் தமிழ் மக்களுடைய கையில் தான் இருக்கின்றது என்கிறது என்ற நிலைப்பாட்டை முன்வைத்து எமது போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான ஒரு ஏற்பாட்டை எவ்வாறு மேற் கொள்வது என்பது தொடர்பான தெளிவான ஒரு அரசியல் திட்டம் எம்மிடம் இருக்கவேண்டும்.

சிங்கள பௌத்த தேசம் வகுக்கின்ற திட்டங்களுக்கு எதிர் வினை ஆற்றுவது, சிங்கள பௌத்த அரசு எடுக்கின்ற நடவடிக் கைகளை எதிர் கொள்வது மட்டும் போது மானதாக இருந்து விட முடியாது. அவர்கள் போடுகின்ற மேடையிலே ஆடுபவர்களாக இல்லாமல் நமக்கான மேடையினை நாமே அமைத்துக் கொள்வது குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

எத்தகைய ஒரு அரசியல் திட்டத்தின் அடிப்படையில் செயல் பட்டால் நாங்கள் எமது தேசிய பிரச்சனைக்கான அரசியல் தீர்வை நாங்கள் சுதந்திரமாகவும் இன அழிப்புக்கு உட்படாமல் வாழக் கூடிய வகையில் ஏற்படுத்த முடியும் என்பது குறித்து நாம் கூர்மையாக சிந்தித்து அதற்குரிய செயல்வடிவத்தைக் கொடுக்க வேண்டும்.

மாவீரர் நாளில் நமது சிந்தனைகளை நாம் ஒருங்கிணைத்து அவர்கள் கண்ட கனவை நனவு ஆக்குவதற்காக எவ்வாறு நாம் செய்யப்பட வேண்டும் என்பது குறித்து ஆழமாக சிந்தித்து உரிய முடிவுகளை எடுப்பது மாவீரர்களுக்குச் நாம் செய்கின்ற உண்மையான மரியாதையாக அமையும்.

அன்பான மக்களே,

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு அவர்களுடைய தேசிய தகமையினை அங்கீகரித்து அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்கின்ற ஒரு நிலைப்பாடு உலக அளவில் என்னும் வலுவடைந்து விட வில்லை என்பது கசப்பான உண்மை.

இலங்கைதீவில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றது இன அழிப்பு என்பதற்கு பரவலான அங்கீகாரம் இன்னும் வர வில்லை.

குறிப்பாக அனைத்துலக அரசுகள் இந்த அங்கீகாரத்தை வழங் குவதற்கு தயங்கி நிற்கின்றன. அல்லது மறுத்து நிற்கின்றன. ஆனால் உண்மையில் நடைபெற்றது இனவழிப்பு என்பது தான் என்ற உண்மை அரசுகளுக்கு நன்கு தெரியும்.

இன அழிப்பை அங்கீகரித்தல் என்பது அரசியல் பின் விளை வுகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு நிலைப்பாடாகும். தற்போதைய சூழலில் அரசுகள் அனைத்தும் ஒரு கழகமாக, ஒரு குழுவாக இயங்கி வருகின்றன.

அரசுகள் தங்களுடைய நலன்களை அடைந்து கொள்வதற்கு தமக்குள் கூட்டாக அரசுகள் என்ற குழுமத்தில் இணைந்து இயங்கி வருகின்றன. அரசுகளுக்கு இடையே சில விடயங் களில் முரண்பாடுகள் ஏற்படுகின்ற போது அந்த முரண் பாடுகளை கையாள்வதற்காக அரசல்லாததரப்புகளை பயன் படுத்துகின்ற தன்மைகளை அரசுகள் கொண்டிருக்கின் றபோதும், அடிப்படையில் அரசுகள் அரசுகளுடைய நலன் களிலேயே நங்கூரமிட்டுச் செயற்பட்டுவருகின்றன. அரசுகள் தமது நலன்கள் அடிப்படையில் அணி சேரந்து இயங்குவதும் பூகோள அரசியலில் நடைபெறும் விடயம்தான்.

இதனால் இலங்கைத்தீவில் நடை பெற்றது சிங்கள பௌத்த பேரின வாதத்தின் தமிழின அழிப்பு என்பதை ஏற்றுக் கொள்கின்ற அரசியல் விருப்பு அரசுகளிடம் இல்லை. மேலும், தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பில் சிறீலங்கா அரசி னுடைய கரங்கள் மட்டுமல்ல உலகின் பல முக்கியமான அரசு களின் கரங்களும் இணைந்து இருந்தன என்பதையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். இந்த ஒரு சூழலிலே அரசுக ளாக இருந்தாலும் சரி, ஐக்கிய நாடுகள் சபையாக இருந்தாலும் சரி இலங்கைதீவில் நடைபெற்ற இன அழிப்பினை ஏற்றுக் கொள்ளாது அங்கு நடைபெற்ற யுத்தத்தின் போது இடம்பெற்ற யுத்த மீறல்களாகவும், மனித குலத்துக்கு எதிரான சில குற்றங்க ளாகவும் அவற்றை அடையாளம் காணமுற்படுகின்றன. அதி லும் கூட இரண்டு தரப்பும் இந்தக் குற்றங்களை செய்திருக் கின்றன எனக் கூறி சிறீலங்கா அரசின் தமிழினவழிப்பினை மறைக்க அவர்கள் முயல் வதனையும் அவதானிக்க முடிகிறது

தமிழ் மக்களுடைய தேசிய இனபிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பதிலாக அதனை ஒரு இனவழிப்பு ஊடாகக் கை யாண்டு இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லாமல் ஆக்கிவிட முடியும் என்ற சிங்கள பௌத்த இனவாத அரசின் திட்டத்தின் அடிப்படையிலேயே தான் இந்த இன அழிப்பு நடைபெற்றிருக் கிறது. சிறீலங்கா அரசுக்கு ஒரு தெளிவான தமிழினவழிப்பு நோக்கம் இருந்திருக்கிறது. இலங்கைதீவில் தமிழ் மக்க ளுடைய தேசிய தகமையை அழித்து விட்டால் அவர்களை மெல்ல மெல்லமாக இனக் கபளீகரம் செய்து விடமுடியும் என்ற எண்ணத்துடன் இந்த இனவழிப்பு நடைபெற்றிருக்கிறது. இப் போதும் கட்டமைப்புச் சாரந்தவகையில் இம் முயற்சி தொடர் கிறது.

இப்பின்னணியில், தமிழ் மக்கள் பாதுகாப்பாக, இனவழிப்புக்கு உட்படாமல் வாழ்வதற்கு, இனவழிப்புக்கு எதிரான ஒரு பரிகார நீதியாக, தமிழ் மக்களின் அரசியல் சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட ஒரு தீர்வு வடிவமாக சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனி அரசை அமைப்பது தவிர்க்க முடியாத தொரு தேவையாகும். இதற்கு அனைத்துலக ஆதரவை பெறுவது எப்படி என்பது நம் முன்னால் உள்ளசவால் ஆகும்

அரசுகள் நலன்களின் அடிப்படையில் செயல்படுகின்ற காரணத்தினால் உடனடியாக இந்த முயற்சியில் எமக்கு ஆதர வாக இருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கமுடியாது ஆனால் தமிழ் மக்களுடைய அரசியல் பெருவிருப்பினையும் தமிழ் மக்கள் எதிர் கொண்ட இனஅழிப்பினையும் உணர்ந்து கொண்ட பல்வேறுதரப்புகள் இந்த விடயத்தை சாதகமான முறையில் முன்னெடுத்து வருவதனை நாம் அவதானிக்க முடிகிறது.

இந்த வகையில் தற்போது ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்திலே தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையினை ஆதரித்து, தமிழ் மக்கள் மீதான இன அழிப்பினை அங்கீகரித்து ஒரு அரசியல் தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது. இந்த தீர் மானத்தின் முக்கியமான பகுதிகளை நான் இங்கே கீழே குறிப்பிட விரும்புகிறேன்.

//ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளால் ஆவணப்படுத்தப்பட்டபடி, குறிப்பாகமே 2009 இல் நடந்த ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களின் போது, 70,000 முதல் 146,000 வரையிலான தமிழ் பொது மக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்ட, சிறீலங்காவில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டதாகக் கூறப்படும் பாரிய அட்டூழியங்களை நாடாளுமன்றம்அங்கீகரிக்கிறது;

2011 இல் சிறீலங்காவில் பொறுப்புக்கூறல் குறித்த ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை, 2015 இல் சிறீலங்கா மீதான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் (OISL) மற்றும் போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழர்களுக்கு எதிரான முறையான துன்புறுத்தல் ஆகியவற்றின் நம்பகமான குற்றச்சாட்டுகளை எடுத்துக் காட்டும் தொடர்ச்சியான ஐ.நா மனித உரிமைகள் கவுன்சில் தீர்மானங்கள் ஆகிய வற்றின் கண்டு பிடிப்புகளை ஒப்புக்கொள்கிறது;

இன அழிப்புக் குறித்து சர்வதேச விசாரணை நடத்தவும், பொது வாக்கெடுப்பு மூலம் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் எதிர் காலத்தை தீர்மானிக்கும் உரிமையை அங்கீகரிக்கவும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மற்றும் சிவில் சமூகம் தொடர்ந்து அழைப்பு விடுப்பதைக் குறிப்பிடுகிறது.

மேலும், சர்வதேச சட்டத் தரநிலைகள் மற்றும் மோதலுக்குப் பிந்தைய சூழல்களில் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கும் கடந்தகால ஐ.நா. தீர்மானங்களுக்கு இணங்க, சிறீலங்காவின் வட கிழக்கில் தமிழர் சுயநிர்ணய உரிமை குறித்து ஐ.நா.வின் மேற் பார்வையில் வாக்கெடுப்பு நடத்த ஐக்கிய நாடுகள் சபையில் வாதிட இங்கிலாந்து அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.//

இந்த தீர்மானத்திற்கு பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கு

கின்ற போது நமக்கான அங்கீகாரத்தின் அடித்தளம் படிப்படியாக வளர்ச்சி அடைய ஆரம்பிப்பதற்கான ஒரு நல்ல அறிகுறியாக அதனை நாம் பார்க்க முடியும்.

இந்த தீர்மானத்தில் முன்வைக்கப்பட்டிருக்கின்ற கருத்து அடிப்படையிலே உலகளாவிய ரீதியில் எமக்கு ஆதரவான தீர்மானங்களை கொண்டு வருவதற்கு, அவற்றை மக்கள் மயப்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

அனைத்துலக ரீதியாக தமிழ் மக்களுடைய அடிப்படை நிலைப்பாடுகளை முன்னிறுத்தி, இனவழிப்புக்கு உள்ளாகி வருகின்ற மக்கள் கூட்டம் என்ற வகையிலே அழிப்பிலிருந்து பாதுகாப்பாக நமது வாழ்வை அமைத்துக் கொள்வதற்காக ஒரு தனியரசை அமைத்துக்கொள்ள வேண்டிய தேவை அவசியமாக இருக்கின்றது என்ற கருத்தை வலுப்படுத்துகின்ற செயற்பாடுகளிலே நாம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறோம் .

எமது தொடர் செயற் பாடுகளுடைய வெளிப்பாடாக இப்போது ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்திலே முன்வைக்கப் பட்டிருக்கின்ற தீர்மானத்தை நாம் பார்க்கமுடியும். இது ஒரு ஆரம்பம் தான். நாம் தொடர்ச்சியாக நமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற போது எமது நிலைப்பாட்டிலே நாம் முன்னேறிச்செல்ல முடியும்.

அரசியல் பிரச்சனை உள்ள எந்த ஒரு மக்கள் கூட்டமும் இடைவழியில் ஏற்படுகின்ற சோர்வுகளாலும் பின்னடைவுகளாலும் மனம் தளர்ந்து ஓய்ந்து விடக்கூடாது. அவ்வாறு ஓய்ந்து விடுவோமாக இருந்தால், சரணாகதிக்கு தயாராகி விடுவோமாக இருந்தால் அந்த மக்கள் கூட்டம் சுதந்திரம் பெற்ற மக்கள் கூட்டமாக ஒரு போதும் வரலாற்றில் வாழ முடியாமல் போய்விடும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்

இப்போது ஒரு சாராரிடம் அவநம்பிக்கை வளர்ந்து இருக்கின்றது என்பதனை நாம் அவதானிக்க முடிகிறது. சாத்தியமில்லாதவற்றை ஏன் பேச வேண்டும் ஏன் செய்ய வேண்டும் என்று எண்ணுகின்ற ஒரு போக்கும் வளரந்து இருப்பதனையும் காணமுடிகிறது.

வரலாற்றை நீண்டகால நோக்கில் வைத்துப் பார்க்காமல் குறகிய காலக் கண்ணோட்டத்தில் பார்ப்பதனால் இவர்கள் நம்பிக்கை இழந்து விடுகிறார்கள். தமது சிந்தனையை அறிவின் பாடுபட்டதாகவும் அவர்கள் எண்ணிக் கொள்கிறார்கள் .

ஆனால் இன வழிப்புக்கு உள்ளாகின்ற ஒரு தேசிய இனம் அந்த இனவழிப்பை எதிர்த்து போராடாது விட்டால் அதன் விளைவு அவர்கள் இனவழிப்புக்கு உள்ளாகி விடுவார்கள் என்பது தான்.

இதனால் நாம் சோர்வு அடைந்து விடாமல் எமது போராட்டங்களை தொடர வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது. அதனை இன்றைய மாவீரர் நாளில் நமக்குள் உறுதியாக வலியுறுத்திக்கொள்வோம்.

அன்பான தமிழ் நாட்டு மக்களே, அரசியற் தலைவர்களே!

இன்றைய மாவீரர் நாளில் உங்களுடன் நாம் சில கருத்துக்களை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம்.

தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் வாழுகின்ற எட்டுக் கோடிக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் எங்களுடைய தொப்புள் கொடி உறவுகளாக இருக்கிறார்கள் என்ற உணர்வுடன் ஈழத் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழ் நாட்டில் வாழுகின்ற தமிழ் மக்களுடைய பாதுகாப்பும் அரவணைப்பும் தங்களுக்கு இருக்கின்றது என்றதெம்புடனும், தென்புடனும் இந்த பாதுகாப்பும் அரவணைப்பும் சிங்கள பௌத்த பேரின வாதத்தினுடைய இனவழிப்பில் இருந்து தம்மைப்பாதுகாக்க உதவும் என்ற உணர்வுடனும் நம்பிக்கையுடனும் எமது மக்கள் வாழ்ந்து வந்தார்கள்.

2009 ஆம் ஆண்டு சிங்கள பௌத்த பேரினவாதத்தால் நடத்தப்பட்ட இனவழிப்பின் போது தமிழ் நாட்டில் வாழுகின்ற தொப்புள் கொடி உறவுகள் தம்மைப் பாதுகாப்பார்கள் என்று அவர்கள் எண்ணிப்பார்த்துக்காத்து இருந்தார்கள்.

தமிழ் நாட்டு மக்கள் தமது உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்தி வீதிகளில் இறங்கி எத்தனையோ போராட்டங்களை செய்த போதும் நமது மக்களை பாதுகாக்ககூடிய ஒரு அரசியல் முடிவை இந்திய அரசின் மூலம் எடுக்க அவர்களால் முடிந்திருக்கவில்லை என்பதை வரலாறு நமக்கு காட்டி இருக்கின்ற ஒரு அனுபவமாக ஏற்பட்டறிவாக மக்கள் உணர்கிறார்கள்

தமிழின அழிப்பில் சிறீலங்கா அரசுக்கு இந்திய ஒன்றிய அரசு வழங்கிய உதவிகளையும் தமிழ் நாட்டு மக்களால் தடுத்து நிறுத்த முடிய வில்லை என்பதுவும் யதார்த்தமாக இருந்திருக்கிறது.

2009 க்குபிற்பட்ட கடந்த 16 ஆண்டு காலமாக இலங்கைத்தீவில் வாழ்கின்ற நமது மக்கள் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பிடியில் மெல்லமெல்ல சிக்குண்டு குரல் வளை மேலும் நசுக்கப்பட்ட மக்களாக வாழ்ந்து வருகின்ற சூழலை நீங்கள் அறிவீர்கள்.

ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக தமிழ் நாடு சட்டப்பேரவையில் பல்வேறு வகையான ஆதரவு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

தமிழின வழிப்புக்கு எதிராக அனைத்துலக விசாரணை தேவை என்பதனை வலியுறுத்தியும், இலங்கைதீவின் தேசிய பிரச்சனைக்கு பொது மக்கள் வாக்கெடுப்பு ஊடாக தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்தியும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானங்கள் அனைத்துக்கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்கும் சுதந்திரமான வாழ்வுக்கும் தமிழ் நாட்டுமக்களின், தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளின், தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களின், பங்களிப்புமிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும்.

தமிழ் நாட்டு மக்களின் முழுமையான ஆதரவுடன் தான் ஈழத் தமிழ் மக்கள் தமது சுதந்திரத்தைவென்றெடுக்க முடியும் என்பதனை நாம் வலியுறுத்த விரும்புகிறோம்

இந்தியாவில் தமிழ் நாடு ஒரு வலுமிக்க பலமான ஒரு மாநிலமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. தமிழ் நாட்டினுடைய வளர்ச்சி உலகளாவிய ரீதியில் கவனத்தை எட்டி இருக்கிறது.

தமிழ் நாட்டின் உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி பாகிஸ்தானின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நிகராக இருக்கிறது என்று கூறப்படுகிறது. தமிழ் நாட்டினுடைய வளர்ச்சியினை அனைத்து உலக அரசுகளும் அவதானித்து வருகின்றன் அதனை உணர்ந்திருக்கின்றன .

2011 ஆம் ஆண்டு அமெரிக்காவின் இராஜாங்க செயலாளராக இருந்த கிலாரிகிளின்ரன் தமிழ் நாட்டுக்கு வருகை தந்ததையினையும், 2019 ஆம் ஆண்டு சீனத் தலைவர் தமிழ் நாட்டுக்கு வருகை தந்ததையினையும் நாம் இங்கு கவனத்தில் கொள்ளல் பொருத்தம்.

இந்தியாவிலே ஒப்பீட்டளவில் சமூக நீதி சார்ந்து கூடுதல் அக்கறை கொண்ட ஒரு மாநிலமாகவும் பெண்களின் பங்களிப்பிற்கு கூடுதலான மதிப்பளிக்கின்ற ஒரு மாநிலமாகவும் தமிழ் நாடு வளர்ச்சிகண்டிருக்கிறது.

இதேவேளை, தமிழ் நாட்டின் செல்வாக்கு மத்திய அரசின் முடிவுகளில் கூடிய தாக்கம் ஏற்படக் கூடிய வகையிலே எவ்வாறு செயல்பட முடியும் என்று தமிழ் நாட்டு அரசியற் தலைவர்களும் மக்களும் சிந்திப்பது ஈழத் தமிழ் மக்களுடைய விடுதலை சார்ந்து முக்கியமான ஒன்றாக இருக்கிறது.

உலகில் வாழுகின்ற மக்களில் அரசுடைய மக்கள் பல்வேறு தளங்களில் தமது உரிமைகளை தட்டிகேட்பதற்கான வாய்ப்புகளை பெற்றுக்கொள்கிறார்கள் அசாதாரணமாக, 1983 ஆம் ஆண்டு வடஅயர்லாந்திலே பிரித்தானியபடைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் பிரித்தானியப் படைகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவது என்ற முடிவினை பிரித்தானியா அரசாங்கம் எடுத்த போது அதை எதிர்த்து அயர்லாந்து அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதி மன்றத்திலே வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்ததனை குறிப்பிடலாம்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு என்று ஓர் அரசு இது வரை உலகஅரங்கில் இல்லை. தமிழ் நாட்டில் ஒரு மாநில அளவிலான ஓர் அரசு சில அதிகாரங்களை கொண்ட அளவில் இயங்கி வருகிறது.

தமிழ் நாடு அரசசபையில் சட்டப் பேரவையில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்த தீர்மானங்களை இந்திய அரசின் தீர்மானங்களாக மாற்ற வேண்டிய ஒரு கடப்பாடும் பொறுப்பும் தமிழ் நாட்டிலே உள்ள அரசியற் கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் மக்களுக்கும் உள்ளது என்பதனை நாம் மாவீரர் நாளில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மேலும் தமிழ் நாடு அரசு தமிழீழப் பிரச்சனையை உலக அரசுகளின் கவனத்திற்கும் நேரிடையாக கொண்டு வரவேண்டும் எனக் கோருகின்றோம். ஈழத் தமிழர் குறித்த தமிழக சட்ட சபைத் தீர்மானங்கள் தமிழகத்தின் தார்மீக இறையாண்மையை வெளிப்படுத்துகின்றன. அத்தார்மீக இறையாண்மையை தமிழீழம் குறித்து அரசியல் இறையாண்மை ஆக்கும்படி நாம் கோருகின்றோம்

எதிர் வரும் 2026 ஆம் ஆண்டு மே மாதம் தமிழ் நாடு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற இருக்கின்றது. இந்த தேர்தலை ஈழத் தமிழ் மக்களுடைய நிலையை, தமிழ் மக்களுடைய உரிமை பிரச்சினையை, ஈழத் தமிழர் மக்கள் எதிர்கொள்ளுகின்ற இனஅழிப்பை, ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வாக தமிழீழ அரசு அமைய வேண்டிய காரணத்தை இந்திய ஒன்றிய அரசுக்கும், ஏனைய மாநிலங்களுக்கும் எடுத்துக்கூறும். ஒரு களமாகவும் தமிழ் நாடு அரசியல் கட்சிகளும் மக்களும் பயன்படுத்த வேண்டும் என்று நாம் வேண்டுகிறோம்.

அரசியல் கட்சிகள் தேர்தல் விஞ்ஞாபனத்தில்,

ஈழத் தமிழ் மக்களின் தேசத் தகமையையும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே அரசியல் தீர்வு காணப்பட வேண்டிய அவசியத்தையும், தமிழின அழிப்புக்கு எதிராக தமிழீழத் தனியரசு அமைய வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி தமது நிலைப்பாட்டை அறிவித்து, அதனை செயல்படுத்துவதற்கான வழிவகையினை மேற்கொள்ள வேண்டும் என்று நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இந்திய ஒன்றிய அரசுடனும் அதிகாரிகளுடனும் ஈழத் தமிழ் மக்களின் நிலைப்பாட்டை வலியுறுத்தி, தமிழ் நாட்டினுடைய வலுவான ஒரு நிலையைமையமாக வைத்து ஈழத் தமிழ் மக்களுக்கு சாதகமான ஒரு முடிவை எடுக்க இந்திய ஒன்றிய அரசைத் தூண்ட வேண்டும் என்றும் நாம் கோரிக்கை வைக்கின்றோம்

தமிழ் நாடா சிறீலங்காவா என்ற ஒரு கேள்வி எழுகின்ற போது எந்த விததயக்கமும் இன்றி தமிழ் நாட்டின் பக்கமே நிற்க வேண்டிய ஒரு நிலையை இந்திய அரசுக்கு ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையை தமிழ் நாட்டு அரசியல் சூழலில் உருவாக்க எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து தமிழ் நாடு அரசியல் தலைவர்கள் உரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

நமது இந்த கோரிக்கை ஓர் இலகுவான கோரிக்கை அல்ல என்பதையும் நாம் அறிவோம். இருந்த போதும், ஈழத் தமிழ் மக்களுடைய போராட்டத்தில் ஈழ தமிழ் மக்களுடைய உரிமை பிரச்சனையில், ஈழத் தமிழ் மக்களுக்கு சாதகமான ஒரு நிலைமை உருவாகுவதற்கு, இந்திய மத்திய அரசை தமிழ் நாடு வென்றெடுப்பதன் ஊடாக. இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக மாற்றி அமைப்பதன் ஊடாக ஏற்படக் கூடிய முன்னேற்றங்கள் மிகவும் சாதகமாக இருக்கும்.

ஈழத் தமிழ் மக்களுடைய போராட்டத்தின் முன்னேற்றம் தமிழ் நாட்டிலிருந்து கிடைக்கும் வலுவான ஆதரவுடன் பின்னிப்பிணைந்திருக்கும் என்பதனையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்

அன்பான மாவீரர் பெற்றோர்களே, உறவுகளே!

உங்கள் பிள்ளைகள், உங்கள் உறவுகள் எங்கள் தேசத்தின் விடிவிற்காய் தமது உயிரை ஈகம் செய்திருக்கிறார்கள்.

குடும்பத்தின் கடமைகளை அவன், குடும்பத்தின் தேவைகளை விட, குடும்பத்தின் நெருக்கடிகள் எல்லாவற்றையும் விட தேசத்தினுடைய எதிர் கால நன்மை கருதி அவர்கள் களம் சென்றார்கள்.

உங்கள் பிள்ளைகளது உங்கள் உறவுகளது ஈகம் வீணாகிப் போய்விடுமோ என்ற ஆழ்ந்த கவலை உங்களிடம் இருப்பதை நாம் அறிவோம்.

வரலாற்றின் கட்டாயமாக அவர்கள் ஆற்றிச் சென்ற பணி அமைந்திருந்தது அவர்கள் எமக்கு முன்னால் தமது வாழ்வை நமது மக்களுக்காய் விதைத்துவிட்டு சென்றிருக்கிறார்கள்.

அவர்கள் நம்முடைய வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். எமது தேசம் தடம் புரளாது இலட்சியப் பயணத்தில் தொடர்ந்து செல்வதற்கு நமது மாவீரர்கள் காவல் தெய்வங்களாக இருக்கிறார்கள்.

என்றோ ஒரு நாள் நமது மாவீரர்கள் கண்ட கனவு நனவாகும் என்பதனை நாம் உறுதியாக நம்புவோம்.

அன்பான மக்களே,

ஒவ்வொரு வருடமும் மாவீரர் நாள் அன்று மாவீரர்களுக்கான நமது வணக்கத்தை செலுத்தி நமது கடமைகளை நிறைவு செய்து விட்டோம் என்று நாங்கள் ஓய்ந்து இருந்து விடமுடியாது.

நாம் ஒவ்வொருவரும் எம் முன்னால் உள்ள பொறுப்புகளை உணர்ந்து, கடமைகளை உணர்ந்து செயல்பட்டால் மட்டுமே நமது தேசம் சுதந்திரக்காற்றைச் சுவாசிப்பது சாத்தியமாகும்.

ஒரு நாடு உருவாவது என்பது உள் நாட்டு சூழல்களால் மட்டும் நடந்து விடுவது அல்ல. ஒரு நாடு உருவாவது என்பது ஒரு புதிய அரசு அனைத்து உலக அரசுகளின் கூட்டமைப்புக்குள் இணைந்து கொள்ளும் ஒரு நடை முறையை சார்ந்திருக்கும்.

ஏற்கனவே இருக்கின்ற அரச குழுமத்துக்குள் புதிய அங்கத்தவரை உள்வாங்கி விடுவதும் இலகுவானது அல்ல. ஏற்கனவே இருந்து கொண்டிருக்கின்ற அரசுகளுக்குள் தங்கள் எல்லைகளை வகுத்து தமது நலன்களை அடைந்து கொள்ளும் ஒரு சமன்பாட்டை அரசுகள் கொண்டிருந்த போதும், காலத்தின் கட்டாயமாக பல புதிய புதிய அரசுகள் உருவாகிக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த புதிய அரசுகளின் உருவாக்கத்தை உற்று அவதானித்தால், அவை அனைத்துலகச் சூழலுடன், புவி சார் அரசியலிலுடன், பூகோள அரசியலிலுடன் தொடர்பு பட்டவையாகத்தான் உள்ளன. புவிசார் அரசியலிலும், பூகோள அரசியலிலும் குறிப்பாக தென் ஆசிய அரசியலில் நாமும் பங்காளர்களாக மாறுவது எமக்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கு உதவும்.

எந்த ஒரு தேசிய இனம் தான் உயிர் வாழ்வதற்கு, இன அழிப்பிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு சுதந்திரமும் இறைமையும் கொண்ட தனி அரசு ஒன்று அமைவதை தவிர வேறு எந்த வாய்ப்புகளும் இல்லைஎன்று உணர்கிறதோ, அந்தத் தேசிய இனம் தனது போராட்டத்தை தொடர்ச்சியாகவும் வீச்சாகவும் வைத்திருத்தலும் அரச முன் நிபந்தனையாக இருக்கும்.

எனவே நாம் நமது மாவீரர்களுடைய கனவுகளை நமக்குள் உள் வாங்கி, அந்த கனவுகள் எமது மக்களின் எதிர்கால நன்மைக்கானவை என்பதனை உணர்ந்து செயல்பட வேண்டும்.

எம்மில் பலருக்கு தமிழீழ அரசு அமைவது சாத்தியம் தானா என்ற கேள்வி இருப்பதினால் தான் அதனை முன்னிறுத்துச் செயற் ஈடுபடுவதற்கு தயக்கம் காட்டு வதனை உணர முடிகிறது.

நாம் ஒருதேசம்; எமக்கு பாரம் பரிய தாயகம் உண்டு; தனியான பண்பாடு உண்டு; பொருளாதாரவாழ்வு உண்டு; தொடர்ச்சியான பிரதேசத்தில் நாங்கள் காலாதி காலமாக வாழ்ந்து வருகிறோம் .

இத்தகைய ஒரு தேசிய இனம் காலனித்துவ காலத்தில் இழந்த இறைமையை, சிங்கள பௌத்த பேரின வாதம் இன்று தம்வசப்படுத்தி வைத்திருக்கிறது.

இந்த இறைமையை மீட்டெடுத்து எங்களுடைய அரசியல் தலைவிதியை நாமே தீர்மானிக்கின்ற ஒரு சூழலை உருவாக்கி, அந்த சூழலில் நாம் சுதந்திர மனிதர்களாக வாழ்வோம் என இந்த மாவீரர் நாளில் உறுதி கொள்வோமாக!

தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

விசுவநாதன் ருத்ரகுமாரன்

# தமிழர் தாயகத்தில் தொடரும் தொல்பொருள் வன்முறை!

– பா. அரியநேத்திரன் –

02.12.2025

இலங்கையில் தொல்பொருள் திணைக்களம் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 1890ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 1940 ஆம் ஆண்டில், 9 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் மூலம் இது சட்டப்பூர்வமாக்கப்பட்டது.

தொல்பொருளியல் மரபுரிமை தொடர்பான சரியான முகாமைத்துவத்தை வளர்த்தெடுப்பது இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களத்தின் முதன்மை நோக்கம். இதனால், இலங்கையின் தொல்லியல் மரபுரிமையை முகாமைப்படுத்துவதையும் அது தொடர்பான செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதையும் இத் திணைக்களம் முக்கிய பணியாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.




தொல்பொருளியல் மரபுரிமை தொடர்பில், தேவையான மனித வளங்களையும், நிறுவன வளங்களையும் உருவாக்கிப் பேணுதல்; நாடு முழுவதிலும் உள்ள தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாத்தல் அவற்றைப் பதிவு செய்தல், இம்மரபுரிமை தொடர்பாக மக்களிடையே அறிவை வளர்த்தல் தொல்லியல் களங்களையும், நினைவுச்சின்னங்களையும், தொல்பொருட்களையும் பேணிப்பாதுகாத்தல், தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுதல் என்பன இத்திணைக்களத்தின் செயற்பாட்டு வரம்புக்குள் அடங்குகின்றன.

இவ்வாறான நோக்கமாக பொதுவாக கூறப்பட்டாலும் வடகிழக்கை பொறுத்தவரை பௌத்தமதத்தையும் பௌத்த சின்னங்களையும் ஆய்வு செய்து விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் அமைப்பதற்கான பௌத்த மத திணைக்களமாகவே தொல்பொருள் திணைக்களம் செயல்படுகிறது என்ற அச்சம் வடகிழக்கு தமிழர்கள் மத்தியில் உண்டு. 2009 மே 18 க்கு பிறகான சூழலில் ஒரு கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை மாறி மாறி ஆட்சி செய்த சிங்கள அரசுகள் நடத்தி வருகின்றன.

தொல்பொருளியல் வன்முறை இலங்கை அரசின் ஒரு பாகமாக இருக்கும் தொல்பொருளியல் திணைக்களம், இலங்கையினைச் சிங்கள பௌத்தர்களுக்குரிய ஒரு தேசமாக உருவாக்கும் முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்து வருகிறது. எமது பாடசாலைகளிலே கற்பிக்கப்படும் வரலாற்றுப் பாடநூல்கள் எவ்வாறு நாட்டின் சிறுபான்மை இனமக்களின் வரலாறுகளை இருட்டடிப்புச் செய்கின்றனவோ, அதே போலவே தொல்பொருளியல் திணைக்களமும் சிறுபான்மை மக்களிற்கும், இந்தத் தீவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியிலான உறவுகளை நீர்த்துப் போகச் செய்யும் பணிகளிலே ஈடுபடுகிறது. தொல்பொருளியல் துறையினைப் பயன்படுத்தி, இவ்வாறு திட்டமிட்ட முறையிலே, அரசினால் மேற்கொள்ளப்படுகிறது.

வடகிழக்கு மாகாணங்களில் இருந்து தமிழ்த் தேசிய அடையாளத்தின் மூலமான ஒரு சுயநிர்ணய உரிமைக்கான குரல் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், இந்தப் பிரதேசத் தினை சிங்கள பௌத்த மயமாக்குவதன் மூலம், இப்பிராந்தியத்தின் சுயநிர்ணய உரிமைக்கான கோசங்களை வலுவிழக்கச் செய்யலாம் என்பதுவும் தொல்பொருளியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் வன்முறைக்கு மற்றொரு காரணம் ஆகம்.



தொல்பொருளியல் செயலணி இவ்வாறான ஒரு சூழமைவிலேயே, கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தொல்பொருளியல் முக்கியத்துவம் மிக்க இடங்களை முகாமை செய்வதற்கான ஒரு செயலணியின் நியமனம் ஜனாதிபதியினால் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலமாக அண்மையிலே வெளியிடப்பட்டது. ஒப்பீட்டளவில் நோக்குகையில் இலங்கையிலே இன, மதப்பல்வகைமை மிகவும் கூடிய மாகாணமாகக் கிழக்கு மாகாணம் அமைகின்றது.

கிட்டத்தட்ட 77% ஆன தமிழ் பேசும் மக்களை உள்ளடக்கிய ஒரு மாகாணத்தின் தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்களைப் பேணும் நோக்கத்துக்காக அமைக்கப்பட்டிருக்கும் ஒரு செயலணியிலே தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்த ஒருவர் தன்னும் இடம்பெறாமை, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் மத்தியில் இந்தச் செயலணி தொடர்பாக அச்ச உணர்வுகளைத் தோற்றுவித்துள்ளது. தமது சமூகங்களின் கலாசாரங்களையும், மதச் சின்னங்களையும், ஏன் தம் அடையாளம் சார் இருப்பினையும் தகர்க்கும் வகையிலேயே, இந்தச் செயலணி செயற்படக் கூடும் என்ற அச்சம் அவர்களைச் சூழ்ந்துள்ளது.

இந்தச் சூழலிலேயே இந்த இரண்டு சமூகங்களும் இணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்துப் பலரும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த இரண்டு சமூகங்களும் இணைந்து செயற்படுவதற்கு எவ்வாறான அரசியல் முயற்சிகள் அவசியம் என்பதனையும், அரசின் குறுகிய தேசியவாத ரீதியிலான தொல்பொருளியல் பார்வைக்கு மாற்றாக, இந்தப் பிரதேசத்திற்கென எவ்வாறான மாற்று அரசியற் பார்வை ஒன்று தேவைப்படுகிறது என்பதனையும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கம் ஆகம்.

இந்தச் சூழலில் வடக்கு கிழக்கு எங்கும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பானது பெரு மெடுப்பில் நிகழ்த்தப்படுகின்றது.

கடந்த பொருளாதார நெருக்கடி காலத்தில் அந்த ஆக்கிரமிப்பை தற்காலிகமாக நிறுத்தி தமிழ் மக்களுடன் ஒன்றித்து போராட்டங்களை செய்து உலக நாடுகளின் கடன்களை பெற்றுக் கொள்ளும் வரை வாழாதிருந்த பௌத்த சிங்கள பேரினவாதம் இன்று தன்னுடைய முகத்தை மிகத் தெளிவாக வெளிக்காட்டி இருக்கின்றது.

திரிக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வு முடிவுகளை வெளியிடுவதன் மூலம் வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டைச் சிதைப்பதே பேரினவாதத்தின் முதன்மை நோக்கமாக இருப்பதாக தமிழ் சிவில் சமூக அமையம் அறிக்கையொன்றினை வெளியிட் டுள்ளது.

குறித்த அறிக்கையில், தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் இவ்வாறான விஞ்ஞான பூர்வமற்ற, திரிக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வு முடிவுகளை வெளியிடுவதன் மூலம் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டைச் சிங்கள-பௌத்த பேரினவாதம் சிதைத்து வருகின்றது. சிங்கள-பௌத்த மயமாக்கல் மூலமாக சிங்கள-பௌத்தர்களின் பாரம்பரிய வாழிடமாக வடக்கு-கிழக்கைக் மாற்றியமைத்து, தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதே சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் முதன்மை நோக்காக இருந்து வருகின்றது.

அரசின் அனுசரணையிலான விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் போலவே தமிழர் பகுதிகளில் இவ்வாறு பௌத்த தொல்பொருட் சின்னங்களைக் கண்டடைவது என்பதுவும், தமிழர்களின் தாயகத்தைச் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிப்பதற்கான முதற்படியாக எப்போதும் இருந்து வருகின்றமையே இவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் தமது இருப்புத் தொடர்பான அச்சத்தை ஏற்படுத்த காரணமாகின்றது.

தொல்லியல் எனும் போது அது இந்து, பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் இடங்களாக இருக்கலாம். ஆனால் கடந்த காலங்களில் தொல்லியல் எனும்போது அவை பௌத்த கலாச் சாரத்திற்கான இடம்போன்று காட்டுகின்றனர். அம்பிட்டிய சுமனரத்ன தேரர் என்ற ஒருவர் அடாவடிகளில் ஈடுபடுகின்றார்.

தற்போது அவர் கைது செய்யப்பட உள்ளதாக கூறப்பட்டாலும் கடந்த காலங்களில் அவர் நீதிமன்றில் பல வழக்குகளில் உள்ளார் கைது செய்யப்பட்டாலும் வெளியில் அவர் வந்த சந்தர்ப்பங்கள் பல உண்டு அவர் கெட்ட வார்த்தைகளை பேசி இன நல்லிணக்கத்தை குழப்புகின்றவர் இவ்வாறானவர்களின் தலையீடுகள் தொல்லியல் விடயங்களில் இருக்கும் போது இன நல்லிணக்கம் என அநுர அரசு கூறினால் “நாம் இலங்கையர்” என்ற நாடகம் காட்டினாலும் அது இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்போவதில்லை என்பதே உண்மை.






# Office of the Prime Minister
# Transnational Government of Tamil Eelam

875 Avenue of the Americas, Suite 2306
New York, NY 10001, USA

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
பிரதமர் பணிமனை

www.tgte.org
pmo@tgte.org


## “இனி ஓர் இனவழிப்பு நிகழவிடோம்”

09.12.2025

2025 திசம்பர் 9 - 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபை திசம்பர் 9ஆம் நாளை இனவழிப்புக் குற்றத்தால் பாதிப்புற்றவர்களின் நினைவுக்கும் கண்ணியத்துக்குமான நாளாகவும், இந்தக் குற்றத்தைத் தடுப்பதற்கான நாளாகவும் அறிவித்தது. A/RES/69/323 என்ற தீர்மானத்தின் ஊடாக அந்த நாளை இனவழிப்பினால் பாதிப்புற்றவர்களுக்கு மதிப்பளிப்பதற்கும், இனவழிப்புக் குற்றத்தைத் தடுத்தல், தண்டித்தல் பற்றிய 1948 ஒப்பந்தம் குறித்து விழிப்புணர்வு ஏற்படச் செய்வதற்குமான நாளாக அத்தீர்மானம் வரையறை செய்தது. “மீண்டும் ஒருபோதும் நிகழவிடோம்” என்ற கொள்கைதான் இந்த ஒப்பந்தத்தின் மையமும் குறிக்கோளுமாக அமைந்தது. ஆனால் இந்த ஒப்பந்தம் இயற்றப்பட்ட பிறகான இந்த 77 ஆண்டுக் காலத்தில் இந்தக் கொள்கை தொலைதூரக் கனவாகவே இருந்து வருகிறது.

இனவழிப்பு ஒப்பந்தம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து ருவாண்டா, போஸ்னியா, தார்ஃபூர், இலங்கைத் தீவு, காசா உள்ளிட்ட உலகப் பகுதிகள் பலவற்றிலும் பன்னாட்டுச் சமுதாயம் இந்தக் கொடுங் குற்றம் நிகழக் கண்டுள்ளது. இந்த நிகழ்வுகள் பலவற்றிலும் பாதிப்புற்றவர்களும், பாதிப்புற்று உயிர்பிழைத்தவர்களும் இன்னமும் நீதிக்காகக் காத்துள்ளனர். பொறுப்புக்கூறல் இல்லை என்ற நிலை மிகப் பரவலாகக் காணப்படுவதன் பின்னால் மறைந்துள்ள காரணம் அரசுகளே குற்றம் புரிந்திருப்பதுதான். இதுவே இந்த வன்கொடுமைகளை அறிந்தேற்கவும், அதனை அதற்குரிய பெயரால் அழைக்கும் பன்னாட்டு மனப்பக்குவத்தை தடை செய்யும் அரசியல் சக்தியாகின்றது. “இனவழிப்பு” என்ற முத்திரை வெறும் முத்திரையன்று; இதில் பெரும் நெறிமுறை அர்த்தமும் பொறுப்பும் தங்கியுள்ளது.

இனவழிப்புக் குற்றத்தால் பாதிப்புற்றவர்களின் நினைவுக்கும் கண்ணியத்துக்கும் இந்தக் குற்றத்தைத் தடுப்பதற்குமான பன்னாட்டு நாளாகிய இன்று பன்னாட்டு அரசுகள் இந்தக் குற்றத்தைத் தடுக்கும் கடப்பாடுடையவை என்பதை அறிந்தேற்கிறோம். இனவழிப்புக் குற்றத்தை ஒப்புக் கொள்வது தாமும் உடந்தையாக இருப்பதை வெளிப்படுத்தி, தமக்கும் பாதமான சட்ட விளைவுகளைக் கொண்டுவரும் என்ற அச்சத்தால் அவை பலநேரம் இந்தப் பொறுப்பினைத் தட்டிக் கழித்துள்ளன என்பதும் நாமனைவரும் அறிந்த செய்திதான், நடப்பிலுள்ள தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களின் காரணத்தால், என்ன நடந்தது என்பது அனைத்து பன்னாட்டு அரசுகளுக்கும் முழுமையாகத் தெரியும்.

சிறீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆயுத மோதலின் இறுதிநிலைகளில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட வன்கொடுமைகளைப் பொறுத்த வரை ஆயுத மோதலின் இறுதிநிலைகளில் இனவழிப்பு செய்யப்பட்டதா என்பது குறித்து அதிகாரமுறை ஐநா அறிக்கைகள் ஒரு திட்டவட்டமான முடிவை இது வரை வழங்கவில்லை. ஆக்கிரமிக்கப்பட்ட பாலத்தீனப் பிரதேசங்களுக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பிரன்சிஸ்கா அல்பனிஸ், இனவழிப்பு ஒப்பந்தத்தின் படி, “காசாவில் பாலத்தீனர்களுக்கு எதிரான இனவழிப்புச் செயல்கள் செய்யப்பட்டிருப்பதைக் காட்டும் எல்லை அடையப்பட்டு விட்டது என்று நம்புவதற்கு அறிவுக்குகந்த காரணங்கள்” உள்ளன என கூறியுள்ளார். “ஓர் இனவழிப்பின் உடற்கூறியல்” (Anatomy of Genocide) என்ற தன் அறிக்கையில் மூன்று செயல்களை எடுத்துக்காட்டி, “தாக்குதலின்” பெரும்படியான தன்மையும் வீச்சும், அது சுமத்திய நாசகர வாழ்க்கை நிலைமைகளும் உரிய ஆள் புலத்தில் மக்களை “ஒரு குழுவாக” ஒழித்துக்கட்டும் நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன, என அல்பனிஸ் அம்மையார் எடுத்துக் காட்டுகின்றார்: ஒன்று, “குழு உறுப்பினர்களை சாகடித்தல்”, இரண்டு, “குழு உறுப்பினர்களுக்கு உடல்வகையிலோ உள வகையிலோ கடுமையாக ஊறு செய்தல்”. மூன்று, “முழுமையாகவோ பகுதியாகவோ உடல்வகையில் அழிவைத் தோற்றுவிக்கும் நிலைமைகளை குழுவின் மேல் வேண்டுமென்றே சுமத்துதல்”. இதே செயல்கள்தான் ஆய்த மோதலின் போது ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிறிலங்காவால் செய்யப்பட்டவை என்று அப்போதைய ஐநா பொதுச் செயலர் பான் கீ-மூன் அமர்த்திய வல்லுநர் குழு அறிக்கை சொல்கிறது (POE).

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் 2011 ஏப்ரல் 29 நாளிட்டு ஐ.நா. பொதுச் செயலருக்கு எழுதிய மடலில் வல்லுநர் குழு அறிக்கையின் முடிவுகளைத் தொடர்ந்து ஐ.நா. பட்டயத்தின் உறுப்பு 99 இன் கீழ் இன அழிப்புதொடர்பாக பன்னாட்டு விசாரணை தொடங்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டது.

ஐ.நா. பொதுச் சபை அறிந்தேற்பது போல், இனவழிப்புக்குத் தூண்டுவது அடையாள வேறுபாடுகள் அல்ல, அந்த வேறுபாடுகளில் வேர்கொண்டுள்ள சமத்துவமின்மையே காரணமாகும். இச் சமத்துவமின்மை அதிகாரத்தையும், வளங்களையும், வளர்ச்சி வாய்ப்புகளையும் அணுகும் வாய்ப்பு வகையில் வெளிப்படுகின்றன. இன்றுங்கூட கொடிய பேரிடருக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் தமிழர்கள் துயர்தணிப்பு நடவடிக்கைகளுக்குத் திட்டமிடவும் அவற்றுக்குச் செயல்வடிவம் கொடுக்கவும் நேர் அணுகலுக்கு உரிமை மறுக்கப்பட்ட நிலையில்தான் உள்ளனர். 2009ஆம் ஆண்டு தமிழர்கள் உடல்வகையில் நேர் இனவழிப்புக்கு ஆளானதைத் தொடர்ந்து சிறிலங்க அரசு தமிழர் தம் சமயத் தலங்களையும் தமிழ் நிலங்களையும் அழிப்பதன் ஊடாகவும் பறித்துக் கொள்வதன் ஊடாகவும் தமிழ் அடையாளத்தை அழிக்கும் கடுமுனைப்பான அமைப்புசார் இன அழிப்பில் (Structural Genocide) ஈடுபட்டுள்ளது. இந்தச் செயல்கள் பண்பாட்டு வகை இனவழிப்பாக அமைந்து, இனவழிப்பு குற்றத்தின் அங்கமான தனி நோக்கத்தை (Special Intent) நிறுவுவதில் குறிப்பான முக்கியத்துவம் பெறுவதாக அகயேசு விசாரணை மன்றம் (Akayesu Trial Chamber) அறிந்தேற்கிறது.

தமிழர் இனவழிப்பைப் பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தும்படி 2022ஆம் ஆண்டுக் கனடிய பாராளுமன்ற தீர்மானமும் பன்னாட்டு நீதிமன்றத்தில் (International Court of Justice) சிறீலங்காவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பிரித்தானிய அரசைக் கேட்டுக் கொள்ளும் அண்மைய ஸ்காட்லாந்தியத் தீர்மானமும் இனவழிப்புக்கு பலியான தமிழர்களுக்கு நீதியும் பொறுப்புக்கூறலும் பெற்றுக்கொடுப்பதன் திசையில் ஊக்கமளிக்கும் அடியெடுப்புகள் ஆகும். இனவழிப்புக்கு நீதி செய்வதுதான் கண்ணியத்துக்கு வழிகோலும் என்பதை அறிந்தேற்று, பாதிப்புற்றவர்களுடனும் பாதிப்புற்று உயிர்பிழைத்தவர்களுடனும் தோழமை கொண்டு, “மீண்டும் ஒருபோதும் நிகழவிடோம்” என்ற குறிக்கோள் மெய்ப்படச் செய்ய மீளுறுதி கொள்கிறோம். இனவழிப்புக்கு நீதி செய்வதுதான் இனவழிப்பினால் பாதிப்புற்றோர்க்கு கண்ணியம் சேர்க்கும். இந்த நாளில் இனவழிப்பினால் துயரப்பட்ட அனைவரோடும் கைசேர்த்து “மீண்டும் ஒருபோதும் நிகழவிடோம்” என்ற குறிக்கோள் மெய்ப்படச் செய்திட நம்மை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்வோம்.

விசுவநாதன் உருத்திரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

## Justice Delayed Is Dignity Denied: A Call for Global Accountability

In 2015, the United Nations General Assembly declared December 9 th as the International Day of Commemoration and Dignity of the Victims of the Crime of Genocide and of the Prevention of this Crime. Through resolution A/RES/69/323 designated the day to honor the victims of genocide and to bring awareness to the 1948 Convention on the Prevention and the Punishment of the Crime of Genocide. The principle of “Never Again” formed the crux and goal of the convention. However, in the 77 years since the adoption of the convention, this principle still remains a distant dream.

Following the adoption of the genocide convention, the international community has witnessed this heinous crime, this in many parts of the world including Rwanda, Bosnia, Darfur, Island of Sri Lanka, and Gaza. In many of these instances, the victims and victim-survivors are still waiting for justice. Behind the rampant lack of accountability, is that the culpability lies with the States themselves. It is the same forces that fuel the international reluctance to recognize these atrocities and call it by the name it deserves. The label “genocide” is not just a label, it carries immense moral significance.

This International Day of Commemoration and Dignity of the Victims of the Crime of Genocide and the Prevention of Crime, we recognize that the genocide convention mandates that international powers have the obligation to prevent this crime. This responsibility has often been forsaken, in the fear that an acknowledgement of the crime of genocide will lay bare their own complicity and will be accompanied by adverse legal consequences. As we all are aware, given the current technological developments, the international powers are fully aware of what was going on.

In the case of the atrocities committed against the Tamils during the final stages of the armed conflict between the Sri Lankan State and the Liberation Tigers of Tamil Eelam, official U.N. Reports have yet to provide a conclusive decision on whether genocide was committed during the final stages of the armed conflict.

The U.N. Special Rapporteur on Occupied Palestinian Territories, Francesca Albanese, stated that according to the Genocide convention, there are “reasonable grounds to believe that the threshold indicating the commission of….acts of genocide against Palestinians in Gaza has been met.” In her report, “Anatomy of a Genocide,” Albanese provides three actions to conclude that the overwhelming nature and scale of the “assault” and the destructive conditions of life it has inflicted reveal an intent to physically destroy the people in the respective territory “as a group.” She cites: One, “killing members of the group”; Two, “causing serious bodily or mental harm to the group’s members;” And three, “deliberately inflicting on the group conditions of life calculated to bring about its physical destruction in whole or in part.” It is these same actions that the report of the expert panel (POE report) by the then-U.N. Secretary General Ban Ki-Moon concludes were committed against Eelam Tamils by Sri Lanka during the armed conflict.

In a letter to the U.N. Secretary General dated April 29 th , 2011, TGTE requested the U.N. Secretary General to launch an international investigation on genocide under Article 99 of the U.N. Charter following the conclusions of the POE report.

As the U.N. General Assembly recognizes, it is not the difference in identity that instigates genocide but rather the inequalities rooted in those differences, manifesting in terms of access to power, and resources and development opportunities. Even today, in the face of the catastrophic national disaster in the island of Sri Lanka, Tamils are deprived of direct access to humanitarian aid and the power to envisage and implement relief measures. Following the physical genocide of Tamils in 2009, the Sri Lankan State has engaged in aggressive and systematic measures to destroy Tamil identity, through destruction and appropriation of Tamil religious sites and Tamil lands. These actions constitute cultural genocide, which the Akayesu Trial Chamber recognizes as having particular importance in establishing the special intent of genocide.

The 2022 Canadian Resolution calling for an international investigation into the Tamil genocide, along with the recent Scottish Motion urging the Government of the United Kingdom to bring legal action against Sri Lanka before the International Court of Justice, are encouraging steps toward justice and accountability for Tamil victims of genocide. Recognizing that only justice can restore dignity, we stand in solidarity with victims and survivor-victims, reaffirming our commitment to ensuring that “Never Again” becomes a reality. On this day, we join hands with all victims of genocide, express our unwavering solidarity, and rededicate ourselves to the pursuit of truth, justice, and dignity.

Tamils’ destiny is in Tamil’s hands
The thirst of Tamils is Tamil Eelam
Visuvanathan Rudrakumaran

# நோர்வே சாமி (Sámi) இன மக்கள்: மொழி, கலாச்சார அடக்குமுறை தொடர்கிறதா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

02.12.2025

சாமி (Sámi) இன மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஸ்காண்டிநேவியாவின் வடக்குப் பகுதிகள் மற்றும் கோலா தீபகற்பம் போன்ற பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இந்த பகுதி "Sápmi" என்று அழைக்கப்படுகிறது.

பாரம்பரியமாக, சாமி மக்கள் மான்களை வளர்த்து, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இடம் பெயர்ந்து வாழ்ந்தனர். இன்று, பலர் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டு, கலாச்சார ரீதியாக மாறி வாழ்ந்து வருகின்றனர்.



### நோர்வே நோர்வேஜியர்க்கு மட்டுமா ?

நோர்வே, இது நோர்வேஜியர்களுக்கு மட்டும் உரிய ஒரு நாடு அல்ல. நோர்வேயில் இன்னுமொரு இன மக்களும் வாழ்கிறார்கள். அவர்கள் தான் இந்த சாமி (Sámi) இன மக்கள்.

உலகின் வரைபடத்தை பார்த்தீர்கள் என்றால், பூமிப் பந்தின் வடபகுதியில் வாழ்கின்ற ஒரு தொன்மையான இனம். நோர்வேயில் மட்டுமல்ல, நோர்டிக் (Nordic) பகுதி முழுவதுமே பரவி யிருந்த ஒரு இனம்.

இப்போது தங்களுக்கென்று ஒரு நாடு இல்லாமல் நான்கு நாடுகளின் கீழ் வாழ்கிறார்கள். இந்த இன மக்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஒரு இலட்சம். நோர்வேயில் 65,000, ஸ்வீடனில் 20,000, பின்லாந்தில் 8000, ரஷ்யாவில் 2000 பேர் வசிக்கின்றனர். இந்த நான்கு நாடுகளினதும் வட பகுதிகளில் இவர்கள் பரந்து வாழ்கிறார்கள்.

தனியான ஒரு இனம், தனியான ஒரு மொழி, தனியான கலாச்சாரம், பாரம்பரியம் கொண்ட மக்கள் என இவர்கள் அடையாளப் படுத்தி வருகின்றனர். ஆரம்ப காலத்தில் ஒரு வேட்டை யாடும் இனமாகவும், அதைவிட ஒரு நாடோடிகளாக வாழ்க்கை வாழ்ந்தவர்கள்.

இந்த இன மக்கள் நீண்ட காலமாக நோர்வேஜியர்களால் பல அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள். 1987 களில் தான் நோர்வே அவர்களை ஒரு தனி இனமாக அங்கீகரித்தது. அவர்களின் மொழியையும் நோர்வேயின் இன்னொரு அதிகார பூர்வ மொழியாக நீண்ட காலத்தின் பின்னரே அங்கீகரித்தது.

அத்துடன் சாமி இன பிள்ளைகள் பாடசாலைகளில் தங்களது மொழியில் பேசக்கூடாது என்ற தடைகள் எல்லாம் இருந் தன. 35-40 வருடங்களுக்கு முன் பாக, அந்த மக்கள் தங்கள் மொழியை, கலாச்சாரத்தை விட்டு நோர்வேஜியர்களுடன் கலக்க வேண்டும் என்று எத்தனையோ அடக்குமுறைகள் மேற்கொள்ளப் பட்டன. அதில் நோர்வேஜியர்கள் வெற் றியும் கண்டனர்.

இதன் விளைவாக அந்த மக்களின் ஒரு பகுதியினரும் தாங்கள் வாழ்ந்த வட பகுதி கிராமங்களை விட்டு வெளியேறி, நோர்வே யின் பெரிய நகரங்களுக்கு நவீன வாழ்க்கைக்கு தங்களை மாற்றிக்கொண்டார்கள். இதன் காரணமாக சாமி இன மக்கள் நோர்வேஜியன் மொழி பேசுவார்கள். ஏனெனில் பாடசாலைகளில் அந்த மொழி கட்டாயம், ஆனால் நோர்வேஜியர்களுக்கு சாமி மொழி தெரியாது.

### 1999இல் மன்னிப்பு கோரிய நோர்வே:

1999 ஆண்டு நோர்வே அரசாங்கம் சாமி மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியது. அந்த மக்களுக்கு இழைத்த அடக்குமுறைகளுக்காகவே அரசு மன்னிப்பு கோரியது.

இத்தகைய கொடூரமான காலகட்டங்களை எதிர்த்து போராடியதன் காரணமாக, நோர்வேயின் வட பகுதியில் இவர்வளுக்கென தனி ஒரு பாராளுமன்றமும் இருக்கிறது. அதில் அந்த மக்களை பிரதிநிதிப் படுத்த 39 உறுப்பினர்களும் இருக் கிறார்கள். இது 1989 இல் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. அதே போல சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகளிலும் இவர்களுக்கென தனி பாராளுமன்றங்கள் இருக்கின்றன.




1990 வரை தன்னுடைய சொந்த நாட்டிலையே 10,000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்த ஒரு இனத்தை அதன் மொழியை, கலாச்சாரத்தை இழக்க வைத்து தங்களுடன் இணைத்துக் கொள்ள அடக்குமுறைகளை நோர்வேஜியர்கள் பாவித்தவர்கள்.

### ஐரோப்பாவின் பூர்வகுடி:

**சாமி இனத்தின் பிள்ளைகள் பாடசாலைகளில் தங்களது மொழியில் பேசக்கூடாது என்ற தடைகள் எல்லாம் முன்பு இருந்தன. இது நடந்தது பல நூற்றாண்டுகளுக்கு முன்–பெல்லாம் இல்லை. இருபது வருடங்களுக்கு முன்னர் தான் இந்த நிலைமை இருந்தது.**

**1990 வரை தன்னுடைய சொந்த நாட்டிலையே 10,000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்த ஒரு இனத்தை அதன் மொழியை, கலாச்சாரத்தை இழக்க வைத்து தங்களுடன் இணைத்துக் கொள்ள அடக்குமுறைகளை பாவித்தவர்கள் தான் நோர்வேஜியர்கள்.**

**35–40 வருடங்களுக்கு முன் தான், அந்த மக்கள் தங்கள் மொழியை, கலாச்சாரத்தை விட்டு நோர்வேஜியர்களுடன் கலக்க வேண்டும் என்று எத்தனையோ அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர் நோர்வேஜியர்கள்**



இத்தனை கொடூரங்களை சந்தித்த சாமி (Sámi) மக்கள் ஐரோப்பாவின் பூர்வகுடி மக்கள் ஆவர். இவர்கள் நோர்வே, சுவீடன், பின்லாந்து மற்றும் ரஷ்யாவின் வடக்குப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர். பாரம்பரிய மாக, இவர்கள் மான்களை வளர்ப்பதோடு, வேட்டை யாடுதல் மற்றும் மீன்பிடித்தல் போன்ற வற்றிலும் ஈடுபட்டு வந்தனர். இவர்களது கலாச்சாரம் மற்றும் மொழி ஐரொப் பாவில் தனித்துவமானதாக கருதப்படுகிறது.

சாமி கலாச்சாரம் இயற்கையுடன் மிக நெருக்கமாகப் பிணைந்துள்ளது. இவர்கள் தங்கள் தனித்துவமான உடைகள், நம்பிக்கைகள், மற்றும் மொழியைக் கொண் டுள்ளனர். சாமி மொழி, பல வட்டார மொழிகளைக் கொண்ட ஒரு மொழி குடும்பமாகும். இது ஐரோப்பாவில் உள்ள பிற இந்தோ-ஐரோப்பிய மொழிகளி லிருந்து வேறுபட்டது.

இன்னமும் சாமி மக்கள் தங்கள் உரிமைகள் மற்றும் கலாச் சாரத்தைப் பாதுகாப்பதற்காக தொடர்ந்து போராடி வருகின்றனர். நீண்ட போராட்டங்களின் பின்னர் நோர் வேயில், சாமி தேசிய திரையரங்கம் மற்றும் உயர்நிலைப் பள்ளி போன்ற பல நிறு வனங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.

### யூராலிக் தாயக குடிகள்:

மேற்கு யூராலிக் மொழிகள், ஐரோப்பாவின் மிக நீளமான நதி யான வோல்கா வழியாக யூராலிக் தாயகத்திலிருந்து பரவியதாக நம்பப்படுகிறது. இந்தக் குழுக்கள் கிமு 2 ஆம் மில்லினியத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண் டுகளில் ஆரம்பகால யூராலிக் மக்களின் தாயகத்திலிருந்து வடமேற்கு நோக்கி நகரத் தொடங்கின.

அவர்களின் பயணத்தில், அவர்கள் இப்போது வடக்கு ரஷ்யாவாக இருக்கும் பண்டைய நதி வழிகளைப் பயன் படுத்தினர். முதலில் அதே மேற்கு யூராலிக் மொழியைப் பேசிய இந்த மக்களில் சிலர், கரேலியா, லடோகா மற்றும் இல்மென் ஏரிக்கு இடைப்பட்ட பகுதிகளிலும், கிழக்கு மற்றும் தென்கிழக்கு பகுதி களிலும் தங்கினர்.

கிமு 1600 முதல் 1500 வரை பின்லாந்து ஏரி நிலத்தில் முடி வடைந்த இந்த மக்களின் குழுக்கள் பின்னர் சாமி இன மக்கள் ஆயினர். வெண்கல யுகம் அல்லது ஆரம்ப கால இரும்பு யுகத்தின் போது சாமி மக்கள் தங்கள் தற்போதைய தாயகத்திற்கு வந்தனர்.

### சாமி – ஸ்காண்டிநேவிய உறவு:

ஸ்காண்டிநேவிய மொழிகளைப் பேசும் மற்றும் நோர்வே மற்றும் ஸ்வீடன் ராஜ்ஜியங்களை நிறுவி ஆதிக்கம் செலுத்திய ஸ்காண்டிநேவிய ஆதிக்க மக்களான ஸ்காண் டிநேவியர்களுடன் (இடைக்கால சகாப்தத்தில் நோர்ஸ் மக்கள் என்று அழைக்கப்பட்டவர்கள்) சாமிகள் சிக்கலான உறவைக் கொண் டுள்ளனர்.

தெற்கு ஸ்காண்டிநேவியாவிற்கு ஜெர்மானிய மொழி பேசும் மக்களின் இடம்பெயர்வு, வடக்குப் பகுதிகளுக்கு சாமி குடியேற்றங் களிலிருந்து சுயாதீனமாகவும் தனித் தனியாகவும் நடந்தது.

பல நூற்றாண்டுகளாக, சாமி மற்றும் ஸ்காண்டிநேவியர் களுக்கு ஒப்பீட்டளவில் குறைவான தொடர்பு இருந்தது. சாமி முதன்மையாக வடக்கு ஃபென்னோஸ்காண் டியாவின் உள்நாட்டில் வாழ்ந்தனர். அதே நேரத்தில் ஸ்காண்டிநேவியர்கள் தெற்கு ஸ்காண்டிநேவியாவில் வாழ்ந்து படிப்படியாக நோர்வே கடற்கரையை காலனித் துவப்படுத்தினர்.

18 மற்றும் குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டிலிருந்து, நோர்வே மற்றும் ஸ்வீடன் அரசாங்கங்கள் வடக்கில் இறையாண்மையை மிகவும் ஆக்ரோஷமாக உறுதிப் படுத்தத் தொடங்கின. மேலும் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து கட்டாய ஒருங்கிணைப்பை நோக்கமாகக் கொண்ட ஸ்காண்டிநேவிய மயமாக்கல் கொள்கைக ளுடன் சாமியை குறிவைத்தன.

### கட்டாய ஸ்காண்டிநேவிய மயமாக்கல்:

கட்டாய ஸ்காண்டிநேவிய மயமாக்கல் கொள்கைகளின் சகாப் தத்திற்கு முன்பு, நார்வேஜியன் மற்றும் ஸ்வீடிஷ் அதிகாரிகள் சாமியை பெருமளவில் புறக்கணித்தனர்.

19 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர், நவீன கால டிராம்ஸ் மற்றும் ஃபின்மார்க் கடற்கரையை படிப்படியாக காலனித் துவப்படுத்த நார்வேஜியர்கள் வடக்கு நோக்கி நகர்ந்தனர். ஏற்றுமதி சார்ந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர். கலைமான் மேய்க்கும் சாமிகளால் நிறைந்த கடுமையான மற்றும் விவசாயம் செய்ய முடியாத உள்நாட்டில் அவர்கள் அதிக அக்கறை காட்டவில்லை. தெற்குடனான தங்கள் வர்த்தகத்தை வலுவாக நம்பியிருந்த கடற்கரையில் உள்ள நார்வேஜியர்களைப் போலல்லாமல், உள்நாட்டில் உள்ள சாமிகள் நிலத்தி லிருந்து விலகி வாழ்ந் தனர்.

அத்துடன் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து நார்வேஜியன் மற்றும் ஸ்வீடிஷ் அதிகாரிகள் சாமியை நாகரிகம் தேவைப் படும் பின் தங்கிய மற்றும் பழமையான மக்களாகக் கருதத் தொடங்கினர். ஸ்காண்டிநேவிய மொழிகளை ராஜ்ஜியங்களின் ஒரே செல்லு படியாகும் மொழிகளாக திணித்தனர். பல சூழல்களில், குறிப்பாக பள்ளிகளில் சாமி மொழி மற்றும் கலாச்சாரத்தை தடை செய்தனர்.

### நோர்வேயால் சாமி மக்களின் மொழி அடக்கப் பட்டது:

நோர்வேயில் சாமி மக்களை “நோர்வேயாக்கும் அரசியல்” (Fornorskningspolitikk) என்ற பெயரில் வலுக்கட்டாயமாக நோர்ஷ்க் (Norsk) மட்டும் கற்றுக்கொள்ள வைக்கப்பட்டது. இந்த கொள்கை சுமார் 1850 முதல் 1950 வரையில் 100 ஆண்டுக ளுக்கு நெருக்கமாக நடந்தது.

அதாவது நோர்வே பள்ளிகளில் சாமி மொழி பேசுவதற்கு தடை இருந்தது. இதனால் ஆசிரியர்கள் சாமி மொழி கேட்டால் தண்டனை அளித்தனர். தேவாலயங்களில் கூட நோர்ஸ்க் மட்டும் அனுமதி அளிக்கப்பட்டது. இதன் நோக்கம் சாமி கலாச்சாரத்தையும், அடையாளத்தையும் குறைக்க முயற்சி செய்ததே.

மீண்டும் சாமி மொழி பள்ளிகளில் பயன்படுத்த அனுமதி யுடன், 1990இல் சாமி மொழி நோர்வேயில் அதிகாரப்பூர்வ மொழி சட்ட அங்கீகாரம் பெற்றது. இன்று சாமி மொழி பாதுகாப்பு, ஊக்குவிப்பு, கல்வி, கலாச்சாரம் ஆகியவற் றிற்கு சட்ட வசதிகள் உள்ளது. ஆனால் கடந்த 100

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# தேசத்தின் புதல்வி செல்வி துவாரகா பிரபாகரன் அவர்கள் ஆற்றிய மாவீரர் நாள் உரையின் எழுத்து வடிவம்



27.11.2025

தேசத்தின் புதல்வி துவாரகா அவர்கள் இன்று திருகோணமலை குச்சவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம்:



"எனது அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர் நாள்.

தமிழீழ மண்ணில் மட்டுமன்றி, உலகெங்கும் இன்று தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கின்றது என்றால் அதற்குக் காரணமானவர்கள் எமது மாவீரர்கள். தம்மையும், தமது வாழ்வையும் பற்றியே மட்டும் சிந்திக்கும் மனிதர்களின் மத்தியில் தமது மக்கள் வாழ வேண்டும், எதிர்காலச் சந்ததி தலைநிமிர்ந்து நிற்க வேண்டும், தமிழ்த் தாயின் துயர் துடைக்கப்பட வேண்டும் என்ற உன்னத சிந்தனையோடு தம்மையே ஈகம் செய்தவர்கள் எமது மாவீரர்கள். தமது உயிரையே வேலியாக்கி, எமது மண்ணையும், மக்களையும், மொழியையும் காத்த அந்த அற்புதப் பிறவிகள் மண்ணிலும், கடலிலும், வான்வெளியிலும் புரிந்த சாதனைகளை வெறும் வார்த்தைகளால் நாம் வடித்து விட முடியாது.

அந்த வீரப் புதல்வர்களையும், வீரப் புதல்விகளையும் ஈன்றெடுத்த அவர்களின் பெற்றோர் என்றென்றும் போற்றுதற்குரியவர்கள். ஒவ்வொரு தாயும் தனது குழந்தையை ஈன்றெடுக்கும் போது, தனது குழந்தை உலகம் போற்றும் ஒருவராக வளர வேண்டும் என்பதே அந்தத் தாயின் எதிர்பார்ப்பாகும். தந்தையும் தனது குழந்தையைத் தோளில் சுமந்து வளர்க்கும் போது, தனது குழந்தை தனது பெயருக்குப் பெருமை சேர்க்கும் என்பதே அந்தத் தந்தையின் நம்பிக்கையாகும். அவையெல்லாவற்றையும் தாண்டி மாவீரர்களாக, ஒரு சகாப்தத்தைப் படைத்த சரித்திர நாயகர்களாக, ஒட்டுமொத்தத் தமிழினமும் போற்றும் வீர மறவர்களாக நீங்கள் ஈன்றெடுத்த பிள்ளைகள் மிளிர்கின்றார்கள். எமது தேசத்தின் ஆன்ம பலமாக, வழிகாட்டிகளாக விளங்கும் மாவீரர்களின் பெற்றோராகிய உங்களுக்கு நான் தலை வணங்குகின்றேன்.

அது போன்று எமது மாவீரர்களை தமது வாழ்க்கைத் துணைவர்களாக வரித்துக் கொண்ட மண இணையர்கள் அனைவருமே மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள். உங்கள் வாழ்வின் இன்ப, துன்பங்களில் பங்கு கொள்வதற்கு உறுதி பூண்ட உங்கள் வாழ்க்கை துணைவர்கள், இன்று வீர மறவர்களாகத் தமிழீழத் தாயின் மடியில் மீளாத் துயிலில் ஆழ்ந்திருந்தாலும் அவர்களின் ஆன்ம பலம் என்றுமே உங்களுக்கும், உங்களின் பிள்ளைகளுக்கும் உறுதுணையாக இருக்கும்.

அந்த மாவீரர்களின் உடன்பிறப்புகளாகப் பிறந்தவர்களும், அவர்களின் உறவினர்கள், உரித்துடையோராக வாழ்வோரும் என்றுமே பெரும் பேறு செய்தவர்கள்.

எனது அன்பார்ந்த மக்களே,

எமது மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோரையும், தமது இளமைக் காலத்தின் சுகங்களைத் துறந்து களமாடிய எமது முன்னாள் போராளிகளையும், மக்களையும் கைவிட்டு எமது தலைமை சென்று விடவில்லை. முள்ளிவாய்க்காலில் வெறும் ஆயுதங்களை மட்டும் மௌனிப்பதற்கு எமது விடுதலை இயக்கம் நிர்ப்பந்திக்கப்படவில்லை. எமது குரல்களையும் மௌனிப்பதற்கு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். எமது விடுதலை இயக்கத்தின் ஆயுதங்களோடு, எமது குரல்களும் மௌனமாகி, அஞ்ஞாதவாச நிலைக்கு நாம் சென்றால் மட்டுமே எமது மக்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிக்க முடியும் என்ற நிர்ப்பந்தத்திற்குள் உலக சமூகம் எமது தலைமையைத் தள்ளியது.

நாம் மௌன நிலைக்குச் சென்றாலும், எமது தலைமையால் புலம்பெயர் தேசங்களில் உருவாக்கப்பட்ட அமைப்புகளும், எமது தேசத்தின் சொத்துக்களை நிர்வகித்தவர்களும் எமது மக்களையும், மாவீரர் குடும்பங்களையும், முன்னாள் போராளிகளையும் கைவிடப் போவதில்லை என்று நாம் திடமாக நம்பினோம். ஒரு பக்கம் உலக சமூகம் எம்மீது திணித்த அழுத்தம், மறுபக்கம் எமது அமைப்புகள் மீது நாம் வைத்திருந்த நம்பிக்கை ஆகிய இரண்டுமே எம்மை ஒரு தசாப்தத்திற்கு மேலான மௌன நிலைக்கு இட்டுச் சென்றது.

எமது தேசத்தைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பி எமது மக்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டிய எமது புலம்பெயர் அமைப்புகளும், எமது தேசத்தின் சொத்துக்களை நிர்வகிப்போரும் தமது கடமையில் இருந்து தவறி இருப்பதையே எமது மக்களும், மாவீரர் குடும்பங்களும், முன்னாள் போராளிகளும் இன்றும் எதிர்நோக்கும் இன்னல்கள் உணர்த்துகின்றன. இந்த நிலையை மாற்றியமைத்து எமது தேசத்தைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் மனிதநேயப் பணிகளை முன்னெடுப்பதற்காகவே எனது அஞ்ஞாதவாசத்தையும், மௌனத்தையும் 2023ஆம் ஆண்டு கலைத்து எனது இருப்பை நான் வெளிப்படுத்தினேன்.

எமது தேசத்தைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு ஏறத்தாள மூன்று ஆண்டுகளாக நான் எடுத்த முயற்சிகளுக்கு இடையூறு விளைவித்து, எனது இருப்பை மறுதலிக்கும் நாசகார வேலைகளையே எமது மக்களுக்காக உருவாக்கப்பட்ட புலம்பெயர் அமைப்புகளும், எமது தேசத்தின் சொத்துகளைக் கபளீகரம் செய்து வைத்திருப்போரும் புரிந்து வருகின்றனர். ஆனாலும் எமது மக்களின் துயர் துடைத்து, மாவீரர் குடும்பங்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் வாழ்வை மேம்படுத்தும் மனிதநேயப் பணிகளை முன்னெடுப்பதற்கு நான் உறுதி பூண்டுள்ளேன்.

அரசியல் என்பது வெறுமனவே ஊர்வலங்கள் நடத்துவதும், மேடைகளில் முழங்குவதும், பரப்புரைகளின் பெயரில் மூடப்பட்ட அறைகளுக்குள் மாயாஜாலம் புரிவதும் அல்ல. எனது தந்தையாகி எமது தேசியத் தலைவரின் வார்த்தைகளில் கூறுவதாயின், அரசியல் என்பது மக்களின் வாழ்வை மேம்படுத்த ஆற்றப்படும் மனிதநேயப் பணியாகும். ஆதி காலத்தில் எமது மூதாதையர்கள் அரசுகளைத் தோற்றுவித்ததன் பிரதான நோக்கமே இது தான்.

அமைதி வழி தழுவி, ஜனநாயக விழுமியங்களுக்கு இசைவாக நான் முன்னெடுக்க இருக்கும் மனிதநேயப் பணிகளுக்கு இத்தீவின் இன்றைய ஆட்சியாளர்கள் இடையூறாக இருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். இரண்டு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சிகளை நிகழ்த்திப் பின்னர் ஜனநாயக நீரோட்டத்தின் ஊடாக ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிய எமது சிங்களச் செந்தோழர்கள், மென்வழி தழுவிய எனது மனிதநேயப் பயணம் பற்றி அச்சமடையத் தேவையில்லை.

நாம் என்றுமே சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. தமது சொந்த மண்ணில், புத்தபிரானின் காருண்யப் போதனைகளுக்கு அமைவாக, அமைதியான முறையில் சிங்கள மக்கள் வாழ்வதற்கு நாம் ஒரு போதும் இடையூறு விளைவிக்கப் போவதில்லை.

அது போன்று தமிழீழ மக்களும் தமது சொந்த மண்ணில், தமது பண்பாட்டு விழுமியங்களையும், மொழியையும் பேணி அமைதியான வாழ்வையே வாழ விரும்புகின்றார்கள் என்பதையும் எமது சிங்கள சகோதரர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது மண்ணில், தன்னாட்சி உரிமையோடு நாம் வாழ விரும்புவது இனரீதியான பிரிவினைவாதத்தின் வெளிப்பாடு அல்ல. எமது மண்ணில் தமது இறைமையைத் தமிழீழ மக்கள் பிரயோகிக்க விரும்புவது என்பது சிங்கள மக்களின் இறைமையைப் பறித்தெடுக்கும் நோக்கத்தைக் கொண்டதல்ல என்பதை எமது சிங்களச் சகோதரர்களும், இத்தீவின் இன்றைய ஆட்சியாளர்களாகிய செந்தோழர்களும் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன்.

தமிழீழ தாயக மண்ணில் எமது மக்களின் வாழ்வை மேம்படுத்தும் ஒரேயொரு நோக்கத்துடன் மென்வழி தழுவி நான் முன்னெடுக்க இருக்கும் மனிதநேயப் பணிகள் எமது தந்தையர் பூமியாகிய பாரத தேசத்திற்கு ஒரு போதும் விரோதமாக அமையாது. இதனைப் பாரதப் பேரரசின் ஆட்சியாளர்களும், கொள்கை வகுப்பாளர்களும் புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று வாழ்ந்த சங்கத் தமிழர்களின் வழிவந்த நாம் எந்தவொரு உலக நாட்டிற்கும் எதிரானவர்கள் அல்ல. உலக மக்களோடு ஒத்திசைவாக வாழ விரும்பும் எமது மக்களின் அரசியல் வேட்கையைப் புரிந்து கொண்டு எனது மனிதநேய முயற்சிகளுக்கு உலக சமூகம் அனுசரணை வழங்கும் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு உண்டு.

எனது அன்பார்ந்த மக்களே,

எமது மாவீரர்களின் வீரமும், ஈகமும் ஒரு நாளும் வீண் போகாது. எமது காவல் தெய்வங்களின் ஆன்ம பலத்தோடு எமது தேசத்தைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பி, எமது எதிர்காலத் தலைமுறைக்கு மகிழ்வான வாழ்வைக் கையளிப்போம் என உறுதிபூணுவோமாக.'



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.ca

# நவம்பர் மாதத்தில் வரும் இரண்டு நினைவு நாட்கள்

29.11.2025



வெள்ளம், மழை, புயல் எச்சரிக்கை... எல்லாவற்றையும் மீறி மாவீரர் நாள் பரந்த அளவில், பெரியளவில் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரான 17ஆவது மாவீரர் நாள் இது. நவம்பர் மாதத்தில் வரும் இரண்டாவது தியாகிகளின் நினைவு நாள் இது.

இம்மாதம் 13ஆம் திகதி,ஜேவிபி அதனுடைய தியாகிகளின் நாளை அனுஷ்டித்தது. அதே மாதத்தில் மாவீரர் நாளும் அனுஷ்டிக்கப்படுவது ஒரு நூதனமான ஒற்றுமை. இச்சிறிய தீவில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த இரண்டு பெரிய அமைப்புகளின் தியாகிகள் தினம் இவ்வாறு ஒரே மாதத்தில் வருவது ஒரு நூதனமான ஒற்றுமைதான்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாவது மாவீரர் தன் உயிரைத் தியாகம் செய்த நாள் மாவீரர் நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது. ஜேவிபியின் தலைவர் ரோகண விஜயவீர அரச படைகளால் கைது செய்யப்பட்டு, குரூரமாகக் கொல்லப்பட்ட நாள் அந்த அமைப்பின் தியாகிகள் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

ஜேவிபியின் நினைவு நாள் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவின் வெளியரங்கில் நடந்தது. இலங்கைத்தீவில் இரண்டு ஆயுதப் போராட்டங்களை முன்னெடுத்து, இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்ட, இரண்டு தடவைகள் நசுக்கப்பட்ட, ஓர் அரசியல் இயக்கம் ஜேவிபி. ஆனால் தன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழ முடியும் என்பதற்கு இந்தப் பிராந்தியத்தில் மட்டுமல்ல முழு உலகத்திலும் மிக அரிதான முன்னுதாரணங்களில் ஒன்று.



அன்றைய நிகழ்வில் விகாரமகாதேவி பூங்காவின் வெளியரங்கம் சிவப்பு நிறச் சட்டைகளாலும் முதிய பெண்களின் கண்ணீராலும் பிரகடனங்களாலும் நிறைந்திருந்தது. பெரும்பாலானவர்கள் சிவப்பு நிற மேலாடைகளோடு வந்திருந்தார்கள். அரங்கின் முன்வரிசையில் வயதான முதிய பெண்கள் சிலர் காணப்பட்டார்கள். மெலிந்த சதைப்பிடிப்பில்லாத முகங்கள். எடுப்பில்லாத உடுப்புகள். மென்மையான சோக இசையின் பின்னணியில் அவர்களில் சிலர் அழுதார்கள். அவர்களுடைய கண்ணீர் உண்மையானது. அன்னையரின் கண்ணீர் பொய்யானது அல்ல. அன்னையரின் கண்ணீர் எல்லா நினைவு நாட்களிலும் ஒன்றுதான். அதில் உள்ள உப்புச் சுவையும் ஒன்றுதான்.

அந்த நிகழ்வின் ஒளிப்படங்களை என்னோடு பகிர்ந்த ஒரு நண்பர், என்னிடம் கேட்டார், "நீங்கள் சொல்வது போல ஜேவிபி அதன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழுந்த ஓர் இயக்கம். இப்பொழுது அரசாங்கமாக அந்த நிகழ்வை பெருமெடுப்பில் ஒழுங்குபடுத்தியிருக்கிறது" என்று.

நான் அவரிடம் கேட்டேன் "அது ஒரு அரச நிகழ்வா அல்லது ஒரு இயக்கத்தின் அல்லது கட்சியின் நினைவு நிகழ்வா?" என்று. அதில் நாட்டின் அரசுத் தலைவரும் உட்பட பிரதான அமைச்சர்கள் பங்குபற்றினார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் அது ஒரு அரசு நிகழ்வு போலத் தோன்றும். ஆனால் அது பெருமளவுக்கு ஓர் இயக்க நிகழ்வுதான் ஒரு கட்சி நிகழ்வுதான். அங்கே அரசுத் தலைவருக்கும் அமைச்சருக்கும் பாதுகாப்பாக படையினர் ஆங்காங்கே காணப்பட்டார்கள். எனினும் வழமையான அரசு நிகழ்வுகளைப்போல சீருடை அணிந்த படையினரின் பிரசன்னம் தூக்கலாக வெளித்தெரியவில்லை. அந்தப் படையினரின் சீருடைக்கும் அங்கு வந்திருந்த பெரும்பாலானவர்களின் சிவப்பு உடுப்புகளுக்கும் பொருந்தவேயில்லை. விறைப்பாக நின்ற அந்தப் படையினரின் துப்பாக்கிகளும் அழுது கொண்டிருந்த முதிய பெண்களின் கண்ணீரும் ஒன்றுக்கொன்று எதிரானவை.

இப்பொழுது ஜேவிபி ஆளுங்கட்சி. அதுதான் அரசாங்கம். அப்படிப் பார்த்தால் அரசாங்கத்தின் தியாகிகள் நாட்டுக்கும் தியாகிகள் தானே? அந்த அடிப்படையில் அது ஓர் அரச நிகழ்வாகத்தான் அமைய வேண்டும். ஆனால் அப்படியல்ல.

அங்கே இறந்தவர்களுக்காக மலர்கள் வைக்கப்பட்டன. பாடல்கள் இசைக்கப்பட்டன. உரைகள் நிகழ்த்தப்பட்டன. ஆனால் படையினரின் இராணுவ அணிவகுப்போ, மரியாதை வேட்டுக்களோ தீர்க்கப்படவில்லை. அரசாங்கத்தின் தேசிய தியாகிகளின் நாளில் படையினரின் அணிவகுப்பு இருக்கும்; பீரங்கிகளில் முழங்கும்; முப்படை தளபதிகளும் பிரசன்னமாகியிருப்பர்.

ஆனால் 13-ஆம் தேதி விகார மகாதேவி பூங்காவின் வெளியரங்கில் நடந்தது ஒரு அரச நிகழ்வு அல்ல. நாட்டை ஆளுங்கட்சி அதன் தியாகிகள் நாளை தேசிய விழாவாகக் கொண்டாடவில்லை. அது தனக்கென்று தனியாக ஒரு தியாகிகள் நாளை அனுஷ்டிக்கின்றது. அதிலும் குறிப்பாக, ஜேவிபியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் தனித்தனியாக நினைவு நாட்களை அனுஷ்டிக்கிறார்கள். ஜேவிபியின் முதலாவது ஆயுதப் போராட்டம் நடந்த ஏப்ரல் ஐந்தாம் திகதியை ஒரு பகுதியினர் அனுஷ்டிக்கிறார்கள். நவம்பர் 13 ஐ ஜேவிபியிடமிருந்து பிரிந்து சென்றவர்கள் தனியாக அனுஷ்டிக்கிறார்கள். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள் ஒவ்வொன்றும் தங்களுக்கு என்று தனித்தனியாக தியாகிகள் நாளை அனுஷ்டிப்பது போல.

ஆனால் இங்கு கவனிக்கப்பட வேண்டிய வேறுபாடு என்னவென்றால், ஆளுங்கட்சியாக உள்ள ஜேவிபியின் நினைவு நாள் ஓர் அரச நிகழ்வாக கொண்டாடப்படவில்லை என்பது தான். சிங்களபௌத்த அரசின் தேசியத் தியாகிகள் நினைவு நாள் வேறாகவும் ஜேவிபி அரசாங்கத்தின் தியாகிகள் நினைவு நாள் வேறாகவும் இருக்கின்றன என்பதுதான்.

சிறிய இலங்கை தீவு தன்னகத்தே பல தியாகிகளின் நாட்களைக் கொண்டிருக்கிறது. படையினரின் தியாகிகள் நாள், ஜேவிபியின் தியாகிகள் நாள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாள், ஏனைய தமிழ் இயக்கங்களின் தியாகிகள் நாள், என்று பல தியாகிகளின் நாட்கள் இச்சிறிய தீவில் உண்டு.



ஜேவிபி இப்பொழுது அரசாங்கமாக இருந்த போதிலும், அதன் தியாகிகள் தினம் தனியே கொண்டாடப்படுகிறது. ஜேவிபியின் பிரதானியான அனுர ஒரு ஜனாதிபதியாக, முப்படைகளின் தளபதியாக இருக்கிறார். ஆனால் அவருடைய தோழர்களை நினைவு கூரும் நாளில் முப்படைகளின் அணிவகுப்பு இல்லை. அது இப்பொழுதும் ஓர் அரச நிகழ்வு அல்ல.

விகாரமாதேவி பூங்காவில் கூடிய ஜேவிபியினர் சிவப்புச்சட்டை அணிந்திருந்தார்கள். விகார மகாதேவி பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக நினைவுச் சின்னத்திலும் சிவப்பு நிறம் இருந்தது. ஆனால் அந்த சிவப்பு கம்யூனிச சிவப்பு அல்ல. நாட்டில் தற்பொழுது நடப்பது கம்யூனிச ஆட்சியும் அல்ல. பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்ட ஓர் ஆட்சி.

ஆனால் லண்டனில் உரை நிகழ்த்திய ரில்வின் சில்வா, "வீரர்கள் சிந்திய குருதியை ஏற்று சிவப்பு மலர்கள் மலரட்டும்" என்று கூறினார். அந்தச் சிவப்பு மலர்கள் நிச்சயமாக மார்க்சிய சித்தாந்தத்தை பிரதிபலிக்கவில்லை. அவ்வாறு ஜேவிபி ஒரு மெய்யான மார்க்சிஸ்ட் அமைப்பாக இருந்திருந்தால் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொண்டிருந்திருக்கும்.

ரில்வின் உரை நிகழ்த்திய அதே கூட்டத்தில் ஜேவிபியின் பிரதித் தலைவராக இருந்த உபதிச கமநாயக்கவின் மனைவி உரை நிகழ்த்தும் போது, மூன்றாவது தலைமுறை ஜேவிபியினர் நாட்டை ஆளும் வளர்ச்சிக்கு வந்திருப்பதை பெருமையோடு சுட்டிக்காட்டினார். சிறு ஓடையாக இருந்த இயக்கம் இப்பொழுது பெரும் நதியாக மாறிவிட்டது என்றும் சொன்னார்.

ரில்வின் சில்வா லண்டனில் சிவப்பு மலர்களைப்பற்றி பேசிய அதே காலப்பகுதியில் கொழும்பில் அவர்களுடைய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் புதிதாக வந்திருக்கும் கனேடிய தூதுவருக்கு என்ன சொன்னார்? கனடாவில் உள்ள தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் இலங்கையில் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் கருத்துக்களை முன்னெடுப்பதற்கு எதிராகவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சின்னம் போன்றவற்றை பகிரங்கமாக பயன்படுத்துவதற்கு எதிராகவும் கனேடிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கனடாவில் வாழும் சில செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகள், இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்குப் பாதகமாக அமைந்துள்ளன என்றும் அமைச்சர் ஹேரத் கூறியுள்ளார்.

அதாவது நாட்டில் தடை செய்யப்பட்ட இயக்கத்தின் சின்னங்களை கனடாவில் உள்ள தமிழர்கள் உயர்த்திப் பிடிப்பதை அவர் கனேடியத் தூதுவருக்குச் சுட்டிக்காட்டுகிறார். கனடாவிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பு என்ற அடிப்படையில் மேற்சொன்ன செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் கடந்த அரை நூற்றாண்டு காலப்பகுதிக்குள் ஜேவிபி நாட்டில் இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்டது. அவ்வாறு இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம் கனடாவில் தடை செய்யப்பட்ட சின்னங்களை தமிழ் மக்கள் முன்னிறுத்துவதைத் தடுக்க வேண்டும் என்று கேட்கின்றது.

தனது இயக்கத்தின் தியாகிகளின் நாளும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் தியாகிகளின் நாளும் ஒன்று அல்ல என்பது தெளிவாகத் தெரியும் ஓர் அரசியல் சூழலில், அமைச்சர் விஜித ஹேரத் கனேடிய தூதுவரிடம் அவ்வாறு கூறியுள்ளார். கார்த்திகை மாதத்தில் நாட்டில் இனரீதியாக இரு வேறு நினைவு தினங்கள் அனுஷ்டிக்கப்படும் ஓர் அரசியல் யதார்த்தத்தை தடைகளின் மூலம் மாற்ற முடியாது.

இந்த நாட்டில் ஏன் இனரீதியாக இரு வேறு நினைவு நாட்கள்? எல்லாத் தடைகளையும் மீறி தமிழ் மக்கள் கடந்த 17 ஆண்டுகளாக ஏன் மாவீரர் நாளை தொடர்ந்து அனுஷ்டித்து வருகிறார்கள்? இனரீதியாக இரண்டு வேறு தியாகிகள் தினங்களைக் கொண்ட ஒரு நாட்டின் வெளி விவகார அமைச்சராகிய விஜித ஹேரத் கனேடிய தூதுவருக்கு கூறுகிறார், அரசாங்கம் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதாக. விகாரமாதேவி பூங்காவில் தற்காலிகமாக உருவாக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னத்தில் பூசப்பட்டிருந்த சிவப்பு நிறம் வெளிறும் இடம் இதுதான்.

நன்றி: நிலாந்தன்

# வவுனியா வடக்கு திரிவைச்சகுளம் மற்றும் 'கிவுல் ஓயா' அபகரிப்புக்களை கடுமையாக எதிர்த்த ரவிகரன் எம்.பி. ஒரு மாத காலத்திற்குள் தீர்வுகாண முடிவு

09.12.2025



வவுனியா வடக்கு பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட திரிவைச்சகுளம் பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் வரையில் அடர்வனங்களை அழித்து ஆக்கிரமிப்புச் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளமை மற்றும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து "கிவுல்ஓயா" நீர்ப்பாசனத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளமை என்பவற்றிற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்ட வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஆயிரம் பேர்வரையில் மக்களைத் திரட்டி வவுனியா வடக்கு பிரதேசசெயலகத்தை முற்றுகையிட்டு பாரிய ஆர்ப்பாட்டமொன்றினை மேற்கொள்ளவுள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ள வேண்டாமெனத் தெரிவித்த வவுனியாமாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, ஒரு மாதகாலத்திற்குள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதுதொடர்பில் தாம் கவனஞ் செலுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் 09.12.2025இன்று இடம்பெற்றநிலையில், குறித்த கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட திரிவச்சகுளம் பகுதியில் பெரிய மரங்கள் வீழ்த்தப்பட்டு சட்டவிரோதமாக பாரிய அளவில் அடர்வனங்கள் அழிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக நாம் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளோம்.

எமது தமிழ்மக்கள் "மண்வெட்டிபிடி" வெட்டியதற்காக கைது செய்யப்பட்டு வழக்குத்தொடரப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் இவ்வாறு பாரிய அளவில் அடர்வனங்கள் அழிக்கப்பட்டமைக்கு இதுவரை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதுகுறித்து வனவளத் திணைக்களத்திடமும், மகாவலி அதிகாரசபையிடமும் நேரடியாகச் சென்று கேள்வி எழுப்பியிருந்தேன்.

இதன்போது காணி வழங்குவதற்கு பெயர்ப்பட்டியலொன்றைத் தருமாறு மகாவலி அதிகாரசபையினரால் என்னிடம் கோரப்பட்டிருந்தது. இவர்கள் யாருடைய காணிகளை யாருக்குத் தரப்போகிறார்கள்? எமது தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகளை அடாவடித்தனமாக ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு எமது மக்களுக்கு காணி வழங்குவதற்காக இவர்கள் எம்மிடமே பெயர்ப்பட்டியலைக் கோருகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத அடர்வனங்கள் அழிக்கப்பட்டமைக்கு வனவளத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகாரசபை மேற்கொண்ட நடவடிக்கை என்ன? ஊழலை ஒழிப்போம் என்ற வகையில் இந்த அரசு செயற்பட்டுவருகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் ஊழல் இல்லையா? இவ்வாறாக அடர்வனங்கள் அழிக்கப்பட்ட மரங்கள் எங்கு கொண்டுசெல்லப்பட்டன? அதன் மூலம் பெறப்பட்ட வருமானங்கள் எங்கே?

வவுனியா வடக்கை முற்றாக ஆக்கிரமித்து "சிட்டிசன்" திரைப்படத்தில் ஒரு ஊரையே காணாமல் ஆக்கியதுபோல வவுனியா வடக்கை காணாமல் ஆக்குகின்ற நிலமையை உருவாக்குகின்றீர்கள். இதனை எம்மால் ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

எனவே தயவுசெய்து பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும், ஆளுநரும் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இதுதொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை எனில் இன்னும் ஒரு மாதகாலத்திற்குள் ஆயிரக்கணக்கில் மக்களைத் திரட்டி வவுனியா வடக்கு பிரதேசசெயலகத்திற்கு முன்பாக பாரிய அளவான போராட்டமொன்றினை மேற்கொள்ளவேண்டியிருக்கும் - என்றார்.

இந்நிலையில் இதன்போது பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க பதிலளிக்கையில்,

இவ்வாறு அடர்வனம் அழிக்கப்பட்ட பகுதி "கிவுல் ஓயா" நீர்ப்பாசனத் திட்டத்தில் நீரில் மூழ்கப்போகும் பகுதியாகும்.

அங்கு பாரிய அளவில் மரங்கள் வெட்டப்பட்டுள்ளது. அவ்வாறு மரங்கள் வெட்டப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் மரக்கூட்டுத் தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

குறித்த மரங்கள் வெட்டுகின்ற பகுதி பாரிய வனாந்தரப் பகுதி என்பதால், அங்கு சட்டவிரோதமாக மரங்களை வெட்டுபவர்களைப் பிடிப்பதில் சிரமங்கள் காணப்படுகின்றன. அவர்கள் ஒழிந்துகொள்கின்ற சந்தர்ப்பங்களே அதிகம் காணப்படுகின்றது.

இந்தவருடத்தின் இறுதியில் அல்லது அடுத்தவருடத்தின் ஆரம்பத்தில் கொழும்பில் இருந்து வனவளத்திணைக்கள அதிகாரிகளை அழைப்பதுடன், ஆளுநர், மாகாண, மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களையும் அழைத்து நாம் இதுதொடர்பான முடிவுகளை எடுப்போம்.

தற்போது மழைக்காலமாக இருக்கின்றது. இருப்பினும் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர், உத்தியோகத்தர்கள் அடங்கலான குழுவாக நாம் அனைவரும் ஒருதடவை குறித்த திரிவச்சகுளம் பகுதிக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள நிலமைகளைப் பார்வையிடுவோம்.

அந்தவகையிலே காலையிலே இந்த களவிஜயத்தை முடித்துக் கொண்டு, மாலையில் மகாவலி அதிகாரசபை இருக்கின்ற அலுவலகத்திலே கலந்துரையாடலை மேற்கொண்டு இதுதொடர்பிலான முடிவுகளை எடுப்போம்.

தற்போது சக பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கூறினார் ஆயிரம்பேரைத் திரட்டி ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார். இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதையே தெற்கிலுள்ள இனவாதிகள் எதிர்பார்க்கின்றனர். அதனை தமக்கு சாதகமான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்வதற்காகவே எதிர்பார்க்கின்றனர்.

எனவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடாமல் நீங்களும், நாங்களும், ஆளுநர், மகாவலி அதிகாரசபை, வனவளத்திணைக்களமுமாக இந்த விடயங்களை நேரடியாக அவதானித்து இது தொடர்பில் முடிவுகளை எட்டுவோம் - என்றார்.

இதன்போது வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்குமாகாணத்தின் ஐந்து மாவட்டத்திலும், வனவளத் திணைக்களத்தினால் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியிருந்தோம். அதன்பிற்பாடு பாராளுமன்றில் ஒரு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

மாவட்டமட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக்குழுக்களின் ஊடாக வனவளத்திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் இனங்காணப்பட்டு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென குறித்த கலந்துரையாடலின் பின்னர் எமக்கு அறிவித்தல் தரப்பட்டது.

எனவே மாவட்ட மட்டங்களில் அந்தக் குழுக்களை விரைவாக அமைத்தால் சிறப்பாக இருக்குமென வடமாகாண ஆளுநர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

மேலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கிவுல் ஓயா என்பது 6000 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கியதாக 3000 பேருக்கு பகிர்ந்தளிக்கின்ற ஒரு நீர்ப்பாசனத் திட்டமாகும். தமிழர்களின் பூர்வீக மணலாற்றில் அத்து மீறி குடியேற்றப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தவர்களே இந்தத் திட்டத்தில் பயன்பெறவுள்ளனர். இவ்வாறாக மகாவலி அதிகாரசபையின் அடாவடித்தனங்கள் இடம்பெறுகின்றன.

ஏற்கனவே மகாவலி அதிகாரசபை கொக்குத்தொடுவாயில் 25 ஏக்கர் காணிகள் வீதம் 30 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் முன்னாள் அமைச்சர் நிமால் சிறீபால டீ சில்வாவின் தங்கைக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மகாவலி அதிகாரசபை தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை ஆக்கிரமித்தே இவ்வாறு பெரும்பான்மை இனத்தவர்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளது. இந்நிலையில் தமது பூர்வீக நிலங்களை இழந்த தமிழ் மக்கள் வாழ்வாதாரத்திற்கு வழியின்றித் தவிக்கின்றனர்.

மகாவலி அதிகாரசபை இவ்வாறு தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை ஆக்கிரமித்து பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கினால் தமிழ் மக்கள் எங்கு போவது.

எமது தமிழ் மக்களை கடலில் தள்ளிவிடப்போகின்றீர்களா? இவ்வாறான செயற்பாடுகளை ஒருபோது அனுமதிக்கமுடியாது. எனவேதான் திரிவச்சகுளம் பகுதியில் சட்டவிரோதமாக காடழிப்பில் ஈடுபட்டவர்களை ஒருமுறை நேரடியாகச் சென்று துரத்தினேன். மகாவலி அதிகாரசபையின் இத்தகைய செயற்பாடுகள் தடுக்கப்படவேண்டும்.

பிரதி அமைச்சர் கூறியதற்கமைய குறித்த இடத்திற்கு நேரடியாக் களவிஜயம் மேற்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். ஆளுநர் கூறியதைப்போல மாவட்ட மட்டத்திலான குழுக்கள் அமைக்கப்படவேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றோம்.

தங்களுடைய அரசின் ஆட்சியில் இவ்வாறான ஊழல்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மகாவலி அதிகாரசபைக்குட்பட்டிருக்கும் திரிவைச்சகுளம் பகுதியில், பெரும்பான்மை இனத்தவர்கள் அந்தர்வெவ எனும் கமக்கார அமைப்பை பதிவு செய்வதற்கு கிராம அலுவலர் ஒருவரும், வவுனியா வடக்கு பிரதேசசெயலரும் சட்டவிரோதமான முறையில் அனுமதி வழங்கியிருக்கின்றனர்.

எமது மக்களுடைய நிலங்கள் அபகரிக்கப்படுகின்றபோது, அதனை எதிர்ப்பதற்காக ஜனநாயக ரீதியாக நாம் ஆர்ப்பட்டத்தினையே மேற்கொள்ளமுடியும்.

எனவே ஆயிரம் பேர்வரையில் மக்களைத் திரட்டி, வவுனியா வடக்கு பிரதேசசெயலகத்தினை முற்றுகையிட்டு நாம் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வோம். எம்மை கைதுசெய்வதெனில் அதைச் செய்யுங்கள். நாம் அதற்கு அஞ்சப்போவதில்லை.

தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து, இவ்வாறு பெரும்பான்மை இனத்தவர்களைத் தொடர்ந்து குடியேற்றங்களை மேற்கொள்ளவேண்டாம். தொடர்ந்தும் இவ்வாறு செயற்படுவீர்கள் எனில், எம்மீது துப்பாக்கிச் சூடு நடாத்தினாலும், எவ்வித அடக்குமுறைகளைக் கையாண்டு எம்மை அடக்கினாலும், எம்மால் இயலக்கூடிய அளவில் எதிரப்புக்களை வெளியிடுவோம் - என்றார்

இதன்போது இடையிட்டு கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு இன்னும் ஒரு மாதகால அவகாசத்தைத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களைக் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**Office of the Prime Minister**
**Transnational Government of Tamil Eelam**
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
பிரதமர் பணிமனை
875 Avenue of the Americas, Suite 2306
New York, NY 10001, USA
www.tgte.org
pmo@tgte.org

# சிறீலங்காவில் வெள்ளத்தால் துயருற்றவர்களுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஆதரவு; அவசரத் துயர் தணிப்பு உதவி திரட்டித்தர புலம்பெயர் தமிழருக்கும் தமிழக அரசுக்கும் வேண்டுகோள்

04.12.2025 - ஊடக வெளியீடு

சிறீலங்காவின் சாமானிய மக்களுக்கு தித்வா புயலால் ஏற்பட்டுள்ள பேரழிவு குறித்து ஆழ்ந்த வேதனை தெரிவித்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இலங்கைத்தீவில் பாதிப்புற்ற அனைவருடனும் தோழமை கொள்கிறது. கொட்டித்தீர்த்த பெருமழையும், திடீர் வெள்ளப்பெருக்கும், நிலச்சரிவுகளும் எங்கெங்கும் அழிவை விதைத்துச் சென்றுள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உளமார்ந்த இரங்கலும், நூறாயிரக்கணக்கில் இடம் பெயர நேரிட்டுள்ளவர்களுக்கு ஆறுதலும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தப் பேரிடரின் பரிமாணம் எல்லை கடந்து செல்கிறது. தமிழ் மக்களுக்கென்று தனித்த அரசியல் வேணவாக்கள் இருப்பினும், வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும், தெற்கிலும் துயருற்ற சாமானிய மக்கள் அனைவரின் இன்னலுடனும் மானுடத்தால் கட்டுண்டு நிற்கிறோம்.

வடக்கு கிழக்கில் தமிழர் தாயகம் தித்வா புயலின் முழுவீச்சையும் சந்தித்துள்ளது. யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட மாவட்டங்களில் அகக்கட்டமைப்பு படுமோசமாகத் தகர்ந்து நொறுங்கியிருக்கிறது. புயலும் வெள்ளப் பெருக்கும் சேர்ந்து முழுக்கிராமங்களையும் தனிமைப்படுத்தி, மின் தொடர்புகளையும் தகவல் தொடர்புகளையும் துண்டித்து, ஆயிரக்கணக்கான வீடுகளை அழித்துள்ளன. வட்டாரப்பொருளியலின் முதுகெலும்பாகிய வேளாண் தொழில் சின்னா பின்னமாக் கப்பட்டுள்ளது. விரிந்துபரந்தஏக்கர் நெல்வயல்களும் விளைந்த பயிர்களும் நீரில் மூழ்கிக் கிடக்கின்றன. மீன் பிடிப்படகுகளுக்கும் வலைகளுக்கும் ஏற்பட்ட அழிவால் கடலோரத்தில் மக்களின் வாழ்வாதாரம் முடங்கி, ஏற்கெனவே நலிவுற்ற மக்கள் இன்னுங்கூட ஆழ்ந்த மனிதாபிமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

குறிப்பாக மலையகத்திலிருந்து வரும் செய்திகளும் நம்மை வாட்டிவதைக்கின்றன. பதுளை, நுவரேலியா, கண்டி ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட கடும் மழையால் உயிராபத்தான நிலச்சரிவுகள் ஏற்பட்டுக் கூட்டம் கூட்டமாகச் சேற்றிலும் இடிபாடுகளிலும் புதையுண்டு போய்விட்டனர். வரலாற்றில் ஒதுக்கப்பட்ட தமிழ் தோட்டத்தொழிலாளர்கள் ஏற்கெனவே ஒழுங்கான வீடின்றித் தவித்துக்கொண்டிருக்கும் நிலையில் இப்போதும் கணக்கின்றி அழிவைச் சந்தித்துள்ளார்கள். இங்கு ஏற்பட்டுள்ள உயிரிழப்பு நெஞ்சைப் பிழிவதாக உள்ளது, இந்தச் சமுதாயங்களின் இடப்பெயர்வு உடனடியாகச் சிறப்புக்கவனம் பெற்றால்தான் மீட்புப்பணியில் அவர்கள் மேலும் புறக்கணிக்கபப்டுவதைத் தவிர்க்கமுடியும்.

காலி, மாத்தறை மாவட்டங்கள் உள்ளிட்ட தெற்கில் பரவலான சேதமும் கொழும்பு, கம்பகா உள்ளிட்ட மேற்கு மாகாணத்தில் மோசமான வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டிருப்பதையும் கூட நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கவலையுடன் கவனத்தில் கொள்கிறது. களனி ஆற்றில் கரை மீறிய வெள்ளம் ஆயிரக்கணக்கானோர் வீடு வாசல் துறந்து இடம்பெயரச் செய்திருப்பதோடு, குறிப்பிடத்தக்க அளவு உடைமைச் சேதம் ஏற்படவும் காரணமாகி யுள்ளது. இந்தப்பகுதிகளில் துயரப்பட்டுள்ள சிங்கள, முஸ்லிம் சமுதாய மக்களுடன் நாம் தோழமை கொண்டு நிற்கிறோம். இயற்கைச் சீற்றத்தால் துவைக்கப்பட்டுள்ள நாட்டின் கூட்டுத் துயரத்தில் பங்கு கொள்கின்றோம். காயமுற்ற அனைவரும் விரைந்து நலம் பெற வாழ்த்துகின்றோம் துரிதமாய் இயல்பு நிலை மீளும் என நம்புகின்றோம்.

**புலம்பெயர் தமிழர்க்கு ஓர் அறைகூவல்**

இந்த அவசரத்தேவை நேரத்தில் புலம்பெயர் தமிழுலகம் கால முணர்ந்து ஆவன செய்திட நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறைகூவி அழைக்கிறது. தமிழமைப்புகளும், சமுதாயக் குழுக்களும் உலகெங்கும் தனியாட்களும் உடனே வளங்களைத் திரட்டியுதவ வேண்டுகிறோம்.

- **நேர் ஆதரவு:** உங்கள் சொந்தத் தொடர்புகளையும், குடும்பத்தினரையும், களத்தில் நம்பிக்கைக் குரிய அடிமட்ட அமைப்புகளையும் அணுகி, நேர் நிதியுதவி நல்குக.

- **கூட்டுச்செயல்:** புலம்பெயர் அமைப்புகள் ஒருங்கிணைந்து, மருத்துவ உதவிகளும், உலர் உணவுப்பொருள்களும், இடைக்கால வசிப்பிடக் கட்டுமானப்பொருள்களும் அனுப்புக. நமது மக்களின் தாங்கு திறனுக்கு எப்போதுமே நம் புலம்பெயர் தமிழரின் வலிமை முட்டுக்கொடுத்துள்ளது. மீண்டும் ஒரு முறை நம் சகோதரர்களின் உயிர் நாடியாக இருப்போமே!

**தமிழக அரசுக்கு வேண்டுகோள்**

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்திரு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் தமிழக அரசுக்கும் உளமார விடுக்கும் வேண்டுகோள்: வெள்ளத்தால் துயருற்ற மக்களுக்கு விரிவான அளவில் மனிதாபிமான உதவி வழங்குங்கள்.

**அண்மையும்திறமும்:** தமிழ் நாடு சிறீலங்காவின் வடக்கு கிழக்கிற்குப் புவியியல் அண்மைகொண்டிருப்பதால், அம் மாநிலத்திலிருந்து அனுப்பிவைக்கும் உதவி வேறு எங்கிருந்து அனுப்புவதை விடவும் துயருற்ற தமிழ் மக்களை விரைவாகவும் திறமாகவும் சென்றடைய இயலும்.

**பண்பாட்டுச்சுற்றம்:** தமிழ் நாட்டு மக்கள் மொழி வகையிலும் பண்பாட்டுவகையிலும் ஈழத் தமிழர்களோடும் மலையகத் தமிழர்களோடும் ஆழ்ந்த பாசப்பிணைப்புக் கொண்டவர்கள். தமிழ் நாட்டிலிருந்து ஒரு காத்திரமான துயர் தணிப்புச் சிப்பம் அனுப்பப்படுமானால் பாக்கு நீரிணைக்கு அப்பக்க மிருக்கும் தம் சோதரர்களை எதிர் நோக்கும் மக்கள் கூட்டத்துக்குப் பொருள் சார் உதவியாக அமைவதோடு, பாரிய உளவியல் ஆறுதலாகவும் அமைந்திடும்.

இந்திய அரசின் தொடக்க முயற்சிகளை வரவேற்பதோடு, வடக்கு-கிழக்கு மற்றும் மலை நாட்டு வட்டாரங்களுக்குத் தனிக் கவனம் செலுத்துமாறும், பன்னாட்டு உதவி சமச்சீராகப் பங்கீடுசெய்யப்பட்டு, அதிகாரவர்க்க அல்லது அரசியல் தடைப்பாடில்லாமல் மிகவும் தேவையுள்ளவர்களுக்குப் போய்ச் சேருவதை உறுதி செய்யுமாறும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

துயர் தணிப்புதவி பெரிதும் நலிந்தோரை அடையும் படி உறுதி செய்யப்பன்னாட்டு அமைப்புகளுடனும் புலம்பெயர் தமிழருடனும் ஒருங்கிணைந்து செயல்பட நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்ந்து உறுதி கொண்டுள்ளது. கருணையுள்ளமும் செயல் வேகமும் பொங்க ஒன்றுபட்டு நின்று, இந்தப் பேரிடரால் நொறுங்கிப்போனவர் தம் வாழ்க்கையை மீட்டெழுப்பத் துணைநிற்போம்.

விசுவநாதன் உருத்திரகுமாரன்
பிரதமர்
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

**வேளாண்மையும், கைத்தொழிலும் எமது பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானவை; தன்னிறைவான பொருளாதார வாழ்வுக்கு ஆதாரமானவை.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

Office of the Prime Minister
Transnational Government of Tamil Eelam
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
பிரதமர் பணிமனை
875 Avenue of the Americas, Suite 2306
New York, NY 10001, USA
www.tgte.org
pmo@tgte.org

# TGTE Expresses Solidarity with Flood Victims in the island of Sri Lanka; Urges Diaspora and Tamil Nadu Government to Mobilize Urgent Relief

04.12.2025 - Press Release

The Transnational Government of Tamil Eelam (TGTE) expresses its deepest anguish at the catastrophic impact of Cyclone Ditwah on the ordinary people of Sri Lanka and offers its solidarity with all the victims across the island. As torrential rains, flash floods, and landslides wreak havoc, leaving a trail of destruction, we extend our heartfelt condolences to the families of those who have lost their lives and our sympathies to the hundreds of thousands who have been displaced.

The magnitude of this disaster knows no borders. While the political aspirations of the Tamil people remain distinct, our humanity binds us to the suffering of all affected civilians—in the North-East, in the Hill Country (Malayaham), and in the South.

The Tamil homeland in the NorthEast has faced the full brunt of Cyclone Ditwah. Reports from the ground indicate that districts including Jaffna, Mannar, Trincomalee, and Batticaloa have suffered severe infrastructural collapse. Gale-force winds and inundation have isolated entire villages, severed power and communication lines, and destroyed thousands of homes. The agricultural sector, the backbone of the region's economy, has been decimated, with vast acres of paddy fields and standing crops submerged. The destruction of fishing vessels and gear has further crippled the livelihoods of our coastal communities, pushing an already vulnerable population into a deeper humanitarian crisis.

We are also particularly distressed by the reports emerging from Malayaham. The torrential rains have triggered lethal landslides in the districts of Badulla, NuwaraEliya, and Kandy, burying entire communities under mud and debris. The historically marginalized Tamil plantation workers, already living in precarious housing conditions, have faced disproportionate devastation. The loss of life here is heart-wrenching, and the displacement of these communities demands immediate and specialized attention to ensure they are not further neglected in the recovery process.

The TGTE also notes with concern the extensive damage in the South, including the districts of Galle, Matara, and the severe flooding in the Western Province, including Colombo and Gampaha. The overflowing of the Kelani River has displaced thousands and caused significant property damage. We stand in solidarity with the Sinhala and Muslim communities affected in these regions, sharing in the collective grief of a nation battered by nature's fury. We wish all injured victims a speedy recovery and hope for the swift restoration of normalcy.

**A Call to the Tamil Diaspora**

In this hour of urgent need, the TGTE calls upon the global Tamil diaspora to rise to the occasion. We urge Tamil organizations, community groups, and individuals across the world to mobilize resources immediately.

- **Direct Support:** Reach out to your individual connections, family members, and trusted local grassroots organizations on the ground to provide direct financial assistance.

- **Collective Action:** Diaspora organizations must coordinate to send medical supplies, dry rations, and materials for temporary shelter. The resilience of our people has always been supported by the strength of our diaspora; let us once again be the lifeline for our brethren.

**Appeal to the Tamil Nadu Government**

The TGTE earnestly appeals to the Honourable Chief Minister of Tamil Nadu, Thiru M.K. Stalin, and the Government of Tamil Nadu to extend extensive humanitarian aid to the flood victims.

- **Proximity and Effectiveness:** Given the geographical proximity of Tamil Nadu to the North-East of Sri Lanka, aid dispatched from the state can reach the affected Tamil populations faster and more effectively than from any other source.

- **Cultural Kinship:** The people of Tamil Nadu share a deep linguistic and cultural bond with the Eelam Tamils and the Malayaham Tamils. A robust relief package from Tamil Nadu would not only provide physical relief but also immense psychological comfort to a people who look towards their brethren across the Palk Strait for solidarity.

We welcome the initial steps taken by the Indian government and urge that specialized attention be given to the North-East and Upcountry regions, ensuring that international aid is distributed equitably and reaches those most in need without bureaucratic or political hindrance.

The TGTE remains committed to coordinating with international bodies and the diaspora to ensure that relief reaches the most vulnerable. Let us stand united in compassion and action to help rebuild the lives shattered by this calamity.

VisuvanathanRudrakumaran
Prime Minister
Transnational Government of Tamil Eelam

**நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்றுதிரண்டு நின்றால், எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# நெய்தல் குடியில் இடியாக வந்த ஆழிப்பேரலை நினைவுப்பகிர்வு

டிசம்பர் 26, 2004



அலையே...
உன்னைப்போல்
மீண்டும் நாங்கள்
மலையாய் எழுவோம்
அழிப்பதற்காய் அல்ல
அழியாது தழைப்பதற்காய்.